# அநுதின
# பரலோக மன்னா

# DAILY
# HEAVENLY
# MANNA

# அநுதின
# பரலோக மன்னா

# DAILY HEAVENLY MANNA

## விசுவாச வீட்டாருக்காக

"சகோதரரே, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவ பக்தியையும், தேவ பக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது."
*(2 பேது. 1:5-8)*


*மறுபதிப்பு : 2012*

**சென்னை வேதமாணவர் சபை**

22, முதல் தெரு, ராஜீவ் நகர்,
காலடிப்பேட்டை, திருவொற்றியூர்,
சென்னை - 600 019.

DAILY HEAVENLY MANNA
*Tamil Version*

I Edition - 500 copies
II Edition (Revised) 2012 - 2000 copies

**NOT FOR SALE**

*Translated by :*
**BIBLE STUDENTS ASSOCIATION**
**Coimbatore.**

*Revised by :*
**CHENNAI BIBLE STUDENTS**
No. 22, First Street, Rajiv Nagar,
Kaladipet, Thiruvottriyur,
Chennai-600 019,
India.

# வெளியீட்டாளரின் முன்னுரை

*"அநுதின பரலோக மன்னாவின்" முதல் பதிப்பு ஆங்கிலத்தில் பிப்ரவரி 1, 1905ல் வெளியிடப்பட்டது. முதல் பதிப்பில் 20,000 பிரதிகளும், 1907ல் இரண்டாவது பதிப்பில் 40,000 பிரதிகளும் வெளியிடப்பட்டன. 1918ல் பாக்கெட் பதிப்புகள்* (Pocket Edition) *வெளியிடப்பட்டன. அதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. டாண் தேவமாணவர்கள் மற்றும் சிகாகோ வேதமாணவர்கள் இதை மறுபதிப்பு செய்து தொடர்ந்து வெளியிட்டு வந்தார்கள்.*

*இதை சில ஆண்டுகளுக்கு முன்பாக தமிழில் மொழி பெயர்த்து வேதமாணவர் சபை, கோவை கிளை சகோதரர்கள் வெளியிட்டார்கள். இந்த புத்தகம் இன்னும் தேவைப்படுவதால், இதை திருத்தி மறுபடியும் வெளியிடுகிறோம்.*

*"மன்னாவை அவர்களுக்கு ஆகாரமாக வருஷிக்கப் பண்ணி, வானத்தின் தானியத்தை அவர்களுக்குக் கொடுத்தார். தூதர்களின் அப்பத்தை மனுஷன் சாப்பிட்டான்; அவர்களுக்கு ஆகாரத்தை பூரணமாய் அனுப்பினார்."(சங். 78:24-25)*

*"மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயி-ருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்." (மத். 4:4)*

*இந்த ஆவிக்குரிய மன்னா, ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய விசுவாச வீட்டாருக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும் என்று நம்புகிறோம்.*

*-வெளியீட்டாளர்-*

# ஆசிரியரின் முன்னுரை

## பிரயோஜனமான அநுதின காணிக்கை

"என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசம பாகங்களையெல்லாம் பண்ட சாலையில் கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." மல்கியா 3:10

கிறிஸ்தவர்கள், சுய விருப்பதுடன் அன்றாட பரலோக உணவை பெற்றுக் கொள்ள வாஞ்சை இருந்தால், அவர்கள் தங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியை குறித்தோ, அன்றாட உலக தேவைகள் ஆசீர்வாதங்களை குறித்தோ, கவலைப்பட தேவை இல்லை. ஏனெனில், உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார் என்ற வசனத்தை நினைவு கூறவேண்டும்." நீதி. 3: 6

எங்களது முதல் பதிப்பான "மன்னா"வின் 20,000 பதிப்புகள், நாங்கள் எதிர்பார்த்ததை விட அதிக வெற்றியைத் தந்தது. மேலும் அநேக சகோதரர்களின் பாராட்டுதலையும் பெற்றுத்தந்தது. அநேகர் தங்களின் அன்றாட அதிகாலை உணவாக, இந்த பதிப்பை நினைத்து, இதை "பரலோக மன்னா" என்றும் அழைத்தனர். ஆம்! உண்மையாகவே, ஒரு சிறிய நேரத்தை, இந்த மன்னா வாசிப்பிற்கு கொடுப்பதன் மூலம், உறுதியான ஆசீர்வாத்தை பெறுவதில் எந்த சந்தேகமுமில்லை. நம்முடைய சிந்தை, பரிசுத்தமான எண்ணங்களை நோக்கி இருக்கும். "ஞானம் பரத்தி லிருந்து வருகிறதுஎன்ற வசனம் படிப்படியாக, நம்மில் வளர்ந்து நம்மை நல்ல கனிகளைத் தருபவர்களாகவும், இவ்வுலகத்திற்கு விழிப்புள்ளவர்களாகவும் மாற்றும் என்பதில் சந்தேகம் இல்லை. ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆர்வத்துடன் இதனை வாங்கி, அதனை தங்கள் காலை உணவு

அருந்தும் மேசையில் வைத்துக் கொள்கின்றனர். இந்த புத்தகம், சுயலாபத்திற்காக அல்லாமல், நன்மையான ஈவு என்ற நோக்கத்திலேயே வெளியிடப்படுகிறது. நாம், நம்முடைய சக நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம், இந்த புத்தகத்தை குறித்து விழிப்புணர்வையும், ஆர்வத்தையும் ஏற்படுத்தலாம். இதனை பெயர் கிறிஸ்தவர்களுக்கு அல்ல, உண்மை கிறிஸ்தவர்களிடம் மட்டுமே ஏற்படுத்த முடியும். அநேகர் இதனை பிறந்தநாள் பரிசாகவும், விடுமுறை நாள் பரிசாகவும், உபயோகிக்கின்றனர். இப்படிப்பட்ட விசேஷ ஊழியங்களை விருப்பத்துடன் மனமுவந்து செய்ய அனைவரையும் அழைக்கிறோம்.

இந்த புத்தகம், ஒரு வாழ்நாள் புத்தகமாக இருக்கிறது. இதை வருடந்தோறும் உபயோகப்படுத்தலாம். புனிதமான செய்திகள் ஒருபோதும் பழமை அடையாது. வார்த்தைக்கு வார்த்தை, போதனைக்குமேல் போதனையை தருவதாக இருக்கும்.

உங்கள் அன்பு சகோதரன் மற்றும் ஊழியன்,

**சார்லஸ் டி ரசல்.**

## *ஜனவரி 1*

***ஜனங்களே, நம்முடைய தேவனை ஸ்தோத்தரித்து, அவரைத் துதிக்கும் சத்தத்தைக் கேட்கப்பண்ணுங்கள். அவர் நம்முடைய கால்களைத் தள்ளாட வொட்டாமல், நம்முடைய ஆத்துமாவை உயிரோடே வைக்கிறார். (சங். 66:8-9)***

*நாம் விழுந்து போகாமல், தம்முடைய கிருபையினால் நம்மைக்காத்து மற்றொரு வருஷத்துக்குள் நம்மை பிரவேசிக்கச் செய்த தேவனுக்கு நன்றி செலுத்துவோமாக. சகலரும் ஒரே சிந்தையோடும், இருதயத்தோடும் அவருடைய ஊழியத்தை, அவர் வார்த்தையின்படி இம்மட்டும் செய்து முடிக்க கிருபை செய்தார். அவருடையவர்களல்லாதவரைச் ச-த்துப் பிரித்துப்போட சத்துருவாகிய சாத்தான் கொடிய வஞ்சகத்தை தேவனுடைய பிள்ளைகள் மேல் கொண்டுவர அனுமதிக்கப்படுகிறதை நினைவு கூறும் பொழுது நாம் (2 தெச. 2:10-12) எவ்விதத்திலும் தவறாது சத்தியத்தினாலே காக்கப்பட்டு, அதில் உறுதியாய் நின்று, மறுவருஷத்துக்குள் பிரவேசிக்க கிருபை செய்தார் என்பதை உணர்ந்து அவருக்கு நன்றியுள்ள ஸ்தோத்திரத்தை ஏறெடுப்போமாக. (சங். 116-2; 2கொரி. 2:14)* R 3125:2

## *ஜனவரி 2*

***நீங்கள் உங்களுடையவர்களல்லவென்று அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள். (1கொரி. 6:19-20)***

*இப்புதுவருடத்தின் ஆரம்பத்திலே இதைத் தவிர வேறு எந்த பாடம் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக நமக்கு உள்ளது. நாம் நம்முடையவர்களல்ல, ஏனெனில் கிரயத்திற்குக் கொள்ளப்பட்டோம். இனி நம் சுயசித்தத்தை நிறைவேற்றவோ, அல்லது நம்மை பிரியப்படுத்தவோ முடியாது. நம்மைக் கிரயத்திற்குக் கொண்டவரின் சித்தத்தைச் செய்து, அவரையே பிரியப்படுத்த வேண்டும். சுய சித்தத்தை நடப்பிக்கிறவர்கள், கிரயத்திற்குக் கொண்டவரை மறுத-க்கிறவர்களாக இருப்பார்கள். தன் சித்தத்தை வெறுத்து அவர் சித்தத்தை நிறைவேற்றுவது பூரண பரிசுத்த ஜீவியமாகும். இது பாவத்தினின்று விலக்கி நீதிக்குள்ளாக்குவது மட்டுமல்லாமல் சுய சித்தத்தினின்று நம்மைப் பிரித்து, கிறிஸ்துவின் மூலம் தேவ சித்தத்தை நிறைவேற்றச் செய்கிறது. (1கொரி. 7:22-24; 1 பேது. 1:18-19; எபே. 6:6-8)* R 2099:4

## ஜனவரி 3

**இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள். *(1 தெச. 5:17)***

*ஜெபத்தில் உறுதியிலும், தெளிவிலும் நமது இயற்கையான சரிவு ஏதுவாயிருந்தாலும் நாம் வேதத்தின் போதனையை எடுத்துக் கொள்ள வேண்டும். நமது இயற்கையான பாரபட்ச குணத்தை வெற்றி கொள்ள, "அன்பான சிறு குழந்தைகளைப்" போல பரத்திலிருந்து வருகிற புத்திமதியுடன் நமது எண்ணத்தையும், நடக்கையையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆகையால் நாம், "கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக் கொள்வீர்கள்" என்ற வசனத்தை நினைவு கூறுவோம். (யோவா. 16:24) கீழ்ப்படிதலும் உண்மையுமாயிருந்து கேட்கிற பிள்ளைகளுக்கு தேவன் தமது பண்டக சாலையில் திரளான இரக்கங்களையும் ஆசீர்வாதங்களையும் அருளையும் வைத்திருக்கிறார். (லூக். 18:1-8)* R 2005:5

## ஜனவரி 4

***யேகோவாவுக்கே காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து, யேகோவாவுக்கு காத்திரு. (சங். 27:14)***

*தேவ திட்டத்தில் காலங்கள் ஒரு முக்கியமான காரியமாகும். நாம் கேட்டவைகளைப் பெற தாமதமாகி, சோதனைகளினால் நாம் அதிகமாக துன்பப்படும் போது சோர்ந்து அதிருப்தி அடைதல் கூடாது. தேவன் உலக சிருஷ்டிப்பிலே குறித்த காலத்தின்படி மனுஷனை அதில் குடியேற்றினார். பாவத்திலே மனிதன் விழுந்த போது, இரட்சகரை உலகில் அனுப்பும் வரை குறித்த காலத்திற்கு தீங்கின் அனுபவத்தை பெற பூமியிலே வைத்தார். கிறிஸ்துவோடு மகிமையிலே ஆட்சி செய்ய, திருச்சபையை தேர்ந்தெடுக்க குறித்த காலத்தை வைத்திருக்கிறார். அவரது ஒவ்வொரு பிள்ளையும் சரியாக செதுக்கப்பட குறித்த காலம் கொடுக்கப்பட வேண்டும். ஏற்ற காலத்திலே, நம் ஜெபத்திற்கும் தாமதமின்றி பதிலளிப்பார். குருவியின் வீழ்கையை கவனிக்கிறவரும், நமது தலை முடியை எண்ணுகிறவருமாகிய அவர், தமது பிள்ளையின் சிறு வேண்டுதலையும் கவனியாதிரார். (புல. 3:25-26)* R 1760:1.

## ஜனவரி 5

***உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என் மேல் விழுந்தது. (ரோம. 15:3)***

*கிறிஸ்து அநேகரின் நிந்தனைகளை ஏற்றுக் கொண்டது போல துன்மார்க்கத்தில் ஜீவித்து, மனந்திரும்பி, தேவனையும் குமாரனையும் அறிந்தபின் கிறிஸ்துவின் நல்ல போர் வீரராகிய நாமும் அவர் நிந்தைகளில் பங்கு பெற வேண்டும். அவர் பூமியில் இருந்த போது தம்முடைய பாடுகளை சற்றும் கருதாது துன்மார்க்கரின் நடுவே நிந்தைகளையும், இகழ்ச்சிகளையும், துன்பங்களையும் சகித்து, பொறுமையுடனும், அன்புடனும் மற்றவர்களுக்காகச் சேவை செய்தார். அவரை வெறுத்தவர்களைக் குறித்து அவர் ஆச்சரியப்படவில்லை. இவ்வுலகத்தார் பகைப்பார்கள் என்பதையும் அறிந்திருந்தார். ஆகையால், அவர் நிந்தைகளையும், அவமானங்களையும், குற்றச்சாட்டுகளையும் எதிர்ப்பார்த்திருந்தார். ஆனால் அவரது அன்பின் உள்ளம் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் அன்புடனும் இரக்கத்துடனும் மற்றவர்களிடம் அக்கரை காட்டியது. (சங்: 69:6-13; பிலி 2:3-5)* R 1964:5

## ஜனவரி 6

***நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும். (சங். 90:12)***

*ஓர் உண்மைக் கிறிஸ்தவன் தன் நாட்களை எண்ணும் போது, அவன் தன் நாட்களை அறிந்தவனாக துக்கத்தோடு அல்ல, நிதானமாக எண்ணுகிறான். இவன் தன் நாட்களை எண்ணும்போது, தான் பெற்ற ஆசீர்வாதங்களுக்காகவும், நல்ஈவுகளுக்ககாவும், தேவனை ஸ்தோத்தரித்து, அந்தகாரத்திலிருந்து தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களைத் தெரிவிக்கிறவனாகவும் பரம கானானுக்குத் தன்னுடன் பிரயாணம் செய்யும் உடன் சகோதரருக்கு உதவுகிறதில் கருத்துள்ளவனாகவும் இருப்பான். மேலும் நாளுக்கு நாள் தேவனுடைய பார்வைக்குப் பிரியமானதை செய்யவும், தன்னில் தானே நல்லொழுக்கத்தில் வளருகிறவனாகவும், கிறிஸ்துவின் சாயலாகத் தன்னை நாளுக்கு நாள் வளரச் செய்கிறவனாகவும் இருப்பான். (சங் 39:4)* R 2896:6

## ***ஜனவரி 7***

***ஒருவனையும் தூஷியாமலும், சண்டை பண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் சாந்த குணத்தைக் காண்பிக்கவும் நினைப்பூட்டு. (தீத்து 3:2)***

*சிலுவைப் போர் வீரனாகக் கருதப்படுகிறவன் அவதூறு பேசுவதும், தீங்கு செய்ய நினைப்பதும், ஒரு நல்ல குணமுள்ள நிலையைச் சீர்குலையச் செய்வதற்கொப்பாகும். தேவனுடைய பார்வையில் அசுத்தமாகக் காணப்படும் இக்காரியங்களை ஒருவன் சத்திய ஒளியிலே கண்ட பிறகு அவன் விழிப்புள்ளவனாக இருந்து, இத்தகைய மாமிச பலவீனங்களுக்குத் தங்களை ஒப்புக் கொடாமல் மேற்கொள்ள வேண்டும். புதிய சிருஷ்டியாகிய இவர்கள் பழைய புளித்த மாவாகிய தீய காரியங்களாகிய கசப்பும், கோபமும், மூர்க்கமும், தூஷணமுமான சகல துர்குணங்களுக்கும் நீங்கலாகி சுத்த இருதயத்துடன், கிறிஸ்துவின் மாதிரியாகக் காணப்பட வேண்டும். (1 தீமோ. 3:3-4; எபே. 4:31; 2 தீமோ. 2:24)* R 3275:5

## ***ஜனவரி 8***

***ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமை செய்யாதபடி பாருங்கள். உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மை செய்ய நாடுங்கள். (1 தெச. 5:15)***

*ஒரு கிறிஸ்தவ ஜீவியத்தில் திருச்சபையாராக இருக்க அழைக்கப்பட்டோர் மற்ற உலக மக்களை விட சாந்தமான குணமுடையவர்களாகவும், அதிக சுத்தமுள்ளவர்களாகவும், அமைதலுள்ளவர்களாகவும், இரக்க குணமுள்ளவர்களாகவும், அன்புள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும். இவையாவும், இவர்களுள் உலகத்தாருக்கொப்பாக வெளி வேஷமாகக் காணப்படாமல், இவையாவும் உள்ளான இருதயத்திலிருந்து வரக்கூடியதாக இருக்க வேண்டும். இது தேவன் அங்கீகரிக்கத்தக்கதாக தேவ ஆவியினால் நிறைந்து சத்தியம், அன்பு, நீதி ஆகியவை நிறைந்ததாகக் காணப்பட வேண்டும். நம் இரட்சகரும் பூமியிலே, தமக்குத் தீங்கு செய்த யாவருக்கும் நன்மையானதைச் செய்து தீங்கு அனுபவித்தாரே. (மத். 5:39; ரோம. 2:17; 1 பேது. 3:9-11)* R 2879:3

## ***ஜனவரி 9***

***உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக் கொள்ளாதது யாது? நீ பெற்றுக் கொண்டவனானால் பெற்றுக் கொள்ளாதவன் போல் ஏன் மேன்மை பாராட்டுகிறாய்? (1 கொரி. 4:7)***

*தேவனால் அழைக்கப்பட்டு பிரதிஷ்டைக்குட்பட்ட தேவனுடைய பிள்ளைகள் தாங்கள் சத்தியத்திலும் கிருபையிலும் அவரிடம் சேர்ந்து நிலை கொண்டிருப்பது தங்களுடைய சொந்த ஞானத்தினாலோ அல்லது தங்களுக்குப் போதித்தவர்களின் ஞானத்தினாலோ அல்ல. தேவனுடைய ஞானத்தினாலும், கிருபையினாலும் உண்டானதென்பதை உணர வேண்டும். தேவனுடைய சபையிலே ஊழியம் செய்யும் ஒவ்வொருவரும் எந்த பணியில் அவர்கள் அந்த ஊழியத்தில் ஈடுபட்டிருந்தாலும், தங்கள் சுய பெலத்தினாலோ அல்லது ஞானத்தினாலோ அதைப் பெற்றதாகக் கருதாமல் தேவ ஞானத்தை அவர் மூலமாகப் பெற்றோம் என்று உணர வேண்டும். சகலத்திலும் நான் அல்ல, அவரே என்னை நடத்துகிறார் என்று அறிக்கை செய்கிறவனாகவும் காணப்பட வேண்டும். இவ்விதம் செய்யாதவன் அவர் கிருபையை மறுத-க்கிறவனாயிருப்பான். (யோவா. 3:27; யாக். 1:17)* R 3278:2

## ***ஜனவரி 10***

***என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக் கொள்ளுங்கள். (யாக். 5:10)***

*ஒருவன் தன்னை முற்றிலும் வெறுத்து, தாழ்த்தி குறுகலான பாதையில் நடப்பதே சரியான வழியாகும். இதுவே பணிவுடனும் சாந்தத்துடனும் செல்லும் வழி ஆகும். இன்னல்களும், உபத்திரவங்களும் இந்த வழியில் நமக்குண்டாகும். நாம் எவ்வளவுக்கு அதிகமாக கிருபையிலும் தேவனை அறிகிற அறிவிலும் வளருகிறோமோ அவ்வளவுக்கு அதிகமாக சோதனையும் துன்பமும் பெருகும். விசுவாசத்திலும், நம்பிக்கையிலும், அன்பிலும் தேவனுடைய ஊழியத்தில் முன்னேறும் பொழுது சாத்தான் அதிகமாக நம்மை பின் வாங்கச் செய்ய முயலுவான். உறுதியான விசுவாசம் நம்மை பலப்படுத்தும் போது, முன்பு துன்புறுத்தப்பட்ட தீர்க்கதரிசிகளை நினைவு கூற யாக்கோபு நம்மை அழைக்கிறார். இந்நிலையில் பொறுமையே மிக அவசியமானது. உபத்திரவங்களில் சந்தோஷப்படும்படி நம் இரட்சகரும் போதித்தார். (மத். 5:12)* R 1751:3

## ***ஜனவரி 11***

***அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப்போல் என் இருதயத்தில் இருந்தது; அதைச் சகித்து இளைத்துப் போனேன்; எனக்குப் பொறுக்கக் கூடாமற்போயிற்று. (எரே. 20:9)***

*தேவனுடைய ஆதரவையும், ஆசீர்வாதத்தையும், வழி நடத்துதலையும், பெறத் தகுதியுள்ளவர்களாக இக்காலத்தில் ஜீவிக்கும் ஒவ்வொருவரும் அவரை மகிமைப்படுத்த வேண்டும். யோவானில் வெளிப்பட்ட அன்பின் சிந்தையும், பலமும் வைராக்கியமும் நம்மில் காணப்பட வேண்டும். அவர் அன்பான சீஷன் என்று அழைக்கப்பட்டதை நினைவு கூற வேண்டும். நாம் நம்மை முழு பலத்துடன் பூரண ப-களாக ஒப்புக் கொடுத்தல் வேண்டும். இதன் மூலம் தத்தம் செய்யப்பட்ட நம் சரீரமும் ஆவியும் கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டும். (சங் 39:1-3)* R 2808:5

## ***ஜனவரி 12***

***சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப் பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு. (கலா. 6:1)***

*தேவனுடைய பிள்ளைகள் இதில் ஒரு நல்ல பாடத்தை கற்றுக் கொள்ள வேண்டும். குற்றம் செய்த ஒருவனை கண்டித்து சீர்திருத்தும் போது மிக சாந்தமும் அன்புமுள்ள வார்த்தைகளினாலும், வசனத்தின் மூலமாகவும் மிகப் பணிவுடன் அவன் இருதயத்தின் சிந்தனைகளை மாற்ற முயல வேண்டும். நாம் ஒருவரையும் நியாயம் தீர்க்காமலும், அவர்கள் குற்றத்திற்குத் தண்டனை விதிக்காமலும் தேவனிடம் ஒப்படைக்க வேண்டும். அதோடு நாம் நம்மைக் காத்துக் கொண்டு அப்பாவங்களில் நாம் சோதனைக்குட்படாமல் இருக்க வேண்டும். தப்பிப்போன மார்க்கத்தினின்று ஒருவனை மனந்திரும்ப செய்கிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்துத் திரளான பாவங்களை மூடுவான். (2 தீமோ. 2:24, 26)* R 2807:6

## ஜனவரி 13

***என் பிள்ளைகளே, நீங்கள் பாவம் செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவம் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். (1 யோவா. 2:1)***

*நம்முடைய மாமிச பலவீனத்தினாலோ, விசுவாச பலவீனத்தினாலோ நாம் தவறி, பிதாவின் சித்தத்திற்கு மாறாக எதையும் செய்வோமேயானால், அவைகளை உணர்ந்தபின் நம்மை அழைத்து வழி நடத்துகிற தேவனிடம் உடனடியாக மன்றாடி ஜெபித்து நம் வழிகளைத் திருத்திக் கொள்ள வேண்டும். ஆபிரகாம் பலியிட்ட நிழலான மிருக பலிகளின் பலிபீடத்தைக் காட்டிலும் மேலான, கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் ப-பீடம் நமக்கு இருக்கிறது. "நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய் கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம்" என்று அப்போஸ்தலர் நமக்கு புத்தி கூறுகிறார். (எபி. 4:16)* R 2848:3

## ஜனவரி 14

***ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம் பண்ணேன். (1 கொரி. 9:26)***

*தேவனுடைய சித்தத்தைச் செய்ய முற்றிலும் பிரதிஷ்டை செய்து தன் முழுபெலத்துடன் தனக்கு அருளப்பட்ட வரத்தை உபயோகப்படுத்தத் தங்கள் சரீரத்தை ஒப்புக் கொடுத்தோருக்கு இது மிக பிரயோஜனமான வார்த்தை. கிறிஸ்துவின் போர் வீரனாக தன்னை முழுவதும் தத்தம் செய்து பிரதிஷ்டைக்குள் பிரவேசித்தவர்கள் நிச்சயமில்லாதவர்களாக ஓடாமல் சகல கஷ்ட நஷ்டங்களிலும் உறுதியுள்ள விசுவாசமுள்ளவர்களாக "நானும் என் வீட்டாரும் தேவனையே சேவிப்போம்" என்ற வார்த்தையின் மூலம் தைரியமுள்ளவர்களாக நிச்சயத்துடன் ஓட வேண்டும். இவ்விதம் போர் வீரர்களாக தங்களை ஒப்புக் கொடுத்தோர், விசுவாசத்தின் நல்ல போராட்டத்திற்காக இளைப்பாறுதலின்றி மரண பரியந்தம் பின் வாங்காது ஓட வேண்டும். அப்போஸ்தலனான பவுலைப் போல் நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன் என்று ஒவ்வொரு கிறிஸ்துவின் சேவகனும் சொல்ல வேண்டும். (எபி. 12:1; 1 கொரி. 9:24)* R 3273:4

## *ஜனவரி 15*

**மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயம் செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தை யேகோவா உன்னிடத்தில் கேட்கிறார். *(மீகா 6:8)***

*இவை சகலராலும் ஏற்றுக் கொள்ளப்படும் ஒரு நியாயமான தேவை. வருங்காலத்தில் இப்பூமியை நியாயந்தீர்க்க தேவனால் போதிக்கப்படுவோருக்கு இக்குண லட்சணங்கள் மிக அவசியமானது. மீகா தீர்க்கதரிசி மூலம் உரைக்கப்பட்ட இம்மூன்று குண லட்சணங்களும் அன்பு என்னும் ஒரே வார்த்தைக்குள் அடங்கியுள்ளது. அன்பு என்பது பிறனிடத்திலும், சகோதரரிடத்திலும், குடும்பத்திலும் விசேஷமாக நம்மிடத்திலேயும் நியாயமாக இருக்க வேண்டிய குண லட்சணம். நாம் இதை விரும்பி நாம் வாழ்க்கையிலே இவற்றை பயிற்சித்து பயன்படுத்த வேண்டும். இக்காரியங்களையே தேவன் நம்மிடத்தில் விரும்புகிறார். மனத்தாழ்மை இல்லாத இடத்தில் அன்பு இல்லை. (யாக். 4:10; 1 கொரி. 13:1-7)* R 3020:6

## *ஜனவரி 16*

**ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள். *(ரோம. 12:12)***

*தேவனுடைய பிள்ளைகளுக்கு இது எவ்வளவு பெரிதான சிலாக்கியம். இவர்கள் தேவனை எந்நேரத்திலும் , எந்த இடத்திலும் அவருடைய குமாரன் மூலம் ஜெபித்து அவர் நம்மோடு இருக்கிறார் என்றும், நமக்கு பதிலளிக்கிறார் என்றும், நம் இருதயங்களில் விசுவாசித்தல் அவசியமானது. அவருடைய பார்வையிலே ஒரு நாள் வேலையை செய்து முடித்து அவருடன் நெருங்கி சம்பாஷனையிலே ஈடுபடுவது எவ்வளவு மேலான சிலாக்கியம். இதன் மூலம் நம் சகல பாரங்களையும் அவரிடம் ஒப்படைக்கிறோம். ஆகிலும் உண்மையாக ஒருவர் தேவனை அறியாமலும், அவருடைய பிரமாணங்களைக் கைக்கொள்ளாமலும் ஜீவித்து ஜெபிப்பார்களானால் இவர்கள் ஜெபம் கேட்கப்படமாட்டாது. கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்கு கவனமாயிருக்கிறது. (நீதி. 28:9; 1 பேது. 3:12)* R 1866:1

## *ஜனவரி 17*

***தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக் கொள்ளுங்கள். (யூதா 21)***

*நாம் நீதியிலே நிலைத்திருக்க அனுதினமும், ஒவ்வொரு மணி நேரமும் அவருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிவதன் மூலம் தேவனுடைய அன்பிலே நிலைத்திருக்க வேண்டும். நாம் சந்தோஷமான நேரங்களில் மட்டுமல்ல உபத்திரவங்களிலும், துன்பங்களிலும், வியாதியிலும், சகல நிந்தைகளிலும் கூட அவர் கிறிஸ்துவின் மூலம் நமக்கு போதித்த பிரமாணமான அன்பிலே, உண்மையுள்ள இருதயத்தோடு நிலைத்திருக்க வேண்டும். உயர்வானாலும், தாழ்வானாலும் நம்முடைய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மை பிரிக்கமாட்டாதென்று பவுல் சொன்ன வார்த்தைகளை நினைவு கூற வேண்டும். அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகவே பூரணப்பட்டிருக்கும். (ரோம. 8:39; 2தெச. 3:5; 1யோவா. 5:3)* R 3021:6

## *ஜனவரி 18*

***அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள். (ரோம. 12:11)***

*தேர்ச்சி பெற்றவர்களாக ஓட்டப் பந்தயத்தில் ஓட விரும்பும் யாவரும் மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களாக உற்சாகத்துடன் தேவ ஊழியத்தில் ஈடுபட வேண்டும். நமக்கு கொடுக்கப்பட்ட தாலந்தை ஆவிக்குரிய காரியங்களுக்கு உபயோகப்படுத்தாமல், உலக காரியங்களில் ஈடுபடுவதன் மூலம் அதை புதைத்து வைப்போமாகில் அவிசுவாசமுள்ள ஊழியக்காரனைப் போல நாமும் புறம்பான இருளிலே போகக் கூடியவர்களாக காணப்படுவோம். ஆவியில் அன-ல்லாதவர்கள் மரித்தவர்களுக்கொப்பானவர்கள். விழிப்புடன் உற்சாகத்தோடு தேவ ஊழியத்தில் ஈடுபடும் போது நாம் பிரகாசிக்கிற விளக்குகளாக காணப்படுவோம். (அப். 18:24-25; வெளி. 3:15-16)* R 1282:5

## ஜனவரி 19

***உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுவதும் அது என் தியானம். (சங். 119:97)***

*தேவனுடைய வார்த்தைகளை தியானிப்பது கிறிஸ்தவர்களின் தனி உரிமை. ஆகிலும் அநேக சந்தர்ப்பங்களில் சிலருக்கு இது எவ்வித பயனையும் கொடுப்பதாக இருப்பதில்லை. எப்படி என்றால் படித்தவைகளை இவர்கள் தங்கள் வாழ்க்கையில் பயன்படுத்தாவிடில் இது பிரயோஜனம் அற்றதாகிவிடும். தேவனுடைய பிள்ளைகள் தேவ திட்டத்தை அறிய எல்லா சந்தர்ப்பங்களையும் உபயோகித்து நாள் முழுவதும் அவ்வசனங்களில் தியானமாயிருக்க வேண்டும். இவ்வசனங்களை தியானிக்கிறவர்கள் இடறுவதில்லை. இவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு. இதை இரவும் பகலும் தியானிக்கிற மனுஷன் பாக்கியவான். (சங். 119:113, 163, 165)* R 2488:3

## ஜனவரி 20

***நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? (எபி. 12:7)***

*உபத்திரவங்களும் சோதனைகளுமின்றி ஒருவன் தன் வாழ்க்கையிலே பூரணப்படுவது அரிது. இது ஓர் இளஞ்செடிக் கொப்பானது. தேவ அன்பெனும் சூரிய ஒளி இது வளர்வதற்கு அவசியமானது. அவர் கிருபையின் தண்ணீர் அதற்கு அனுதினமும் ஊற்றப்பட வேண்டும். இவ்விதம் விசுவாசத்தின் அடிப்படையில் வளரும் போது ஒழுங்காக வளர்ந்து நற்கனிகளைத் தர இதன் கிளைகள் ஒடிக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட வேண்டும். இந்த சிட்சைகளின் மூலம் இந்த செடி பலங்கொண்டு விசுவாசத்தில் பூரணமாக நிற்க உதவுகிறது. அநேக உபத்திரவங்கள் மூலமாகவே நாம் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியும். (யாக். 1:12; வெளி 3:19)* R 1807:4

## ஜனவரி 21

***ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். (மத். 16:24)***

*சிலுவையை சுமப்பது என்பது தன்னை வெறுப்பதற்கு ஒப்பானதாக இருந்தாலும் இவைகளிடையே வித்தியாசங்களுண்டு. தன்னை வெறுப்பதென்பது தேவனுக்கென்று தன்னை ஒப்புக் கொடுத்து, முற்றிலும் கீழ்ப்படிந்து ஜீவிப்பதாகும். சிலுவையை சுமப்பது தேவனுடைய ஊழியத்திலே நமக்கு சில அசதியிருந்தாலும் முழு முயற்சியுடன் ஈடுபடுவதாகும். விசுவாசத்தின் மூலம் தன்னை வெறுப்பது தைரியமும் ஊக்கமுமுள்ளது. ஆனால் சிலுவையை சுமப்பது வெற்றிக்கு அறிகுறியாகும். நாம் தேவனுடைய ஆசீர்வாதத்தை முற்றிலும் பெற நம்மை நாம் அடக்கி உலக இச்சைகளுக்குட்படுத்தாமல் சகலத்தையும் வெறுத்து இடுக்கமான பாதையில் நடப்பது அவசியமாகும். இதில் நாம் வெற்றியடைவது சிலுவையை சுமப்பதற்கு ஒப்பானது. (மத். 10:37-39)* R 2616:2

## ஜனவரி 22

***கர்த்தருக்குக் காத்தருக்கிறவர்களே, நீங்களெல்லாரும் திடமனதாயிருங்கள், அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார். (சங். 31:24)***

*தேவனுடைய பிள்ளைகள் தங்கள் நெருக்கமான பாதையில் மிகுந்த துன்பங்களையும், சோதனைகளையும் அனுபவித்து ஜீவிக்கும் போது சாத்தான் அவர்களை அதைரியப்படுத்தி இப்பாதையில் நடப்பது பிரயோஜனமற்றது என்று உணர்த்துவது போல சில சந்தர்ப்பங்களில் காணப்படும். இச்சந்தர்ப்பங்களில் இவர்கள் என்ன செய்ய வேண்டும்? நம்முடைய இரட்சகரான இயேசுவை நாம் முன்மாதிரியாகக் கொண்டு, பிதாவின் முகத்தைத் தேடி மன்றாடி அவர் நடத்துதலுக்காகக் காத்திருப்பது அவசியமானது. உலகம் நம்மை நிந்தித்து பல பொய்யான காரியங்களைக் குற்றமாகப் பேசினாலும் நாம் தைரியமாகத் தேவனுடைய நடத்துதலுக்காகக் காத்திருப்பதே மேலானது. அவரே நம்மை ஸ்திரப்படுத்தவும் பலப்படுத்தவும், ஆதரிக்கவும் பலமுள்ளவராக இருக்கிறார். உயிர்தெழுத-ல் நித்திய ஜீவனைப் பெறுவதே நம் சிந்தையாக இருக்க வேண்டும். (சங் 27:14; 33:18-22)*
R 2774:6

## ஜனவரி 23

**சகோதரரே, அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கக்கடவன். (1 கொரி. 7:24)**

*கடமை அல்லது ஊழியம் சில சந்தர்ப்பங்களில் மாறுபட்ட அபிப்பிராயத்தை கொடுப்பது போல காணப்படலாம். ஆகிலும் அது அப்படியல்ல. ஒரு கிறிஸ்தவனின் முதல் கடமை, சகல காரியத்திலும் சிருஷ்டிகரை முழு மனதுடன் அங்கீகரிப்பதேயாகும். இரண்டாவதாக ஒருவன் புருஷனும், தகப்பனுமாக இருந்தால், இவன் கடமை மனைவி பேரிலும், பிள்ளைகளின் பேரிலும் இருக்க வேண்டும். மனைவியும், தாயுமாக இருந்தால் இவள் கடமை புருஷன் பேரிலும், பிள்ளைகள் பேரிலும் இருக்க வேண்டும். தேவனுக்கு முன்பாக ஒருவன் நிலைத்திருக்க அவன் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரனாக ஜீவிக்க வேண்டும். அன்பிலே ஊழியம் செய்வதை தேவன் விரும்புகிறார். பேதுருவும் தீமைக்குத் தீமை செய்யாமல் நீங்கள் ஆசீர்வாதத்தை சுதந்தரிக்கும்படி அழைக்கப்பட்டீர்களென்று அறிந்து ஆசீர்வதியுங்கள் என்றார். (1பேது. 3:9; கலா. 5:13-14)* R 2488:3

## ஜனவரி 24

**கிருபையும் சத்தியமும் உன்னை விட்டு விலகாதிருப்பதாக; நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு, அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக் கொள். (நீதி. 3:3)**

*அன்பின் பிரமாணத்தில் நீதி முதல் ஸ்தானம் வகித்தாலும் அது அதன் முடிவு அல்ல. அன்பின் மூலமாகவே நாம் இரக்கத்தையும் மன்னிப்பையும் அதிகமாக காண்பிக்க முடியும். கிருபை அல்லது இரக்கத்தின் மூலமாகவே நாம் தெய்வீக அன்பை வெளிப்படுத்த முடியும். நாம் அனுதின வாழ்க்கையிலே பூரணமற்றவர்களாக இருப்பவர்களிடத்தில் அவர்கள் நன்றியில்லாதவர்களாகக் காணப்பட்டாலும் நீதியோடு கூடிய இரக்கமுள்ளவர்களாகவும், அன்புள்ளவர்களாகவும், தயாள குணமுள்ளவர்களாகவும், ஜீவிக்க நாம் பிரயாசப்பட வேண்டும். இதன் மூலமாகவே நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று விளங்கமுடியும். (2 கொரி. 3:2-3)* R 3020:6

## ஜனவரி 25

***ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளைய தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும். (மத். 6:34)***

*நாம் தேவனை நேசிக்கிறவர்களாக அவர் ஊழியத்திலே முழு மனதுடன் ஈடுபட்டு நீதிக்குரிய காரியங்களையும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேவ ராஜ்யத்தையும் தேடுவோமேயாகில், வருங்காரியத்திற்குரிய காரியங்களில் நம் கவனத்தை செலுத்த அவசியமே இல்லை என்று இயேசு கூறினார். அவருடைய சீஷர்களை போல நமக்கு சோதனைகளும் உபத்திரவங்களும் உண்டு. ஆகிலும் நாம் அனுதினமும் நம் நேசர் பேரில் சார்ந்து, அவர் கைகளுக்குள்ளாக அடங்கி குறுகிய பாதையில் நடக்கப் பிரயாசப்பட வேண்டும். அந்தந்த நாளுக்கு அனுதினத்தின் பாடுகள் போதும். இந்த எல்லாப்பாடுகளிலும், அவர் வாக்குத்தத்தம் பண்ணின அவர் கிருபை நமக்குப் போதும். இதுவே நம் அனுதின மன்றாட்டாகவும் இருக்க வேண்டும். முதலாவது அவருடைய ராஜ்யத்தை தேடும்போது மற்ற யாவும் அவராலே கொடுக்கப்படுகிறது. (மத். 6:8)* R 2260:4

## ஜனவரி 26

***நீங்கள் உபவாசிக்கும் போது, மாயக்காரரைப் போல முக வாடலாய் இராதேயுங்கள். (மத். 6:16)***

*ஆவியில் தளர்ச்சியுற்று, உலகம், மாமிசம் மற்றும் சாத்தானால் சோதனைக்குட்படும் போது தேவனுடைய பிள்ளைகளுக்கு உபவாசம் மிக அவசியமானது தான். ஏனென்றால் மாமிச தேக பலத்தையும், சக்தியையும் தளரச் செய்வதின் மூலம் நம் சிந்தனைகளை அடக்கி வசப்படுத்தி தக்க வழியில் செல்ல இது அவசியமானது. பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட உபவாசத்தின் மூலம் பயன் பெற்றதுண்டு. ஆனால் சகலரும் காணும்படி உபவாசிப்பதோ, ஜெபிப்பதோ , கபடமானதும் தற்பெருமைக்குக் காரணமுமாயிருக்கும். இவர்கள் தேவ பக்தியின் வேஷதாரிகளாக காணப்படுவர். நெருக்கப்பட்டவர்களை விடுதலையாக்குவதும், சிறுமையானவனுக்கு சகாயம் செய்வதும், எதார்த்தமாக நடப்பதுமே எனக்கு உகந்த உபவாசம் என்று யேகோவா தேவன் ஏசாயாவின் மூலம் தம் ஜனத்துக்கு உணர்த்துகிறார். (ஏசா. 58.5-7)* R 2260:5

## ***ஜனவரி 27***

***எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள், அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும். (நீதி. 4:23)***

*பாவம் பல வகைகளில் தீமையை விளைவிக்கக் கூடியது என்று நாம் ஒத்துக் கொள்வது மட்டும் போதாது. இது தேவனால் தடை செய்யப்பட்டதால் இவைகளை நாம் செய்யாதபடி தவிர்க்க முயற்சிப்பது அவசியம். அதோடு கூட தேவனால் அங்கீகரிக்கப்படாத சகல காரியங்களையும், உலக இச்சைகளையும் நம் இருதயங்களி-ருந்து முற்றிலும் அகற்றிவிடுவதே நலமானது. கிறிஸ்துவின் நாமத்திலே அழைக்கப்பட்டோருக்குத் தங்கள் இருதயத்திலும், ஜீவியத்திலும் விசேஷமாக சிந்தனையிலும் தங்களை சுத்திகரித்துக் கொள்வதற்கு இது அவசியம். இதை தீர்க்கமாக புரிந்து கொள்ளாதவர்கள் வெளிப்படையான சில தீய செயல்களுக்கு தங்களை விலக்கிக் கொண்டாலும் தேவனால் தடை செய்யப்பட்ட சில காரியங்களில் ரகசியமாக தங்களை உட்படுத்துவதுண்டு. இதனிமித்தமே சகல காவலோடும் நம் இருதயத்தைக் காத்துக் கொள்ள எச்சரிக்கப்படுகிறோம். (எரே. 17:9-10)* R 2480:5

## ***ஜனவரி 28***

***ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவ புத்தகத்தி-ருந்து அவனது நாமத்தை நான் கிறுக்கிப் போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன். (வெளி 3:5)***

*உண்மை விசுவாசிகள் பாவத்தை மேற்கொண்டு விழிப்புள்ளவர்களாக உலக வழிகளிலே தங்களைக் காத்து, தங்கள் வஸ்திரங்களை கறைபடுத்தாது காத்துக் கொள்வர். பாவம் தங்களை கறைப்படுத்தி கிறிஸ்துவினிடமிருந்து தங்களை விலகிப் போக ஏதுவில்லாமல் அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் தங்களுடைய வஸ்திரங்களை அவ்வப்போது சுத்திகரித்துக் கொள்வார்கள். இவர்கள் பாவத்தை வெறுத்து, தங்கள் வஸ்திரங்களை கறைப்படுத்தாமல் காத்துக் கொள்வதால் பொல்லாங்கன் இவர்களை அணுகமாட்டான். இவை யாவும் இவர்கள் தங்கள் சித்தத்தை முழுவதும் கிறிஸ்துவின் சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்து கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களாக ஜீவிப்பதால், இவர்கள் பாவத்தை நடப்பிக்க மாட்டார்கள். (வெளி 27:27; 13:8)* R 2161:1

## *ஜனவரி 29*

***யேகோவாவுக்குப் பயப்படுதலே (பயத்துடன் சேவிப்பதே) ஞானத்தின் ஆரம்பம். (சங். 111:10)***

*சர்வலோகத்தையும் படைத்து, காத்து ஆண்டு வருகிறவரும், சகல சிருஷ்டியையும் சிருஷ்டித்தவருமான தேவனுக்கு செலுத்தப்பட வேண்டிய காரியம் இதுவே. இதனிமித்தம் அவர் பேசும் போது அவர் சத்தத்திற்கு நம் செவி, எப்பொழுதும் கவனிப்பாக இருந்து அவர் வார்த்தைகளின்படி சகலத்தையும் செய்ய விழிப்புள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். நாம் காக்கப்படுவதும், சந்தோஷப்படுவதும் சகல நற்குணங்களிலும் முன்னேற்றம் அடைந்து தேவனை அறிகிற அறிவிலும் ஞானத்திலும் வளருவதும் நாம் அவரை பயத்துடன் சேவிப்பதின் மூலமாகவே பெற்றுக் கொள்கிறோம். நாம் அவரைக் கண்டு பயப்படத்தக்கக் கொடூரமான தேவன் அல்ல. தேவன் அன்புள்ளவர், இரக்கமுள்ளவர், கிருபை நிறைந்தவர் என்பதை அவர் சித்தத்தின்படி நடப்பதன் முலம் அறியலாம். அவர் நீதியுள்ள தேவனானபடியால் துன்மார்க்கத்தாருக்கு அவர் பயங்கரமான தேவன். நம் இரட்சகரான இயேசுவும் பிதாவுக்குப் பயந்து ஜீவித்தார். (ஏசா. 11:2,3; 33:6; சங். 19:9)* R 2002:3

## *ஜனவரி 30*

***சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார். (லூக். 18:1)***

*தேவனிடம் நாம் ஜெபத்தின் மூலம் நெருங்கி ஜீவிக்க சற்றும் பயப்படக்கூடாது. அவர் அதிக வேலையில் இருக்கிறார் என்றோ அல்லது நம்முடைய சிறு குறைகளைக் கேட்கமாட்டார் என்ற அச்சமோ நம்மில் சிறிதும் காணப்படக் கூடாது. இதை வ-யுறுத்தவே நம்முடைய இரட்சகர் ஓர் விதவையின் உவமையைக் கூறி விவரித்தார். அந்த விதவை தன் காரியம் கேட்கப்படும் வரை அந்த நியாயாதிபதியை அலைக்களித்து, விடாது விண்ணப்பம் செய்து கொண்டே இருந்து உத்தரவு பெற்றாள். அது போல நம் விசுவாசமும் விருப்பமும் ஜெபத்திலே காணப்பட வேண்டும். இவை கேட்கப்பட்டு ஏற்ற காலத்திலே பதிலளிக்கப்படும் என்ற விசுவாசம் அவசியம். பதில் தாமதிக்கும் பட்சத்தில் சோர்ந்து போகாமல் அதற்காக காத்திருந்து விடாமுயற்சியுடன் ஜெபிக்க வேண்டும். தேவதிட்டத்திலே குறிக்கப்பட்ட நேரங்கள் மிக முக்கியமானது. ஏற்ற வேளையில் தேவன்பதிலளிப்பார். (யோபு 33:26; யாக். 5:13-15)* R 1865:4

## *ஜனவரி 31*

***சாந்த குணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்த குணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார். (சங். 25:9)***

*பரத்தி-ருந்து வரும் ஞானத்தை பெறக்கூடியவர்களுக்கு இது ஒரு முக்கியமான ஏற்பாடாகும். ஞானத்திலே குறைவு பெற்றவர்கள் தங்களை முற்றிலுமாக அர்ப்பணிக்க வேண்டும். இல்லையேல் பரிபூரணமாகவும், இலவசமாகவும் அருளப்படும் இந்த பரத்திற்குரிய ஞானத்தை விரும்பி ஒருவரும் பெற்றுக் கொள்ள முடியாது. தெளிந்த ஆவியைப் பெற்ற ஒவ்வொருவருக்கும் இவ்விதமான அடக்கமுள்ள சிந்தை அவசியமானது. சாந்தகுணம் நம்மை சகல நல்லொழுக்கத்திலும் வழிநடத்தும். எந்த ஒரு காரியத்தையும் நியாயமாகவும் நேர்மையாகவும், பட்சபாதமின்றியும் செய்ய இது முக்கியமானது. சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்வார்கள். சாந்தமும் அமைதலுமுள்ள இருதயமே தேவனுடைய பிள்ளைகளுக்கு அருளப்பட்ட அழியாத அலங்கரிப்பாயிருக்கிறது. எனவே பணிவு அல்லது அடக்கமே கிறிஸ்துவின் சிந்தையை பெற அவசியமானது. (1 பேது. 3: 4,15; கலா.5:22-23; 2 தீமோ. 2:25-26)* R 2585:5

## *பிப்ரவரி 1*

***நீங்கள் வலது புறமாய்ச் சாயும் போதும், இடது புறமாய்ச் சாயும் போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும். (ஏசா. 30:21)***

*நம் அனுதின வாழ்க்கையில் அநேக இடுக்கமான சூழ்நிலைகள் நமக்கு ஏற்படக்கூடும். இந்நிலையில் நாம் ஓர் உச்சநிலையை அடையும் போது பல வழிகளில் நம்மை கலங்கச் செய்யும். எப்பக்கம் நாம் செல்ல வேண்டும் என்றும், எதை செய்ய வேண்டும் என்றும் நாம் திகைக்கும் போது நாம் சற்று ஜெபித்து தேவன் நமக்கு காட்டும் வழிக்காக காத்திருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தைகள் இச்சந்தர்ப்பங்களில் நமக்கு அருளப்படும். சூழ்நிலைகளை எவ்விதம் நாம் மேற்கொள்ள வேண்டும் என்பதைத் தேவன் நமக்குப் போதிப்பார். நீதிமான்களின் வழியை தேவன் அறிவார். ஏற்ற காலத்திலே அவனுக்கு சகாயம் செய்வார். அவருடைய வழிகளை அவனுக்குப் போதிப்பார். (எரே. 6:16; நீதி. 16:9-17; சங். 25:9)* R 1753:2

## *பிப்ரவரி 2*

***மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள். (ரோம. 8:13)***

*மாம்சத்தின்படி பிழைப்பதென்றால் என்ன? அது விழுந்து போன மனுஷனுடைய வழிகளைப் பின்பற்றி, உலக ஆசாபாசங்களுக்கும், இச்சைகளுக்கும் தங்கள் வழிகளை உட்படுத்தி ஜீவிப்பதாகும். இது மிகவும் சுலபமானது. புதிய ஜீவிகள் பழைய மனுஷனை களைந்து போட்டுத் தங்கள் உள்ளத்திலே புதிதான சிந்தை உடையவர்களாக சிருஷ்டிக்கப்பட்டவர்கள். மேற்சொன்னவைகளுக்கு இவர்கள் எதிர்த்து நிற்க வேண்டும். இல்லையேல் இவர்கள் இச்சை என்னும் ஆற்றிலே இழுத்துச் செல்லப்படுவார்கள். பின்னர் அதினின்று இவர்கள் வெளியேறுவது மிகக்கடினமானது. ஆவியினால் நடத்தப்படுவோமேயானால் நாம் மாமிச இச்சைகளுக்கு நீங்கலாயிருப்போம். நமக்கு முன் வைத்துள்ள பந்தயப் பொருளை எண்ணி இவ்வுலக ஆசையிச்சைகளை அற்பமாக எண்ணக்கடவோம். (2 பேது. 2:9-10; கலா.5:16-17)* R 1748:3

## *பிப்ரவரி 3*

***என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி; என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய். அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம். (நீதி. 4:20,22)***

*சரீரத்தின் பேரில் நம்முடைய சிந்தை எவ்வளவாக இருக்கிறது என்று ஒரு சிலர் புரிந்து கொண்டுள்ளனர். இப்படியாக தேவன், நாம் சுத்த இருதயமுள்ளவர்களாகவும், பெருந்தன்மையும், பரிசுத்த சிந்தை உடையவர்களாகவும் மனரீதியாகவும், சரீர பிரகாரமாகவும் நம்மை சிருஷ்டித்துள்ளார். இதற்கு மாறாக, அவர் வார்த்தைகளை கவனியாமலும், செவிகொடாமலும் இருப்பவர்கள் தங்கள் சரீரத்தை அழிவுக்கு ஒப்புக் கொடுத்து சகல துர் இச்சைகளால் நிறைந்திருப்பார்கள். இவைகள் மரணத்துக்கேதுவாக இவர்களை வழி நடத்தும். தேவனுடைய வார்த்தையோ ஞானத்தைப் போதித்து, அறிவை உணர்த்தும் அவருடைய வார்த்தைகளுக்கு செவி கொடுப்போருக்கு தம்முடைய வசனத்தை அனுப்பி அவர்களை குணமாக்கி அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார். (சங். 119:49-50; 107:19-20)* R 2014:6

## பிப்ரவரி 4

***என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள். (வெளி. 18:4)***

*"என் ஜனம்" என்று அழைக்கப்படத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தேவனுடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்து, பாபிலோனை விட்டு வெளியேறுவார்கள். இவர்கள் அவருடைய சத்தத்தை கேட்டதினால் அவளுக்கு நேரிடும் வாதையி-ருந்து காக்கப்படுவார்கள். இந்த சத்தத்தைக் கேட்டும் வெளியேறாதவர்கள் பதர்களைப் போல அக்கினிக்கு இரையாவார்கள். தேவனுடைய பிள்ளைகள் அவருடைய சத்தத்தை அறிவார்கள். பாபிலோன் குழப்பமுள்ளதான போதகங்களை போதித்து, உண்மை தேவனையும் அவர் குமாரனையும் அறியாமல் இருளிலே இருக்கிறார்கள். ஒளியைப் பெற்றவர்கள் இருளுக்குரியவர்கள் அல்ல. (கொலோ. 1:12-13; மத். 4:15; 2 கொரி. 6:4)* R 2553:3

## பிப்ரவரி 5

***நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. (1 தெச. 4:3)***

*தேவசித்தம் இன்னதென்பதை நாம் வேதத்தின் மூலம் அறியும் போது நாம் மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதற்கு அல்ல, முதலாவது நம்மை முற்றிலும் அடக்கி, நம் சித்தத்தை வெறுத்து, நம்மை நாமே ஆளக்கூடியவர்களாகக் காணப்பட வேண்டும். பின்பு நாம் விசுவாச வீட்டாருக்குச் செய்யும் ஊழியமும், மற்ற மனிதர்களுக்குச் செய்யும் உதவிகளும், இன்னும் பல நற்குணங்கள் அடங்கிய கிரியைகள் யாவும் நம்மை அடக்கி ஆளும் ஒரே காரியத்தில் அடங்கியுள்ளது. நாம் முதலாவது பரிசுத்தராக விளங்குவது மிக அவசியமானது. அப்போஸ்தலன் சொன்னது போல நாம் எவ்வளவாக தேவனுடைய வார்த்தைகளை மற்றவர்களுக்குப் போதித்தாலும், நமக்குண்டான யாவற்றையும் ஏழைகளுக்கு கொடுத்தாலும் அல்லது ஒரு நல்ல காரியத்திற்காக தன் உயிரையும் தியாகம் செய்தாலும் அன்பு இல்லாவிட்டால், பிதா மற்றும் குமாரனின் ஆவி இல்லாவிட்டால் அவன் அவருடைய பார்வையிலே ஒன்றுமில்லாதவனாக காணப்படுவான். (1 கொரி. 13:1-7; 1 தெச. 5:14-18)* R 2412:1

## பிப்ரவரி 6

***கிழக்கிலும் மேற்கிலும் வனாந்தர திசையிலுமிருந்து ஜெயம் வராது. தேவனே நியாயாதிபதி; ஒருவனைத் தாழ்த்தி ஒருவனை உயர்த்துகிறார். (சங். 75:6-7)***

*அநேக சந்தர்ப்பங்களில் நாம் மற்றவர்களுக்கு பிரயோஜனமான காரியங்களை செய்ய விரும்பினாலும் அல்லது செய்ய இருந்தாலும், இது அநேகருக்கு திருப்திகரமாக இராது. தேவன் இவைகளை அறிந்தவரானபடியால் நம்மை உயர்த்தவோ, தாழ்த்தவோ அவராலேயன்றி ஒருவராலும் கூடாது. நம் கிரியைகளை அவர் அறிவார். வாஞ்சையுள்ளவர்களை ஊக்கமுள்ளவர்களாகவும், விழிப்புள்ளவர்களாகவும், தேவனுடைய சித்தத்தை மனப்பூர்வமாகச் செய்யவும் பெலனளிக்கிறார். இவர்கள் சகல உபத்திரவத்திலும், பொறுமையுள்ளவர்களாகவும், தங்களை முற்றிலுமாக வெறுத்து தேவனுக்கே ஊழியம் செய்வதாக எண்ணி கிருபையினால் நிறைந்தவர்களாக நீதியுள்ள நியாயாதிபதி தங்களுக்கு ஏற்ற காலத்தில் பதிலளிப்பார் என்ற சிந்தையோடு நற்காரியங்களை செய்வார்கள். (நீதி. 3:35; எபி. 10:30-31)* R 1756:5

## பிப்ரவரி 7

***அன்பானது பிறனுக்குப் பொல்லாங்கு செய்யாது; ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது. (ரோம. 13:10)***

*புதிய உடன்படிக்கைக்குள்ளான ஒவ்வொருவரும் தங்கள் இருதயங்களிலே அன்பின் பிரமாணத்திற்கு ஒத்ததான இரக்கம், சாந்தம், நல்லொழுக்கம் யாவும் உள்ளவர்களாக காணப்பட வேண்டும். இக்குணலட்சணங்கள் இல்லாதவர்கள், தேவனுடைய பிள்ளைகள் என்றோ அல்லது அவர் குமாரனுடன் ஆட்சி செய்யக் கூடியவர்கள் என்றோ தங்களைக் கருத இயலாது. தங்கள் இருதயங்களிலே சகோதர அன்பும் மனத்தாழ்மையும் இல்லாதவர்களாயிருந்து, அயலானிடத்திலும் இந்த அன்பை காண்பிக்காதவர்கள், தேவ ஆவி தங்களிடம் இல்லாதவர்களாகவும், தங்கள் ப-யைப் பூரணமாக செலுத்தக் கூடாதவர்களாகவும் காணப்படுவார்கள். இவர்கள் குறிக்கப்பட்ட காலத்தில் தங்கள் மனமேட்டிமையினாலும் தற்புகழ்ச்சியினாலும் தேவ ஆவியை இழந்து தங்கள் ப-யின் ஜீவியத்தில் விழுந்து போவார்கள். தன்னலமான சிந்தை இவர்களை மேற்கொள்ளும். (1யோவா. 2:15-16; 1 கொரி. 13:4-7)* R 2330:2

## *பிப்ரவரி 8*

***அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய். (மத். 14:31)***

*விசுவாசத்தை பலப்படுத்துவும், அவிசுவாசத்தை மேற்கொள்ளவும் என்ன செய்யப்பட வேண்டும்? இதற்குரிய பதில் யாதெனில் முற்கால அப்போஸ்தலரைப் போல, "பிதாவே, எங்கள் விசுவாசத்தைப் பலப்படுத்த வேண்டும்" என்று ஜெபித்தலே ஆகும். இந்த ஜெபத்துடன் தங்கள் இருதயங்களில் விசுவாசத்தை அதிகப்படுத்த முயற்சிக்கவும் வேண்டும். இவர்கள் தேவனின் வாக்குத்தத்தங்களின் பேரில் அடிக்கடி சிந்தனை உள்ளவர்களாக இருந்து அவருடைய வார்த்தைகளின் பேரில் அதிக பற்றுதல் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். தான் தேவனோடு செய்த உடன்படிக்கையை உணர்ந்து, அதை அடிக்கடி தன் நினைவிற்கு கொண்டுவர வேண்டும். தேவ வாக்குத்தத்தங்கள் தன்னுடையதென்று தன் இருதயத்திலும், தன் உதடுகளினாலும் தேவனுக்கு முன் அறிக்கையிட்டு ஜெபத்திலே அவருக்கு நன்றி செலுத்தவும் வேண்டும். விசுவாசமே தேவபலம். ஒருவர் இதை அடைய சகோதரர் இடையே இதைக் குறித்துப் பேசி, தன் விசுவாசத்தை பெலப்படுத்த வேண்டும். இது பொன்னிலும் விலையேறப் பெற்றது. (1 பேது. 1:5-7; எபி. 11:6)* R 2642:6

## *பிப்ரவரி 9*

**என் ஆத்துமாவே, யேகோவா உனக்கு நன்மை செய்தபடியால், நீ உன் இளைப்பாறுதலுக்குத் திரும்பு. *(சங். 116:7)***

*ஒருவரின் கிறிஸ்தவ ஜீவியத்தில் ஆவிக்குரிய வளர்ச்சிக்கான சிந்தனைகளே அவனுக்குள் இருக்க வேண்டும். இந்த நல்லதோர் பயிற்சி அவனுக்குள் விதைக்கப்பட வேண்டும். சிந்தனையில் பயிற்சி என்று சொல்வது நம் மனம் ஓய்ந்திருக்கும் போது நமக்குள் எழும்பும் யோசனைகள். நாம் வாழ்க்கையிலே பல வேலைகளில் ஈடுபட்டிருக்கும் போது நம் சிந்தனைகள் அந்தந்த வேலைகளைப் பற்றினதாகவே இருக்கும். அப்படி இல்லாவிட்டால் நாம் அந்த வேலையை சரிவர செய்ய முடியாது. ஆனால் நாம் இந்த வேலைகளி-ருந்து ஓய்ந்திடும் போது நம் சிந்தனைகளை வேறே பல உலகக்காரியங்களில் செலவிடாதபடி நம் இளைப்பாறுத-ல் நம் சிந்தனைகள் யாவும் தேவனுக்கடுத்த காரியங்களில் ஈடுபடுத்தும் பயிற்சியைச் செய்து அவர் செய்த சகல ஈவுகளையும் நினைத்து நன்றி செலுத்த வேண்டும். (சங். 4:8; 119:165)* R 1885:5

## *பிப்ரவரி 10*

***நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு. (1 தீமோ. 4:12)***

*ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் அனுதின வாழ்க்கையில், இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றி ஒரு மாதிரியான ஜீவியத்தை உண்மையோடு ஆர்வமுள்ளவர்களாக ஜீவிக்க வேண்டும். இது தற்காலத்தில் காணப்படக்கூடாத பூரணமும், மகிமையும், அழகும், பரிசுத்தமுமான ஜீவியம் ஆகும். இது இயேசு கிறிஸ்துவினிடம் மட்டும் காணப்பட்டது. இதைக் குறித்தே பவுல் சொல்லும் போது என்னை பின்பற்றுங்கள் என்று சொல்லாமல், "நான் கிறிஸ்துவை பின்பற்றுகிறதுபோலநீங்கள்என்னைப்பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" என்றார். (1 கொரி. 11:1) பவுல் பூரண ஜீவியத்தில் நமக்கோர் எடுத்துக்காட்டாக உள்ளார். ஆனால் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்பான பூரண நிலையில் அல்ல. ஆகிலும் இயேசுவின் பூரண குணங்களை தன் உள்ளத்திலே கொண்டு அவரைப் போல நடக்க தான் உருக்கமாக பிரயாசைப்பட்டது போல நாமும் பிரயத்தனப்படவே எச்சரிக்கப்படுகிறோம். நம் ஜீவியம் அநேகருக்கு முன்பாக ஒரு நல்ல மாதிரியான ஜீவியமாக இருக்க வேண்டும். (மத். 5:16)* R 1886:1

## *பிப்ரவரி 11*

***என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூறுங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கத்தரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே. (மத். 5:11,12)***

*எதிர்ப்பும் துன்பமும் தேவனுடைய ஊழியத்தில் இன்றியமையாதவை. இவைகளை தேவ மனுஷன் பொறுமையோடு நேர்மையாய் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த காரியங்களை ஏற்க மறுப்பவர்கள்எச்சரிக்கப்பட்டுஅவர்கள்வழிகளிலேவிடப்படுகின்றனர். இதனால் அவர்களுக்கு வரக்கூடிய சிலாக்கியத்தை இழந்து இரட்சிப்படைய மாட்டார்கள். நமது இரட்சகரான இயேசு தமது ஊழியக்காலத்திலே பெற்ற எதிர்ப்புகளும் பாடுகளும் நமக்கு பாடமாக வைக்கப்பட்டுள்ளன. (அவரைப் போல நாமும் பாடுகளையும் எதிர்ப்பையும் அவர் ஊழியத்திலே அனுபவிக்கவே தேவன் விரும்புகிறார். ஒருவன் கிறிஸ்தவனாக இருந்தால் அவன் பாடுபட வேண்டும். அனுதினமும் தன் சிலுவையை (பாடுகளை) சுமந்து திரிய வேண்டும்) (பி-. 1:29-30; 1 கொரி. 4:11-13; ரோம. 8:17-18)* R 1736:6

## *பிப்ரவரி 12*

***நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல் பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது. (யாக். 1:4)***

*பொறுமை நமக்குள் வளர்க்கப்படா விட்டால் தேவ கிருபையிலே நாம் முன்னேறுவது கூடாததாகும். சத்தியத்தின் மூலமாக நாம் பெறக்கூடிய தேவ கிருபை கிறிஸ்தவ ஜீவியத்தில் மிக அவசியமானது. மனிதனுடைய குறைவை பூரணப்படுத்துவது எதுவெனில் உபத்திரவங்களில் உண்டாகும் பொறுமையே. இதன் மூலமே தெய்வீக நிலையையும் பெற முடியும். இது கோபத்திற்கு தாமதமானது, இரக்கத்தில் ஐசுவரியமுமானது. மேலும் இது சத்தியமும், நீதியுமான பாதையில் ஒருவரை நடக்கச் செய்து, தன் பெலவீனங்களை உணர்ந்து பிறனுடைய குறைவுகளில் அனுதாபம் காட்டச் செய்யும். சோதனைகள் நமக்கு விசுவாசத்தின் பரீட்சையான படியால், இவைகளை பொறுமையுடன் சகிப்பது அவசியமானது. எனவே பொறுமையை வளர்க்க பரீட்சை நமக்குத் தேவை. (ரோம. 5:3-4; எபி. 10:35-36)* R 3090:2

## *பிப்ரவரி 13*

***அன்பு தீங்கு நினையாது. (1 கொரி. 13:5)***

*தேவனுடைய கட்டளைகளை அசட்டை செய்து தீங்கு செய்ய தங்கள் மனதில் நினைப்பார்களானால் அது அவர்களுக்கே தீமையாக விளையும் என்பதை உணர வேண்டும். மற்ற காரியங்களில் அவர்கள் எவ்வளவு உத்தமர்களாக நடந்தாலும் போதாது. பிறர்பேரில் தீங்கு நினைப்பதும், கசப்பான வார்த்தைகளைப் பேசுவதும் தேவனின் பரிசுத்த ஆவிக்கும், அன்பின் ஆவிக்கும் எதிரான ஒரு போர். இவைகளில் ஒன்று மற்றொன்றை மேற்கொள்ளுமாதலால், தீமையானதை நினைக்கும் ஆவி புதிய சிருஷ்டிகளிடையே அப்புறப்படுத்தப்பட வேண்டும். இல்லையேல் புதிய சிருஷ்டியின் ஜீவியம் கறைப்பட்டதாக இருக்கும். புதிய சிருஷ்டியானது இதை மேற்கொள்ளுமேயானால் தன் ஜீவியத்தில் தற்போது ஏற்படக்கூடிய பல கஷ்டங்களில் வெற்றி காண முடியும். (அன்பு நியாய பிராணத்தின் நிறைவேறுதலாக இருக்கிறது). (1 கொரி. 13:1-7; ரோம. 13:10)* R 3594:2

## *பிப்ரவரி 14*

***உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய். (மத். 12:37)***

*நம் வாயி-ருந்து புறப்படும் சகல வார்த்தைகளும் நம் இருதயத்திலிருந்து புறப்படுவதாக தேவனால் கருதப்படுகிறது. நம்முடைய வார்த்தைகள் கலகத்திற்கு உரியதாகவோ அல்லது துரோகமானதாகவோ அல்லது அற்பமானதாகவோ அல்லது அன்பில்லாததாகவோ, நன்றியில்லாததாகவோ, பரிசுத்தமில்லாமல் அசுத்தமாக இருக்குமேயானால் "இருதயத்தின் நிறைவால் வாய் பேசும்" என்ற வசனத்தின் மூலமாக நம் இருதயத்தின் மூலமாக நியாயம் தீர்க்கப்படுவோம். பூரணமற்றவர்களாகிய நாம் வார்த்தையிலும் கிரியையிலும் பூரணராக இருக்க முடியாது. எவ்வளவாக நாம் வார்த்தையிலும், கிரியையிலும் பூரணராக இருக்க விரும்பினாலும் சில சந்தர்ப்பங்களில் நாம் தவறி விடுகிறோம். ஆனாலும் நம் வார்த்தைகளையும், வழியையும் எல்லா விழிப்புடன் விசுவாசத்திலே காக்கப்பட நாம் அதிகமாக பிரயாசப்பட வேண்டும். (சங். 17:3-5; 19:14)* R 1938:1

## *பிப்ரவரி 15*

***அவருடைய வசனத்தை கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும். (1 யோவா. 2:5)***

*கீழ்ப்படிதல் நமக்கு கொடுக்கப்பட்ட பரீட்சை. நாம் எந்த அளவில் தேவனுடைய வார்த்தைகளைக் கைக் கொண்டு ஜீவிக்கிறோமோ அந்த அளவுக்கு தேவனுடைய அன்பும் நம்மில் பூரணப்படும். கிறிஸ்துவின் சிந்தை நம்மில் காணப்படுமேயானால் தேவ ஆவி நம்மை வழி நடத்தி நம்முடைய சக்திக்கு ஏற்றவாறு நாம் அவருடைய வழிகளிலே நல்ல காரியங்களை செய்ய உதவும். இந்த வழிகளில் நம் ஜீவியம் நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைய வேண்டும். கிறிஸ்துவின் சரீரத்திலே இணைக்கப்பட எழுப்பப்படும் நாள் வரை நாம் பூ ரணராக காணப்படாதிருந்தாலும் தேவனிடம் நாம் நெருங்கிய தொடர்பு கொண்டு அவர் அன்பில் நிலைத்திருக்கத்தக்கதாக ஆவியிலும் சிந்தையிலும் எப்பொழுதும் ஜெபத்திலே தரித்திருக்க வேண்டும். (நீதி. 4:4-6; சங். 51:10)* R 2236:5

## *பிப்ரவரி 16*

**இந்த ஊழியம் குற்றபடாதபடிக்கு நாங்கள் யாதொன்றிலும், இடறல் உண்டாக்காமல், எவ்விதத்தினாலேயும் எங்களைத் தேவ ஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறோம். *(2 கொரி. 6:3)***

*தேவனுடைய ஊழியத்தை நாம் முழு முயற்சியுடன் செய்து தேவ ஆசீர்வாதத்தையும் தயவையும் பெற்றவர்களாக இருக்கும் போது சில சமயங்களில் நாம் கைவிடப்பட்டவர்களைப் போலவும், இருள் நம்மை சூழ்ந்து கொண்டது போலவும் காணப்படும். நம் உடன் ஊழியர்களும் நம்மை தேவ கிருபையினின்று மறக்கப்பட்டவர்களாக கருதக்கூடும். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை நமக்கு அவசியமானதே. இது நம் விசுவாசத்தை பலப்படுத்தக்கூடியதாக உள்ளது. இந்த சூழ்நிலைகளில் வெளிச்சத்தில் தனியாக நடப்பதை காட்டிலும், இருளில் தேவனோடு நடப்பது நன்மையாக இருக்கிறது என்று நாம் மகிழ்ச்சியுடன் துதித்து பாட வேண்டும். ஆகவே, இப்படிப்பட்ட அனுபவங்கள் வழியாக கடந்து போகும் போதுதான், நம்முடைய விசுவாசம், நம்பிக்கை பெருகும். நாமும், தேவனுடைய கரத்தை பிடித்துக் கொண்டு இருளை கடக்க முடியும். (ரோம. 14:12-13; 1 கொரி. 10: 32-33)* R 2886:3

## *பிப்ரவரி 17*

**என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். *(மத். 11:29)***

*கிறிஸ்துவின் இந்த நுகத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவானதாக இருக்குமென்று தேவ வார்த்தை உறுதிப்படுத்துகிறது. சுமை எவ்வளவு அதிகரிக்கிறதோ அவ்வளவுக்கு ஆசீர்வாதங்களும் அதிகரித்துக் கொண்டே இருக்கும். தற்காலத்தில் இது எவ்வளவு கொடூரமாக காணப்படுமோ அவ்வளவுக்கு அதிகமாக மகிமையும் பிரகாசமுமாக அவர்கள் ஜீவியம் காணப்பட்டு, பரலோக ராஜ்யத்திற்குரியவர்களாக அமைக்கப்பட இது முழு நம்பிக்கையையும் கொடுக்கக் கூடியதாக இருக்கும். இந்த மேன்மையை நம் முன்வைக்கும் பொழுது சகல பாரமும் இலகுவாகவே காணப்படும். மேலும் கிறிஸ்து நம்மோடிருப்பதால் இந்த நுகம் மிக மெதுவாகவே காணப்பட்டு சுமை இலகுவாக்கப்படுகிறது. (2 கொரி. 6:14; கலா. 5:1; 2 யோவா. 5:3)* R 2625:5

## *பிப்ரவரி 18*

***உங்கள் தேவனாகிய யேகோவாவிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும், உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்பு கூறுகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய யேகோவா உங்களைச் சோதிக்கிறார். (உபா. 13:3)***

தேவனுடைய ராஜ்யம் நம் இரட்சகரான இயேசு கிறிஸ்துவைப் போன்ற இருதயமுள்ளவர்களுக்கு மட்டுமே தேவ கிருபையினால் அருளப்படுகிறது. இந்த கிருபையினால் ஒவ்வொருவரும் தங்கள் முழு இருதயத்துடன் தங்கள் முழு ஆத்துமாவோடும், "என் சித்தத்தின்படி அல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று சொல்லக் கூடியவர்களாக இருப்பார்கள். நம்மை முற்றிலுமாக தேவசித்தத்திற்கு ஒப்புக்கொடுப்பதே அல்லாமல் வேறே எந்த நிபந்தனைகளும் அந்த ராஜ்யத்தைப் பெற தகுதியுள்ளதாயிராது. இதில் மட்டுமே நம் பூரண அன்பை தேவன் பேரில் காட்ட முடியும். யார் யார் இப்படிப்பட்ட மேலான அன்பைத் தேவனிடம் காட்டுகிறார்களோ அவர்களுக்கு மட்டுமே, "கண் காணாததும் காது கேளாததும் மனிதனுடைய இருதயத்தில் தோன்றாததுமான" பரலோகத்திற்கடுத்த காரியங்களை தேவன் வெளிப்படுத்த சித்தமுள்ளவராக இருக்கிறார். *(மத். 22:37-40; 1 கொரி. 2:9-10)* R 2258:2

## *பிப்ரவரி 19*

***சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும்; அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது; அவர்களுடைய புத்தியும் மனசாட்சியும் அசுத்தமாயிருக்கும். அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கை பண்ணுகிறார்கள், கிரியைகளினாலோ அவரை மறுத-க்கிறார்கள். (தீத்து 1:15-16)***

இது எவ்வளவு கடிமானதோர் காரியம் என்பதை காண்கிறோம். தேவ பிள்ளைகள் எவ்வளவு ஜாக்கிரதையுள்ளவர்களாக ஜீவிக்க எச்சரிக்கப்படுகிறார்கள். இவர்கள் சுத்த இருதயமும், புத்தியுள்ளவர்களுமாய் இருந்தால் மட்டும் போதாது. தங்கள் கிரியைகளிலே தேவனுடைய வார்த்தைகளை உண்மையாகக் கொண்டு அதன்படி ஜீவிக்கவும் வேண்டும். நாம் நம்மை அடிக்கடி சோதித்தறிந்து நடந்தால் மட்டுமே இதை நிறைவேற்ற முடியும். தேவ அன்பை நாம் எந்த அளவுக்கு காட்டி வருகிறோம் என்பதை, அவர் நமக்கு போதித்துக் கொடுத்த அன்பின் கட்டளையைக் கைக்கொண்டு நடப்பதின் மூலமாகவே நாம் வெளிப்படுத்த முடியும். (தேவனிடம் உள்ளான அன்பு இல்லாதவன் அவரை அறிந்தும் மறுத-க்கிறவனாக இருப்பான்). *(யாக். 2:19-20, 24-26)* R 2516:6

## *பிப்ரவரி 20*

***உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னைத் தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும். (யாக். 1:26)***

*நாவு நம் இருதயத்தின் வெளிப்பாடு. ஏனென்றால் ஒருவரின் இருதயத்தின் நிறைவால் வாய் பேசுகிறது. ஆதலால் அடக்கப்படாத நாவு தன்னயமானவைகளையும், பகைமையானவைகளையும், கசப்பானவைகளையும், பெருமையானவைகளையும் பேசும் போது ஒருவர் உள்ளம் எதினால் நிறைந்திருக்கிறது என்பதை காண்கிறோம். அசுத்த இருதயமுள்ளவன் வாயில் அசுத்தமானதும் பரிசுத்தமில்லாததுமான வார்த்தைகளே வெளியாகும். இவர்களில் கிறிஸ்துவின் ஆவி பூரணமாக இல்லாததே காரணமாகும். தேவ பக்தியுள்ளவன் தன் இருதயத்தைக் காத்துக் கொள்ளவில்லை என்றால் அவன் பக்தி விருதா. பரம வைத்தியர் இந்த இருதயத்தை கெடுக்கும் விஷத்தை நீக்க ஏற்ற மருந்தை தம் வசனத்தின் மூலம் கொடுத்திருக்கிறார். இதை கிரமப்படி உட்கொள்பவர்களின் கசப்பான இருதயம் இனிமையானதாக தேவனுக்கேற்றதாக மாற்றப்பட முடியும். (மத். 5:8; யாக். 3:5-8)* R 2517:2

## *பிப்ரவரி 21*

***என் கன்மலையும் கோட்டையும் நீரே; உமது நாமத்தினிமித்தம் எனக்கு வழி காட்டி, என்னை நடத்தியருளும். (சங். 31:3)***

*கிறிஸ்தவ ஜீவியத்தில் சில படிப்பினைகளை நாம் தேவனிடம் பெற்றுக் கொண்ட பிறகு, அமைதியான வாழ்க்கையில் சில அரிய சந்தர்ப்பங்கள் நமக்குச் சாதகமாகவோ அல்லது மாறாகவோ ஏற்படக்கூடும். இது தேவ சமூகத்தினின்று நாம் வேறு நிலைமைக்குள் நடத்தப்படக் கூடியதாகவும் காணப்படலாம். இச்சந்தர்ப்பங்களில் உண்மையான ஆவிக்குரிய இஸ்ரவேலயர், முறுமுறுக்கவோ முறையிடவோ கூடாது. ஆனால் தேவ நடத்துதலை எதிர்பார்த்திருக்க வேண்டும். தெய்வீக வழி நடத்துதலைப் பகுத்தறிந்த பிறகு முன்னிருந்த நிலமையைக் காட்டிலும் மோசமானதோர் ஜீவியம் நமக்கு ஏற்படுமேயானாலும் தேவனை குறை கூறாமல், அவர் நடத்துதலுக்கு நம்மை முற்றிலும் ஒப்புக் கொடுத்து அவர் பேரில் நம்பிக்கையும் விசுவாசமுள்ளவர்களாக நாம் சந்தோஷத்தோடு அவைகளை ஏற்று நடக்க பிரயாசப்பட வேண்டும். (சங். 61:1-3; 5:8)* R 3060:6

## *பிப்ரவரி 22*

***நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள். (எபி. 13:5)***

*தன்னலமான ஜெபம் பிரயோஜனமற்றது. அது தேவனுடைய பார்வையில் பலனளிக்கக் கூடாத ஒன்றாகும். ஒரு சிலர் ஆஸ்தியைச் சேர்த்து இதனிமித்தம் தேவ ஊழியத்திலிருந்தும், சத்தியத்திலிருந்தும் விலகிவிடுகின்றனர். சிலர் சரீர பெலனைப் பெற்று பல சோதனைகளைப் பெறுகின்றனர். ஆவிக்குரிய இஸ்ரயேலர் தேவனிடம் விண்ணப்பம் பண்ணும் போது உலக ஆஸ்தி அந்தஸ்திற்காக அல்ல, ஆவிக்குரிய வரங்களுக்காவும், மன திருப்திக்காகவும், பொறுமையுடன் தேவ ஊழியத்தைச் செய்ய ஞானத்தை மட்டுமே கேட்க வேண்டியவர்களாக இருக்க வேண்டும். தேவன் நமக்கு தந்தருளும் சகல நல் ஈவுகளுக்காக நாம் நன்றியுடன் ஸ்தோத்திரம் செலுத்த வேண்டும். அதனால் எப்போதும் ஆவிக்குரிய வரங்களை நாடுபவர்களாகவே இருக்க வேண்டும். (நமக்குள்ளவைகளில் மனத்திருப்தியுள்ளவர்களாக இருக்க வேண்டும். நமக்கு தேவையானவைகளை தேவன் அறிந்திருக்கிறார்). (மத். 6:7-8; பி-. 4:6-7)* R 3061:3

## *பிப்ரவரி 23*

***நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன் மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன். (சங். 32:8)***

*தேவ சித்தத்திற்குத் தங்களை ஒப்புக் கொடுப்பதே தேவபிள்ளைகள் அறிய வேண்டிய ஒரு முக்கிய பாடமாகும். தங்கள் வாழ்க்கையில் சகல காரியங்களையும் தங்கள் சுய சித்தத்தின்படி செய்யாமல் தேவசித்தம் இன்னதென்பதை உணர்ந்து அவருடைய நடத்துதலுக்காக காத்திருக்க வேண்டும். நாம் பரமகானானுக்கு வழி நடத்தப்படுகிறோம். வாக்குத்தத்தத்தின்படி இதில் பிரவேசிக்க பல பாடுகள் உண்டு. நாம் முறுமுறுப்பில்லாமல் சந்தோஷத்துடன் தேவ நடத்துதலுக்கு கீழ்ப்படிதலுடன் நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும். விசுவாசமும் தேவன் பேரில் நம்பிக்கையும் உள்ளவர்கள் மட்டுமே இந்த நிலையைப் பெற்று வாழ முடியும். (கிறிஸ்துவும் பிதாவின் சித்தம் இன்னதென்பதை அறிந்ததினால் என் சித்தத்தின்படி அல்ல உம் சித்தத்தின்படி ஆகக்கடவது என்று ஜெபித்தார்). (சங். 73:23-24; 143:10)* R 3062:1; 3061:1

## *பிப்ரவரி 24*

***மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவ மாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் ப-யாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார். (ரோம. 8:3,4)***

*இந்த உறுதியான வார்த்தையின் மூலம் நமக்கு எவ்வளவு ஆறுதலும் சமாதானமும் உண்டாயிருக்கிறது. இந்த வார்த்தைகள் ஜீவனுக்கேற்றவைகள். இவை நம்மில் நம்பிக்கையை உண்டு பண்ணுகிறது. நாம் மாமிசத்தில் பூரணராக இல்லாதிருந்தும் வாஞ்சையும் விருப்பமும் உள்ள இருதயமுடையவர்களை தேவன் அவர்கள் விருப்பத்திற்கேற்றதாகப் பூரணப்படுத்த சித்தமுள்ளவராக இருக்கிறார். நமது சரீரம் அழிவுக்கேதுவானதாக இருந்தாலும் நாம் ஆவியின்படி நடக்க முடியும். நாம் ஆவியின் தேவைக்கேற்றபடி நடக்க முடியாவிட்டாலும் நம் சிந்தனைகள் ஆவிக்குரியதை சிந்தித்து நடக்க முடியும். நம் எண்ணங்களும் பூரணமானதாக இருக்கும் போது இப்படிப்பட்ட ஆத்துமாக்களைப் பூரணப்படுத்த தேவன் சித்தமுள்ளவராக இருக்கிறார். (எபி. 7:19; அப். 13:38-39)* R 3060:1

## *பிப்ரவரி 25*

***மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயி-ருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான். (மத். 4:4)***

*மனிதனுடைய வாழ்க்கை புசிப்பதிலும், உடுப்பதிலும் அல்லது அவன் கொண்டிருக்கும் ஐசுவரியத்திலும் இல்லை. அதைவிட அவன் பூரண வாழ்க்கை ஓர் உச்சநிலையை அடைய தேவனுடைய வாயினால் போதிக்கப்பட்ட வார்த்தைகளைக் கைக்கொண்டு அதன்படி நடப்பதே மேலானது. இவைகளிலுள்ள எச்சரிப்பும், உற்சாகமும் அநேக வாக்குத்தத்தங்களும் ஒருவனை நாளுக்கு நாள் ஆவியில் வளரச் செய்து கிறிஸ்துவோடு அவர் ராஜ்யத்தில் ஆட்சி செய்யும் சிலாக்கியத்தைப் பெறச் செய்யும். ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் சீஷர்களாக இருந்து, இந்த வசனத்தை மனதில் பதியவைத்து தங்கள் ஜீவனை காத்து நடப்பது மேலானது. (உபா. 8:1-3)* R 3058:5; 3060:4

## *பிப்ரவரி 26*

***கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன். (பி-. 4:4)***

*கிறிஸ்தவர்களில் அநேகர் சந்தோஷமுள்ளவர்களாக இருக்க முடியாது. கிறிஸ்துவிடம் சந்தோஷமாக இருக்க விரும்புவோர் அதிகமான சந்தோஷத்தை உலகிலே அனுபவிக்கவும் முடியாது. சந்தோஷம் என்பது உலகத்தார் விரும்புவது போல, இவ்வுலக இன்பங்கள், சமாதானம், ஆத்தும மகிழ்ச்சி போன்றவற்றில் உண்டாவது கிடையாது. தேவனோடு நெருங்கி ஜீவிக்கும் புதிய சிருஷ்டிகள் மட்டுமே இந்த சந்தோஷத்தை அனுபவிக்க முடியும். அவருடன் ஒருமைப்பட்டவர்களாக அனுதினமும் அவருடைய பாதுகாப்பிலே நிலைத்திருப்பவர்கள் வாக்குத்தத்தங்களைப் பெற்று எல்லாக் கஷ்ட நஷ்டங்களிலும் சந்தோஷமுள்ளவர்களாகத் தங்களுக்கு முன் வைத்துள்ள கிரீடத்தைப் பெற ஓட வேண்டும். (1 பேது. 4:12-14-16)* R 3128:2

## *பிப்ரவரி 27*

***உங்கள் சாந்த குணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக. (பி-. 4:5)***

*"சாந்த குணம்" என்று இங்கே மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கப் பதம் நியாயத்திற்குட்பட்ட ஒரு சிந்தையைக் காட்டக் கூடியதாகவும் எந்த ஒரு காரியத்திலும் நம் உரிமையை அதிகமாக வற்புறுத்தாமலும் இருக்கக் கூடிய நிலையைக் காட்டக் கூடியதாகவும் உள்ளது. இவ்விதம் இருப்பதின் மூலமே நம் சாந்த குணத்தை மற்றவர்களுக்கு வெளிப்படையாக காட்ட முடியும். இரக்கமும், சில காரியங்களில் விட்டுக் கொடுப்பதும், அபிஷேகம் பெற்றவர்களுக்கு முக்கிய குணலட்சணமாகும். எல்லா நீதிக்கும் முன்னதாக விசுவாசமும் இரக்கமும் நம்மில் காணப்பட்டால் தான் நாம் பரலோகத்தில் உள்ள பிதாவுக்கு பிள்ளைகளாக இருக்க முடியும். ஏனென்றால் நம் பிதா நன்றியில்லாதவர்கள்.மேலும், அன்பும், இரக்கமுமுள்ளவராக இருக்கிறார். சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். செம்மையானவர்களே அதில் வாசம் செய்வார்கள். (தீத்து. 3:1-5; யாக் 3:16-18)* R 3128:2

## *பிப்ரவரி 28*

***நீங்கள் ஒன்றுக்குங்கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுத-னாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். (பி-. 4:6)***

*தேவன் ஏன் நமக்குத் தேவையானவைகளை அறிந்து அதைத் தந்தருளவும், நாம் எதையும் கேளாமலே அவர் வாக்குத்தத்தம் பண்ணினவைகளை தரவும் கூடாது என்ற கேள்வி எழுப்பக்கூடும். மெய்யாகவே அவருடைய தயவையும் அதன்மூலம் சில சலுகைகளையும் நாம் பெற்றுக் கொள்ள, முதலாவது நம் இருதயங்களை அவருக்கு ஏற்றதாக நாம் ஆயத்தப்படுத்த வேண்டும். தேவன் நம் பேரில் கொண்டுள்ள அன்பையும், நடத்துதலையும் நாம் பூரணமாக உணர்ந்து கொள்ளக் கூடாதவர்களாகவே இருக்கிறோம். நம் ஜெபத்திலும், தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவதிலும் நன்றி செலுத்துவதிலும் அவர் நமக்கு செய்து வரும் சகல காரியங்களையும் பகுத்தறிந்து அவரைத் துதிக்க வேண்டும். (மத். 6:25-34)* R 3128:6

## *பிப்ரவரி 29*

***தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார். (1 யோவா. 4:16)***

*நீதி ஒரு நிறைவை ஏற்படுத்தினாலும் அன்பானது அந்த அளவையைக் குலுக்கி இன்னும் அதிகமாக அதை நிரப்பி வழியச் செய்யும். இதை உரிமையுடன் கேளாமலும் அல்லது அதன் குறைவைக் குறித்து முறையிடாமலும் தேவ தயவால் நமக்கு அருளப்பட்டதை மேன்மையாகக் கருதி அதை நமக்குள் பரிமாறிக் கொள்ள வேண்டும். இந்த அன்பை நம் உள்ளத்திலே பதிய வைக்க வேண்டும். இதில் நாம் சற்றும் குறைவு படக்கூடாது. தேவ அன்பு நம்மில் பூரணமாக விளங்க வேண்டுமானால் நாம் அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருக்கு பிரியமுள்ளவர்களாக ஜீவிக்க வேண்டும். அன்பில்லாதவன் தேவனை அறியாம-ருக்கிறான். தேவனை அறிந்தவன் அவர் வார்த்தைகளைக் கைக்கொண்டு அதன்படி ஜீவிக்கிறான். இதனால் தேவ அன்பு அவனில் பூரணப்பட்டிருக்கும். (யோவா. 4:18-21; 2:15-16)* R 3071:1

## *மார்ச் 1*

***அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும். (பி-. 4:7)***

*நம்முடைய சொந்த சமாதானத்தைக் குறித்து இங்கே அப்போஸ்தலன் பேசாமல் உலகம் தரக்கூடாத தேவ சமாதானத்தையே பேசுகிறார். இது அவர் கிருபையிலே நாம் நிலைத்திருக்கத் தக்கதாக அவரிடமிருந்து அருளப்படும் வல்லமையாக இருந்து நம்மை அவருடைய பிள்ளைகளாக நன்மையில் வழி நடத்தக் கூடியதாக உள்ளது. இந்தச் சமாதானம், நமக்கு ஏற்படும் சகல உபத்திரவங்களிலும், பயங்கரமான சிந்தைகளிலும் மற்றெல்லாக் காரியங்களிலும் நமக்குக் காவலாகவும், கேடயமாகவும் உள்ளது. இது ஒரு கிறிஸ்தவனுக்குத் தேவனிடம் தன் உள்ளத்திலே சமாதானத்தை கண்டடையச் செய்து அவரோடு தொடர்பு கொள்ளவும் தன் சிந்தனையைக் காத்து தெய்வீக வல்லமையையும், ஞானத்தையும், அன்பையும் உணரும்படி செய்கிறது. (யோவா. 14:27; கொலோ. 3:14,15)* R 3128:6

## *மார்ச் 2*

***உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ ...... அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள் (பி- 4:8)***

*பொய்யான காரியங்களுக்கும், புகழ்ச்சிக்கும் யார் யார் தங்களை உட்படுத்துகிறார்களோ அவர்கள் தங்களின் தூய்மையைக் கெடுத்துக் கொள்கிறார்கள். யார் யார் மேற்ச்சொன்னவைகளுக்குத் தங்களை விலக்கிக் காத்துப் பரிசுத்த சிந்தையுடையவர்களாக காணப்படுகிறார்களோ அவர்களே ஒழுக்கமுடையவர்களாக இருப்பார்கள். நாம் ஒவ்வொரு காரியத்தையும் சீர்தூக்கிப் பார்த்து நன்மையானவைகளையும், தேவனுடைய பார்வையில் மேன்மையானவைகளையும் செய்யும் போதுதேவன் நமது பேரில் பிரியமுடையவராக இருப்பார். நற்கீர்த்தியையும், புகழையும் உலகப் பிரகாமாகத்தேடாமல் தேவ ஊழியத்தின் மேன்மையால் அதை உண்மையுடன் தேவனிடம் பெற பிரயாசப்பட வேண்டும். சகோதரரிடத்தில் மட்டும் நாம் அன்பைக் காட்டுகிறவர்களாக இராமல், சகலருக்கும் முன்பாக சகல நல்லொழுக்கத்துடன் ஜீவிக்கும் சிந்தை ஒவ்வொருவருக்குள்ளும் காணப்பட வேண்டும். இப்படிப்பட்டவர்களோடு தேவன் இருக்கிறார். (யோவா. 8:29; 1 தெச. 5:21-22)* R 3129:2

## *மார்ச் 3*

***நீதியுள்ளவைகள் எவைகளோ ...... அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள். (பிலி. 4:8)***

*அநீதியான காரியங்களில் தேவனுடைய பிள்ளைகள் பிரியம் கொள்ளக் கூடாது. நீதியை நடப்பிப்பதில் நாம் வார்த்தையிலும், நடத்தையிலும் இதை காண்பிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இது நம்மில் மட்டும் அல்ல பிறரிடத்திலும் இவ்விதம் நடந்து கொள்ள கற்றுக் கொள்ள வேண்டும். இதனால் பல துன்பங்கள் நேரிடக்கூடும். நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கிவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது. இந்த நீதியை நடப்பிப்பதிலே பசிதாகமுள்ளவர்களாக (வாஞ்சையுள்ளவர்கள்) தேவ ஆசீர்வாதம் பெற்று திருப்தி அடைவார்கள். நீதியை நடப்பிப்பதில் நம் இருதயம் நம்மைக் குற்றப்படுத்தாதபடி சகலத்திலும் ஜாக்கிரதையுள்ளவர்களாக எதையும் சிந்திக்க வேண்டும். (மத். 13:43; செப். 2:3)* R 3129:2

## *மார்ச் 4*

***கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ ...... அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள். (பிலி. 4:8)***

*சுத்தமான காரியங்களைச் செய்வதில் நம் சிந்தையை பயிற்சிக்க வேண்டும். அவ்விதம் பழகின பிறகு அசுத்தமான எந்த சிந்தையும் நமக்கு வேதனையாகவும் சஞ்சலமாகவும் காணப்படும். நல்ல சிந்தைனையின் மூலம் அசுத்தமானதை நாம் நினைவுக்கே கொண்டு வராமல் தடுக்க முடியும். உண்மையான அன்பை நாம் அதிக உயர்வாக கருதவும் வேண்டும். நாம் கற்புள்ளவைகளை (சுத்தமுள்ளவைகளை) சிந்தித்துக் கொண்டிருக்கும் போது உண்மை அன்பு நமக்குள் தானாக வேர் கொண்டு, தேவ அன்பையும், கிறிஸ்துவின் அன்பையும் உணரச் செய்யும். அதோடு கூட தன் உடன் ஊழியர் மேலும் மற்றவர்கள் மேலும், நம்மை பகைக்கிறவர்கள் மேலும் கூட இந்த அன்பைக் காட்டச் செய்யும். (விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் ஒருவருக்கு அவசியம். இவைகளில் அன்பே பெரியது. இது சகல பாவங்களையும் மூடும். அன்பில்லாதவன் தேவனுடையவனல்ல). (1 கொரி. 13:4-7; ரோம. 13:10)* R 3129:3

## *மார்ச் 5*

***புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள். (பிலி . 4:8)***

*புண்ணியமானவைகளைச் செய்து எந்த அளவிலும் தேவனுக்குப் புகழ்ச்சியைத் தரக்கூடிய உதாரகுணமுள்ள வார்த்தைகளோ அல்லது கிரியைகளோ அல்லது கருத்துகளோ இவைகளேயே நாம் சதாகாலங்களிலும் சிந்தித்து, இதன் மூலம் புதிய சிருஷ்டி நமக்குள் நல்ல சிந்தையுடன் வளரப் பிரயாசப்பட வேண்டும். இதன் மூலம் நம் சிந்தை நாளுக்கு நாள் புதியதாக மாற்றப்பட்டு வரும். இதன் மூலமாகவே நாம் மகிமையில் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒப்பாகும் நிலையை படிப்படியாக இந்த புதிய வாழ்க்கையில் உயரச் செய்து பூரணப்படுத்தக் கூடியதாகவும் இருக்கும். இந்நிலையில் நம் சிந்தனை உயர்த்தப்பட்டு கிறிஸ்துவோடு ஐக்கியப்படச் செய்யும். பின்னர் அவருடைய சாயலிலே இணைக்கப்பட்டு முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறத் தகுதியுள்ளவர்களாக்கும். (1 தீமோ. 4:13)* R 3129:3

## *மார்ச் 6*

***நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும். (பிலி . 4:11-12)***

*நம் வாழ்க்கையில் பல வேறுபாடான நிலைமை நமக்கு உண்டாகும் போது நாம் மனச்சோர்வு அடையக்கூடாது. நாம் உயர்ந்திருக்கவும், தாழ்ந்திருக்கவும், செழித்திருக்கவும், கஷ்ட நிலையில் ஜீவிக்கவும், அப்போஸ்தலனைப் போல அறிந்திருக்க வேண்டும். இதன் மூலமாகவே நாம் தேவராஜ்யத்திற்குள் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை பெற தகுதியுள்ளவர்களாவோம், நாம் எவ்விதத்திலும் வாழ்ந்திருக்க மட்டுமே கற்றுக் கொண்டு அதிகமான உலக ஆஸ்தியைச் சேர்க்க நம் எண்ணங்களைச் செலவிடக் கூடாது. உலக ஆஸ்தி நம்மை தேவ சமூகத்தி-ருந்து விலகிப் போகச் செய்யும். நம்முடைய தேவைகளை தேவன் அறிந்திருக்கிறார். நம்முடைய தேவைக்கு மிஞ்சி நாம் எதைச் சிந்தித்தாலும் அது பல உலக இச்சைகளுக்கு நம்மை இழுத்துச் செல்லும். எந்நிலையிலும் நாம் திருப்தியுள்ளவர்களாக இருக்கும் போது தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றிருப்போம். (1 தீமோ 1:6-11, 17-19)* R 3129:6

## *மார்ச் 7*

***நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார். (1 யோவா. 4:12)***

*நான் தேவனுடைய பார்வையிலே அவருடையவனாக இருக்கிறேனா அல்லது இல்லையா என்பதை அளந்து பார்க்க நான் அவர் பேரிலும், சகோதரர்கள் பேரிலும், அவருடைய ஊழியத்தின் பேரிலும், பொதுவாக உலகத்தாரிடமும், விசேஷமாக என் பகைவனிடமும் நான் காட்டக் கூடிய அன்பே அதை நிரூபிக்கக் கூடியதாக இருக்கும். என்னுடைய அறிவோ, புகழோ அல்லது பேச்சுவண்மையோ அல்ல. நம் குணலட்சணங்களை அளந்து பார்க்க அன்பையே முதன்மையாகக் காட்ட வேண்டும். இதையே நாம் தேவனிடம் நெருங்கி இருப்பதையும் அவரால் அங்கீகரிக்கப்பட்டவர்களாகக் காணப்படவும் ஒரு முக்கிய பரீட்ஷையாக எண்ணவேண்டும். பரிசுத்த ஆவியினால் பிறந்த ஒவ்வொருவரும் நல்ல குணமுள்ளவர்களாக இருக்க வேண்டும். இருளி-ருந்து வெளிச்சத்தைக் காணச் செய்தவரை புகழ நம் அனுதின வாழ்க்கையில் இந்த அன்பை வெளிப்படையாகக் காட்ட வேண்டும். (1 கொரி 13:1-3)* R 3150:3, 6; 3151:2

## *மார்ச் 8*

***தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார். (1 கொரி. 12:18)***

*கிறிஸ்துவின் சரீரத்தில் இணைக்கப்பட்ட எந்தவொரு அங்கமும் மற்ற அங்கத்தை தேவை இல்லை என்றோ அல்லது எந்த அங்கமும் தனக்கு அந்த சரீரத்தில் யாதொரு வேலையும் இல்லை என்றோ சொல்ல முடியாது. ஆவியிலே நிரப்பப்பட்ட ஒவ்வொரு அங்கமும் தலையாகிய கிறிஸ்துவின் கீழ் அவர் நடத்தும் வழியில் அவர் ஊழியத்தைச் செய்ய வேண்டும். அவரவர் ஊழியத்திற்குத் தக்கதாக பலனளிக்கும் காலம் வரும்போது தேவனுடைய ஊழியத்தில், சகோதரர்களுக்கு உதவியாக இருந்த ஆக்கில்லா, பிரிஸ்கில்லாவை விட, பவுல், அப்பல்லோ செய்த காரியங்கள், எவ்வளவு மேன்மையுள்ளதாகக் கருதப்படும் என்பது யாருக்குத் தெரியும்? (1 கொரி. 12:12-18)* R 3152:2

## *மார்ச் 9*

**உங்கள் கிரியையையும் நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலும், செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே. *(எபி. 6:10)***

*தேவனுடைய ஊழியத்தில் ஈடுபடவும் தேவ ஊழியர்களுடன் ஒத்துழைப்பதிலும் தேவ பிள்ளைகள் இந்த கிருபையின் காலத்தை ஆதாயப்படுத்திக் கொள்ள வேண்டும். அறுப்பின் காலத்தில் ஜீவிக்கிற பிள்ளைகள் தாங்கள் இருளி-ருந்து ஒளியினிடம் அழைக்கப்பட்டதைக் குறித்தும் தேவனுடைய புகழைக் குறித்தும் தாங்களே அநேகருக்குச் சாட்சி கொடுக்க முன்வர வேண்டும். அதோடு கூட தேவ ஊழியர்களுக்கு உதவியாக இருந்த இந்த ஊழியத்தில் அவர்களுடன் ஒத்துழைக்கவும் பிரயாசப்படவும் வேண்டும். இப்படிப்பட்ட ஊழியத்தில் இவர்கள் அசதியாக இராமல் உற்சாகமுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். நீதியுள்ள தேவன் அவனவன் கிரியைக்குத்தக்கதாக பலனளிப்பார். (மத். 10:42; ரோம. 15:25)* R 3152:3

## *மார்ச் 10*

**உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும், நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள். *(எபி. 3:13)***

*ஆவியிலே நாம் ஊக்கம் இழந்தவர்களாகக் காணப்பட்டு சோர்வு நம்மை மேற்கொள்ளுவது போல காணப்படும் போது ஆவியிலே நாம் பெலனற்றுப் போகாமல் விழிப்புள்ளவர்களாக ஜெபிக்க வேண்டும். சோர்வு நம்மில் காணப்படும் போது சத்தியம் நம்மை விட்டு விலகிப் போகக் கூடும். இத்தருணத்திலே நாம் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லி ஜெபத்திலே தேவனிடம் அதிகமாக தொடர்பு கொண்டு அவருடைய வார்த்தைகளின் பேரில் இரவும் பகலும் தியானமாயிருக்க பிரயாசப்பட வேண்டும். இதுவே நம்மை மீண்டும் ஆவியிலே உற்சாகப்படுத்தும். "நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவு பரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில் கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்." (எபி. 3:14; 10:24-25)* R 3149:2

## *மார்ச் 11*

***ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளி விட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். (எபி. 12:1)***

*மேலான அழைப்புக்குரியப் பரிசைப் பெறுவதற்குத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் அதைப் பெற்றுக் கொள்ள அதற்குரிய பாதையில் ஓடும் போது தங்கள் "மனதின் அறையைக் கட்டிக் கொண்டு"அந்தப் பந்தயப் பொருளை நோக்கி ஒருமுகப்படுத்தி ஓட வேண்டும்; அவர்கள் தங்கள் முயற்சிகளில் பலமுள்ளவர்களாகத் தங்களைக் காத்துக் கொள்ள வேண்டும்; தங்கள் வைராக்கியத்தைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்; ஊக்கத்தை அதிகப்படுத்த வேண்டும்; உலக ஆசை இச்சைகளை விலக்க வேண்டும். மேலும் அப்போஸ்தலன் சொல்லுவது போல ஆகாயத்தில் சிலம்பம் பண்ணுகிறவர்களாயிராமல் பொறுமையுடன் நமக்குமுன் வைத்துள்ள பரிசை எண்ணி நிச்சயத்துடன் ஓடித் தங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். (1 கொரி. 9:24-27)* R 3149:3

## *மார்ச் 12*

***கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும் நல் மனசாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே. (1 தீமோ. 1:5)***

*தேவ நடத்துத-லே அவர் நம்மிடத்திலும் நமக்காகவும் வைத்துள்ள பல வாக்குத்தத்தங்களை பெற அன்பில் நாம் நாளுக்கு நாள் வளர வேண்டும். இதுவே நமக்கு முன் வைக்கப்பட்ட தெளிவுள்ள சிந்தனையாக இருக்க வேண்டும். இந்த அன்பே தெய்வீகத் தன்மையுள்ளது. ஏனென்றால், தேவன் அன்பாகவே இருக்கிறார்.தேவன் விரும்பிய அளவுக்கு இந்த அன்பு நமக்குள் வளர இது சுத்தமுள்ள இருதயத்தி லிருந்தே வர வேண்டும். தேவ சித்தத்திற்கு ஒத்திருக்கும்படி அவர் கொடுத்த அன்பின் பிரமாணத்திற்குட்பட்டதாகவும் தன்னயம் வாய்ந்த சாத்தானின் போதகங்களுக்கு விரோதமானதாகவும் இருக்க வேண்டும். இதுவே தேவ கற்பனை. கற்பனையைக் கைக்கொள்வதே நித்திய ஜீவனுக்குரிய வழி. அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது. (ரோம. 13:10)* R 2735:1

## *மார்ச் 13*

***ஆகையால், நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாய் இருக்கக்கடவோம்; எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார். ஆகிலும் நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அது முதல் ஒரே ஒழுங்காய் நடந்து கொண்டு ஒரே சிந்தையாயிருப்போமாக. (பிலி . 3:15-16)***

*அன்பின் பிரமாணத்தின் எல்லையை பூரணமாக அடைந்த ஒவ்வொருவரும் தேவனுடைய ஊழியத்தில் அதிகமாகத் தங்களை ஈடுபடுத்தி தங்கள் ஜீவனையும் சகோதரர்களுக்காக அர்ப்பணிக்க முன்வருவது மிக அத்தியாவசியமானது. நீதியுள்ள காரியங்களுக்கும் தேவனுக்கும் மாத்திரம் இவர்கள் பிரதிநிதிகளாக நிற்காமல்,தேவன் பேரிலும் அவர் வார்த்தைகளின் பேரிலும் உறுதியான விசுவாசமுள்ளவர்களாக இந்த ஓட்டத்தில் தங்களைப் போல யார் யார் ஓடுகிறார்களோ அவர்களும் இந்த அன்பின் பூரண எல்லையை அடையச் செய்ய பிரதிநிதிகளாக நிற்க வேண்டும். (பிலி. 2:1-5)* R 2755:5

## *மார்ச் 14*

***பலவானைப் பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன். (நீதி. 16:32)***

*கோபம் இயற்கையாக வெறுப்பையும், தீய எண்ணத்தையும், சச்சரவுகளையும், பொறாமைகளையும் உண்டாக்குவதால் தேவனுடைய குமாரனின் சாயலாக இருக்க விரும்புகிற யாவரும் கோபத்தை விட்டு விலக வேண்டும். தவறானதை ஒருவர் செய்யும் போதும் சில பாவங்களை நடப்பித்தவர் பேரிலும் கோபம் வந்தாலும் தகாதவைகளைப் பேசாமல் நீதியோடும் அன்போடும் மிதமாக இதை உபயோகிக்க வேண்டுவது அவசியமானது. (நீடிய சாந்தமுள்ளவன் சண்டையை அமர்த்துகிறான். தேவன் தம்முடைய பிள்ளைகளின் பேரில் மன உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும் உள்ளவராக இருக்கிறார். அவர் குமாரனின் சாயலில் இணைக்கப்பட்ட யாவரும் இதே சிந்தையுடையவர்களாயிருக்கவே பிதா விரும்புகிறார். கோபம் கொண்டாலும் பாவஞ் செய்யாதபடி காத்துக் கொள்ள வேண்டும்). (நீதி. 16:32; யாக். 5:7-8)* R 2068:5

## *மார்ச் 15*

***விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். (எபி. 10:38)***

*நித்திய ஜீவனைப் பெற விசுவாசத்திலே நாம் முதலாவது ஊக்கப்படுவது மட்டும் போதாது. மரணச் சிறையினின்று ஜீவனுக்குள் வழி நடத்தப்பட்டப்பின், அந்த விசுவாசத்தில் நாம் நாளுக்கு நாள் தொடர்ந்து பரிசுத்தாவியைப் பெற்று அதன் மூலம் பரிசுத்தாவியினாலே வழி நடத்தப்பட்டு விசுவாசத்திலே நடக்கவும் வேண்டும். தலையைப் போல இருதயமும் விசுவாச ஜீவியத்தில் ஒரு தனிப்பட்ட சாராம்சம் வாய்ந்தது. வேதத்திற்கடுத்த உபதேசங்களை விட இது அதிக முக்கியத்தவம் வாய்ந்தது என்பதும் உண்மை. சத்தியத்தின் மூலம் இது நம்மிலே இணைக்கப்பட்டது என்பது நிரூபிக்கப்படுகிறது. இதன் பிரதான கட்டளைகள் நமக்கு பிரதானமானதாகவும் இதன் வாக்குத்தத்தங்கள் நமக்கு ஆத்ம உணர்ச்சியைத் தரக்கூடியதாகவும் உள்ளது. (ஆகிலும் கிரியை இல்லாத விசுவாசம் செத்ததாயிருக்கும்). (யாக். 2:23-24)* R 1798:3; 1799:4

## *மார்ச் 16*

***நாம் சகோதரரிடத்தில் அன்பு கூறுகிறபடியால், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்; ...... நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்க கடனாளிகளாயிருக்கிறோம். (1 யோவா. 3:14-16)***

*விழிப்புடன் சர்வாயுத வர்க்கம் தரித்தவர்களாக இருக்கும் ஒவ்வொரு சகோதரருக்கும் முடிவாகக் கொடுக்கப்படும் பரீட்சை சகோதர அன்பே. இது அநேகரை விழுந்துப் போகச் செய்யக் கூடியது. இதை அநேகர் நிறைவேற்றக் கூடாதவர்களாக இருந்து தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கக் கூடிய சிலாக்கியத்தைப் பெற தகுதியற்றவர்களாகப் போய்விடக்கூடும். இக்காரியத்தில் ஒருவர் பெலவீனமுடையவராகவோ அல்லது தவறுகிறவர்களாகவோ காணப்படும் போது நம் அதிபதியான இயேசு கிறிஸ்துவின் சிலுவை வீரர்கள் அப்படிப்பட்டவர்களை வெறுப்பதோ, நிந்திப்பதோ கூடாது. இதற்கு மாறாக, அவர்களுடைய பெலவீனத்தில் அவர்கள் பேரில் கவனம் செலுத்தி உதவி செய்து அவர்கள் ஆவியிலே வளர உதவ வேண்டும். (மத். 5:22-24)* R 2453:4,5

## *மார்ச் 17*

***அவனிடத்தி-ருக்கிற தாலந்தை எடுத்து பத்துத் தாலந்துள்ளவனுக்குக் கொடுங்கள். உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமுமடைவான்; இல்லாதவனிடத்தி-ருந்து உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும். (மத். 25:28-29)***

*ஒரு தாலந்தைப் புதைத்து வைத்த மனுஷனை இயேசு ஏன் இங்கு ஓர் உதாரணமாக எடுத்துக் கொண்டார்? குறைவு உள்ளவர்களாகக் காணக்கூடிய அங்கங்களுக்குள் ஒரு பொறுப்பை உணர்த்தவே, கொடுக்கப்பட்டுள்ள தாலந்தில் குறைவுள்ளவர்களாகக் காணக்கூடியவர்கள் அதை அதிகப்படுத்தவே முயற்சிக்க வேண்டும். தங்களுடைய சக்திக்குத் தக்கவாறு தேவ ஊழியத்தில் ஈடுபடவும், தனக்காகவும் தன் உடன் சகோதரர்களுக்காகவும், சத்தியத்திற்காகவும் உழைத்து, தனக்கருளப்பட்ட தாலந்தை அசட்டைப் பண்ணாமலும், தான் குற்றப்படுத்தப்படாமலும், தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும். (சிறு தாலந்தையும் விருத்தியாக்க முயற்சிப்போருக்கு அதை அதிகப்படுத்தத் தேவன் சித்தமுள்ளவராக இருக்கிறார். தங்களுக்கு அருளப்பட்டத் தாலந்தை விருத்தி செய்ய விரும்பாதவர்கள் அதை இழந்து போக நேரிடும்) (மத். 13:12; மாற். 4:25)* R 2765:1

## *மார்ச் 18*

***ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக்கட்டிக் கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, இயேசுகிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள். (1 பேது. 1:13)***

*நம் மனதின் அரையை மாறாததும் உறுதியானதுமான நீண்ட காலத்திற்குரியதாக கட்டிக் கொண்ட பிறகு தெளிந்த புத்தியுடையவர்களாக இருக்க வேண்டும். நம் மனதில் எவ்விதக் கிளர்ச்சியும், கோபமூட்டும் அளவில் ஏற்படக் கூடாது. அவ்விதம் ஏற்படும் போது குறுகிய நேரத்தில் நம் ஆவிக்குரிய ஜீவியம் மாறுதலடைந்து பலநிந்தைகளுக்குட்படச் செய்யும். இதனால் தேவனுடைய மேலான வாக்குத்தத்தங்களைப் பெற நம்மைத் தகுதியற்றவர்களாகக் காணப்படச் செய்து, விசுவாசத்தின் பரீட்சையிலே விழுந்துப் போகச் செய்யும். இந்த சோதனையை மேற்கொள்பவர்களே பரிசை பெற முடியும். ஜீவப்பாதையிலே நம் ஓட்டமானது விட்டு விட்டு ஓடக் கூடியதாக இராமல் சோர்ந்து போகாமல் நற்கிரியைகளை செய்ய வேண்டியதாக உள்ளது. (1 பேது. 5:8-10)* R 3149:3

## *மார்ச் 19*

***நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து, உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். (1 பேது. 1:14-15)***

*தேவனே சகலத்தையும் செய்கிறார், மனுஷன் அவர் கையில் செயலற்றவனாயிருக்கிறான் என்பது சில கிறிஸ்தவரின் தவறான சிந்தை. ஆனால் பேதுரு அவ்விதம் கூறுவதில்லை. அவருடைய தெய்வீக போதனைகள் மூலம் நாம் நம்மை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்றே போதிக்கிறார். போதிக்கப்பட்டப்படிச் செய்ய வேண்டிய காரியங்கள் அநேகம் உண்டு. அதை ஒருவன் செய்யாமல், தேவன் என்னை வழி நடத்துவார் என்று உட்கார்ந்திருப்பது சோம்பலை வருவிக்கச் செய்யும். பயத்தோடும்,நடுக்கத்தோடும், தங்கள் சொந்த இரட்சிப்பிற்கு பாடுபாடவிட்டால், சாத்தானும் இச்சந்தர்ப்பத்தை ஆதாயப்படுத்தி, அவர்கள் புறம்பான இருளிலே நடக்கத்தக்கதாக முற்றிலும் கட்டி விடுவான். (அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார்).(1 தெச. 4:3-8)* R 3150:1

## *மார்ச் 20*

***நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷர்களாகயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும். (யோவா. 8:31-32)***

*உண்மைச் சத்தியமானது,தேவனால் நியமிக்கப்பட்ட நம் இரட்சகர், அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் மூலமே அருளப்பட்டுள்ளது. தேவனுடைய வார்த்தைகளில் நாம் தொடர்ந்து நிலைத்திருக்கிறோம் என்பது அந்த வார்த்தைகளை வாசித்து சிந்தித்து அதற்குக் கீழ்ப்படிந்து விசுவாசித்து நடப்பதின் மூலமே நிரூபிக்கப்படும். நாம் இவ்விதம் தொடர்ந்து ஜீவிக்கும் போது சத்தியத்தை அறிவோம். விசுவாசத்தில் நிலைத்திருப்போம். நல்லப் போராட்டத்தைப் போராடுவோம். சத்தியத்திற்கு சாட்சி கொடுக்கக்கூடியவர்களாகவுமிருப்போம். முடிவு காலம் வரை கிறிஸ்தேசுவுக்கு நல்லப் போர்ச்சேவகனாகவும் காணப்படுவோம். (ரோம. 6:16-22)* R 3153:5

## *மார்ச் 21*

***உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். (மத். 5:44)***

*நம்மை எதிர்த்து எதையும் செய்பவர்களிடையே எந்த அளவுக்கு நாம் விருப்பத்தைக் காட்டுகிறோம் என்பதைச் சோதிப்பதற்கு இது ஒரு பரீட்சை. அவர்கள் தவறுதலை உணர்த்த நாம் அவர்களிடம் அன்பைக் காட்டி அவர்களுக்கு உதவிச் செய்கிறோமா? அவர்களுக்காக ஜெபித்து அவர்களுடைய பெலவீனங்களைச் சகித்து அவர்களுக்கு போதனையாக முன்மாதிரியானஜீவியம்ஜீவிக்கிறோமா? இப்படிச் செய்வோமானால் அநேகப் பாவங்களை மூடுகிறவர்களாக இருப்போம். பாவிகளிடையே, பாவம் என்றுமுள்ளதென்பதும், நாம் பாவிகளை அல்ல இந்தப் பாவத்தை மட்டும் வெறுக்க வேண்டுமென்பதுமே தேவ தீர்ப்பு. (அப். 7:59-60; 1 பேது 2:20-23)* R 1330:6

## *மார்ச் 22*

***நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். நாம் நியாயம் தீர்க்கப்படும் போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம். (1 கொரி. 11:31-32)***

*புதிய சிருஷ்டிகளாக இருப்பதன் மூலம் ஒருவர் அடையும் லாப நஷ்டங்களையும், உலகத்தையும், மாமிச இச்சைகளையும், சாத்தானையும் எதிர்த்து அவர்கள் போர் புரியும் போது, எவ்விதம், எப்போது, எங்கே இவைகளை அடைந்தோம் என்பதையும் புதிய சிருஷ்டிகள் தங்களைக் குறித்துச் சோதித்தறிவது தேவனுடைய பார்வையில் மேன்மையானது. ஆவிக்குரிய இஸ்ரயேலர் தங்கள் அனுதின ஜீவியத்தில் பிரதான ஆசாரியரான இயேசுவிடம் நெருங்கி ஜீவிப்பது அவசியம். இவர்களுக்கு அருளப்பட்ட கல்யாண வஸ்திரம் எவ்விதத்திலும் கறைபடாமல் இரட்சகரின் இரத்தத்தால் தொடர்ந்து சுத்திகரிக்கப்பட்டு கறை திரை ஒன்றுமில்லாமல் சுத்தமுள்ளதாகக் காணப்பட வேண்டும். நீதியின் வஸ்திரம் எக்காலத்திலும் உடுத்தப்பட்டதாயும் அவைகளில் சிறு கறை ஏற்பட்டாலும் அது உடனடியாக சுத்திகரிக்கப்படவும் வேண்டும். (எபி. 12:5-8))* R 3125:4

## *மார்ச் 23*

***முந்தின நாட்களை நினைத்துக் கொள்ளுங்கள்; நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்த அந்த நாட்களில் உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தை சகித்தீர்களே .... அப்படி நடத்தப்பட்டவர்களுக்குப் பங்காளிகளுமானீர்கள். (எபி. 10:32-33)***

*பலமுள்ள சகோதரருக்கும் சிலரின் ஆதரவும் உற்சாகமும் அவசியமானது. நாம் எவ்வளவாக கிறிஸ்துவின்மேல் சார்ந்தவர்களாக அவர் ஊழியத்தில் ஈடுபட்டாலும் நம்முடைய சுயபலம் நமக்குப் போதாது. நம் உடன் ஊழியர்களின் ஒத்துழைப்பும் உற்சாகமும், அன்பும், கருணையும் இவ்வூழியத்தில் இருக்க வேண்டுமென்பதே தேவ திட்டம். தேவ ஊழியத்தில் ஈடுபட்டு உழைக்கும் ஒவ்வொரு வேலையாளும் இக்கருத்தை ஏற்க வேண்டியது அவசியமானது. தேவ ஊழியத்தில் தங்களை அதிகமாக ஈடுபடுத்தக் கூடாதவர்களுக்கும், தாலந்திலே குறைவு பட்டோருக்கும் இது ஓர் அரிய சந்தர்ப்பம். இவர்கள் உடன் ஊழியர்களாக மற்றவர்களுக்கு அவ்வூழியத்தில் உதவி ஆட்களாக இருக்க வேண்டும். (2 யோவா. 8; 1 தெச. 2:14)* R 3144:1

## *மார்ச் 24*

***நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை. (எபி. 13:5)***

*தேவனுடைய ஊழியத்தில் நாம் ஈடுபட்டு அந்த ஊழியத்தை செய்யும் போது, சாத்தானோ அல்லது வேறு எந்த அசுத்த ஆவியோ நம்மை எதிர்த்து நிற்குமேயானால் நாம் ஏன் அச்சம் கொள்ள வேண்டும்? பக்தி வைராக்கியத்துடனும், ஆர்வத்துடனும் முழு பொறுப்பையும் நம்மேல் ஏற்று தொடர்ந்து இவ்வூழியத்தை மனதைரியத்துடன் செய்வதோடு, நம் உள்ளத்திலே முழுபலமும், உத்திரவாதமும் தேவன் பேரில் உள்ளது என்றும் நினைக்கவேண்டும். தேவனுடைய ஊழியத்தை நிறைவேற்றி முடிக்கும் வரை நான் மரிப்பதில்லை என்று முற்காலத்தில் ஒருவர் கூறினார். தேவனுடைய ஊழியத்தில் ஈடுபட்டோருக்கு இது ஓர் உண்மையும் அங்கீகரிப்புமான வார்த்தையே. "பரிசுத்தவான்களின் மரணம் தேவனுடைய பார்வைக்கு அருமையானது." (மத். 6:25-26, பிலி. 4:6-7)*R 3144:5

## *மார்ச் 25*

***ஆதலால் பிரியமானவர்களே, இவைகளை முன்னமே நீங்கள் அறிந்திருக்கிறபடியால், அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியி-ருந்து விலகி விழுந்து போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து, நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும், அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். (2 பேது. 3:17-18)***

*நாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களை அறிந்து அவைகளை விசுவாசத்துடன் நம் வாழ்க்கையில் பயன்படுத்தும் போது நாம் ஞானத்திலே வளர்கிறவர்களாக இருக்கிறோம். நம் வாழ்க்கையில் இந்த வாக்குத்தத்தங்கள் எவ்விதம் நிறைவேறும் என்றும், இதன் மூலம் நாம் எந்த அளவுக்கு கிருபையிலே வளர்கிறோம் என்றும் உணராவிட்டால் ஞானத்திலே நாம் அடுத்து முன்னேறமுடியாது. சில சந்தர்ப்பங்களில் நாம் பின் தங்குகிறவர்களாகவும் இருப்போம். நாம் ஞானத்தை இழக்கும் போது கிருபையையும் இழந்து போகிறோம். இதனால் ஞானத்தில் குறைவுபட்டுஇருள் நம்மை சூழச்செய்யும். இருள் நம்மை மேற்கொள்ளும் போது தேவனுடைய வார்த்தைகளிலும் அவர் வாக்குத்தத்தங்களிலும் நம் நம்பிக்கை மங்கி உலக வழிகளிலும் பாவத்திலும் இழுத்துச் செல்லும். (எபே. 4:14-16)* R 3156:4

## *மார்ச் 26*

***நாம் இரவுக்கும், இருளுக்கும் உள்ளானவர்களல்லவே. ஆகையால் மற்றவர்கள் தூங்குகிறது போல நாம் தூங்காமல், விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம் (1தெச. 5:5-6)***

*ஓர் உண்மை கிறிஸ்தவன் கிறிஸ்துவின் சீஷனாக இருந்து அவர் உபதேசங்களைக் கேட்டு நடப்பானேயாகில், ஆயிரவருட தேவராஜ்யத்திலே மகிமையும் கீர்த்தியும் சாகாமையும் உள்ள ஒரு ஸ்தானத்தில் வைக்கப்படுவது நிச்சயமானது. இதனால் இவர்கள் அடிக்கடி சிட்சிக்கப்பட்டு எச்சரிக்கப்படுவதும், அசதியாயிராமல் விழித்திருக்க உணர்த்தப்படுவதும் அவசியமானது. இந்த எச்சரிப்பு தூங்குகிறவர்களுக்கோ, உலக சிற்றின்பமான மயக்கமுள்ளவர்களுக்கோ அல்லாமல் ஆவியிலே ஆர்வமுள்ளவர்களாக தேவ ஊழியத்தில் ஈடுபட்டுவரும் ஊழியர்களுக்கே உரியதாகும். தங்களை முற்றிலும் தேவ சித்தத்திற்கு நெருங்கி ஜீவிக்க செய்வதே இவர்கள் ஊழியமாக இருக்க வேண்டும். இரண்டாவதாக குறுகிய பாதையில் நடக்க அழைக்கப்பட்டவர்களுக்கு உதவியாகவும் முன் மாதிரியாகவும் இவர்கள் ஊழியம் செய்ய வேண்டும். (ரோம. 13:11-14)* R 3156:5

## *மார்ச் 27*

***நான் அவர்களுக்காக வேண்டிக் கொள்கிறேன் ..... அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும்... ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும்.... நீர் என்னில் அன்பாயிருக்கிறது போல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும்...... வேண்டிக் கொள்கிறேன். (யோவா. 17:9,20-23)***

*இது எப்படி இருக்கும் என்று திகைப்புடன் நாம் கேட்கக் கூடும். நம் இரட்சகர் தம் பிதாவோடு பூரண இணக்கமுள்ளவராகவும் அவர் மகிமையை பிரதிபலிக்கக் கூடியவராகவும் இருந்தார். நாம் பாவிகளாய் நம்மில் அன்பில்லாததால் அவரைப் போல இருக்க முடியாது. ஆகிலும் நாம் கழுவப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட பின் பூரணமற்ற நம்மை அவருடைய பார்வையில் பூரணராகச் செய்து நம் இருதயத்தை ஆராயக்கூடிய அவரிடம் ஒன்றுபடுத்துகிறார். நம் இருதயம் குற்றமற்றதும் பூரண சிந்தையுள்ளதுமாக மாற்றப்பட்டபின் நம் பெலவீனங்களிலும் நாம் அவர் சித்தத்தை நிறைவேற்ற உறுதியுள்ள மனமுடையவர்களாக அவர் பேரில் நம்பிக்கை வைத்து நடப்பது அவசியமானது. விழுந்துபோன மனிதன் மீட்கப்பட்டப் பிறகு தேவன் தம் அன்புக்கு பாத்திரமுள்ளவனாக அவனை அங்கீகரிக்கிறார். (1 யோவா.2:5-7, 16-17)* R 3161:6

## *மார்ச் 28*

***நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி. (2 தீமோ. 2:3)***

*உண்மை போர் வீரன் தன் காரியங்களைக் குறித்து தர்க்கிக்க மாட்டான். அவன் இந்த உத்தியோகத்திற்கென்று நியமிக்கப்படும் போது நீதி நியாயங்களை அறிந்திருக்க வேண்டும். அவன் இந்த பொறுப்பை ஏற்றுக் கொள்ள ஒப்புக் கொண்ட பிறகு முரண்பாடாக எதையும் செய்யக்கூடாது. கிறிஸ்துவின் போர் வீரனாக உண்மையோடும், பூரணபரிசுத்தத்தோடும் சேவிப்பது மகிமையானது. யூத்தக் களத்திற்கு அப்பால் மிகுந்த சந்தோஷமும், சமாதானமும் உண்டென்பதை அறியும் போது நமக்குள் ஒரு சொல்லி முடியாத மகிழ்ச்சி எழும்பக்கூடியதாக உள்ளது. இந்த நம்பிக்கையினால் ஒருவரும் யுத்தத்தில் பின்வாங்காமலும் பகைவனை எதிர்த்து போர் செய்ய தைரியமிழக்காமலும் பசி, தாகம், நிர்வாணம், காயம், மரணம் எதையும் குறித்து பயப்படாமலும் நல்ல போர்ச்சேவகனாய் விளங்க வேண்டும். (2 தீமோ. 4:5, 7,8)* R 3162:6; 3163:1

## *மார்ச் 29*

***கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. (எபே. 2:8)***

*பரிசுத்தமுள்ள தேவன் அங்கீகரிக்கத்தக்க ஊழியத்தை விழுந்துபோன மனுகுலத்தின் சந்ததியில் ஒருவனும் செய்து நிறைவேற்ற முடியாது. புதிய சிருஷ்டிகளாக தற்போது நாம் நிற்பது நம்முடைய பழைய மனுஷனின் எந்த கிரியையினாலும் அல்ல. புது சிருஷ்டியானது நம்முடைய முயற்சியினாலல்ல, அது தேவனுடைய ஈவு. இதை நாம் முற்றிலும் அறிந்திருக்க வேண்டும். இல்லையேல் நாம் அவர் கிருபையினின்று விழுந்துபோகக்கூடும். பழைய மனிதனிலிருந்து புதிய மனிதன் படிப்படியாகத் தானே முன்னேற்றமடைந்தான் என்பது தவறான எண்ணம் என்பதை அப்போஸ்தலனான பவுல் இங்கே தெளிவாகக் கூறும் போது புதிய மனிதன் ஒரு தனிப்பட்ட புதிதான சிருஷ்டி என்று எடுத்துக் காட்டியுள்ளார். நல்ல ஊழியத்தினாலல்ல நல்ல ஊழியம் செய்வதற்காக தேவனுடைய கைவேலையாக கிறிஸ்துவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டான் என்பது உண்மையானது. இது தேவனுடைய ஈவு. (எபே. 2:1-5)* R 3166:4

ú

## *மார்ச் 30*

***இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால், நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும், தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும். (2 பேது. 3:11)***

*தேவ பக்தி வீண் வார்த்தையிலும், அசுத்தமானதிலும், வாக்குவாதங்களிலும், அவபக்தியினாலும், புரட்சியினாலும் உண்டாவதில்லை. கிறிஸ்துவை ஆவியிலும் உண்மையிலும் ஏற்றுக் கொண்டவர்கள் இவை யாவையும் முற்றிலும் அகற்ற வேண்டும். இதன்மூலம் நாம் அனுதினமும் தேவனிடம் நாம் செய்த, பேசின, குற்றமான காரியம் எதுவாக இருப்பினும் அவற்றை அறிக்கையிட்டு மன்னிப்படைய வேண்டும். அனுதினமும் நம் குற்றங்களை தேவனிடம் அறிக்கையிட்டு அவர் கிருபையை நாடி நாளுக்குநாள் தேவபலத்தினால் சோதனைகளை மேற்கொள்ளுவோமேயானால் நியாயத்தீர்ப்பிலே கிறிஸ்துவின் மூலம் தேவனுக்கு முன்பாக குற்றமற்றவர்களாகவும் பரிசுத்த ஆவியின் மூலம் தேவனால் அங்கீகரிக்கப்பட்டவர்களாகவும் இருப்போம். (1பேது. 1:13-15)* R 1938:5

## *மார்ச் 31*

***விசுவாசத்தின் நல்லப் போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய். (1 தீமோ. 6:12)***

*நம் வாழ்க்கையில் நமக்குண்டாகும் போர் வெளிப்படையாகவோ அல்லது அந்தரங்கமாகவோ இருந்தாலும் அது ஒரு போராகவே கருதப்படவேண்டும். இந்த யுத்தத்தில் நாம் முன்னேறி வெற்றிபெற வேண்டும் இல்லையேல் நாம் சகலத்தையும் மேற்கொண்டவர்களாக தேவனாலே அங்கீகரிக்கப்பட முடியாது. மற்றொரு காரியம் நம் அனைவரின் சிந்தனையில் இருக்க வேண்டும். நம்முடைய பிரயாசையினால் அல்ல பரிசுத்த ஆவியின் தூண்டுதலினால் நாம் எந்த அளவுக்கு இந்த யுத்தத்தில் முன்னேறுகிறோம் என்பதையே தேவன் மதிப்பிடுகிறார். இதனால் நாம் செலுத்தும் காணிக்கைகளும் பலியும், பூரண அன்பும் பக்தியுள்ளதுமாக இருந்து பேர் புகழ்ச்சிக்காக நாம் எதையும் செய்யாமல் தேவன் பேரில் அன்புள்ளவர்களாக அதை உண்மையான அன்போடு செய்ய வேண்டும். (2 தீமோ. 4:7-8)* R 3166:3

## *ஏப்ரல் 1*

***நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள். (மாற்கு 14:38)***

*நமக்கு ஏற்படக்கூடிய சோதனை எவ்விதம் இருக்கும் என்பதை அது நம் பேரில் வரும்வரை தெளிவாகப் புரிந்து கொள்ள முடியாது. நாம் அதை முன் அறிந்திருப்போமேயானால் அது மிக இலகுவாகவே காணப்படக்கூடும். ஆகவே நாம் எப்பொழுதும் தயாராக இருந்து விழிப்புடன் ஜெபத்திலே தரித்திருப்பது விபத்தை விளைவிக்காது. ஏனென்றால் நம் எதிராளியான சாத்தான் யாரை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான். நம் பெலவீனங்களை அறிந்து அதை ஆதாயப்படுத்திக் கொள்வான். நாம் ஒவ்வொருவரும் அவனை மேற்கொள்ள நம் இருதயத்திலே தேவ கிருபையின் ஆவியை உடையவர்களாக இருந்து எப்பொழுதும் விழிப்புள்ளவர்களாக ஜெபத்திலே தரித்திருப்பது அவசியமானது. (1பேது. 5:8-10; 1கொரி. 16:13)* R 3179:1

## ஏப்ரல் 2

**ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம். *(கலா. 6:10)***

*ஒரு கிறிஸ்தவன் தன் நேரத்தையும், சுகத்தையும் பாராமல் மற்றவர்களுக்கு நன்மையான உதவிகளைச் செய்யத்தயாராக இருக்க வேண்டும். தன் சகோதரருக்காக தன் ஜீவனையும் தத்தம் செய்யத் தயாராக இருக்க வேண்டும். இவ்விதம் ஊழியம் செய்யத்தக்க சந்தர்ப்பத்தை ஒவ்வொரு நாளும் எதிர்ப்பார்த்திருக்க வேண்டும். விசேஷமாக சத்தியத்தைக் குறித்து மற்றவர்களிடம் பேச தன் நேரத்தையும், தீங்கு நாளிலே சத்தியத்தில் நிலைத்து நிற்க சர்வாயுதவர்க்கம் தரித்துக் கொள்ள சகோதரர்களை எச்சரித்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். உபத்திரவகாலத்தில் விசுவாச வீட்டாரை ஸ்திரப்படுத்துவதே இவர்களின் முக்கிய ஊழியமாக காணப்பட வேண்டும். (1தெச. 5:14-15)* R 3180:3

## ஏப்ரல் 3

**இரவு சென்று போயிற்று, பகல் சமீபமயிற்று. ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளி விட்டு ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளக் கடவோம். *(ரோம. 13:12)***

*இருளிலே செய்யப்படும் எந்த ஒரு காரியமும் சத்திய ஒளியிலே சீர் தூக்கிப் பார்க்கும் போது அது தேவனுடைய பார்வையிலே அங்கீகரிப்புள்ளதாகக் காணப்படாது. நாம் ஒரு புதிய ஏற்பாட்டிற்குள் இருக்கிறோம் என்பதை உணர வேண்டும். பழைய காரியங்களுக்குள் அல்ல புதிய ஏற்பாட்டின் பிரஜைகளாக இருக்கும் போது இந்தத் திட்டங்களுக்காக ஜீவித்து , ஒளியின் தேவனுடைய கட்டளைகளையும், திட்டங்களையும் பின்பற்றி, இருளின் தேவனாகிய சாத்தானின் வழிகளையும், கிரியைகளையும் விட்டு விலகினவர்களாக ஜீவிக்க வேண்டும். (1தெச. 5:4-8)* R 3181:1

## ஏப்ரல் 4

***பகலில் நடக்கிறவர்கள் போலச் சீராய் நடக்கக்கடவோம். (ரோம. 13:13)***

*ஒவ்வொருவரும் எல்லாக் காரியங்களிலும் உண்மையுள்ளவர்களாக நடக்கப் பார்க்கவேண்டும். பண விஷயத்தில் மட்டுமல்ல, நமக்கடுத்தவனையும் உண்மையோடு நடத்த வேண்டும். சகோதரரிடத்திலேயும் இன்னும் மேலாக தேவனிடத்திலேயும் நம் விசுவாசத்தின் அன்பைக் காட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். இதன் மூலமே நாம் ஒரு பரீட்சைக்குட்படுத்தப்படுகிறோம். தேவனை மறந்து மனிதருடைய ஆதரவை அதிகமாக விரும்பி ஜீவிப்பவர்கள் தேவராஜ்யத்திற்கு தகுதியற்றவர்களாக தீர்க்கப்படுவார்கள். அவர்கள் உண்மையில்லாதவர்களாக இருளில் நடக்கிறவர்களாக இருந்து பொய்யை விசுவாசிக்கிறவர்களாயிருப்பார்கள். அவர்கள் மேலான ஆசீர்வாதங்களை மறுதலிக்கிறவர்களாயிருந்து இருளிலே நடப்பார்கள். (எபே. 5:8-13)* R 3181:3

## ஏப்ரல் 5

***என் வாய் ஆனந்தக்களிப்புள்ள உதடுகளால் உம்மை போற்றும். என் படுக்கையின் மேல் நான் உம்மை நினைக்கும் போது, இராச்சாமங்களில் உம்மை தியானிக்கிறேன். (சங். 63:5-6)***

*தேவனிடம் நாம் மன்றாடி ஜெபிப்பது நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள சிலாக்கியம் மட்டுமல்ல, கிறிஸ்தவ வளர்ச்சிக்கு அத்தியாவசியமானதாகக் கொடுக்கப்பட்டுள்ள கட்டளையுமாகும். கிருபை நிறைந்த தகப்பனிடத்தில் உரையாடவோ அவரை தொழுதுக் கொண்டு நன்றி செலுத்தவோ விருப்பமிழந்துப் போகக் கூடியவர்கள் புத்திர சுவிகாரத்தை இழந்து போவார்கள் என்பதை உணர்ந்து தங்களுக்கு முன் தடையாக வைக்கப்பட்டுள்ள உலக நேசத்தையும், மாமிச இச்சைகளையும் சாத்தானையும் அப்புறப்படுத்த பிரயாசப்பட வேண்டும். நாம் தேவனுடைய அங்கீகரிப்பைப் பெறத்தக்கதாக ஜெபத்திலும் தொழுகையிலும் குறைவுபடாதவர்களாக அதிகமாக அவர் பேரில் தியானமுள்ளவர்களாக இருக்கவும் வேண்டும். நம் இருதயம் நல்ல நிலத்தை போலிருக்குமானால் அதிக கனிகளைத் தரும். (சங். 42:8-11)*
R 2004:6

## ஏப்ரல் 6

***ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன். (1 பேது. 4:16)***

*தேவனுடைய சத்திய ஊழியத்தில் ஈடுபடும் போது ஒருவருக்கு உண்டாகும் வியாதியோ அல்லது எவ்வித அசௌகரியமோ அது அவன் விசுவாசத்தையும் தேவன் பேரில் உள்ள அவன் அன்பையும் பரீட்சிப்பதற்காக தேவனால் அனுமதிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட உபத்திரவம் இல்லாமலோ அல்லது நம் வியாதி ஏதோ அதிர்ஷ்டவசமாக நீக்கப்பட்டுவிட்டாலோ சத்திய ஊழியத்தில் எந்த அளவுக்கு நாம் ப-யின் ஜீவியம் செய்கிறோம் என்பது நமக்கு புரியாததாக இருக்கும். எனவே எந்த வியாதியோ, உபத்திரவமோ மன வேதனையோ சத்திய ஊழியத்தினிமித்தம் ஒருவருக்கு உண்டாகும் போது அதை பொறுமையுடன் சகிப்பதன் மூலம் தேவன் பேரில் அவன் கொண்டுள்ள விசுவாசத்தைக் காட்டுகிறான். நம் இரட்சகரும், பேதுருவும் சொன்னது போல இப்படிப்பட்ட உபத்திரவத்திலே சந்தோஷப்படக்கடவோம். (2 கொரி. 11:23-28)* R 2007:5

## ஏப்ரல் 7

***என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார். (பிலி . 4:19)***

*தேவனுடைய சுவிசேஷத்தை பிரசங்கிக்க உங்களுக்குத் தேவையான உற்சாகம் இல்லாதிருந்தால், உங்கள் குறைவை குறித்து ஊக்கத்துடனும், விசுவாசத்துடனும் விடாமுயற்சியாய் தேவனிடம் மன்றாடும் போது நமக்கு விரைவில் கிடைக்கும். சத்திய வசனத்தை எடுத்துரைக்க விருப்பமுள்ளவர்களாக இருந்தும் அதை எடுத்துச் சொல்ல இயலாத குறைபாடு இருக்குமேயாகில், அறிந்த அளவில் பேசக்கூடிய திறமைக்காக ஜெபிக்க வேண்டும். ஆர்வமும் பேசும் திறமையும் உள்ளவர்காளயிருந்தும் அதை உபயோகிக்கக்கூடிய சந்தர்ப்பம் இல்லாதிருப்பின் இதையும் தேவனிடம் முறையிட்டு, கிடைக்கக்கூடிய சந்தர்ப்பங்களை உண்மையோடு உபயோகப்படுத்த வேண்டும். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களுக்காக விழிப்புடன் காத்திருக்கவும் வேண்டும். (2கொரி. 9:7-10)* R 2006:3

## ஏப்ரல் 8

***விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். பின் வாங்கிப்போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது. (எபி. 10:38)***

*பலியின் ஜீவியமான இடுக்கமான பாதையிலிருந்து சற்று வழி விலகி பின் தங்கச் செய்து துவக்கத்தில், இது பெரிதாகக் காணப்படாமல், நாம் விட்டு வந்த சில காரியங்களில் விருப்பத்தைக் காணச்செய்யும். இது நம் முன் வைத்துள்ள ஓட்டத்தின் வேகத்தைக் குறைத்து, விழுந்து போன மனிதனின் வழிகளில் தீவிர ஆவலை உண்டாக்கி விடும். நம் பெலவீனங்களை அறிந்த சாத்தான் இதை ஆதாயப்படுத்தி பல சோதனைகளை நமக்கு முன் வைக்கக்கூடும். சிறிய தவறுகளும் நம்மை நியாயம் தீர்க்கக்கூடியதாக உள்ளது. மாமிச சிந்தையை வசீகரப்படுத்தி ஆதியிலே தேவன் பேரில் கொண்டிருந்த அன்பை மறக்கச் செய்யும். பின்னர் சத்தியத்தினின்றும் பரிசுத்த ஆவியின் நடத்துதலிலுமிருந்து சிறிது சிறிதாக விலகச் செய்து, அவருடைய ஊழியத்தைச் செய்யும் ஆர்வத்தை குறைக்கவும் செய்யும். இப்படிப்பட்டவர்கள் தேவ அன்பிலிருந்து விழுந்து போனவர்களே. (2 பேது. 2:19-22)* R 1799:1

## ஏப்ரல் 9

***பந்தயச்சாலையில் ஓடுகிறவர்கள் எல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். (1 கொரி. 9:24)***

*பரிசைப் பெறுவதற்கு நாம் தேவனின் சர்வாயுதம் தரித்தவர்களாக மட்டும் இருந்தால் போதாது, நாம் யுத்த வீரர்களாயிருந்து கண்களின் இச்சைகளையும், மாமிசத்தின் இச்சைகளையும், ஜீவனத்தின் பெருமைகளையும், பரிசுத்தத்திற்கும், நீதிக்கும் பகைமையாக உள்ள சகல காரியங்களையும் எதிர்த்து நல்ல போர் வீரனாக போர் புரியவும் வேண்டும். தேவனுக்கும், சத்தியத்திற்கும், நீதிக்கும் காட்டும் அன்பு நம்மை உற்சாகப்படுத்த வேண்டும். இல்லையேல் வெற்றி காண முடியாது. அன்பே நம்மை மரண பரியந்தம் விசுவாசத்தில் நிலைத்திருக்கச் செய்யும் ஊக்கமான அன்பு நம் இருதயங்களை ஆளும் போது நம் தேவனுக்கு முற்றிலும் நம்மை ஒப்புக் கொடுத்து பத்தில் ஒன்பது பாகம் நம் பேரில் வெற்றியடைந்ததாகக் காணச் செய்யும். அன்பு நிறைந்திருக்கும் போது, தேவனுடைய கிருபையும் நிறைந்திருக்கும். (யூதா 20:21)* R 1799:4

## *ஏப்ரல் 10*

***ஏற்றக் காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். (1 பேது. 5:6)***

*மாமிச இச்சைகளைத் தொடர்ந்து தடுத்து, தேவனுக்கு அங்கீகரிப்பதாக நம்மை பூரண பலியாக ஒப்புக் கொடுத்து, ஏற்றுக்கொள்ளப்படும் காலபரியந்தம் இடுக்கமான பாதையில் பொறுமையுடன் ஓடுவது சுலபமான காரியமல்ல. ஆனால், மேலான அழைப்பைப் பெற்ற ஒவ்வொருவரும் பூரண இரட்சிப்பை அடைய பயத்தோடும் பக்தியோடும் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினவர்களாக ஜீவிக்க வேண்டும். இவ்விதம் ஜீவிப்பவர்களே வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடைய முடியும். மனத்தாழ்மையும் விசுவாசமுமுள்ளவர்கள் மட்டுமே தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட பாத்திரங்களாக உயர்த்தப்படுகின்றனர். இவர்களே அவர் நாமத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்த தகுதிப் பெற்றவர்கள். சுயத்தை வெறுமையாக்கி இருப்போர் மட்டுமே ஆவியிலும் சத்தியத்திலும் நிரப்பப்பட்டவர்களாக தைரியத்துடன் நல்ல போர் வீரனாக இவ்வூழியத்தை திறமையுடன் செய்ய முடியும். (சங். 37:3-6)* R 1487:5

## *ஏப்ரல் 11*

***களியாட்டும் வெறியும், வேசித்தனமும் காமவிகாரமும், வாக்குவாதமும் பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமல், பக-லே நடக்கிறவர்கள் போலச் சீராய் நடக்கக்கடவோம். (ரோம. 13:13)***

*சிலர் ஆஸ்தியிலும் பணம் சேர்ப்பதிலும் எப்போதும் மதிமயங்கி இருப்பார்கள். சிலர் வியாபாரத்திலும் சிலர் ஆடை அணிவதிலும், சிலர் இச்சையிலும் கலையிலும் இச்சையுள்ளவர்களாக இக்காரியங்களில் மயங்கி இருப்பார்கள். ஆனால் தேவனுடைய பிள்ளைகளாக இருந்து, வரும் புதிய காலங்களை அறிந்தவர்கள் இந்த நாட்களில் தேவ ஊழியம் எவ்விதம் செய்யப்பட வேண்டும் என்பதையே தங்கள் இருதயங்களில் ஆர்வத்துடன் சிந்திக்கிறவர்களாக இருக்க வேண்டும். மற்றவர்கள் மதிமயங்கி உலக வழிகளில் ஈடுபட்டி ருக்கும் இக்காலங்களில் நாம் விழிப்புள்ளவர்களாக இருந்து வருகிறோம். இனி வரும் காலங்களை நாம் காண்பது போல அவர்கள் காண்பதில்லை. ஏனென்றால் நாம் விழித்திருப்பது போல அவர்கள் விழித்திருப்பதில்லை. (1தெச. 5:5-8)*
R 3181:4

## *ஏப்ரல் 12*

***நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? .... அநேகரான நாம் ஒரே அப்பமாயிருக்கிறோம். (1 கொரி. 10:16-17)***

*ஒரே பாத்திரமாக இருந்தாலும் அதில் உள்ள ரசம் அநேக திராட்சைப் பழங்களி-ருந்து எடுக்கப்பட்டது. அது போல ஒரே அப்பமானாலும் அநேக கோதுமை மணிகளினால் உண்டாக்கப்பட்டது. அப்போஸ்தலன் இங்கே தேவனுடைய பிள்ளைகள் ஒரே அப்பமும், ஒரே பாத்திரத்தின் ரசமாகவும் என்று பேசும் போது, இதை புசித்து பானம் பண்ணும் தேவனுடைய பிள்ளைகளின் ஒருமைப்பாட்டைக் காண்பிக்கிறதாக உள்ளது. இந்த அப்பத்தில் ஒரு கோதுமை மணி தன்னை பிரித்துத் தனியே காட்ட முடியாது. அதே போல திராட்சை ரசத்தினின்று ஒரு திராட்சை தன்னை பிரித்து காண்பிக்கவும் முடியாது. புதிய சிருஷ்டிகளாக இருக்க அழைக்கப்பட்டோரும் கிறிஸ்துவின் சரீரத்திலே இணைக்கப்பட்டவர்களாக இருப்பதற்கு அந்த பாத்திரத்திலே குடித்து அந்த அப்பத்தில் பங்கு பெறுவதற்கு கிறிஸ்து அழைக்கிறார். புது சிருஷ்டி ஆவதற்கு இதை தவிர வேறொரு வழியும் இல்லை. இவர்களே அவர் மரணத்திலும், உயிர்த்தெழுதலிலும் இணைக்கப்பட்டவர்களாய் கனம், மகிமை, சாகாமையைப் பெற முடியும். (எபே. 4:16)* R 2772:6

## *ஏப்ரல் 13*

***நீங்கள் மனுஷ குமாரனுடைய மாமிசத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை. (யோவா. 6:53)***

*நாம் நீதிமான்கள் என்று தேவனால் அங்கீகாரம் பெற அனுதினமும் கிறிஸ்துவின் ப-யில் பங்கு பெறவேண்டும். அவருடன் ஆட்சி புரிய தகுதியுள்ளவர்களாக இருப்பதற்கு அவர் பாடுகளிலும் சந்தோஷமாக பங்கு பெற்று அது நமக்கு கொடுக்கப்பட்ட ஆசீர்வாதமாகக்கருதப்பட வேண்டும். அவருடன் மரித்தோமேயானால் அவருடைய மணவாட்டியாக இருப்பதற்கு அவருடன் உயிர்ப்பிக்கவும் படுவோம். ஆதலால் அவருடன் அன்பிலும் மகிமையிலும் மணவாட்டியாக இணைக்கப்பட சொல்லர்த்தமான பாத்திரத்திலும், அப்பத்திலும் பங்கு பெறுகிறவர்களாக மாத்திரம் அல்லாமல் விசுவாசத்துடன் உண்மையாக அவருடைய பாடுகளில் பங்கு பெற வேண்டும். இந்த பாத்திரத்தில் பானம் பண்ணி அவர் பெற்ற ஸ்தானத்தைப் பெற்று அவர் கிருபையின் மூலம் நம்மை ஜீவ ப-யாக ஒப்புக் கொடுக்கவும் வேண்டும். (1 கொரி. 11:23-29)* R 2436:5

## ஏப்ரல் 14

***அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார். (ஏசா. 53:12)***

*இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும் ஒவ்வொருவருக்கும் அவர் கெத்செமனே தோட்டத்தில் அனுபவித்த பாடுகளிலும், மற்றெல்லா பாடுகளிலும் அனுபவம் வேண்டும். எனவே நாம் சிறுமந்தையாகிய நம் சகோதரர்களுக்கு ஊழியம் செய்வதற்கு ஏற்ற சந்தர்ப்பங்களை எதிர் நோக்கி இருக்க வேண்டும். நாம் ஒருவர் பேரில் ஒருவர் நிந்தையை வருவித்துக் கொள்ளாமல் ஜாக்கிரதையுள்ளவர்களாக ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து தேவனுடைய திருவசனத்தின் மூலம் ஒருவரை ஒருவர் தேற்றி பல நிந்தைகளிலும் பாடுகளிலும், உபத்திரவங்களிலும் ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். இதன் மூலமாக நம் இரட்சகரும் சரீரத்தின் தலையுமானவருக்கு அவர் சிலுவையைச் சுமக்க பூரண விருப்பத்தை தெரிவிக்கிறவர்களாயிருப்போம். (ரோம. 8:34-39)* R 2473:3

## ஏப்ரல் 15

***பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன். (லூக். 23:46)***

*பிதாவின் திட்டங்களையும் இனி வரப்போகும் ஆசீர்வாதங்களையும் குறித்து நம் இரட்சகர் சகல காரியங்களையும், அவர் சித்தப்படி செய்து பிதாவினிடம் பூரண நம்பிக்கை உள்ளவராக அவரை நோக்கி விண்ணப்பம் பண்ணினார். கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின்பற்றி நடக்கும் நாமும் கூட பிதாவின் பேரில் விசுவாசமுள்ளவர்களாக முடிவு காலம் வரை நம் ஓட்டத்தை ஓட வேண்டியவர்களாக இருக்கிறோம். அவர் தமது ஒரே பேறான குமாரனை நமக்காக இரட்சகராக தந்தருளிய அன்பையும் நம் வாழ்க்கை பிரயாணத்தில் அவர் நம் பேரில் கொண்டுள்ள கவனத்தையும், அநேக விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களையும் உணர்ந்து தைரியத்தோடு அவரிடத்திலே சேர வேண்டியவர்களாயிருக்கிறோம். அவருடைய வாக்குத்தத்தங்களும் நடத்துதலும் நமக்கு பலமும் ஆதரவும் நம்பிக்கையை தரக்கூடியதுமாயுள்ளது. (சங். 31:1-6)* R 2475:4

## *ஏப்ரல் 16*

***என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறது போல நான் அவனை கடாட்சிப்பேன். (மல். 3:17)***

*கிறிஸ்துவின் மணவாட்டியைத் தேடி எடுக்கும்படி தேவன் நம்மை அனுப்பி இருப்பாரானால் நாம் தேவனால் அங்கீகரிக்கப்படாத அநேகரை தெரிந்தெடுக்கிறவர்களாக இருப்போம். ஏனென்றால் நாம் ஒருவரின் உள்ளான இருதயத்தின் சிந்தனைகளை அறியக்கூடாதவர்களாக இருக்கிறோம். இந்த எண்ணம் மற்றெல்லாரிடமும் நம்மை தாழ்மை உள்ளவர்களாகவும், சாந்தம் உள்ளவர்களாகவும் நற்குணம் உள்ளவர்களாகவும், நம் ஆண்டவரிடம் உண்மையுள்ளவர்களாகவும் ஆக்க வேண்டும். தாவீதை அபிஷேகம் பண்ணும் காரியத்தில் சாமுயேல் தேவனை கவனித்துக் கொண்டிருந்தது போல நாமும் நம் ஊழியத்தைக் குறித்த காரியத்தில் தேவனை கவனித்துக் கொண்டிருக்க வேண்டும். (எல்லா இருதயங்களையும் சோதித்தறிகிற தேவனே கடைசி நாட்களில் தம் சம்பத்தை களஞ்சியத்தில் சேர்த்து தம் பிள்ளைகளை ஆசீர்வதிப்பார்). (யாத். 19:5)* R 3227:1

## *ஏப்ரல் 17*

***நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது. (1 யோவா. 2:27)***

*தாவீது அபிஷேகம் பண்ணப்பட்ட போது, தேவ ஆசீர்வாதமும், வல்லமையும் அவனைத் தொடர்ந்தது. இதனால் ஞானத்திலே அவன் வளர்ந்து தான் நியமிக்கப்பட்ட அந்த ஊழியத்தைச் செய்ய தகுதியுள்ளவனானான். இவ்விதமாக ஆவியிலே அபிஷேகம் பெற்ற திருச்சபையாரும் ஓர் அடையாளமானவர்களே அல்லவா? இந்த அபிஷேகம் தாவீது பெற்றது போல வெளித் தோற்றமானதாயிராமல் மறைவானதாகவும், தற்காலிகமான ஆசீர்வாதங்களையல்ல, நிரந்தரமானதாகவும் இந்த புதிய சிருஷ்டிகளுக்கு அருளப்பட்டுள்ளது. இவர்கள் நாளுக்குநாள் கிருபையிலும், ஞானத்திலும், அன்பிலும் வளர்ந்து பூரணப்பட்டு, கிறிஸ்துவோடு சிங்காசனத்தில் வீற்றிருக்கும் சிலாக்கியத்தைப் பெற முதலாம் உயிர்த்தெழுத-ல் எழுப்பப்படுகின்றனர். (யோவா. 14:16-17)* R 3227:4

## *ஏப்ரல் 18*

***பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும் போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள். (1 பேது. 4:12-13)***

*அன்பற்ற இவ்வுலகில் நாம் அநேக நிந்தைகளை நம் ஆண்டவரைப் போல அனுபவிக்க வேண்டியவர்களாகவே இருக்கிறோம். இவ்வுலகமும், மாமிச இச்சைகளும் சாத்தானும் நம் வழிகளில் எப்போதும் குறிக்கிட்டு வரும்போது பல விதமான போர் நமக்குள் உண்டாகும். நீதிமான்களின் பேரில் பல அம்புகள் எய்யப்படுகிறது. இப்படிப்பட்ட சோதனைகளிலும் துன்பங்களிலும் நம் மனோபாவம் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்? இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நாம் பொறுமையோடு தேவ நடத்துதலுக்கு விழிப்புடன் காத்திருப்பது நல்லதல்லவா? நம்மை ஒவ்வொரு காரியத்திலும் அவர் சித்தத்திற்கு உட்படுத்துவது எவ்வளவு மேன்மையானதென்பதை உணர வேண்டும். இதனால் சங்கீதக்காரன், "நான் மௌனமாகி ஊமையனாயிருந்தேன், நலமானதையும் பேசாமல் அமர்ந்திருந்தேன் என்றான்." (1 பேது. 1:5-7)* R 1937:4

## *ஏப்ரல் 19*

**இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்தி-ருந்து நல்லவைகளை எடுத்துக் காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்தி-ருந்து பொல்லாதவைகளை எடுத்துக் காட்டுகிறான். *(மத். 12:34-35)***

*நம் முதல் கவலை நம் இருதயத்தைப் பற்றினதாக இருக்க வேண்டும். தெய்வீக கிருபைக்குள் இது முற்றிலும் அடக்கப்பட்டு நடத்தப்படவே நாம் பிரியப்படவேண்டும். சத்தியமும், நீதிக்குரிய காரியங்களுமே இதன் முக்கிய அம்சங்களாக இருக்க வேண்டும். நம் வாழ்க்கையில் நீதி, இரக்கம், உதாரகுணம், சகோதர அன்பு, விசுவாசம், மனத்தாழ்மை, தன்னடக்கம் உடையவர்களாகவும் தேவனுக்கும், அவர் குமாரனான கிறிஸ்துவுக்கும், சகலத்திற்கும் மேலான பய பக்தியையும் காட்டுகிறவர்களாயிருக்க வேண்டும். இந்த அடிப்படைக் கொள்கைகளை நம் இருதயத்தில் நாம் காத்துக் கொள்வோமேயானால், இருதயத்தின் நிறைவால் நம் வாயில் சத்தியமும், நிதானமும், ஞானமும், கிருபையுமான வார்த்தைகளே புறப்படும். (சங். 101:1-4)* R 1937:2

## *ஏப்ரல் 20*

***கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான். (லூக். 16:10)***

*மேலே கூறப்பட்ட வசனம் தேவனுடைய பிள்ளைகளுக்கு திருப்தியைத் தரக்கூடியதாக உள்ளது. ஆகிலும் இவர்கள் இதன் அர்த்தத்தைத் தவறாக புரிந்து கொள்ளக் கூடாது. தங்கள் அனுதின ஜீவியத்திலோ அல்லது தங்கள் சொந்தக் காரியங்களில் மட்டும் இதை பயன்படுத்துவதற்காக அல்ல. தேவன் அவரவர்களுக்கு தந்தருளிய வரங்களை தங்கள் அனுதின வாழ்க்கையிலே அதை தங்கள் திறமைக்குத்தக்கதாக அதிகப்படுத்துவது, எஜமான் வரும் போது அதை ஒப்புவித்தவர்களைப் பார்த்து உத்தமமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே கொஞ்சத்தில் உண்மையாய் இருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன் என்றும் உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றும் பத்துப் பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு என்றும் சொல்லுவதற்கு ஒப்பாயிருக்கும். இது ப-யின் ஜீவியத்திற்கடுத்த காரியம். (மத். 25:20-29)* R 3266:2

## *ஏப்ரல் 21*

***நம்முடைய பெலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்தலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம். (எபி. 4:15-16)***

*நம்முடைய உபத்திரவம் மற்றும் சோதனை நேரங்களில் நம் இருதயத்தை விசுவாசத்துடன் நம்மை இரட்சிக்க வல்லவரிடம் தைரியமாக உயர்த்த வேண்டும். அவரை நேசிக்கிறவர்களின் பேரில் அவர் கொண்டுள்ள அன்பையும், அவர் ஞானத்தையும் நமது ஆபத்து காலத்தில் உதவும் கருணையையும் நாம் உணர வேண்டும். அவரிடம் நாம் ஆலோசனை கேட்கும் போது, நாம் அவருடன் நெருங்கும் சிலாக்கியம் பெற்று ஆபத்துக் காலத்தில் விடுதலை பெறவும், பலப்படவும், சத்தியத்திலே நிலைத்திருக்கவும் செய்து ஒவ்வொரு மணி நேரமும், ஒவ்வொரு நாளும், நம்மை வெற்றி காணச் செய்யும். (எபி.2:13-18)* R 2249:5

## <u>*ஏப்ரல் 22*</u>

***மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத். 12:36)***

*ஒரு கிறிஸ்தவன் தன் அனுதின வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் தன் ஜீவியத்தைப் பரிசோதித்துப் பார்க்கக் கடமைப்பட்டுள்ளான். தன் வழிகளில் தேவனுடைய நாமம் பரிசுத்தக் குலைச்சல் ஆகும்படி எதையும் பேசி செய்திருப்பானாகில், தேவனுடைய கிருபாசனத்தண்டையில் அவர்கள் கிட்டிச் சேர்ந்து தாங்கள் தேவனை அவமதித்ததை உணர்ந்து அவரிடம் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு பரம பிதாவிடம் மன்னிப்பைத் தேட வேண்டும். வீண் வார்த்தைகளினால் நாம் நமது பேரில் பாவத்தைச் சுமத்திக் கொள்ளாமல் அவ்வப்போது மன்னிப்பைப் பெற்று, நம்முடைய பாவங்கள் நீங்க கிறிஸ்துவின் மூலமாக அவருடைய இரத்தத்தினாலே நம்பிக்கையுள்ளவர்களாக சுத்திகரிக்கப்பட வேண்டும். இவ்விதம் நாம் பேசும் ஒவ்வொரு வீணான வார்த்தைக்காக நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாதலால் மனந்திரும்பி உணர்ந்து மன்னிப்படைய வேண்டும். இல்லையேல், நாம் குற்றவாளிகளாய் தீர்க்கப்படுவோம். (சங். 19:12-14; யாக். 2:5-8)* R 1938:3

## <u>*ஏப்ரல் 23*</u>

***நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள். (லூக். 8:15)***

*பலிசெலுத்துகிறவர்களாக இருக்கக்கூடிய ஒவ்வொருவரும், சாந்த குணமுள்ளவர்களாயும், மனத்தாழ்மையுடையவர்களாகவும், போதிக்கப்படக்கூடியவர்களுமாய் இருக்க வேண்டும். இல்லையேல் இவர்கள் திசை கெட்டுப் போகக்கூடும். பொறுமையுடன் இவர்கள் தேவ கிருபையில் வளரவும், கற்றுக் கொள்ள வேண்டும். இவர்கள் தேவ நாமத்தினிமித்தமான சில இன்னல்களை பொறுமையுடன் சகிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் இருதயங்களில் சகோதர சிநேகத்தையும், அன்பையும் விருத்தி செய்து தேவ சித்தத்தை அதிகமாக நிறைவேற்றுகிறவர்களாகக் காணப்பட வேண்டும். இவ்விதம் செய்வதன் மூலம், பூமியிலே பலியின் ஜீவியத்தைப் பூரணமாக நிறைவேற்றுவோம். (யாக். 5:7-9; எபி. 10:35-39)* R 3267:1

## *ஏப்ரல் 24*

***நம்மில் ஒவ்வொருவனும் பிறனுடைய பக்திவிருத்திக் கேதுவான நன்மையுண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்கக்கடவன். (ரோம. 15:2)***

*ராஜரீக ஆசாரியத்துவத்திற்கென்று அழைக்கப்பட்ட ஒவ்வொரு அங்கத்தினரும்* **பலி***யின் ஊழியத்தில் ஈடுபட வேண்டியது இக்காலத்தில் மிக அவசியமானது. தங்கள் ஊழியத்தில் இவர்கள் அறிந்து, விட்டுவிட வேண்டிய காரியம் யாதெனில் தங்கள் சுயயோசனைகளையும், திட்டங்களையும் செயல்படுத்த எண்ணாமல் மற்ற உடன் ஊழியருடன் கலந்து செயல்பட மறக்கக்கூடாது. தேவன் தங்களுக்கு காட்டும் வழி இன்னதென்பதை தாங்கள் அறிந்து அவர் தரும் ஆலோசனைகளைச் செயல்படுத்தவே பிரியமுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். சபையின் சமாதானத்திற்காக ஒருவர் தம் சுயசிந்தனையை செயல்படுத்த எண்ணாமல் மற்றவர்களின் விருப்பத்தையும் கேட்டறிந்து செயல்படுவது நலமானது. (1கொரி. 10:31-33; மத். 5:9)* R 3265:3; 3266:5

## *ஏப்ரல் 25*

***விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவறென்றும் விசுவாசிக்க வேண்டும். (எபி. 11:6)***

*"உன் விசுவாசத்தின்படி உனக்கு ஆகக்கடவது" என்பது நம் இரட்சகர் தம் சீஷர்களிடையே உபயோகித்து வந்த ஒரு முறையாகும். விசுவாசத்தில் நாம் தளர்ந்து போனவர்களாகக் காணப்படும் போதும், ஆவிக்குரிய வழிகளில் விசுவாசக் குறைவு ஏற்படும் போதும் தற்கால சம்பவங்கள் நம் விசுவாசத்திற்கு எதிர்த்து நிற்கக்கூடியதாக இருந்தாலும் நாம் தேவனிடம் விசுவாசமுள்ளவர்களாயிராவிட்டால் பயனற்றதாயிருக்கும். தேவனிடம் பூரண விசுவாசமுள்ளவர்களாக, நாம் அவர் ஜனமென்றும், அவர் நம்மை சகல கஷ்டங்களிலும், உபத்திரவங்களிலும் காப்பார் என்றும்,சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்றும், அவர் வாக்குத்தத்தங்களில் விசுவாசமாக இருந்தால், உலகத்தை மேற்கொள்ளுவோம். (1 தீமோ. 4:10)* R 2627:4

## ஏப்ரல் 26

***அவருடைய இளைப்பாறுத-ல் பிரவேசித்தவன், தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஒய்ந்தது போல, தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான். (எபி. 4:10)***

*ஏழு நாட்களில் ஒரு நாளை நாம் விசேஷமாக எண்ணாதபடி அன்பின் பிரமாணம் நம் முழு நேரங்களையும் திருத்தி நடத்துகிறது. வாரத்தின் ஏழு நாட்களும் நாம் நம் முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், சிந்தையோடும், பலத்தோடும் தேவனிடத்தில் அன்பு கூறவும் வேண்டியவர்களாயிருக்கிறோம். ஏழு நாட்களிலும் நம்மில் அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்பு கூற வேண்டும். அதோடுகூட இந்த ஏழு நாட்களிலும் அவன் ஓய்ந்திருக்கவும் வேண்டும். தன் சொந்த அலுவல்களிலிருந்து ஓய்ந்து தேவ அன்பும், சமாதானமும், நம்முடைய இருதயங்களை தொடர்ந்து ஆளுகை செய்யும் படியாக, விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவின் வேலையை முடித்து நாமும் ஓய்ந்திருக்கவேண்டும். (சங். 119:97-104)* R 3039:1

## ஏப்ரல் 27

***கிறிஸ்து இயேசுவி-ருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. (பி-. 2:5)***

*நாம் வாழ்க்கையில் முன்னேற கிறிஸ்துவின் சிந்தையுடையவர்களாயிருப்பது மிக அவசியமானது. இது நாம் நம்மைத்தாழ்த்தி முற்றிலும் நம் சிந்தையை தேவ சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்து அவர் திட்டங்களை அறியும்படி செய்கிறது. இது தேவன் மனுஷருக்கு வகுத்துள்ள மேலான திட்டங்களில் ஒன்று. அவர் சித்தத்தை அறிந்து அவர் நமக்கு முன் வைத்துள்ள மகிமையைப் பெற இது அவசியமானது. கிறிஸ்து ஏசுவின் சிந்தை நம்மில் நிறைந்து இருக்குமேயானால் நாம் அவரைப் போலவே உலக ஆசாபாசங்களுக்கு விலகி அவைகளில் நாம் சிக்கிக்கொள்ளாமல் அவர் அடிச்சுவடுகளைப் பின்பற்றச் செய்யும். இதோடு அதிகமான நேரங்களை அவர் ஊழியத்திற்காக செலவழித்து முழு பலத்துடனும், திறமையுடனும் அந்தச் சேவையில் ஈடுபடச் செய்யும். (1 பேது. 2:20-23; லூக். 22:24-29)* R 3070:5

## ஏப்ரல் 28

***உபத்திரவம், பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம். மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. (ரோம. 5:3-5)***

*நமக்குப் பொறுமை மிக அவசியமானது. இதை நாம் பலவித உபத்திரவங்களின் மூலமாகவே பெற முடியும். நமக்கு விசுவாசமும் அவசியமானது. அதை அத்தியாவசியமான போது மட்டுமே அதிகப்படுத்த முடியும். நம் ஊழியத்தில் நமக்கு அனுபவ அறிவு தேவையானது. இது நமக்கு ஊழியத்தில் ஏற்படும் பெலவீனங்களிலும், கஷ்டங்களிலும் பல உபத்திரவங்களிலும் பெறக்கூடியதாக உள்ளது. இதன்மூலம் நாம் தேவனுடைய பிரதிநிதியாகவும் ஆளுகை செய்பவர்களாகவும் உருவாக முடியும். தீமையினால் அல்ல, நன்மையினால் எதிர்க்க இந்த அனுபவங்கள் நம்மை வழி நடத்துகிறது. (பிலி . 1:20; 1பேது. 3:14-17; யாக். 1:3-12)*
R 3228:6

## ஏப்ரல் 29

***அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்திலே நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன். (சங். 91:15)***

*தேவன் நம்முடைய பலவீனங்களை அறிந்திருக்கிறபடியால் பல தொல்லைகளால் நாம் சஞ்சலப்படும் போது அவைகளை அவரிடம் முறையிடுவது, நமக்கு கொடுக்கப்பட்டுள்ள ஆசீர்வாதமான சிலாக்கியம். துக்கப்படுகிற ஆத்துமாக்களுக்கு இவ்வுலகில் தங்கள் குறைகளை ஒருவரும் நிவர்த்தி செய்ய முடியாதென்பதை நம்முடைய அனுபவத்தில் வெளிப்படுத்திக் காண்பித்திருக்கிறார். உலகிலே நமக்கு ஏற்படக்கூடிய பல ஏமாற்றங்கள் இவர் மூலமாகவே சீக்கிரமாக நிவர்த்தி செய்யப்பட்டு, நாம் அவரிலே நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கும் போது சமாதானமான நீதியின் கனிகள் காணப்பட்டு நற்குணத்திலும், நல்லொழுக்கத்திலும், அன்பிலும், விசுவாசத்திலும் தேவன் பேரில் நம்பிக்கையாக இருக்கச் செய்கிறது. (1 பேது. 3:9-12)* R 1937:5

## *ஏப்ரல் 30*

***நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்த ஜனமாயும் இருக்கிறீர்கள். (1பேது. 2:9)***

*நாம் ஒளியினிடம் அழைக்கப்பட்டதின் நோக்கம் நாம் பிரகாசமுள்ளவர்களாக இருக்கவேயாகும். நாம் பிரகாசமற்றவர்களாக ஜீவிப்போமேயாகில், நாம் அழைக்கப்பட்ட அழைப்பிற்குப் பாத்திரர் அல்லாதவர்களாயிருந்து இருளிலே விடப்படுவோம். நாம் நம்மை தேவனிடத்தில் முழுவதும் ஒப்புக் கொடுத்து இந்த உண்மையான ஒளியை பெற்றிருப்போமாகில், நாம் எந்த அளவிற்கு தேவனுடைய மகிமையையும், புகழ்ச்சியையும் மற்றவர்களுக்கு முன்பாக பிரகாசிக்கக் செய்கிறோம் என்று நம்மை நாமே சோதித்தறிய வேண்டியவர்களுமாயிருக்கிறோம். (நாம் அந்தகாரக் கிரியைகளுக்கு விலகி ஒளியின் பிள்ளைகளாக நடக்க வேண்டும். நாம் இரவிற்கும், இருளுக்கும் உள்ளானவர்கள் அல்ல) (மத். 5:16; அப். 26:18)* R 3199:6

## *மே 1*

***மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார். (மத். 20:28)***

*நாம் நம்மைத் தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்த பிறகு புதிய சிருஷ்டிகளாக ப-யின் ஜீவியத்தில்,ஒவ்வொரு காரியத்திலும் நீதியுள்ளவர்களாக நம்முடைய சொந்த காரியத்திலோ, அல்லது கணவனுக்காகவோ, மனைவிக்காகவோ, தாய் தகப்பனுக்காகவோ, கிறிஸ்துவுக்குள் அழைக்கப்பட்ட சகோதரர்களுக்காகவோ செய்யும் போது தேவனுடைய பார்வையில் அதை அவருக்கே நாம் செய்கிறோம். அநீதிமான்களாக இருந்து நாம் எதைச் செய்தாலும் தேவனுக்கு உண்மையான பலி களைச் செலுத்தக்கூடிய ஆசாரியர்களாயிருக்க முடியாது. (கிறிஸ்து அநேகரின் பாவங்களை சுமந்து தம்மை தேவனுக்கு சுகந்த பலியாக ஒப்புக் கொடுத்தது போல அவரைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் அநேகருக்காக தங்கள் முழு நேரங்களையும் பிரயாசைகளையும் மனத்தாழ்மையுடன் அர்ப்பணிக்க வேண்டும்.) (யோவா: 13:13-17)* R 3266:4

## மே 2

**அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். *(2 தீமோ. 3:12)***

*நம்முடைய ஓட்டத்தை மரணத்திலே நாம் முடிக்கும் காலம் வரை எதிர்ப்பை நாம் எப்பொழுதும் எதிர் நோக்கி இருக்க வேண்டும். சத்தியத்தின் நிமித்தமாக இப்படிப்பட்ட எதிர்ப்பை பொறுமையுடன் சகித்து அன்பினிமித்தமாகவும், சிநேகத்தினிமித்தமாகவும், சகல கடினமான காரியங்களையும் மேற்கொள்ள பிரயாசப்படவேண்டும். அதோடு ராஜ்ய ஊழியத்தில் தேவ சித்தத்தை நிறைவேற்ற இவைகளை சகிக்கவும் வேண்டும். தேவ ராஜ்ய சேவையிலே நாம் முற்றிலும் நம்மை உட்படுத்த, முதலாவது ஜாக்கிரதையுடன் தொடர்ந்து தேவ திட்டங்களை அறியவேண்டும். இரண்டாவதாக ஆர்வத்துடன் அதின் முக்கியத்துவத்தை ஆவியில் உணர்ந்து கொள்ள வேண்டும். மூன்றாவதாக இவைகளை நிறைவேற்ற ஊக்கமும், உற்சாகமுடையவர்களாக சகல தியாகங்களையும், உழைப்பையும் கொடுத்து செயல்படவேண்டும். (1பேது. 1:5-7; 2:19-21)* R 3199:2

## மே 3

**பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும். *(எபி. 5:14)***

*தேவன் பேரில் உண்மையான விசுவாசமுள்ளவர்கள் அவருடைய வார்த்தைகளின்படி அவரை ஏற்றுக் கொள்வார்கள். இவர்களுக்குள் பிரதானமான போதனைகள் ஸ்திரப்படுத்தப்பட்டிருக்கிறது. அஸ்திபாரத்திற்கு மேல் பொன்னினாலும், வெள்ளியினாலும் விலையேறப்பெற்ற கற்களினாலும் இந்தக் கட்டிடத்தின் வேலை சீராக முன்னேற்றம் அடைந்து வருகிறது. இப்படிப்பட்டவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து உண்மையுள்ளவர்களாக இருப்பார்களானால் சத்தியத்திற்கும் தப்பறையான போதகங்களுக்குமுள்ள வித்தியாசத்தை அறியக் கூடியவர்களாயிருப்பார்கள். நாம் எதை விசுவாசிக்கிறோம், ஏன் விசுவாசிக்கிறோம் என்பதை அறிந்து தைரியமாக அதை வெளிப்படுத்த வேண்டும். "எக்காளம் விளங்காத சத்தமிட்டால் எவன் யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணுவான்?" (எபி. 5:12-13)* R 3200:5

## மே 4

***மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார். (1 சாமு. 16:7)***

*தேவன் நம்முடைய நிலையை அறிந்திருக்கிறார் என்பதை நாம் காணாதவர் போலிருப்போமேயானால் அல்லது மாமிசப் பிரகாரமாக சிந்தித்து நம்மை குறித்து நாம் தேவனுடைய பார்வையில் உத்தமர் என்று எண்ணுவோமேயாகில் நாம் இருளுக்குள் ஜீவித்து பல தவறுகளை நடப்பிக்கிறவர்களாவோம். இதற்கு மாறாக தேவ சித்தத்தை அறிந்து ஆவியின்படி ஜீவிப்போமானால் நாம் தேவனிடம் பட்சமாக இருப்போம். தேவ சித்தம் என்ன என்பதைக் குறித்து நாம் அசதியாக இராமல் நம் ஜீவியத்திற்கு முக்கியமான ஆவிக்குரிய தேவ திட்டங்களை முற்றிலும் அறிந்து நடக்க வேண்டும். இவைகளில் சற்று தவறுவோமேயாகில் ஆவிக்குரிய ஜீவியத்திலே நாம் குறைவு பட நேரிடும். தேவனுடைய பார்வையில் இது அங்கீகரிப்பைப் பெற முடியாது. கிறிஸ்துவின் மூலம் நாம் தேவனுக்கு முன்பாக உண்மையான வழிகளில் ஜீவிப்பதே தேவனுக்குகந்த பலி (1 நாளா. 28:9; சங். 7:8-11)* R 3203:2

## மே 5

***மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள். ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள். (ரோம. 8:13)***

*நாம் தேவனிடம் தொடர்ந்து ஜீவித்து மகிமையான முதலாம் உயிரித்தெழுதலில் பங்கு பெற வேண்டுமானால் மாமிச சரீரத்தின் செய்கைளை விட்டு விலக வேண்டும் என்பது நமக்கு கொடுக்கப்பட்டுள்ள ஒரு நிபந்தனையாகும். மாமிச இச்சைகளை முற்றிலும் அழித்து சிலுவையில் அறைந்து ஆவிக்குரிய கிரியைகளை நடப்பித்து தேவனுக்கென்று ஊழியஞ்செய்வது ஜீவனைத் தரக்கூடியதாயிருக்கும். மாமிச செய்கைகளை வெறுத்து, நம்முடைய மாமிச இச்சைகளான பெலவீனங்களை எதிர்த்து நிற்பதையே அப்போஸ்தலன் மற்றொரு இடத்தில் "போராட்டம்" என்று கூறி மாமிசம் ஆவிக்கு விரோதமாகவும் ஆவி மாமிசத்திற்கு விரோதமாகவும் போர் புரிகிறது என்கிறார். இவை இரண்டும் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது. ஆவியானது மாமிச இச்சைகளை மேற்கொள்ளும் போது தேவனுடைய பார்வையிலே நாம் ஜெயங்கொண்டவர்களாயிருந்து கிறிஸ்துவின் மூலம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை பெறுவோம். (கலா. 5:19-26)*
R 3203:5

## மே 6

***மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். (ரோம. 8:14)***

*நாம் தேவனுடைய புத்திரராக இருப்பதற்கு ஆவி நமக்கு ஒரு வழி காட்டியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. நமது ஓட்டத்தின் துவக்கத்தில் மட்டுமல்ல, முடிவு பரியந்தம் அது வழி நடத்துகிறது. நாம் ஆவியினாலே நடத்தப்பட்டு முடிவுபரியந்தம் அதை நாடி இலக்கை நோக்கி ஓடுவோமேயானால், நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருப்போம். இப்படிப்பட்ட மனநிலையில் தொடர்ந்து, கல்யாண வஸ்திரத்தின் மேல் நம்பிக்கை வைத்து கிறிஸ்துவின் மூலமாக அவரிடத்தில் வருகிற ஒவ்வொருவரையும் தம் சொந்த ஜனமாக ஏற்றுக் கொள்கிறார். (1 யோவா. 3:1-3; யோவா. 1:11-12)* R 3203:6

## மே 7

***சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை; அது என் மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ. (1 கொரி. 9:16)***

*நம்மிடத்தில் உள்ள சத்திய நற்செய்தியை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுவதில் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்க வேண்டும். பல சோதனைக்குள் பாடு அனுபவிப்பவர்களுக்கு ஆறுதலாக தேவ திட்டங்களையும், வரப்போகும் ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களையும், வாக்குத்தத்தங்களையும் எடுத்துரைத்து அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். இதைக் குறித்து நாம் மேன்மை பாராட்டாமல், நாம் இதைச் செய்ய வேண்டியது, நம்மேல் விழுந்த கடமை என்பதை தேவனுடைய பிள்ளைகள் அறியவேண்டும். சமயம் வாய்க்கும் பொழுது இந்த நற்செய்தியை ஒருவர் அனுதினமும் மற்றவர்களுக்கு எடுத்துரைக்காதவர்களாக இருப்பார்களானால், தேவ ராஜ்யத்தில் தங்களுக்குள்ளப் பங்கை இழக்க நேரிடும். (கலா. 1:15-17; 2:2; 2 தீமோ. 4:2)* R 3205:1

## மே 8

***நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே, அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம். (1 யோவா. 2:25)***

*தேவன் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணின மேலான காரியங்களைப் பெற்றுக் கொள்ள நாம் சில காரியங்களை செய்ய வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும். நமக்கு அனுதின ஆகாரத்தை அவர் தந்தருளுவது வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்தாலும், அதைத் தேடிச் சேர்ப்பது அவசியமானதல்ல என்று எண்ணக்கூடாது. அது போல நித்திய ஜீவன் நமக்கு வாக்குத்தத்தமாக கொடுக்கப்பட்டிருந்தாலும், அந்த ராஜ்யத்தின் பங்கையடைய நமது அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதிபடுத்த வேண்டும். தேவன் சகல காரியங்களிலும் தம்முடைய முழு சித்தத்தின்படி செய்து வருகிறார். ஆயினும், தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதைப் பெற்றுக் கொள்ள அவரோடு இசைந்து சகல நற்காரியங்களிலும் விசுவாசத்தோடு கூடிய கிரியையில் காட்டுவது நமக்கு கொடுக்கப்பட்ட சிறந்த வாய்ப்பாகும். (யாக். 2:24-26)* R 3205:4

## மே 9

***நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்து கொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக. (கொலோ. 2:6-7)***

*தவறான போதனைகளைப் போதித்துவரும் போதகர்களின் கருத்து யாதெனில் சத்தியத்தில் தங்கள் விசுவாசத்தை நிலைநாட்டுவது அவசியமானது அல்ல என்றும், அவற்றில் நிலைத்திருக்க வேண்டும் என்பது மத வைராக்கியமே என்றும் கூறி வருகின்றனர். எதையும் ரூபகாரப்படுத்தக் கூடாம-ருந்தும், வேதத்திற்கு முரணாகப் பேசி பிடிவாதமாகத் தங்கள் கொள்கைகளைப் பேசி வருகின்றனர். தேவ வார்த்தைகளை உள்ளபடி ஏற்றுக் கொண்டவர்கள், விசுவாசத்தின் மூலமாக மத வைராக்கியம் உள்ளவர்கள் ஆவர். இவர்களே சத்தியத்தில் வேர் கொண்டு நிலைத்திருப்பவர்கள். பலமும் உறுதியுமுள்ள ஒரு விசுவாசிக்கும், மற்ற மத வைராக்கியம் உள்ளவருக்குமுள்ள வித்தியாசம் யாதெனில் ஒருவன் சத்தியத்திலே வேரூன்றி நிலைத்திருக்கிறான். மற்றவன் தவறான கொள்கையில் ஸ்திரப்பட்டிருக்கிறான். (எபே. 3:16-19)* R 3215:2

## *மே 10*

***என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது. (சங். 23:5)***

*பாத்திரம் நிரம்பி வழிகிறதென்பது இரண்டு வித கருத்துள்ளது. இதில் ஒன்று பூரிப்புள்ள பாத்திரம், மற்றொன்று துக்கம் நிறைந்த பாத்திரம். இவ்விரண்டுமே நிரம்பி வழியக்கூடியது. கிறிஸ்துவுக்குள் சந்தோஷத்தை அனுபவிக்கக்கூடியவர்கள், அவருடைய பாடுகளிலும், உபத்திரவங்களிலும் கூட பங்கு பெற வேண்டும். நாம் அவருடன் பாடுபட்டால், அவருடன் ஆளுகையும் செய்யலாம். இக்காலத்திற்குரிய பாடுகளை நாம் எண்ணும் போது இனிவரும் மகிமைக்கு இது ஒப்பாகாது. இதனால் நாம் உபத்திரவத்தில் சந்தோஷப்பட வேண்டியவர்களாய் இருக்கிறோம். இதன் மூலம் எவ்வளவாக உபத்திரவத்தைப் பொறுமையாக நாம் சகிக்கிறோமோ, அவ்வளவாகச் சந்தோஷமும் நிரம்பி வழியும். (கொலோ. 1:24; 2 கொரி. 1:4-7)* R 3270:4

## *மே 11*

***உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம்; அடிக்கப்படும் ஆடுகளைப் போல எண்ணப்படுகிறோம். (சங். 44:22)***

*நாம் அனைவரும் ஒரேவித பலியைச் செலுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம் என்பதை நினைவு கூற வேண்டும். இந்தப் பலியை நாம் நாளுக்கு நாள் தேவனுக்குச் செலுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம். இது சிறு சிறு பலிகளாக இருந்தாலும், நாளுக்கு நாள் நாம் சிறிது சிறிதாகச் செய்யும் இப்பலி கள் ஆதியிலே நாம் நம்மை உட்படுத்தின ஒரே பலியை நிறைவு செய்ய அவசியமானது என்பதை நாம் நினைவு கூறவேண்டும். நாம் நமது சித்தத்தை தேவ சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்த போது நம்மை முற்றிலும் அவருக்கு ஒப்புக் கொடுத்தோம். நம் பலியின் ஜீவியத்தில் சிறிதளவு தவறுவோமேயாகில் அல்லது சற்றுப் பின்தங்குவோமேயாகில், நாம் தேவனுக்கு நம்மை ஜீவ பலிகளாக ஒப்புக் கொடுத்த வாக்கிலிருந்து பின் தங்கினவர்களாகக் காணப்பட்டு, பூரண பலியைச் செலுத்தாதவர்களாயிருப்போம். (ரோம. 8:35-39; 12:1)* R 3266:6

## <u>மே 12</u>

***இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால் பிரியமானவர்களே, மாமிசத்திலும், ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவ பயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம். (2 கொரி. 7:1)***

*ராஜரீக ஆசாரியத்துவத்தைப் பெற அழைக்கப்பட்டவர்களுள் எத்தனை பேர் பொறாமை, வஞ்சகம், கபடம், பகைமை, தீங்கான வார்த்தைகளைப் பேசுதல் போன்ற அசுத்தங்கள் உடையவர்களாயிருக்கின்றனர். மாமிச பெலவீனமுள்ளவர்கள் இவைகளில் ஏதாவது ஒன்றிலோ, அல்லது சகலத்திலுமோ எதிர்த்து நிற்க வேண்டியவர்களாயிருக்கின்றனர். இவை எல்லாவற்றையும் எதிர்த்துத் தங்களைச் சுத்திகரித்துக் கொள்ள மிக ஜாக்கிரதை உள்ளவர்களாயிருக்க வேண்டும். நம் அனுதின ஜீவியத்தில் நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும், நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தைகளும், நம் சிந்தனைகள் அனைத்தும் நிதானிக்கப்பட்டு எவ்வித அசுத்தமுமில்லாதிருந்து, தேவனுக்குப் பிரியமானதாக இருக்க வேண்டும். (2 கொரி. 6:14-18; ஏசா. 52:11)* R 3267:2

## <u>மே 13</u>

***பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம். (1 சாமு. 15: 22)***

*நம்முடைய பரம பிதா நாம் அவர் வார்த்தைகளின் பேரில் அதிக கவனமுள்ளவர்களாக இருக்கவே விரும்கிறார். அவர் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க இன்னும் சமயம் உண்டென்று எண்ணி அசதியாய் இருக்கக்கூடாது. அவர் வார்த்தைகளுக்குச் செவி கொடுத்து, அதைக் கைக்கொண்டு ஜீவிக்கும்போது அதன் மூலமாக உண்டாகும் கஷ்ட நஷ்டங்களுக்கு பயந்திருக்கக்கூடாது. ஆனால் அவர் மேல் நம்பிக்கையும், விசுவாசமுள்ளவர்களாயிருக்க வேண்டும். நம்மைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை, தூங்குவதுமில்லை என்றும் அவர், தம்முடைய வார்த்தைகளில் மாறாதவர் என்றும் விசுவாசித்து, நம்மை எந்தத்தீங்கினின்றும் காத்து இரட்சிக்க வல்லவர் என்பதை உணரவேண்டும். நம்முடைய கீழ்ப்படிதலின் மூலமாக அவர் நம்மை எந்நேரத்திலும், எத்தீங்கினின்றும் விலக்கிக் காப்பாற்றுவார். (சங். 40:3-8)* R 3224:2

## *மே 14*

***அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர்களாயிருக்கும் படியாக அப்படிச் செய்தார். (எபே. 4:15)***

*கிருபையில் வளர்வது என்பதென்ன? கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி ஆவியிலே அவருடன் நெருங்கி அவர் தயவைப் பெற்று வாழ்வதே ஆகும். கிருபையில் மட்டும் வளர்ந்து அறிவிலே வளராமலிருப்பது கூடாத காரியம். அவரோடு இசைந்திருப்பதற்கு அவரைப் பற்றிய அறிவிலும் பழக்கமுள்ளவர்களாக இருந்தால் மட்டுமே முடியும். தேவ திட்டங்களை முற்றிலும் அறிந்தால் மட்டுமே அவருடன் நாம் நெருங்கி இருக்க முடியும். இவ்விதம் நாம் தேவ திட்டங்களை நிறைவேற்றி, அவருடன் ஊழியர்களாக இந்தச் சேவையிலே ஈடுபட்டிருக்க முடியும். இதனால், நாம் அன்புடன் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, அவருடைய கிருபையில் வளர அனுதினமும் சத்திய வசனத்தை வாசித்து, சிந்தித்து அறிவிலே நாளுக்கு நாள் வளர பிரயாசப்பட வேண்டும். (1 பேது. 2:1-8; 2 பேது. 3:18)* R 3215:3

## *மே 15*

***அத்திமரம் துளிர்விடாமற் போனாலும், திராட்சைச் செடிகளில் பழம் உண்டாகாமற் போனாலும், ஒ-வ மரத்தின் பலன் அற்றுப் போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற் போனாலும், கிடையில் ஆட்டு மந்தைகள் முதலற்றுப் போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற் போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன். என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூறுவேன். (ஆபகூக் 3:17-18)***

*உலகத்திலே தேவன் பல உபத்திரவங்களை அனுமதித்திருக்கிறார். ஏனெனில், இவையாவும் மனிதன் தன் கேடான சிந்தனைகளால் வந்தவை என்று அவன் உணரும்படி அப்படிச் செய்தார். அந்தப்படியே தேவனைப் பின்பற்றி வரும் பரிசுத்தவான்களுக்கும் சில தொல்லைகளும், சோதனைகளும் நேரிடுவதை நாம் பார்க்கிறோம். இது அவர்கள் விசுவாசத்தைச் சோதித்தறிந்து பொன் புடமிட்டு மெருகேற்றப்படுவது போல இவர்களும் மெருகேற்றப்படுகிறார்கள் என்பதை தேவபிள்ளைகள் அறிய வேண்டும். இவை யாவையும், அவர்கள் மேற்கொண்டு, தகுதியுள்ளவர்களாகக் காணப்படும் போது, தேவனால் வாக்குத்தத்தம் செய்யப்பட்டதை சுதந்தரித்துக் கொள்வார்கள். (யாக். 5:7-11)* R 3168:2

## *மே 16*

***யேகோவாவின் வாய் சொல்லும் புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய். நீ யேகோவாவின் கையில் அலங்காரமான கிரீடமும், உன் தேவனுடைய கரத்தில் ராஜ முடியுமாயிருப்பாய். (ஏசா. 62:2-3)***

*நாம் உலகத்தாரிடமிருந்தும், பேர் கிறிஸ்தவர்கள் மத்தியி-ருந்தும் தேவனாலே பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்பதை மறந்து விடக்கூடாது. நம்முடைய எண்ணங்களும், நம்பிக்கையும், மேலானவைகள். தேவனுடைய திட்டங்களையும் ஆழ்ந்தக் கருத்துக்களையும் அறிய வேண்டும் என்பதே நம் வாஞ்சை. நாம் முன் இருந்த இருளிலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் என்பதையும் மறக்கக்கூடாது. இவ்விதமாக நாம் உலகினின்றும் பேர் கிறிஸ்தவ சமுதாயத்தினின்றும் பிரிக்கப்பட்டவர்களாயிருக்கும் போது அவர்கள் நம்மைப் பகைப்பது, வெறுப்பது ஆச்சரியமானதல்ல. (நாம் தேவனுடைய புதிய நாமத்தைப் பெற்றிருப்பதால், அவர் கையின் கிரீடங்களாக இருப்போம்). (2 நாளா. 7:14-15)* R 3199:2

## *மே 17*

***அவர்கள் உங்களை ஜெப ஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள்; மேலும், உங்களைக் கொலை செய்கிறவன், தான் தேவனுக்குத் தொண்டு செய்கிறவனென்று நினைக்குங்காலம் வரும். (யோவா. 16:2)***

*முற்காலங்களில், சத்தியத்தின் நிமித்தம் துன்பப்படுத்தப்படுவது போல இக்காலத்தில் காணப்படுவதில்லை. விசுவாசிகள் இக்காலத்தில் கல்லெறியப்படுகிறதில்லை, அம்பு எய்யப்படுகிறதில்லை, சிரத்சேதம் பண்ணப்படுவதுமில்லை. ஆனால், துன்மார்க்கர் நீதிமான்களின் பேரில் கசப்பும், தூஷணமுமான வார்த்தைகளான அம்புகளை அவர்கள் இருதயத்திலே எய்து சிரச்சேதம் செய்வதற்கொப்பாக, சகலரும் நம்மை விட்டு விலகிப் போகிறார்கள். இவ்விதம் துன்பப்படுத்தப்பட்டு வருகிற யாவரும், முதல் கிறிஸ்தவ இரத்த சாட்சியான ஸ்தேவானை நினைவு கூறக்கடவோம். அவனைப் போல பிரகாசமான முகத்துடன் நற்சாட்சி கொடுப்போமாக. நம்முடைய விசுவாசத்தின் கண்கள் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருந்து நமக்காக பரிந்து பேசும் இரட்சகர் பேரில் எப்பொழுதும் இருக்கக்கடவது. இப்படிப்பட்டவர்களின் வார்த்தைகள் ஸ்தேவானைப் போல கிருபையும், வல்லமையும் உடையவர்களாய் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருக்க வேண்டும். (அப். 7:55-60; 8:1)* R 2109:6

## *மே 18*

***விசுவாசித்தவர்களாகிய நாமோ, அந்த இளைப்பாறுத-ல் பிரவேசிக்கிறோம். (எபி. 4:3)***

*நம்முடைய விசுவாசம் எவ்வளவாக கிறிஸ்துவின் பேரில் நம்மை நம்பிக்கையுள்ளவர்களாக்குகிறதோ, அவ்வளவுக்கதிகமாய் நாம் அவரிலே இளைப்பாறுதலைப் பெறுகிறோம். அவரை முற்றிலும் நம்பினவன், முற்றிலும் இளைப்பாறுதலையும் அடைகிறான். ஆவிக்குரிய இஸ்ரயேலருக்குப் பூரண இளைப்பாறுதல் அவசியமானது. மற்றவர்களுக்காக ஊழியம் செய்து அந்த இளைப்பாறுத-ல் பிரவேசிப்பது தேவ பிள்ளைகளுக்கு அருளப்பட்ட ஆசீர்வாதமாயிருக்கிறது. "ஆகையால், அந்த திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்து போகாதபடிக்கு, நாம் அந்த இளைப்பாறுத-ல் பிரவேசிக்க ஜாக்கிரதையாக இருக்கக்கடவோம்". (எபி. 4:9-11)* R 2534:5

## *மே 19*

***பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனங்களைத் தாங்க வேண்டும். (ரோம. 15:1)***

*அடிப்படைக் கொள்கைகளை மீறாமல், தேவனுடைய பிள்ளைகள் தங்கள் சொந்தக் காரியங்களில் அதிக முக்கியத்துவம் காட்டாமல், பிறருக்குச் செய்யும் சேவையில் தேவ சித்தப்படி அடிக்கடி ஈடுபட விருப்பமுள்ளவர்களாயிருக்க வேண்டும். பவுல் அப்போஸ்தலன் அடிப்படையான கொள்கைகளைக் குறித்து அநேக சந்தர்ப்பங்களில் விவாதித்துப் பேசி இவற்றில் பலவீனமுடையவர்களை, கிறிஸ்துவின் நிமித்தமாகவும், சபைவளர்ச்சிக்காகவும் கடிந்து பேசி அவர்களைப் பலப்படுத்தியுள்ளார். (கலா. 2:3,11) இந்த அப்போஸ்தலன் கிறிஸ்துவுக்கு அடுத்த நிலையிலே சபையின் வளர்ச்சிக்காக செய்த ஒவ்வொரு காரியமும் இன்று அநேக சபைகளுக்கு ஒரு முன் மாதிரியான எடுத்துக்காட்டாக உள்ளது. (1 தெச. 5:14-15; கலா. 6:1-3)* R 2119:2

## மே 20

***அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும் நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரித்தார். (தீத். 2:14)***

*ஒரு புதுமையான ஜனம் என்று சொல்லப்படுவது உடையிலோ, நடையுடை பாவனையிலோ, பாஷையிலோ அல்ல. புதுமையான அல்லது சொந்தமான ஜனம் என்று அழைக்கப்பட்டவர்கள் உலகத்தி-ருந்து பிரித்தெடுக்கப்பட்டு உலக இச்சைகளுக்கு விலகினவர்கள், கிறிஸ்துவின் சிந்தையே இவர்களுள் காணப்பட வேண்டும். தேவனுடைய வார்த்தைகள் மட்டுமே இவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கட்டளைகள் இவ்வுலகத்தில் இருந்து கொண்டே, உலகத்தின் கிரியைகளுக்கு விலகி இருப்பவர்கள் உலக கட்டளைகளுக்கு இவர்கள் கீழ்ப்பட்டவர்கள் அல்ல. இவர்களுடைய நடத்தைகள் முழுவதும் ஒரு விசுவாசத்திற்குட்பட்டு, நற்கிரியைகள் நிறைந்ததாய் சுய சித்தத்தை அல்ல தேவ சித்தத்தையே நிறைவேற்றுவார்கள். இவர்கள் சத்தியத்தை அறிந்து விசுவாசத்துடன் நியாயமான வழிகளில் நடப்பவர்களாயிருப்பார்கள். ஆகவே மற்றவர்களுடைய பார்வையில், இவர்கள் மிகவும் ஆச்சரியமாகவும், புதுமையாகவும் காணப்படுவார்கள். (1 பேது. 1:19-23)* R 2128:2

## மே 21

***வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும் படியாக, அவைகள் உபதேசத்திற்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. (2 தீமோ. 3:16-17)***

*ஆவியின் கிருபையால் நாம் தேவனை அறிகிற அறிவிலே முன்னேற, வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டிலும், கிறிஸ்துவின் மூலம் சொல்லப்பட்ட வார்த்தைகளும், அப்போஸ்தலர்கள் மூலமாக எழுதப்பட்டவைகளும் மிக அவசியமானதென்பதை நாம் நினைவு கூற வேண்டும். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இரட்சிப்பை நாம் அடைய வேறெந்த வழியும் நமக்குக் கட்டளையிடப்படவில்லை. இந்த வார்த்தைகள் நம் அனுதின வாழ்க்கையில் நம்மைச் சீராக நடத்தவும், தவறுகளை நமக்கு எடுத்துக் காட்டவும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இரட்சிப்பைப் பெறுவதற்கு தயார் செய்கிறதாயிருக்கிறது. (2 பேது. 1:19-21; ரோம. 15:4)* R 2166:2

## மே 22

***தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். (2 தீமோ. 1:7)***

*தேவன் தம்முடைய ஜனத்திற்கு பயமுள்ள ஆவியைக் கட்டளையிடாமல், வல்லமையும், சக்தி வாய்ந்ததும், அன்பிலே வைராக்கியமுள்ளதுமான ஆவியையே கொடுத்திருக்கிறார். தேவ பக்தியிலும், தேவனுடைய பிள்ளைகளுக்குச் சேவை செய்வதிலும், சத்திய வசனத்தின் பேரிலும், தேவனுக்குப் பிரியமாய் ஊழியஞ் செய்வதிலும், அன்பைக் காட்ட வேண்டியவர்களாயிருக்க வேண்டும். அதோடு சமயம் வாய்க்கும் போதெல்லாம் பரிசுத்தமான காரியங்களைத் தேவ பிள்ளைகளிடத்திலும், மற்றெல்லா மனிதரிடத்திலும் பேசி ஆவியிலே அவர்கள் வளர பிரயாசப்பட வேண்டும். நம் இருதயங்களில் அன்பு சதா காலங்களிலும் கொழுந்து விட்டு எரிந்து, நலமான காரியங்களைத் தைரியத்துடன் வேதத்தின்படி பேசி தெளிவுப்படுத்த வேண்டும். (அப். 9:27-29)*
R 2166:1

## மே 23

***நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். (யோவா. 13:14)***

*கிறிஸ்துவின் சரீரத்தில் இணைக்கப்பட்ட அங்கங்கள் ஒருவர் பேரில் ஒருவர், அக்கரைக் காட்ட வேண்டும் என்பதே இதன் கருத்து. இவர்கள் ஒருவரை ஒருவர் பரிசுத்தமாக ஜீவிக்கும்படி செய்து பல உபத்திரவங்களையும், சோதனைகளையும் மேற்கொள்ளும்படி உதவி செய்து, பல வழிகளில் ஏற்படும் அநேக இக்கட்டுகளில் ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, மனத்தாழ்மையுடன் தாங்கி, இவ்வுலகத்தையும், மாமிச இச்சைகளையும், சாத்தானையும் எதிர்த்து நிற்க உதவியாக இருப்பார்கள். ஆவியின் கனிகளை வளர்த்து மனத்தாழ்மையிலும், பொறுமையிலும், சகோதர சிநேகத்திலும், அன்பிலும் ஒருவருக்கொருவர் சேவை செய்ய வேண்டும். இதன் மூலம் இந்த அநீதியான உலகில் பரிசுத்த வாழ்க்கையை நடத்துவதோடு மற்றவர்களுக்கும் பிரயோஜனமாகவும் இருக்க முடியும். (கொலோ. 3:12-14)* R 2202:4

## *மே 24*

***அன்பு அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது. (1 கொரி. 13:5)***

*பாரம்பரியமான எந்த கெட்டப் பழக்கங்களும் நம்முடைய பெலவீனங்களில் நம்மை மேற்கொள்ள வொட்டாமல் காத்துக் கொள்வது அவசியமானது. இவைகள் எரிச்சலுண்டாக்கி, கோபமூட்டி, பல தீதான காரியங்களை உருவாக்கி அன்பை இழக்கச் செய்யும். இருதயத்திலே தேவ ஆவியைப் பெற்றவர்கள், இத்தகைய தீய மாமிச செயல்களை எதிர்த்து போர் புரிய வேண்டியவர்களாயிருக்கின்றனர். இது என் வழி அல்லது பழக்கம் என்று ஒருவரும் சொல்ல முடியாது. விழுந்து போன மனுஷனுடைய கெட்ட வழிகளை நாம் விட்டுப் புதிய ஜீவிகளான போது பழையவைகளையும் மற்ற எல்லா மாமிச சிந்தனைகளையும் மேற்கொள்ள வேண்டும். கிருபையிலே வளரும் ஒவ்வொரு தேவ பிள்ளையும், நல்ல சுபாவமுள்ளவர்களாகவே இருப்பார்கள். (1 யோவா. 4:7-12)* R 2204:4

## *மே 25*

***நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு. (ரோம.12:21)***

*நாம் தீதான வார்த்தைகளை எக்காரணத்தைக் கொண்டும், எவ்விதத்திலும் உபயோகிக்கக்கூடாது. அவ்விதமாகக் செய்தால் நம்முடைய அதிபதியான கிறிஸ்துவை விட்டு விலகி தற்கா-கமாக நம் பகைவனான சாத்தானைச் சேர்ந்தவர்களாக இருப்போம். கோபத்திற்குக் கோபமாக பதிலளிப்பதும், தீமைக்குத் தீமை செய்வதும், கசப்பான வார்த்தைகளுக்குக் கசப்பான பதில் கூறுவதும், பழிக்குப் பழி வாங்க எண்ணுவதும் தீமையை தீமையினாலே வெல்ல முயற்சிப்பதாகும். மேலும் இவை விழுந்து போன மனிதனின் குண லட்சணங்கள். நாம் இவைகளுக்கு விலகி, புதிய சுபாவத்தை அபிவிருத்தி செய்ய கட்டளையிடப்பட்டிருக்கிறோம். இவ்விதம் செய்யக்கூடிய தேவனுடைய பிள்ளைகள் தீமைக்குத் தீமை செய்யாமல் சகல காரியங்களிலும் இத்தீமைகளை நன்மையினால் மேற்கொள்வார்கள். (ரோம. 7:15-21; 3 யோவா. 11)* R 2215:1

## மே 26

***அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்தி விருத்தியை உண்டாக்கும். (1 கொரி. 8:1)***

*மற்றவர்களுக்கு தேவதிட்டங்களைக் குறித்து போதிக்க விரும்பும் யாவரும் ஒரு வகையான சோதனைக்குட்படக் கூடியவராக விடப்படுகின்றனர். இதனால் தேவனுக்கும், அவர் ஜனங்களுக்கும் ஊழியம் செய்ய விரும்புவோர், அதிகமான கிருபையையும், பரிசுத்த ஆவியையும் அறிவையும் பெற்றிருக்க வேண்டும். இதனால் யார் யார் மற்றவர்களுக்கு போதிக்கக் கூடியவர்களாயிருக்கிறார்களோ, இவர்கள் தேவனுடைய வாயாக இருப்பதால், இவர்களிடையே பரிசுத்த ஆவியின் பலவித கிருபைகள், விசேஷமாக சாந்தகுணமும் காணப்பட வேண்டும். இந்த அன்போடு கூடிய அறிவே இவர்களையும் இவர்கள் யார் யாருக்கு ஊழியம் செய்கிறார்களோ, அவர்களையும் ஆவியிலே வளரும்படி செய்யும். (கொலோ. 3:12-17)*
R 2219:6

## மே 27

***மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். (பி-. 2:3)***

*பவுல், சகலரும் தேவ ஊழியத்தில் பணிவுள்ளவர்களாக வளர எச்சரிக்கிறார். "ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யக்கூடாது" என்கிறார். தற்பெருமை, உயர்ந்த ஸ்தானத்தைப் பெற முயல்வது போன்றவை தேவ ஊழியர்களின் ஓர் எதிரி என்பதை உணர்ந்து அவைகளை அப்புறப்படுத்த வேண்டும். இதற்கு மாறாக இவர்கள் தாழ்மையான சிந்தையுடையவர்களாயிருந்து, தன் உடன் சகோதரர்களை, தங்களிலும் மேலானவர்களாகக் கருதி இப்படிப்பட்ட காரியத்தில் மேன்மை பாராட்ட வேண்டும். எல்லா வரங்களும், திறமைகளும் எந்த சபையிலும் ஒருவரிடத்தில் காணப்படுவது அரிது. ஒருவர் மனத்தாழ்மையுள்ளவராக இருந்து, மற்றவர்களிடையே காணப்படும் சில நற்குணங்கள் தன்னிலும் மேலானது என்று எண்ணக்கூடிய சிந்தை மிக அவசியமானது. (எபே. 4:1-6; ரோம. 12:9-18)*
R 2228:1

## *மே 28*

***இந்தத் தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக்கிறோமென்று அறிந்தும், எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம். (2 கொரி. 5:7)***

*நாம் தேவனோடு நடந்து அவர் பட்சமாக ஜீவிக்கும் போது தற்போதைய உலக காரியங்களும், சூழ்நிலைகளும் நம்மைத் திருப்தியாக்காது என்பதை உணருகிறோம். இங்கே நாம் ஒரு யாத்ரீகன் போலவும் அயலானைப் போலவும் இருந்து தேவன் தம்மை நேசிக்கிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணி வைத்துள்ள நல்ல வீட்டையும், இளைப்பாறுதலையும் எதிர் நோக்கினவர்களாக இருக்கிறோம். இது அப்போஸ்தலன் முந்தின வசனத்தில் சொன்னது போல, "நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்." இதன் மூலம் நாம் நம்பிக்கை உள்ளவர்களாயிருந்து, தேவன் பேரில் விசுவாசமாக அவரோடு குடியிருப்பதை சந்தோஷமாக எண்ணி இவ்வுலகில் பரதேசிகளைப் போலவும் யாத்ரீகர்களைப் போலவும் வாழ்வதில் சந்தோஷப்படுகிறோம். (2 கொரி. 5:1-6)* R 2231:4

## *மே 29*

***சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்கு கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக. (யோவா. 14:27)***

*எவ்வளவாக நாம் உலகத்தையும், மாமிச இச்சைகளையும், பிசாசையும் மேற்கொள்ளுகிறோமோ, அவ்வளவுக்கதிகமாக பரலோகத்திலுள்ள நம் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிறவர்களாயிருப்போம். எவ்வளவாக நம்முடைய இரட்சகரைப் பின்பற்றி ஜீவிக்கிறோமோ அவ்வளவாக அவருடைய பார்வையிலே பிரியமானதைச் செய்ய இயலும். இவ்விதம் ஜீவிக்கும் போது, மனுஷன் தரக்கூடாததும், எடுத்துக் கொள்ளக் கூடாததுமான சந்தோஷ சமாதானத்தை அதிகமாகப் பெற்றுக் கொள்கிறோம். எந்த சோதனையும், உபத்திரவங்களும், நம்மைத் தேவனுக்குப் பிரியமும், விலையேறப் பெற்றதுமாக இருக்கச் செய்யும். சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான். "அது போல நீங்களும் இப்பொழுது துக்கமடைந்திருக்கிறீர்கள். நான் மறுபடியும் உங்களைக் காண்பேன், அப்போது உங்கள் இருதயம் சந்தோஷப்படும், உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்தி-ருந்து எடுத்துப் போடமாட்டான்." (யோவா. 16:22; ரோம. 5:1)* R 2232:5

## மே 30

***நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள். (ரோம. 12:12)***

*கிறிஸ்தவ ஜீவியத்திலே ஒரு பெரும் போரைக் குறித்து அப்போஸ்தலன் இங்கே பேசுகிறார். நாம் பழைய மனிதனின் சிந்தைகளை எதிர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இதில் நாம் வெற்றி பெற நம்முடைய இரட்சிப்பின் அதிபதியுடைய பெலத்தில் நிலைத்து விசுவாசமுள்ளவர்களாயிருக்க வேண்டும். சாத்தானின் வஞ்சகமான வலைகளில் சிக்கிக் கொள்ளாமல் இருக்க வேண்டும். நம் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய பல கஷ்டங்கள் அன்பை இழந்து, கசப்பான வார்த்தைகளைப் பேசும்படி செய்யும். அல்லது சில சந்தர்ப்பங்களில் தேவனால் நமக்கு அருளப்பட்ட ஆஸ்தியினிமித்தமாக மேன்மை பாராட்டி இறுமாப்படைந்து, நம்முடைய விசுவாசத்தைப் பரீட்சித்துப் பார்க்கும்படி இவைகளைத் தந்த தேவனை விட்டு விலகும்படி செய்யும். சகலத்திலும் தேவ சித்தத்தை உணர்ந்து ஜெபத்திலே தரித்திருப்பது மிக அவசியம். (1 பேது. 1:4-9)* R 1759:3

## மே 31

***மாம்சம் புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும், மற்றெதையாகிலும் செய்கிறதும், உன் சகோதரன் இடறுகிறதற்காவது, தவறுகிறதற்காவது பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால், அவைகளில் ஒன்றையும் செய்யாம-ருப்பதே நன்மையாயிருக்கும். (ரோம. 14:21)***

*ஒரு சகோதரனுக்கு எவ்விதத்திலும் இடறல் உண்டாக்குவது தேவ கட்டளையான அன்பின் பிரமாணத்திற்கு விரோதமான பெருங்குற்றம். தேவ பார்வையில் மற்றவர்கள் இடறக் காரணமாயிருப்பதும் குற்றம் ஆகும். ஆதலால் சத்திய அறிவு எல்லா தடைகளையும் நீக்கி அன்பின் பிரமாணமானது, பூரணமாக நம்மில் கிரியை செய்யும்படி செய்கிறது. கிறிஸ்துவின் போதனைப்படி இந்த அன்பின் பிரமாணம் நமக்குக் கட்டளையாக உன் தேவனிடத்திலே முழு இருதயத்தோடு அன்பு கூற வேண்டும் என்றும் உனக்கடுத்தவனிடம் உன்னைப் போல் அன்பு கூறு என்றும் கொடுக்கப்பட்டுள்ளது. அன்பே, சகலத்தையும் நடப்பிக்கும், இடறல் உண்டாக்காது. (மத். 18:6; 2 தீமோ. 2:14)* R 3145:6

## ***ஜூன் 1***

***என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக் கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன். (யோவா. 14:21)***

*கிறிஸ்துவிடம் நாம் நெருங்கினவர்களாயிருந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு ஜீவிப்பது தான் அதிகமதிகமாக அவருடைய ஆவியிலே நம்மை வளரச் செய்யும். இதன் மூலம் உலகம் நம்மைக் குறித்து அறிந்து கொள்ள ஏதுவாயிருக்கும். நாமும் தேவனுடையவர்களாயிருந்து, ஜெபத்திலே அவருடன் நெருங்கி எல்லா உலக இச்சைகளையும் விட்டு நம்மை விலக்கவும், விசுவாசத்திலே அதிகமதிகமாக அவரைக் காணவும் கிறிஸ்துவின் மூலமாகச் சகலத்தையும் அறியும் அறிவையும் கேட்க வேண்டும்.இதன் மூலமாக நாம் தேவனிடத்திலும், அவர் குமாரனான இயேசு கிறிஸ்துவினிடத்திலும் அன்புள்ளவர்களாயிருக்க முடியும். (யோவா. 8:50-51; 1 யோவா. 5:2-4; 2 யோவா. 6)* R 1789:5

## ***ஜூன் 2***

***இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மனித்திருந்தேன். (1 கொரி. 2:2)***

*பிரதிஷ்டை பண்ணின ஒவ்வொருவரும் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டவர்களாக இருக்கும் போது தங்களுடைய அதிகமான நேரங்களையும், எண்ணங்களையும் அந்த சுவிசேஷ ஊழியத்திற்கே அதிகமாகச் செலவிட நினைத்து மற்ற உலக காரியங்களை மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். நாம் அறிவிலே பூரணப்பட்டிருக்கும் போது, வரும் காலத்திற்குரிய வாழ்க்கையை நாம் பெற்றவர்களாகக் காணப்படுவோம். இந்த சுவிசேஷ ஊழியத்தை, அசட்டையாக எண்ணக்கூடியவர்கள், அதிகமாக தேவனுடைய பாதைகளி-ருந்து விலகி உலக மார்க்கத்தில் செல்ல, பல வகையிலும் இழுப்புண்டு, இவர்கள் அழைக்கப்பட்ட அழைப்பையும் தங்களுக்கான மேலான பரிசையும் இழக்க நேரிடும். (கலா. 6:14)* R 1811:5

## ஜூன் 3

***வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை. (சங். 19:1-4)***

*பகலிலும், இரவிலும் வானத்தில் மிக நேர்த்தியாக காட்சி அளிக்கும் வான நட்சத்திரங்கள் இருதயங்களில் சிருஷ்டிகரைப் புகழ்ந்து கொண்டாடும்படியாகத் தூண்டி நம் வாயினால் பரிசுத்தத்துடன் அவரை அறிக்கை பண்ணும்படி செய்கிறது. மிகுந்த கீழ்ப்படிதலுடன், தேவ கட்டளைக்கு அடங்கி, அமைதலுடன் வானத்திலிருந்து தங்கள் ஒளியை பிரதிபளித்து வருவது நமக்கு ஒரு முழுமையான பாடத்தை கற்பிப்பதாக இருக்கிறது. இவை ஆர்வத்துடன் அமைதலாக சகலத்தையும் உண்டாக்கினவரின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து இயங்குவதன் மூலம் அவர் மகிமையை வெளிப்படுத்தி வருகிறது. அது போல தேவனால், மகிமையான சத்திய ஒளியைப் பெற்ற யாவரும் அநேகருக்கு பிரயோஜனமாகத் தங்கள் ஒளியைப் பிரகாசிக்கச் செய்ய வேண்டும்.(எபே. 5:8; மத். 5:14-16)* R 1815:1

## ஜூன் 4

***அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்குப் புகழ்ச்சியும், கனமும், மகிமையுமுண்டாகக் காணப்படும். (1 பேது. 1:7)***

*உங்கள் விசுவாசம் இப்பொழுது பரீட்சிக்கப்படுகிறது. முந்தின நாட்களிலே கிருபையின் சூரியன் உன் மேல் பிரகாசித்த போது, சத்திய அறிவின் அஸ்திபாரத்தை வைத்து கிறிஸ்தவ ஜீவியத்தின் மேல் கட்டடத்தைக் கட்டினாய். இப்பொழுதோ, உன் விசுவாசம் பரீட்சித்துப் பார்க்க சூளையின் மேல் வைக்கப்பட்டுள்ளது. உன் முழு பெலத்துடன் பொறுமையைக் கையாண்டு சகலத்தையும் சகித்து, நம்பிக்கையுடன் உனக்கு அருளப்பட்ட வாக்குத்தத்தத்தை நினைவில் கொண்டு, உறுதியாயிரு. கிறிஸ்துவின் பேரில் சார்ந்து பொறுமையுடனும், அமைதலுடனும் விசுவாசத்தில் பலப்பட்டிரு. உண்மையாக வெற்றி பெறுவாய். (1 கொரி. 3:11-14; யாக். 1:2-4)* R 1823:4

## ஜூன் 5

***தேவனே, உம்மை நம்பியிருக்கிறேன். (சங். 31:1)***

*விசுவாசத்தின் நங்கூரத்தை ஒரு கிறிஸ்தவன் தன் ஜீவியத்தில் தற்கா-கமாக விட்டு விடுவானாகில், தன் பகைவன் முன் அவன் நிற்பது அவனுக்கு அனுகூலமாக இராமல், நஷ்டத்தை வருவிக்கக் கூடியதாயிருக்கும். அவன் அதைச் சற்று விடும் போது, இருள் அவனைச் சூழ்ந்து கொண்டு, தன் தகப்பனின் வெளிச்சமான முகத்தைக் காணாதபடி மறைத்துப் போடும். ஏனென்றால் விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம். மீண்டும் அந்த நங்கூரத்தை அவன் அடையப் பிரயாசப்படும் போது காரிருள் அவனை பலமாக அடித்துச் சென்று தான் பூரண மற்றவனான படியால் பயமும், திகிலும் அவனை மேற்கொள்ளச் செய்யும். ஆகையால், கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தை தரித்துக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் மூலம் தேவனிடத்தில் பெற்ற சமாதானத்தை நம் இருதயத்தில் காத்து நடப்போமேயானால், நாம் அந்த விசுவாசத்தின் நங்கூரத்தை விட்டு விடாமல் இருந்து, சாத்தானின் பல காற்றுகளுக்குத் தப்பி திசை கெட்டுப் போகாமலிருப்போம்.(சங். 61:1-3; எபி. 6:18-19)* R 1835:4

## ஜூன் 6

***உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும், வெறியினாலும், லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். (லூக். 21:34)***

*நாம் தெளிந்த புத்தியுள்ளவர்களாகவும், விழிப்புள்ளவர்களாவும், விசுவாசத்திலே நிலைத்திருக்கவும் அவசியமென்ன? நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள வேலை என்ன? இது வாழ்க்கை முழுவதுமான ஒரு வேலை. அதாவது நாம் மாமிச இச்சைகளை எதிர்த்து தொடர்ந்து செய்ய வேண்டிய ஒரு போராட்டமாகும். வெளியே நமக்கு அநேக எதிர்ப்புகள் காணப்பட்டாலும், நமக்குள்ளாக மாமிசப் போர் மிக முக்கியமானது. இந்த உலக காரியங்களில் நாம் அதிக விருப்பமுள்ளவர்களாக மயங்கி இருப்போமேயானால், நாம் தன்னலமுள்ளவர்களாக இருந்து, அன்பை விட்டு விலகி பகைமை, மேட்டிமை, குரோதம் இவைகளுக்கு ஆளாகி, வீண் புகழ்ச்சிகளை நாடி, தேவ கோபாக்கினைக்கு உட்படச் செய்து விடும். ஆ, எவ்வளவு பெரிய ஆபத்துக்கு நம்மை நாம் வெளிப்படுத்தி விடுகிறோம். (1 யோவா. 2:15-17)* R 1859:6

## ஜூன் 7

***கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே, கொஞ்ச காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி நிலை நிறுத்துவராக. (1 பேது. 5:10)***

*கிறிஸ்துவின் நல்ல போர் வீரனாக இருந்து, பலமான கிரியை மூலமாக மட்டுமே இந்த விரும்பத்தக்க காரியங்களைப் பெற முடியும். இவர்கள் தங்களை முற்றிலும் அடக்கி ஆள வேண்டும். தீமையை எதிர்க்கும் திறமை வேண்டும். விசுவாசத்திலே நிலைத்திருத்தல் வேண்டும். பொறுமையைக் காத்துக் கொள்ளவும் வேண்டும். மேலும், கிறிஸ்துவின் பேரில் சார்ந்து அவர் வாக்குத்தத்தங்களில் நம்பிக்கை வைத்தல் வேண்டும். அப்போஸ்தலனும் கிறிஸ்துவின் ஊழியத்தில் நாளுக்கு நாள் வளரும் போது இந்த காரியங்களில் அனுபவம் அடைந்தார். நம்முடைய ஜீவியத்திலும் இவைகளை நாம் பயன்படுத்த பிரயாசப்பட வேண்டும். ஒவ்வொரு வருஷத்தையும் நாம் கடந்து போகும் பொழுது, மகிமையின் பூரண நிலைமைக்கு நாம் நெருங்கி வர வேண்டும். (1 கொரி. 1:7,9)* R 1860:4

## ஜூன் 8

***தப்பிப் போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகின்றவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன். (யாக். 5:20)***

*ஒருவன் தவறான மார்க்கத்தில் நடப்பதை நாம் காணும் போது, நாம் அவர்களை இரட்சிப்பதற்காக அவர்கள் பாதையில் நடவாமல் நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும். நாம் சரியான பாதையில் நின்றுக் கொண்டு, அவர்களை மனந்திரும்பும்படி அழைக்க வேண்டும். ஒரு சிலர் பலவிதமான குழப்பமுள்ள போதகங்களால் அவர்களை அலைக்கழிக்கும் போது, அது தவறு என்று உணர்ந்தவர்களாகிய நாம் அப்போதகங்களைக் குறித்து ஆராய்ச்சி செய்யத் துவக்காமல் அவைகள் உண்மைச் சத்தியத்திற்கு மாறானவைகள் என்று உணர்த்திக் காண்பிப்பது மட்டுமே அவசியமானது. நம் இரட்சகரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி ஜீவிப்பதே அல்லாமல் வேறு எந்த வழியும் போதிக்கப்பட வில்லை. அடிப்படை விசுவாசத்தை விட்டு விலகாதிருக்கப் போதித்து, புத்தி சொல்ல வேண்டும். (1 பேது. 4:7-10)* R 1860:3

## ***ஜூன் 9***

***உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும், திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன். (யோவா. 16:33)***

*தேவனுக்குப் பிரியமாய் நடக்க விரும்பும் விசுவாசிகளுக்கு இந்த பூமியில் எவ்வித ஆஸ்தியும் பரிசாக அளிக்கப்பட மாட்டாது. அதற்கு மாறாக வறுமையும், உபத்திரவமும், மரண கால பரியந்தம் உண்டென்பது நிச்சயமானது. இயேசு கிறிஸ்துவோ "துக்கம் நிறைந்தவரும் பாடு அனுபவித்தவருமாயிருந்தார்." சகலத்தையும் நம் நிமித்தமாக தம்மேல் ஏற்றுக் கொண்டார். அவர் ஐசுவரியம் நிறைந்தவராக இருந்தும் நம் நிமித்தமாக தரித்திரரானார். அவர் "நரிகளுக்குக் குழியும், ஆகாயத்துப் பறவைகளுக்குத் தங்க கூடுகளும் உண்டு. மனுஷ குமாரனுக்கோ, தலை சாய்க்க இடமில்லை" என்றார். ஊழியக்காரன் எஜமானினும் பெரியவனல்ல. அவர் துன்புறுத்தப்பட்டது போல நாமும் துன்புறுத்தப்படுவோம். அவரைப் போல நாமும் நிந்தைகளை அனுபவித்து சகிக்க வேண்டும். அவரைப் பின்பற்றுகிறவர்களுக்குத் தற்காலத்தில் கிடைக்கக்கூடிய வெகுமதி யாதெனில், அவர் அன்பும் அங்கீகரிப்புமே. (யோவா. 15: 18-21; 14:27; 16:20-22)* R 4072:4

## ***ஜூன் 10***

***ஆண்டவரே, ஜெபம் பண்ண போதித்தருளும். (லூக். 11:1)***

*சுருக்கமாக, நம் ஜெபம் தேவனால் அங்கீகரிக்கப்பட வேண்டுமானால், அவர் பேரில் அசையாத விசுவாசம் வைப்பது அவசியமானது. மேலும் நம் ஜெபம் கருத்துள்ளதும், அன்பும், மரியாதையும் தெய்வீகத் திட்டத்திற்கு இசைந்ததும், தெய்வீக சித்தத்திற்கு உட்பட்டதுமாயிருக்க வேண்டும். மேலும் ஒரு சிறு குழந்தையை போல, நம் அந்தரங்கப் பாவங்களையும், குறைகளையும் அவர் முன் வைத்து அவரிடம் மன்னிப்பை நாடி தெய்வீக நடத்துதலையும், பாதுகாப்பையும் கேட்க வேண்டும். இவைகளை வெறும் வார்த்தையில் சொல்லாமல், நம் கிரியைகளில் வெளிப்படுத்த வேண்டும். ஜெபம் என்பது நம் ஆத்துமத்தின் வாஞ்சையாக காணப்பட வேண்டும். (எபே. 6:18; பிலி. 4:4-7)* R 1865:1

## ஜூன் 11

***சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை. (பிலி. 3:13)***

*தன் பரிசுத்த ஓட்டத்தில் தான் ஆவிக்குரிய நிலையை அடைந்து விட்டதாக எண்ணுகிற எந்த மனிதனும் அந்த நிமிடத்திலிருந்தே தான் பின் தங்கி வீழ்ச்சி அடையத்துவங்குவான் என்பதை அறிய வேண்டும். கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி ஜீவிக்கும் ஒருவரும், கிறிஸ்துவை காட்டிலும் எந்தவொரு தியாகத்தையும் தற்போது செய்ய முடியாது. மேலும், எந்தவொரு திருப்தியான ஈவுகளும் தற்போது உண்டாகாது. கிறிஸ்துவை விட்டு விலகினவன் மட்டுமே, அப்படிப்பட்ட மன மேட்டிமையை அடைவான். கிறிஸ்துவின் சாய-ல் இணைக்கப்பட்டுத் தொடர்ந்து ஆவியிலே வளருகிறோம் என்று ஒரு கிறிஸ்தவன் உணர்வது மட்டுமே, அவனுக்குத் திருப்தி அளிக்கக் கூடியதாயிருக்க வேண்டும். (2 தீமோ. 4:7-8; 1 கொரி. 9:24-27)* R 1885:3

## ஜூன் 12

***ஒன்று செய்கிறேன், .... இலக்கை நோக்கித் தொடருகிறேன். (பி-. 3:13,14)***

*அப்போஸ்தலன் இங்கே தன் ஒரே நோக்கத்தைத் தெரிவிப்பதைக் காண்கிறோம். "ஒன்று செய்கிறேன்" என்பது பல காரியங்களைத் தான் செய்து பார்க்கிறவராக அல்ல. அவ்விதம் செய்திருந்தால், விழுந்துபோயிருப்பார். தாம் அழைக்கப்பட்ட அழைப்பிற்காக தன் ஜீவிய காலம் முழுவதுமாகப் பாடுபட்டு வாழ்க்கையில் மற்றெல்லாக் காரியங்களையும் விட்டு விட்டவர். தான் எடுத்துக் கொண்ட இந்தப் பாதை, சில கஷ்ட நஷ்டங்களை தனக்கு வருவிக்கும் என்று அறிந்திருந்தார். அதோடு பல பாடுகள், நிந்தைகள், உபத்திரவங்கள் இவை யாவும் தனக்கு உண்டென்று அறிந்து, அந்த ஒரே காரியத்தைச் செய்ய ஒப்புக் கொடுத்தார். கிறிஸ்தவ ஜீவியத்தில் ஒவ்வொருவரும் அழைக்கப்பட்ட அழைப்பை உணர்ந்து, அந்த ஒரே பந்தயப் பொருளுக்காக ஒரே காரியத்தைச் செய்து மற்றக் காரியங்களில் தங்களை ஈடுபடுத்தாமல் காத்து நடத்தல் அவசியமானது. (பிலி. 3:7-11; 2 கொரி. 11:23-27)* R 1885:3

## ஜூன் 13

***நான் விழிக்கும் போது உமது சாயலால் திருப்தியாவேன். (சங். 17:15)***

*நாம் தேவனையும், அவர் குமாரனையும் முற்காலத்து பரிசுத்தவான்களையும் குறித்து நம் இருதயங்களிலே சிந்திக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். கிறிஸ்துவுடன் இசைந்து பரலோக வாசஸ்தலத்தை சுதந்தரித்தவர்களாக இருக்கப் போகும் ஆசீர்வாதங்களும் நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள தேவ திட்டங்களும், வாக்குத்தத்தங்களும் நம்மை மகிழச் செய்கிறது. இப்பொழுது நாம் நம் ஓட்டத்தில் ராஜ்யத்தின் சேவையைச் செய்து முடிக்கும் போது, மகிமையிலே கூட்டிச் சேர்க்கப்படுவோம் என்ற எண்ணங்களை நம் இருதயத்தை மகிழும்படிச் செய்ய வேண்டும். இத்துடன் ஜெபத்திலே நாம் தேவனோடு நெருங்கி, சபை கூடுத-ன் மூலம், அவர் வசனங்களை ஆராய்ந்து அனுதினமும் அவரைத் தொழுது புகழ்வது நமக்கு இன்னும் ஆறுதலையும், சமாதானத்தையும் தரக்கூடியதாக இருக்கும். (யோபு 19:23-27)* R 1885:6

## ஜூன் 14

***பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். (1 பேது. 5:5)***

*அன்பானவர்களே, சகலத்திற்கும் மேலாக நாம் மனத் தாழ்மையைக் காத்துக் கொள்வது அவசியமானது. நம்முடைய பார்வையில் நாம் ஒன்றுமில்லாதவன் என்ற எண்ணம் தோன்ற வேண்டும். அப்பொழுது தான் தேவன் நம்மைக் கிருபையாய் நடத்துவார். நம் விசுவாசம் பரீட்சிக்கப்படும் போது அவர் நம்மை விட்டு விடுகிறார். அவருடைய ராஜ்ய சேவையில் இன்று சற்று உயர்த்தப்பட்டு உற்சாகப்படுத்தப் பட்டால், மன மேட்டிமை அடையாமல் தாழ்மையுடனும், பணிவுடனும் நான் ஒன்றுமில்லாதவன் என்றும், தேவனே என்னை நடத்துகிறார் என்றும் உணர வேண்டும். அதோடு நாம் சீர் பொருந்தினவர்களாக நடக்க, பின்னர் நமக்கு ஏற்படும் நிந்தைகளைப் பொறுமையுடன் சகிக்கவும் தயாராக இருக்க வேண்டும். முன்னே உயர்த்தப்பட்டு பின்னர் நிந்தை வரும் போது பொறுமையை இழந்து போவாயானால், நீ ஆவிக்குரியபடி இன்னும் பூரணப்படவில்லை என்பதை உணர்ந்து கொள். (1 பேது. 5:6-10; எபே. 4:1-3)* R 1920:5

## ***ஜூன் 15***

***தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன். (ஏசா. 55:3)***

*மானானது நீரோடைகளை வாஞ்சிக்கிறது போல, எந்தெந்த ஆத்துமாக்கள் தேவ நீதியின்பேரில் பசி தாகம் உள்ளவர்களாக காணப்படுகிறார்களோ, அவர்கள் தேவனைக் கண்டடைந்தவர்களாகவும், தேவனுக்குத் தங்களை முற்றிலும் ஒப்புக் கொடுத்தவர்களாவும், பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பெற்றுத் தேவனுடைய பிள்ளைகளாகவும் இருப்பார்கள். இவ்விதம் அபிஷேகம் பெற்ற பிள்ளைகள் உண்மையான விசுவாசம், ஊக்கம், தைரியம், நன்மைத் தீமைகளைப் பகுத்தறியும் தன்மை இவை யாவையும் உடையவர்களாக இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களிடம் தேவன் தாவீதுக்கு அருளிய இரக்கத்தை போன்று, நித்திய உடன்படிக்கையை ஏற்படுத்தினார். (அப். 13:33-39)* R 1936:3

## ***ஜூன் 16***

***எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல், துக்கமாய்க் காணும்; ஆகிலும், பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதானப் பலனைத் தரும். (எபி. 12:11)***

*இப்படி அநேக சிட்சைகளினால், நம்முடைய ஆத்துமா பக்குவப்படுத்தப்பட்டு, அன்புடன் நம்மை தாழ்த்தி நடக்கச் செய்யும். பின்னர் நான் சகலத்தையும் தாங்குவேன், சகலத்தையும் செய்வேன் என்று கிறிஸ்துவின் பெலத்திலே சொல்லக்கூடியவனாகவும் இருப்போம். இதன் மூலம் பழைய மனிதனின் அழுக்கான காரியங்கள் சிறிது சிறதாக நீக்கப்பட்டு, புடமிடப்பட்டு பொன்னைப் போல் பிரகாசமடையும். இப்படிப்பட்ட விலையேறப் பெற்ற ஆத்துமாக்களே நம் இரசட்கருக்கு விருப்பமானவர்கள். இவர், அவர்கள் பேரில் பிரியமுள்ளவராக இருந்து, எந்தக் கஷ்டத்திலும், சோதனையிலும் அவர்களை ஆற்றித் தேற்றுவார். எவ்வளவு இருளான துக்கங்கள் அவர்களைச் சூழ்ந்தாலும், அவரிலே இளைப்பாறி, பகலின் சூரியனின் வெளிச்சத்திலே சமாதானத்தைக் காண்பார்கள். (1 பேது. 1:5-9)* R 1944:4

## ஜூன் 17

***அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலை நிற்பவன் யார்?.... அவர்களைப் பொன்னைப் போலவும், வெள்ளியைப் போலவும் புடமிடுவார். (மல்.3:2-3)***

*புடமிடுகிறவர் நம்முடைய குண லட்சணங்கள் அவருடைய ரூபத்தை எந்த அளவு பிரதிபலிக்கிறதென்று பார்த்து வருகிறார். இன்னும் தெளிவாகச் சொல்வோமேயானால், தங்களுக்கு அருளப்படும் பரீட்சை (சோதனை)களிலே எந்த அளவுக்கு அவரைச் சார்ந்து நிற்கிறார்கள் என்றும், அப்படிப்பட்டச் சோதனையிலே இவர்கள் உலகத்தை நேசிக்கிறார்களா அல்லது இவை யாவற்றையும் தாங்கிச் சகித்து நீதியினிமித்தம் சத்தியத்திற்காகத் தங்களை இவற்றிற்கு ஒப்புக் கொடுத்து கிறிஸ்துவைப் பின்பற்றுகிறார்களா என்று கவனித்தும் வருகிறார். எந்த துன்பங்கள் கஷ்டங்கள் வந்தாலும் வைராக்கியத்துடனும் பலத்துடனும் இந்த கொள்கைகளை காத்து மரண பரியந்தம் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடுகிறார்களா என்றும் கவனித்தும் வருகிறார். (1 கொரி. 10:12-13; 4:11-13)* R 1944:5

## ஜூன் 18

***உம்முடைய சமூகத்திலே பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு. (சங். 16:11)***

*தேவனுடைய சமூகத்தில் நாம் எங்கு இருந்தாலும் சந்தோஷம் நிறைந்தவர்களாகவே இருப்போம். இதனால் ஜெபத்திலே அவருடன் நெருங்கி அவருடைய மேன்மையான வார்த்தைகளை வாசித்து, தியானித்து அவருடன் எப்பொழுதும் தொடர்பு கொண்டிருக்க அப்பியாசப்படுத்த வேண்டும். அவருடைய வாக்குத்தத்தங்கள், இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கிறார். ஆகவே, நாம் தேவனிடத்தில் நெருங்கிச் சேரும் போது அவர் நம்மிடம் சேருவார். (யாக்.14:8) நாம் பரிசுத்தமுள்ளவர்களாயிருந்தால் நம்மை இன்னும் பரிசுத்தப்படுத்தி நம்மில் வாசமாயிருப்பார். அவருடைய பிள்ளைகள் யாவரும் அவரில் சந்தோஷமாக இருப்பது அவர் சித்தமாயிருக்கிறது. இந்த ஆசீர்வாதத்திற்குத் தகுதியுள்ளவர்களாக ஜீவிக்காவிட்டால் நாம் குறைவுள்ளவர்களாக இருப்போம். (யாக். 4;5-8; லேவி. 20:7-8)* R 1949:5

## ஜூன் 19

***நீதிமானுக்காக வெளிச்சமும் (சத்தியம்) செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சியும் (சத்தியத்தின் சந்தோஷம்) விதைக்கப் பட்டிருக்கிறது. (சங். 97:11)***

*தேவனுடைய உண்மையான பிள்ளைகள் சத்தியத்தில் பிரியமுள்ளவர்களாயிருப்பார்கள். ஏனென்றால், சத்தியம் அவர்களுடையது. சத்தியத்தை இவர்கள் கண்டடைந்த போது அதன் மதிப்பை உணர்ந்து, அதை எப்போதும் தியானிக்கிறவர்களாகவும் இருப்பார்கள். இது தேவனுடைய மகிமையையும், அவருடைய அன்பையும், உதார குணத்தையும் ஞானத்தையும் வெளிப்படுத்துவதால், இந்த சத்திய வசனங்களை தேவனுக்கு ஒப்பாக இவர்கள் கருதுவார்கள். இதனால் வேதத்தையும், இவற்றைத் தந்தவரையும் சிநேகிக்கின்றனர். இவைகளை ஆஸ்தியாகத் தங்கள் இருதயங்களில் வைத்து, காத்து அதன்படி நடந்து தங்கள் வாழ்க்கையில் இவற்றைப் பயன்படுத்துவார்கள். இதனால் அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். (சங். 112:1-4; 119:97-105)* R 1950:1

## ஜூன் 20

***உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால், அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. (1 யோவா. 2:15)***

*உலகத்தோடு நாம் ஒருமித்து நடப்பது உலக வழி. நாம் இவைகளில் அன்பு கொள்ளாமல், இவைகளுக்கு எதிர்த்து நின்று அவைகளை வெறுக்க வேண்டும். நமக்குக் காண்பிக்கப்பட்ட வழி, கடினமான தனிப்பட்ட இடுக்கமான வழி, ஆனால் இதன் மூலமாக மட்டுமே சந்தோஷத்தையும், சமாதானத்தையும் நாம் பெற முடியும். உலக வழியோ இச்சை நிறைந்து வெகுசீக்கிரம் அழிவை எதிர் நோக்கிச் செல்கிறதைக் காண்கிறோம். தேவனுடைய வழியை விரும்பிப் போகிறவர்கள் அவருடன் நெருங்கி ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள். இவர்கள் ஓர் உயர்ந்த ஸ்தானத்தில் வைக்கப்பட்டு உலகம் தரக்கூடாத சந்தோஷ சமாதானத்தைப் பெற்று தேவனோடு இசைந்திருப்பார்கள். (1 யோவா. 2:16-17)* R. 1956:4

## *ஜூன் 21*

***நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாயிருக்கிறேன் ...... என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள். (மத். 11:29)***

*உண்மையாகவே மனத்தாழ்மையும், அமைதலுமான ஆவியில் தான் இளைப்பாறுதல் உண்டு. மனத்தாழ்மையின் மூலமாகவே பொறுமையை நாம் வளர்க்கச் செய்து, தேவசித்ததிற்கு நம்மை முற்றிலும் கீழ்ப்படுத்தவும் முடியும். அவர் அன்பில், நாம் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கும் போது, அவர் ஞானத்திலே நாம் வழி நடத்தப்பட்டு சகலத்தையும் மேற்கொள்ளுவோம். இப்பாதையில் தொடர்ந்து நாம் நடக்க நம்மை ஒப்புக் கொடுப்போமேயாகில், பல தீமைகளுக்கிடையே சமாதானத்துடன் அவர் தயவைப் பெற்று ஜீவிக்க முடியும். தேவனுடைய பிள்ளைகள் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி தாழ்மையிலும், சாந்தத்திலும் தேவ சித்தத்திற்கு தங்களை ஒப்புக் கொடுத்து அவருடைய நுகத்தை நாம் ஏற்றுக் கொண்டால் அவரே நம்மைச் சகலத்திலும் வழி நடத்துவார். (கொலோ. 3:12-17; 1 தீமோ. 6:11-12)* R 1962:1

## *ஜூன் 22*

***உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம். (1 கொரி. 4:2; மத். 25:15)***

*மத்தேயு 25:15-ல் இரட்சகர் சொன்ன தாலந்து, நம் எல்லோருக்கும் ஒரே விதமானதுதான். இது தேவனுடைய ஜனம் நீதி உள்ளவர்கள் என்று தீர்க்கப்பட, சகலருக்கும் அருளப்படும் தெய்வீக கிருபையின் ஆசீர்வாதம் ஆகும். இந்த ஆஸ்தியின் அளவில் வித்தியாசங்கள் உண்டு. இது பொதுவாக பிதாவாகிய தேவனால் கொடுக்கப்படும் வசனமும் ஆவியுமே. நாம் நீதிமானாக்கப்படுவது, பிதாவினுடைய காரியமாக இருந்தாலும், இது கிறிஸ்துவின் மூலம் பெற்ற பரிசு. ஏனென்றால், தம்முடைய சொந்த (பரிசுத்தமான) இரத்தத்தை இதற்கு கிரயமாகக் கொடுத்திருக்கிறார். அங்கீகாரம் பெற்ற ஊழியர் யாவருக்கும் ஒரே தாலந்து அருளப்பட்டு, ப-யின் ஜீவியத்தில் இவர்கள் தங்கள் ஆர்வத்தைக் காட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது. இது நம் திறமைக்குத் தக்கதாக படிப்பிலோ, ஆஸ்தியிலோ, தேக பலத்திலோ, வசீகர சக்தியிலோ, நேரத்திலோ எந்த அளவு இவைகளை தேவ ஊழியத்தில் உபயோகிக்கிறோம் என்பதைக் காணவே கொடுக்கப்பட்டுள்ளன. (1 கொரி. 12:4-11)* R 1972:6; 3948:6; 3869:3

## ***ஜூன் 23***

***நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும், உணருகிறவனுமாயிருந்து நூறாகவும், அறுபதாகவும், முப்பதாகவும் பலன் தருவான். (மத். 13:23)***

*முப்பது, அறுபது, நூறாக பல வித்தியாசங்களுடன் பலனளிப்பதும் அல்லது பத்து ஐந்து தாலந்துகளும் ஒருவருடைய ஜீவியத்தில் அவர்கள் மேற்கொள்ளக் கூடிய பல இடையூறுகளைக் குறிக்கிறதேயல்லாமல் அவிசுவாசத்தைக் குறிக்கிறதில்லை. ஒரு சிலர் அதிக நேரம் ஊக்கத்துடன் உழைத்து சிறிய விளைச்சலையே தரக்கூடியவர்களாக இருப்பார்கள். ஒரு சிலர் தங்கள் முழு பிரயாசையின் மூலம் அதிக பலனைத் தரக்கூடியவர்களாகவும் இருப்பார்கள். ஒரு சிலர் தவறி பின் தங்கி பின்னர் தெளிவடைந்தாலும் இழந்த சந்தர்ப்பங்களையும், நேரத்தையும் திரும்பப் பெற இயலாது. எனினும் அவர்கள் மன்னிப்பைப் பெற்று தேவ கிருபைக்கு திரும்பி மரண பரியந்தம் பொறுமையுடன் ஓடி தங்கள் ஓட்டத்தை முடிப்பார்கள். (கொலோ. 1:6;22,23)* R 1973:3

## ***ஜூன் 24***

***நாம் பிள்ளைகளானால், சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடன் கூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூடப் பாடுபட்டால் அப்படியாகும். (ரோம. 8:17)***

*பரம பிதாவின் திட்டங்களை நாம் நமக்குள்ளாக வாசிக்கும் போது நம்முடைய இரட்சகரான இயேசுவிடம் அவர் நடப்பித்துக் காட்டிய யாவும் நமக்கு படிப்பினையாக இருந்து, நாம் பாடுகளையும் உபத்திரவத்தையும், சோதனைகளையும் அனுபவியாமல் மகிமையில் பூ மெத்தையின் மேல் கொண்டுபோகப்படுவதாக எண்ணக்கூடாது. இதற்கு மாறாக கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிப் போக அழைக்கப்பட்ட யாவரும் உலகத்தின் பாவங்களுக்காக மட்டும் அல்ல, கிறிஸ்துவின் சரீரமாகிய ஆலயத்திற்கு மாதிரிகளாக காணப்பட வேண்டும். இந்த தேவ திட்டத்தை அறிந்தவர்களாகிய நமக்கு இது போதிக்கிறபடி உபத்திரவங்களிலும், கஷ்டங்களிலும் விடுதலையைக் கேட்காதபடி இவை யாவும் நாம் மகிமையின் பாதையிலே செல்ல அவசியமானது என்று உணர்ந்து, பொறுமையைத் தர ஜெபிக்க வேண்டும். (2 கொரி. 1:3-7)* R 2000:2

## ஜூன் 25

**இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள். ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள். (கொலோ. 4:2)**

*ஒவ்வொரு விசுவாசம் மற்றும் பொறுமையின் பரீட்சையிலும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடைய, ஜெபம் ஒரு தக்க சந்தர்ப்பத்தைத் தருகிறது. வெற்றி பெற நாம் அடையும் ஒவ்வொரு தோல்வியும் நம் பெலவீனங்களை அவருக்கு முன் ஜெபத்திலே வைத்து மன்னிப்பைப் பெற்று இனிவரும் சோதனைகளை மேற்கொள்ள உதவியாக இருக்கும். நாம் சோதனைகளில் வெற்றியடையும் போதும் நாம் நம்மை உயர்த்தாமல் அவர் கரத்திற்குள் அடங்கி இருக்க ஜெபம் இன்றியமையாததாகும். சாத்தான் நம்மை அடுத்த சோதனைக்குட்படுத்தும் போது ஜெபம் நம்மை விழிப்புள்ளவர்களாக இருக்கச் செய்யும். இராஜ்ய ஊழியத்தில் ஈடுபடும் போது இன்னும் அதிகமாக நம்மை ஈடுபாடு செய்யவும், ஜெபம் அவசியமானதாக உள்ளது. (எபே. 6:10-20)* R 2006:1

## ஜூன் 26

**பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கை பண்ணுகிற அப்போஸ்தலரும், பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப் பாருங்கள். (எபி. 3:1)**

*கிறிஸ்துவின் அங்கத்தினர் யாவரும் இந்த உலகத்தின் பெலவீனங்களைக் குறித்து அறிந்திருப்பது தேவ சித்தமாக உள்ளது. ஏனென்றால், பிதாவின் ராஜ்யத்திலே உயர்த்தப்பட்டு பரிசுத்த ஆசாரியராக உலகத்தை நியாயந்தீர்க்கும் போது மிருதுவாகவும், இரக்கமுள்ளவர்களாகவும், உதார மனதுடையவர்களாகவும் உலகத்தை நியாயந்தீர்க்க வேண்டும். பாவமின்றி பூரணராக வந்த நம் இரட்சகரும் விழுந்து போன மனிதனின் பெலவீனங்களை அறிந்து பாவத்தினின்று விடுவித்து, நமக்கு ஒரு உண்மையுள்ள பிரதான ஆசாரியராக இருக்கிறார். ஆதலால், அவருடன் இணைக்கப்பட்டு ஆசாரியராகவும், ஆட்சி செய்கிறவர்களுமாயிருப்பவர்கள் யாவரும், பாடுகளை அனுபவிக்க நமது பிரதான ஆசாரியரைப் போலவே இருக்க வேண்டும். (எபி. 4:14-16; 2:17-18)* R 2029:5

## ஜூன் 27

***உங்களோடே கூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம் பண்ணினவர் தேவனே. அவர் நம்மை முத்தரித்து ...... (2 கொரி. 1:21,22)***

புதிய சிருஷ்டிகள், முத்தரிக்கப்படுவதென்பது, பரிசுத்த ஆவியை அவர்கள் தங்களிலே பெற்றிருப்பதைக் குறிக்கும். இந்த பரிசுத்த ஆவியை, வெளிப்படையாக மூன்று வழிகளில் காட்டலாம். *(1)* தேவன் பேரில் அன்புள்ளவர்களாக இருந்து, அவர் நிமித்தமாக உபத்திரவங்களில் சந்தோஷப்படுதல். *(2)* சகோதரரிடம் அன்பு காட்டுதல். இந்த அன்பு சுத்தமுள்ளதாகவும், தன்னலமற்றதாகவும், பெருந்தன்மை பொருந்தினதாகவுமிருந்து நன்மை செய்யவும், அவர்கள் நல் வாழ்க்கையில் பிரியமுள்ளவர்களாகவும் காணப்படவும் வேண்டும். *(3)* அன்பு, உலகத்தாரிடையேயும்இரக்கம் காட்டுகிறதாக இருந்து சமயம் வாய்க்கும் போது, நன்மையான காரியங்களைச் செய்து, சகலுருடனும் சமாதானமாக இருக்க முயற்சிக்கச் செய்யும். *(ரோம. 12:13-18)* R 2032:3

## ஜூன் 28

***நீ உன்னை ஞானியென்று எண்ணாதே; யேகோவாவுக்குப் பயந்து, தீமையை விட்டு விலகு. (நீதி. 3:7)***

தேவனுடைய பிள்ளைகளுக்கு தற்பெருமையானது, தீங்கு விளைவிக்கக் கூடிய ஒரு காரியம். இது உண்மையான ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் தடையாக இருந்து, இருதயத்தின் சீர்திருத்தலைக் குலைத்து, அநேகருக்குப் பிரயோஜனமாக இராதபடி செய்து, தேவ ஊழியத்திற்குத் தடையாக இருக்கும். தேவ வசனம் கூறுகிறதாவது: "தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்." நம்முடைய தன்னம்பிக்கையைக் காட்டிலும் தெய்வீக ஞானம், நம் பெலவீனங்களையும் பூரணமற்ற நிலைமையையும், உணரச் செய்து, தேவன் பேரில் அதிகமாக சார்ந்து பயத்துடன் அவரைச் சேவிக்கும்படி செய்யும். அதோடு கூட விழுந்து போன நிலையி-ருந்து நம்மை பலப்படுத்தி தீமைக்கு விலகியிருக்கச் செய்யும். *(ரோம.1:19-23)* R 2060:6

## ***ஜூன் 29***

***இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். (மத். 5:8)***

*இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் என்று சொல்லும் போது நம்முடைய நடத்தையையோ, வார்த்தையையோ, சிந்தனைகளையோ குறிக்காமல் சகலத்தையும் பூரணமாக செய்ய வேண்டுமென்னும் நோக்கம் நமக்குள் இருப்பதையே குறிப்பதாகும். நம் சிந்தனையும், வார்த்தையும், செய்கையும் பூரணப்பட்டதாக காணப்பட வேண்டும் என்பதே நம் வாஞ்சையாக காணப்பட வேண்டும். பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல நீங்களும் இருங்கள் என்று இயேசு சொன்னது போல, அந்த தெய்வீக நிலைக்கு ஒத்ததாக நம் சிந்தனை யாவும் இருக்க வேண்டும். தேவன் நமக்கு குறைவை வைக்காமல் கிறிஸ்துவின் மூலம் கிருபையையும், இரக்கத்தையும், சமாதானத்தையும் தந்திருக்கிறார். அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றி இடுக்கமான பாதையில் நடக்க சுத்த இருதயமுடையவர்களாக இருப்பது மிகவும் அவசியமான ஒரு படியாகும். (யோவா. 3:2-3; எபி. 12:14)* R 2587:5

## ***ஜூன் 30***

***அறுப்புக் காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி ..... கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள் என்பேன். (மத். 13:30)***

*நேரம் குறைவாக உள்ளது. அறுப்போ மிகுதி, வேலையாட்களோ குறைவு. நம்முடைய நேரத்தை நாம் தேவனுக்கென்று தத்தம் செய்திருக்கிறோம். ஆதலால் ஒருவரும் வேலை செய்யக்கூடாத இரவு வருமுன் பகலில் நாம் வேலை செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம். மரண பரியந்தம் நாம், நம்மை தேவனுக்கென்று தத்தம் செய்துள்ளதால், அறுப்பின் அதிபதி, கோதுமை மணிகளை தம் களஞ்சியத்தில் சேர்க்கும்படி நம்மை அழைக்கிறார். காலம் குறுகியதாயிருக்கும் போது உலக காரியங்களுக்கும், உல்லாச வாழ்க்கைக்கும் செலவிட நமக்கு நேரம் உண்டா? இவைகளில் நாம் சிறிதும் விருப்பம் காட்டாமல், நம் பாதையை நோக்கி முன்னேறி தேவ ஊழியத்தில் அதிகமாக ஈடுபடவே பிரயாசப்பட வேண்டும். இதன் மூலமாக மட்டுமே, "உத்தமமும் உண்மையுள்ள ஊழியக்காரனே" என்று எஜமானால் அழைக்கப்பட சிறந்த பாத்திரராக இருப்போம். (மத். 13:38-43)* R 2675:2

## ஜூலை 1

***வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள். ... கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள். (எபே. 5:8-10)***

*சத்தியத்தின் மூலமாக தேவனுக்கு பரிசுத்தமுள்ளவர்களாக நாம் இருப்போமேயானால் நம் சுயசித்ததிற்கு நாம் மரித்தவர்களாக இருந்து தேவசித்தத்தை வார்த்தையிலும் செய்கையிலும், சிந்தனையிலும் முற்றிலுமாக நாம் அங்கீகரித்தவர்களுமாக ஜீவிப்போம். இதன் மூலம் நாம் சகலத்தையும் மேற்கொண்டுதேவ சித்தத்தை நிறைவேற்றும் போது சத்தியத்தின் நிமித்தம் நாம் இரத்த சாட்சிகளாக மரிக்காதிருந்தாலும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசை பெறுவோம். "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது" என்ற இந்த வார்த்தையை நாம் எல்லோரும் நினைவில் கொள்ள வேண்டும். இந்த சத்தியவார்த்தை ஒருவருக்கும் மறைபொருளாய் இருக்க வேண்டாம். இது நம் ஜீவனின் பாதையை போதித்து காட்டி தேவ சித்தம் நம் சித்தமாக இருக்கச் செய்கிறது. (எபே. 2:10-13; ரோம. 12:2)* R 2412:2

## ஜூலை 2

***வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு சகிக்கிறோம். (1கொரி. 4:12)***

*கிறிஸ்துவின் பள்ளியில் நாம் ஒரு விசுவாசமுள்ள மாணவனாக இருப்போமேயானால் கிறிஸ்துவின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நம் இருதயத்திலே பாவத்தை முற்றிலும் வெறுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால் பாவிகளை நாம் வெறுக்க முடியாது. தேவ அன்பு நம்மிலே பூரணப்பட்டதாக இங்கே காணப்பட வேண்டும்.நம் மேல் அவதூரானவைகளைப் பேசி நம்மை நிந்திக்கிறவர்களிடம் கசப்பான மனப்பான்மையைக் காட்டாமல் நம் இரட்சகரும், போதகரும் நமக்குக் கற்பித்தபடி "உன் பகைவனிடம் அன்பு கூறுவாயாக" என்ற பாடத்தை நம் இருதயத்திலே கொண்டு சகலத்தையும் மேற்கொள்ள வேண்டும். நம்மைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் நம்மை வெறுக்கிறவர்களுக்காவும் ஜெபிக்கவே கடமைப்பட்டிருக்கிறோம். தீமைக்குத் தீமை செய்யாமல் அவர்களை ஆசீர்வதிக்கவே போதிக்கப்பட்டிருக்கிறோம். (2 கொரி 4:7-10; 6:5-10)* R 2412:5

## ஜூலை 3

***யேகோவாவை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலது பாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை. (சங். 16:8)***

*தன் சித்தத்தை பிதாவின் சித்தத்திற்கு முற்றிலும் ஒப்புக் கொடுத்த எந்த மனுஷனும் ஏமாற்றத்தை காணமாட்டான். வாழ்க்கையில் எல்லா காரியங்களிலும் தெய்வீக வழி நடத்துதல் உண்டென்று விசுவாசித்து "தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" என்று அப்போஸ்தலன் சொன்ன வார்த்தைகளை நினைவில் கொள்வான். தன் இருதயத்திலே பெரும் முன்னேற்றம் அடைந்ததற்கு இது சாட்சியாக இருக்கும். இப்பிரபஞ்சத்தின் தேவனையும் அவன் உலக வழிகளையும், நம் மாமிச சிந்தனைகளையும் மேற்கொண்டு சந்தோஷத்துடன் சகலத்திலும் தேவனை முன் வைத்து அவர் காட்டும் வழிகளில் நடக்க இவை யாவும் நம்மை உற்சாகப்படுத்தும். (சங். 119:26-32, 59-61)* R 2412:6

## ஜூலை 4

***எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? யேகோவாவின் புயம் யாருக்கு வெளிப்பட்டது? (ஏசா. 53:1)***

*திருச்சபையாருக்கு இக்காலத்திலே கொடுக்கப்பட்ட அழைப்பின் நோக்கம் என்னவெனில், இவர்கள் தங்கள் ஒளியைப் பிரகாசிக்கச் செய்து, இதன் மூலம் உபத்திரவங்களை வருவித்து, அந்த உபத்திரவங்களை நீதியினிமித்தம் பொறுமையுடன் சகித்து, சகோதர அன்பை இரக்கத்துடன், துன்பப்படுத்தினவர்களிடமும் சகல மனிதரிடமும் காண்பிக்கவேயாகும். இதனால் தங்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டப் பரிசைக் காணும் யாவரும் தேவனின் மகிமையான ஒளி இயேசு கிறிஸ்துவின் முகத்தில் பிரகாசித்ததைக் கண்டு அதைபோலவே தாங்களும் அவர் மூலம் அழைக்கப்பட்டதை உணர்ந்து, அந்த அழைப்பைக் காத்துக் கொள்ள வேண்டும். ஊழியத்தில் முதலில் அதிக அக்கரை காட்டி, பின்பு எதிர்ப்புகளினிமித்தம் சோர்ந்து போகாமல், நம்மைக் குறித்துத் தீதான வார்த்தைகளைப் பேசினாலும், தீமைகளைச் செய்ய நினைத்தாலும், தைரியத்துடன் தளராமல் நாம் தேவனுக்கு ஊழியம் செய்கிறோம் என்று எண்ணி அவர் சம்பத்தைச் சேர்க்கும் காலத்தில் நாம் அவருக்கு சொந்தமான ஆபரணங்களாக விளங்க வேண்டும். (யோவா. 12:35-38; ரோம. 10:16-20)* R 2415:3,6

## ஜூலை 5

***எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல் அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம். (2கொரி. 10:4-5)***

*நாம் தேவனிடம் அங்கீகாரம் பெறுவதற்கு முதலாவதாக அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவது, அவரிடம் அன்பு கூறுவது, விசுவாசம் வைப்பது ஆகும். இதற்கு அடுத்து அவர் நம்மிடம் எதிர்பார்ப்பது, சகோதரரிடமும் உள்ளான அன்பு கூர்ந்து எந்த நேரத்திலும் உதவி செய்து, பாடனுபவித்து கூடுமானால் தங்கள் ஜீவனையும் கொடுத்து அவர் வழிகளில் நடக்க ஒப்புக் கொடுப்பது ஆகும். (அவருடைய சத்திய வார்த்தைகளை உள்ளன்போடு ஏற்றுக் கொண்டவர்கள் உண்மைத் தேவனை வெளிப்படுத்தி, பல தப்பறையான போதகங்களை இவர்கள் நீக்கும்படி செய்யும் வசனமே பேராயுதம்.) (எபே. 6:10-18)* R 2415:6

## ஜூலை 6

***யேகோவாவுக்குப் பயப்படுகிற மனுஷன் எவனோ அவனுக்குத் தாம் தெரிந்து கொள்ளும் வழியைப் போதிப்பார். (சங். 25:12)***

*நமக்கு வரக்கூடிய உபத்திரவங்களையும், பல கஷ்டங்களையும் ஆராய்வது நம்முடைய காரியமல்ல. நாம் நம்மை தேவனுக்கென்று அர்ப்பணித்த பிறகு, சகலத்தையும் கிறிஸ்துவின் கரத்திற்கு ஒப்புக் கொடுத்து, அவர் நடத்துதலுக்காகக் காத்திருக்க வேண்டியவர்களாகவே இருக்கிறோம். இதன் மூலமே, நம் பலியின் ஜீவியத்தை நாம் உறுதிப்படுத்துகிறோம். தேவனுடைய பார்வையில் சிலருக்கு ஒருவரை விட அதிகமான சிட்சைகள் அவசியமாகக் காணப்படலாம். ஏனெனில், இதன் மூலம் அவர்கள் பலியின் ஜீவியம் பரீட்சிக்கப்பட்டு அவர்களுடைய ஊழியம் உயர்த்தப்படலாம். ஆகவே தான் அப்போஸ்தலன் சொன்னபடி, காணப்படாதவைகளை நோக்கி இருக்கிற நமக்கு அதி சீக்கிரத்தில் நீங்கும் லேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கன மகிமையை உண்டாக்குகிறது என்ற வார்த்தைகளின்படி நம்முடைய வைராக்கியமும் ப-யும் இருக்க வேண்டும். (1 தெச.3:2-4; 1 கொரி. 10:13; 2 கொரி. 4:17)* R 2416:5

## ஜூலை 7

**இதோ தேவ ஆட்டுக்குட்டி. *(யோவா. 1:36)***

*எல்லா தேவ ஊழியர்களும் தங்களை அல்ல கிறிஸ்துவையே நோக்கினவர்களாக ஜீவிக்க வேண்டும். நாம் நம்முடைய சுயலாபத்திற்காக பிரசங்கியாமல், தேவ ஆட்டுக்குட்டியை ஜனங்களுக்கு சுட்டிக் காட்ட வேண்டும். கண்ணியம் அல்லது அடக்கமான வாழ்க்கை விலையேறப்பெற்ற இரத்தினக் கற்களுக்கு ஒப்பானது. இது காணப்படக் கூடியவர்களிடையே, கிருபையின் ஆவி பெருகி இருக்கும். இதையே தேவனுக்கென்று தத்தம் செய்த யாவரும் பெற்று அதிகப்படுத்தி, இதினாலே மெருகேற்றப்பட்டவர்களாகக் காணப்பட வேண்டும். இயேசுவை பின்பற்றுவது, அவர் வழிகளில் நாமும் நடந்து அவர் போதித்தவைகளைக் கைக்கொண்டு ஜீவிக்க முயல்வதாகும். அவர் முன் சொன்ன காரியங்களையும் பின்னர் அப்போஸ்தலர் மூலமாக நமக்குக் கொடுத்த கட்டளைகள் யாவையும் கைக் கொண்டு அவருடைய பாடுகளில் பங்கு பெற பின்னர் மகிமையில் அவருடன் ஆட்சி செய்வதும், நமக்கு இதன் மூலமாகவே வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. (பிலி. 2:3-12; 2 தீமோ. 2:11-13; எபி. 3:1)* R 2418:1

## ஜூலை 8

***அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாயிருக்கிறது. (1 தீமோ. 3:15)***

*தேவனுடைய ஆலயம் ஒன்று மட்டுமே சபை என்றும் சரீரம் என்றும் அழைக்கப்பட தகுதி பெற்றது. இது உலகத்தின் பார்வையில் முக்கியமானதாகவும், ஆடம்பரமுள்ளதாகவும் காணப்படாமல், மிக எளிமையாக இருப்பதனால் உலகத்தாரால் அங்கீகரிக்கப்படாமலும், அங்கீகரிக்கப்படக் கூடாததுமாயிருக்கிறது. இது மனிதனால் உண்டானதுமில்லை. மனிதனால் ஆட்சி செய்யப்படுகிறதுமில்லை. இதன் அங்கத்தினர் உலகத்தாரால் சேர்க்கப்படுகிறதுமில்லை. பரலோகத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. மேலும் அப்போஸ்தலன் கூறுவது போலப் பரலோகத்தில் பேர் எழுதப்பட்ட சர்வ சங்கத்தார் ஆவர். இவர்களின் தலையும் கண்காணிப்பாளரும் கிறிஸ்துவே. இதற்குரிய கட்டளைகள் அவரின் வார்த்தைகளே. மேலும் இவர்களுக்கு ஒரே தேவனும் ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும் கட்டளையிடப்பட்டுள்ளது. அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களின் பேரில் சபை கட்டப்பட்டு, இயேசுவே இதற்கு மூலைக் கல்லாக இருக்கிறார். (எபி. 3:3-6; எபே. 2:19-22)* R 2429:1

## *ஜூலை 9*

***அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்ட பின்பு அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான். ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின் செல்லுகிறது. (யோவா. 10:4)***

*ஒரு நல்ல மேய்ப்பனின் சத்தம் அநேக தொனிகளினால் இணைக்கப்பட்டுள்ளதால், அதைப் போன்ற சத்தத்தை வேறே ஒருவராலும் உண்டாக்க இயலாது. அவருடைய சத்தம் நீதி, அன்பு என்னும் நரம்புகளினால் இசைவாக இணைந்து ஞானம், வல்லமை என்ற நரம்புகளுடன் குரல் ஏற்றப்பட்டுள்ளது. பெரிய மேய்ப்பன், தன் குமாரன் மூலம் கொடுத்த இந்த இனிமையான வார்த்தைகளைப் போல இவ்வுலகின் மக்களோ, சாத்தானோ கொடுக்க முடியாது. மேலும் உண்மையான ஆடுகள் நல்ல மேய்ப்பனின் சத்தத்தை அறிந்திருக்கிறபடியால் அவைகளுக்குச் செவி கொடுத்து அதன்படி நடக்கும். இவைகள் ஒரு போதும் அன்னியச் சத்தத்திற்குத் தங்கள் செவிகளைச் சாய்க்காமல் தீங்குக்கு விலகி இருக்கும். மேலும் "கர்த்தர் என் மேய்ப்பர்; அவரே எனக்கு போதுமானவர்" என்று சொல்லுவார்கள். (யோவா.10:8-15)* R 2672:5

## *ஜூலை 10*

***எல்லாரும் அவருக்கு நற்சாட்சி கொடுத்து, அவருடைய வாயி-ருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள். (லூக். 4:22)***

*உண்மையாகக் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி ஜீவிக்கிறவர்களின் வார்த்தைகளும் இப்படியே இருக்க வேண்டும். இவர்கள் பேச்சு, சத்தியத்தை விரும்பித் தேடுகிற யாவருக்கும், கிருபை பொருந்தினதாகவும், அன்புடன் கூடிய இணக்கமுள்ள, வசனங்கள் நிறைந்ததாகவும், தங்கள் இருதயத்தி-ருந்து புறப்படுகிறதாகவுமிருக்க வேண்டும். இவர்கள் வார்த்தைகள், சுருக்கமாகவும், நீதிக்குட்பட்டதாகவும் கண்டிப்பாகத் தேவனுடைய வசனங்களுக்குட்பட்டதாகவும் இருக்க வேண்டும். இவர்கள் நடத்தைகளும், குணங்களும் அநேகருக்கு முன்பாக நிருபங்களைப் போல் காணப்படவேண்டும். இவர்களை வெறுத்தவர்களும், இவர்கள் அறிவையும் போதகங்களையும் கண்டு ஆச்சரியப்பட்டு இவர்கள் உண்மையாகவே கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்கள் என்று உணரும்படிச் செய்ய வேண்டும். (கொலோ. 4:5-6; 1 பேது.2:12)* R 2437:6

## <u>*ஜூலை 11*</u>

***தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம். தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான். (1 யோவா. 5:18)***

*நம்முடைய இருதயம் (புத்தியும் சித்தமும்) தேவனுக்கு ஏற்றதாகவும், நீதியுள்ளதாகவும், பரிசுத்தமுள்ளதாகவும் இருக்கும் போது, புதிய சிந்தையுள்ளவர்களிடையே பாவம் சற்றும் காணப்படாமல் எப்போதும் அதை எதிர்த்து போராடிக் கொண்டிருக்கும் ஜெனிப்பிக்கப்பட்ட இவர்களிடையே பரிசுத்தாவியே தொடர்ந்து வளரும். இவர்கள் விழுந்துபோன மனிதனின் பல இச்சைகளை எதிர்த்து அநேக போர் புரிய வேண்டியவர்களாயிருக்கின்றனர். புதிய சிருஷ்டிகளான இவர்கள் உலகத்தினின்று பிரிக்கப்பட்டு மாமிச இச்சைகளுக்கும் பலவீனங்களுக்கும் கிறிஸ்து இயேசுவின் மூலம் விலக்கப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்துவின் ஈடுபலியின் மூலம் பாதுகாக்கபட்டுள்ளனர். (எபி. 6:4-6; 1யோவா. 3:7-10; 2பேது. 2:20-21)* R 2440:4

## <u>*ஜூலை 12*</u>

***ஆகையால், குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள். (யோவா. 8:36)***

*உண்மை சீஷனாக இருப்பவர்கள் கிறிஸ்துவின் போதகங்களைக் கேட்டு அவைகளிலே நிலைத்திருக்கும் போது அறியாமையிலும், மூட பக்தியிலிருந்தும் விடுதலை பெற்றவனாக மட்டுமல்ல, பாவ செய்கைகளிலுமிருந்து விடுதலை பெறுகிறார்கள். தேவ சித்தத்தை, சத்தியத்தின் மூலம் இவர்கள் அறிந்திருக்கிறதினால் தங்கள் பெலவீனங்களை உணருவார்கள். இதனால் இவர்களுடைய விடுதலை இவர்களுக்கு ஆசீர்வாதமாகவே காணப்படுமேயல்லாமல் ஒருபோதும் இடையூறை வருவிக்காது. இவர்கள் தங்களைக் குறித்து பெருமை பாராட்டாமல் மனத்தாழ்மையுள்ளவர்களாயிருப்பார்கள். கோபங்கொள்ளமல் பொறுமையாயிருப்பார்கள். தன்னிச்சை உள்ளவர்களாயிராமல் உதார குணமுள்ளவர்களுமாயிருப்பார்கள். கசப்பும், அதிருப்தியும் உள்ளவர்களுமாயிராமல் சந்தோஷமும் சமாதானமுமாயிருப்பார்கள். உண்மையாக தேவனுடைய குமாரனே நம்மை சகல இக்கட்டுகளி-ருந்தும் நீக்கி விடுதலையைக் கட்டளையிடுவார். (கலா. 3:26-29; கொலோ. 3:11-15)* R 2440:2

## *ஜூலை 13*

***சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே. ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக் கொண்டால் அது ஆச்சரியமல்லவே. (2 கொரி. 11:14-15)***

*சாத்தான் எவ்விதம் ஒரு நல்ல காரியத்தைச் செய்ய உற்சாகமுள்ளவனாக இருப்பான்? என்ற கேள்விக்கு நாம் விடை கூற வேண்டுமானால், இவன் ஒளியின் தூதனின் வேஷத்தை தரித்துக் கொண்டு வேதாகம சத்தியங்கள் அறியும்படியும் அல்ல, கிறிஸ்துவின் சிலுவை அண்டையிலும் அல்ல, ஆனால், இவைகளுக்கு மாறாக வேறொரு இரட்சிப்பின் திட்டத்தை கள்ளப் போதகர்களிடம் பெற்றுக் கொள்ள வழி நடத்துவான். கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிப்பான். நம் இரட்சகர் உரைத்த வார்த்தைகளின்படி சாத்தானை சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாக பிரிவினை செய்தால், அவன் ராஜ்யம் எப்படி நிலை நிற்கும். இதுவே அவன் இறுதி வீழ்ச்சி என்று அறிகிறோம். (மத். 12:23-28; 2 தெச. 2:3-4)* R 2669:6

## *ஜூலை 14*

***சகல விதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்றெந்த துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. (எபே. 4:31)***

*இந்தக் காரியங்களைக் குறித்துச் சிந்திக்கும் போது கிறிஸ்தவ ஜீவியம் செய்பவருக்கு தேவனுடைய பார்வையில் ஒருவரை வெறுப்பது என்பது கொலை என்றும், அவதூறு பேசுவது என்பது வஞ்சகம் செய்து கொலை செய்வதாகவும், அயலானை தூஷிப்பது என்பது கொள்ளையிடுவதற்கு ஒப்பாகவும் இருக்கிறபடியால், தேவனுடைய பிள்ளைகள் இவைகளை நடப்பிப்பது அதிக தீமையானது ஆகும். "ஒருவனையும் தூஷியாதே" என்ற வார்த்தை, இவர்கள் உள்ளத்தின் நினைவாக இருக்க வேண்டும். மாயமற்ற அன்பும், இரக்கமும், மனத்தாழ்மையுமே நம் இருதயத்தில் நிறைந்திருக்க வேண்டும். இவைகளினாலே ஒருவன் எச்சரிக்கப்படாதிருந்தால் அவன் தன்னைத்தான் வேதனைக்கு உட்படுத்தி பாவத்தில் விழ ஏதுவாகும். (எபி. 12:11-17)* R 2444:6; 2445:1

## *ஜூலை 15*

***எனக்குண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும் ..... அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை. (1 கொரி. 13:3)***

*தேவ ஊழியத்தில் ஈடுபடுகிற நாம் பணத்தின் மூலம் காரியங்களை நிறைவேற்ற முடியும் என்று நினைப்பது மிகவும் தவறானது ஆகும். அன்பும் மன இரக்கமுமே மிக முக்கியமானது. நம் இரட்சகரான இயேசு இந்தக் குணலட்சணத்தை உடையவராக இருந்தார். அவர் இருதயம் அன்பினாலே நிறைந்து மிகத் தாழ்ந்தவரிடமும் தன் அன்பைக் காட்டி அவர்களோடு பழகினார். இந்த அன்பை மரியாளிடமும் காட்டி அவள் அன்பைப் பெற்றார். (அன்பு திரளான பாவங்களை மூடும். அன்பில்லாதவன் தேவனையுடையவனல்ல. தேவன் அன்பாகவே இருக்கிறார். நம்முடைய இரட்சகர் நமக்காகத் தன் ஜீவனைக் கொடுத்ததினால் அன்பு இன்னதென்று நாமும் அறிந்திருக்கிறோம். தன் சகோதரினிடம் ஒருவன் காட்டும் அன்பு இவ்விதம் இருக்க வேண்டும். இது நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதல்). (1 கொரி. 13:4-13)* R 2448:3

## *ஜூலை 16*

***ஆவியிலே நிறைந்திருங்கள். (எபே. 5:18)***

*எந்த அளவிற்கு சுயத்தின் ஆவி நம்மில் இருந்து நீக்கப்படுகிறதோ, அந்த அளவிற்கு நாம் ஆவியில் நிரப்பப்படுவதும் நிகழ்கிறது. கீழ்ப்படிதலும், விசுவாசமும் உள்ள ஆவியினாலே நிரப்பப்படுவோம். தேவனுக்கென்று தங்களைத் தத்தம் செய்தவர்களிடம் கீழ்ப்படித-ன் ஆவியையே தேவன் எதிர்பார்க்கிறார். தேவன் பேரில் முழு விசுவாசமுள்ளவர்களே அவருக்குப் பிரியமானவர்கள். இவர்கள் புது ஆவியைப் பெற்றுத் தங்களைச் சுத்திகரித்துக் கொண்டு, தங்கள் வார்த்தைகளினால் மட்டுமல்ல, சிந்தனைகளிலும் செய்கைகளிலும் ஆவியிலே நடத்தப்படுவார்கள். (ரோம. 15:13-16)* R 2456:2

## ஜூலை 17

***உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர். (ஏசா. 26:3)***

*இந்தச் சமாதானம் உலகம் தரும் சமாதானம் அல்ல. தற்கா-கமானதும் அல்ல, தன்னலமுள்ளதுமல்ல. இது தேவப்பிள்ளைகளுக்குக் கிறிஸ்துவின் மூலம் அருளப்பட்ட சமாதானம் ஆகும். மேலும், என் சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன் என்றார். இந்த தேவ சமாதானம், கிறிஸ்துவின் மூலம் சிலருக்கு எக்காலத்திலும், சில நிபந்தனைகளின் பேரில் கொடுக்கப்பட்டுள்ளது. விசுவாசிகள் தேவ ஞானத்தையும், அன்பையும், நீதியையும், வல்லமையையும் உணர்ந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைக் கிருபையாய் நினைவு கூறும் சமாதானம். தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாய் இருக்கும்படிக்கு விசுவாசத்தின் மூலம் இது அருளப்பட்டது. கிறிஸ்துவின் மூலம் தேவன் பேரில் பற்றுதலாய் நடப்பவர்களுக்கு இக்காலத்து பாடுகள், கண்ணீர்கள் யாவும் பிற்கால மகிமையை தரப்போகிறது என்ற நம்பிக்கையின் சமாதானத்தைப் பூரணமாகப் பெற்றிருப்பார்கள். (ஏசா. 48:17-19; ரோம. 5:1-5)* R 2456:6

## ஜூலை 18

***கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக ....... துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும் தேவப் பிரியராயிராமல் சுகபோகப் பிரியராயிருப்பார்கள். (2 தீமோ. 3:1-4)***

*உண்மைக் கிறிஸ்தவன் தன் வாழ்க்கையிலே துணிகரமுள்ளவனாக இருக்க மாட்டான். இதற்கு மாறாகத் தன்னைத் தேவனுக்கென்று தத்தம் செய்ததால், தலை வணங்கி நடப்பான். தன் சொந்த சித்தத்தை விட்டு தலையாகியக் கிறிஸ்துவுக்குள் சரீரத்தின் அங்கமாக அடங்கி நடப்பான். சகல இன்பத்திலும், துக்கத்திலும், பாடுகளிலும், தலையாகிய கிறிஸ்துவிடம் மன்றாடி அவருடைய நடத்துதலுக்குத் தன்னை ஒப்புக் கொடுத்து தான் என்ன பேச வேண்டும் என்றும், என்ன செய்ய வேண்டும் என்றும் காத்திருப்பான். தன் பூரண சிந்தையைக் கிறிஸ்துவின் மூலம் தேவ சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்து, தேவனுக்குப் பிரியமுள்ளவர்களாக ஜீவிப்பார்கள். (1தீமோ. 4:1-5; 5:6-8)* R 2461:1

## ஜூலை 19

***பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ. (யோவா. 18:11)***

*நம்முடைய இரட்சகர் தம் ஊழியத்தில் எவ்வளவு பணிவுள்ளவராக இருந்தார் என்பதை சிறு சிறு காரியங்களிலும் வெளிப்படுத்திக் காண்பித்தார். பகைவரிடம் தம்மை ஒப்புக் கொடுக்கும் போதும் தம்மை பெரியவராகவோ அல்லது இரத்தச் சாட்சியாக மரிப்பதால் பெருமை பாராட்டுகிறவராகவோ தன்னை வெளிப்படுத்தவில்லை. இதற்கு மாறாக, தாம் தேவனுடைய ஊழியக்காரன் என்றும், இப்படிப்பட்ட உபத்திரவத்தின் மூலமாகத் தாம் பொறுமையை கற்றுக் கொண்டதாகவும் அறிக்கையிட்டார். கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொருவருக்கும், பிதா கொடுக்கும் பாத்திரத்தில் பானம் பண்ண வேண்டும் என்பதைக் காட்டிலும் வேறொரு பாடம் தேவையாக இருக்க முடியாது. அதன் மூலம் பிதா நம்முடைய காரியங்களில் நம்மை வழி நடத்துகிறார் என்றும், நாம் அவருடையவர்களாய் இருக்கிறோம் என்றும் உறுதிப்படுத்துகிறோம். (1 கொரி. 11:25-29; ரோம. 8:16-18)* R 2468:6; 2780:5

## ஜூலை 20

***நான் மெய்யான திராட்சைச் செடி, என் பிதா திராட்சைத் தோட்டக்காரர், என்னில் .......... கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி அதைச் சுத்தம் பண்ணுகிறார். (யோவா. 15:1-2)***

*நல்ல கனியைக் கொடுக்கக்கூடிய திராட்சைக் கிளைகளும் கூட, அது அதிகக் கனிகளைக் கொடுக்கும்படி சுத்திகரிக்கப்பட வேண்டும். அது போல உண்மையும், ஊக்கமுள்ள தேவனுடைய பிள்ளைகளும் கூட தேவனாலே சுத்திகரிக்கப்பட வேண்டும். இதன் மூலமே அவர்கள் நற்கனிகளை தரக்கூடியவர்களாகக் காணப்பட முடியும். இல்லையேல் வழி தவறிக் கனிகளைக் கொடாதவர்களாக மாறிப்போக வாய்ப்புண்டு. தேவ சித்தத்திற்கு முற்றிலும் ஒப்புக் கொடுத்த தேவ பிள்ளைகள், இப்படிப்பட்ட சுத்திகரிப்பினால் சோர்வடைய மாட்டார்கள். தேவ சித்தப்படி தாங்கள் நினைத்த காரியம் கை கூடாமல் போகும் போது அதிர்ச்சி கொள்ளாது, சந்தோஷமாக அதை ஏற்றுக் கொள்வார்கள். அதோடு அது தேவனுக்குச் சித்தமல்லாத காரியம் என்றும் உணர்ந்து கொள்வார்கள். (எபி. 12:5-11; வெளி. 3:19)* R 2465:3

## *ஜூலை 21*

***இதற்காகவே, இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான். (யோவா. 18:37)***

*நம் இரட்சகர் சத்தியத்தின் மேல் கொண்டிருந்த விசுவாசமே, சாத்தானால் குருடராக்கப்பட்டவர்கள் அவர் பேரில் பொறாமை கொள்ளச் செய்தது. அவர் சத்தியத்திற்குச் சாட்சி கொடுத்ததினால், தன் ஜீவனையும் இழக்க நேர்ந்தது. இதே போல அவரைப் பின்பற்றும் ஒவ்வொருவரும், சத்தியத்திற்காகச் சாட்சி கொடுக்க வேண்டியவர்களாகவே அழைக்கப்பட்டுள்ளனர். தேவனையும், அவர் திட்டங்களையும் குறித்துச் சாட்சி சொல்பவர்கள், கிறிஸ்துவைப் போல தங்களை ஜீவ பலியாக ஒப்புக் கொடுத்து, அது பரிசுத்தமுள்ள பலியாக தேவனால் அங்கீகரிக்கப்பட வேண்டும். கிறிஸ்துவுடன் ஆட்சி புரிய விரும்பும் ஒவ்வொருவரும், அவர் சத்தத்தைக் கேட்டு ராஜ்ய ஊழியத்தில் ஈடுபடுவது அவசியமானது. (யோவா. 17:11-20)* R 2471:6

## *ஜூலை 22*

***நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார். நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்; கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார். (சங். 34:18-19) நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான். (நீதி. 24:16)***

*சில சந்தர்ப்பங்களில் நாம் தவறான பாதையில் செல்லும் போது இதனால், பல ஏமாற்றங்களையும், பல துன்பங்களையும் அடைய நேரிடும். இத்துன்பங்கள் நம்மேல் அனுமதிக்கப்பட்டாலும், இவைகளி-ருந்து தப்பும் மார்க்கத்தையும், இதனால் சில ஆசீர்வாதங்களையும் தேவன் நமக்குக் கட்டளையிட்டு நம் குற்றங்களை நாம் உணரும்படி செய்கிறார். இதன் மூலம் எதிர்காலத்தில் நாம் எச்சரிக்கப்பட்டு முழு ஊக்கத்தோடும், விழிப்போடும், விசுவாசத்தோடும் ஊழியம் செய்ய நடத்தப்படுகிறோம். இவ்விதம் நீதிமானுக்கு ஏற்படும் சில தவறுகளினால் சிட்சையைப் பெற்று, இவைகள் படிக்கல்லைப் போல் சத்திய மார்க்கத்தில் முன்னேற உதவுகிறது. (2 தீமோ.3:12-17)*
R 3223:5

## ஜூலை 23

***ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுத-த்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான். (1 தீமோ. 5:8)***

*விசுவாசம் என்பது அன்பு, இரக்கம், பிறனுக்காக, விசேஷமாக விசுவாச வீட்டாருக்காகவும் கவலைப்படுதல் ஆகியவைகளையும் குறிக்கும். நம்முடைய இரட்சகர் உபத்திரவத்தில் மூழ்கினவராகக் காணப்பட்டும், மற்றவர்களுக்கு உதவி அளிக்க அவருக்குள் இருந்த உற்சாகம், அவருடைய இரக்கக் குணத்தைக் காட்டுகிறதாக உள்ளது. தன் வேதனையிலும், தன் தாய்க்காகக் கவலைப்பட்டு ஆறுதலைத் தந்தார்.இதற்காக யோவானை அவர் தெரிந்தெடுத்ததைப் பார்க்கிறோம். இதற்கு காரணம், அவன் அன்பில் நிறைந்து கிறிஸ்துவைப் பின்பற்றினான். மேலும், சத்தியத்திற்காகவும், தமக்காகவும் உழைக்க ஆர்வம் கொண்டிருந்தான். கடைசியாக மரணபரியந்தம் தன் ஜீவனையும் பாராமல் அவர் அருகே நின்றான். இப்படிப்பட்டவர்களே தேவனால், கிறிஸ்துவின் மூலம் நற்சாட்சி பெறமுடியும். (1 கொரி. 6:1-8)* R 2474:6

## ஜூலை 24

***நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. (யாக். 5:16)***

*தேவனோடு நாம் ஜெபத்திலே உரையாடுவது நமக்கு தேவன் பேரில் நம்பிக்கையை உண்டாக்கி நம் காரியங்களை அவர் மேற்பார்வையிட்டு வருகிறார் என்ற நம்பிக்கையைத் தரும். மேலும் அவருடைய வாக்குத்தத்தத்தின் பேரில் வைக்கும் விசுவாசம், கடந்த காலத்திலும், தற்போதும் நம்மை வழி நடத்துகிறார் என்றும், நம் சுகத்திலும் தேவ ஊழியத்திலும் அதிக அக்கரையுள்ளவராக இருக்கிறார் என்றும் விசுவாசிக்கச் செய்யும். ஜெபம் நம்மை ஆவிக்குரிய காரியங்களில் முன்னேறச் செய்யும். ஆவியின் கனிகளை அதிகமாக செய்து தேவனிடமும், சகோதரரிடமும், சகல மனிதரிடமும் அன்பைக் காட்டி விசுவாசத்திலே நிலைத்திருக்கச் செய்யும். (2 ராஜா. 20:1-6; 1 தீமோ. 2:1-4)* R 2692:1

## *ஜூலை 25*

***நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர் ஒருவரே, அவரே இரட்சிக்கவும், அழிக்கவும் வல்லவர்; மற்றவனைக் குற்றப்படுத்துகிறதற்கு நீ யார்? (யாக். 4:12)***

*இந்த வசனத்திற்கிணங்க பவுல் அப்போஸ்தலன் ஓரிடத்திலே இந்த உலகமோ, அல்லது எந்த சகோதரனோ தன்னை நியாயந்தீர்க்க முடியாதென்று கூறி சகல இருதயங்களையும் ஆராய்ந்து, அறிந்து சகலரின் பெலவீனங்களை உணர்ந்து, பல சோதனைகளில் ஈடுபட்டிருப்பதை காணக்கூடிய தேவன் ஒருவரே தன்னை நியாயம் விசாரிக்கிறவர் என்று கூறினான். மேலும் "நானும் என்னைக் குறித்துத் தீர்ப்பு செய்கிறதில்லை" என்றார். (1 கொரி.4:3) நாம் நம்மையோ அல்லது மற்றவர்களையோ நியாயந்தீர்ப்பது நல்லதல்ல என்பதற்கு இது ஒரு நல்ல போதகமாக உள்ளது. நாம் நாளுக்கு நாள் நம் ஊழியத்தில் முன்னேறி, தேவனுடைய கிருபையைப் பெற்றவர்களாக சகலத்தையும் செய்து, முடிவை தேவனுடைய கரத்திற்கு ஒப்புக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். (ரோம. 12:16-19)* R 2480:2

## *ஜூலை 26*

***ஜெயங் கொள்ளுகிறவனுக்கு ....... அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்-ன் மேல் எழுதப்பட்டதும், அதைப் பெறுகிறவனேயன்றி, வேறொருவனும் அறியக் கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன். (வெளி. 2:17)***

*ஜெயங்கொள்ளுகிறவன் சகலத்தையும் கிறிஸ்துவுக்காக அர்ப்பணிக்க வேண்டும். கிறிஸ்துவின் அன்பைப் பெற்று அவரில் நிலைத்திருக்க இது அவசியமானது. இப்படிப்பட்ட பரீட்சை, நாளுக்கு நாள் அவருடையவர்களுக்கு அதிகரித்து, உலகத்தை முற்றிலும் வெறுக்கச் செய்து, பரலோக வாஞ்சையை அதிகரிக்கும். மேலும் தங்களை தேவனுக்கென்று தத்தம் செய்த ஒவ்வொருவரும் இப்படிப்பட்ட சோதனைகள் தங்களுக்கு வரும் என்று அறிந்து கொள்ள வேண்டும். உலகமும் அதன் ஆசை, இச்சைகள் யாவும் முற்றிலும் சிலுவையில் அறையப்பட்டு, இவைகளில் வெற்றி காண்பதே, அவர் பேரில் நாம் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தும். (1 கொரி. 15:57-58; வெளி.3:12)* R 2480:6

## ஜூலை 27

***நாம் இந்த தானியேலை அவனுடைய தேவனைப் பற்றிய வேத விஷயத்திலே குற்றப்படுத்தும் முகாந்திரத்தைக் கண்டுபிடித்தாலொழிய, அவனை வேறொன்றிலும் குற்றப்படுத்தும் முகாந்திரத்தைக் கண்டுபிடிக்கக் கூடாது. (தானி. 6:5)***

*தானியேலைப் போல சகலரும் ஆவியினாலே நடத்தப்படவில்லை. சகலருக்கும் தானியேலுக்கு அருளப்பட்டது போல தரிசனங்களும், காட்சிகளும், விளக்கங்களும் கொடுக்கப்படவுமில்லை. ஆனால், சகலருக்கும் நீதியை பெற்றுக் கொள்ள ஒரே விதமான தெய்வீக ஆவி அருளப்பட்டு நம்முடைய இரட்சகரின் அடிச்சுவடுகளில் நடந்து இடுக்கமான பாதையில் நாளுக்கு நாள் முன்னேற அழைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இதனிமித்தமாக அழைக்கப்பட்டோர் யாவரும் தானியேலைப் போல தைரியங்கொண்டு தீமைக்கு விலகி நீதியை நடப்பிப்போமாக. (சங்.118:4-9)* R 2494:4

## ஜூலை 28

***நீதியினிமித்தமாக நீங்கள் பாடுபட்டால், பாக்கிவான்களாயிருப்பீர்கள். (1 பேது.3:14)***

*தேவனுக்குப் பிரியமாயிருக்க விரும்பி சத்தியத்தைக் கைக்கொண்டு நடக்கும் போது, அநேகரால் வெறுக்கப்படுவோம். இதனால் மட்டுமே நாம் நீதியினிமித்தம் துன்பப்படுகிறோம் என்று எண்ண வாய்ப்புண்டு. அப்போஸ்தலன் இங்கே குறிப்பிடுவது போல சிலர் தீமையானதை செய்து துன்பப்படலாம். சிலர் மற்றவர்களின் காரியங்களைப் பேசி புறங்கூறி, ஞானமாய் நடவாமல் தேவ புத்திமதிகளைக் கவனியாமல் நடந்து, பாடுகளை உலகப் பிரகாரமாக அனுபவிக்கலாம். இது நீதியினிமித்தமான பாடுகள் அல்ல. நாம் தேவ சித்தத்தை அறிந்தவர்களாக மட்டுமல்ல. நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும், சூழ்நிலைக்கு தக்கதாக தெய்வீக அங்கீகரிப்புக்குரியதா என்றும் உணர்ந்து செய்ய வேண்டும். இதன் மூலம் நமக்குச் சில கஷ்ட நஷ்டங்கள் ஏற்படினும், அவருடைய நடத்துதலுக்காக பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். (1 பேது. 2:19-23; மத். 5:11-12)* R 2493:3,6

## ஜூலை 29

***நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். (தானி. 3:17)***

*தேவ நடத்துதலில் பல வித்தியாசங்கள் உண்டு. தேவப்பிள்ளைகள் தங்களைச் சில காரியங்களில் விடுதலையாக்குவார் என்றோ அல்லது கை விட்டுவிடுவார் என்றோ சிந்திக்கவேண்டுவது அவசியமல்ல. சில சந்தர்ப்பங்களில் சத்தியத்தை அறிவிக்கக்கூடாமல் கட்டப்பட்டு உதாரணமாக அந்த மூன்று எபிரேயப்புருஷர்களைப் போல் கட்டுப்பட்டு இருக்கும் போது அவர்களுடைய உறுதியான விசுவாசம் அறிக்கையிடப்பட்டு, அதன் மூலம் இவர்கள் கட்டுக்கள் விலகி தேவனை இன்னும் அதிகமாக கிட்டிச்சேரவும், அவர் மகிமையை வெளிப்படுத்தும்படி அதிக உற்சாகத்தையும் பெறும்படி செய்து, தேவ நடத்துதல் இவ்விதம் தான் இருக்க வேண்டும் என்று நாம் நிர்ணயிக்காமல், சகலத்தையும் அவருக்கு ஒப்புக் கொடுத்து அவர் காரியங்களில் அவரே நம்மை நடத்த விரும்ப வேண்டும். அவரே நம்மை நடத்த வல்லவர். (1 கொரி. 1:9-10; மத். 10:17-20)* R 2496:3

## ஜூலை 30

***திராட்சைத் தோட்டங்களைக் கெடுக்கிற குழி நரிகளையும், சிறு நரிகளையும் நமக்குப் பிடியுங்கள். (உன்னத. 2:15)***

*உலகத்தை விட்டுப் பிரிந்து வேறுவிதமாக ஜீவிப்பதால் நமக்கு என்ன பிரயோஜனம்? என்று தங்களைத் தேவனுக்கென்று தத்தம் செய்த சிலர் நினைப்பதுண்டு. உலகத்தை விட்டுப் பிரிந்திருப்பதில் அநேக நன்மைகள் உண்டு. சிறு காரியங்களில் நாம் வெற்றி பெறுவது பெரிய ஆசீர்வாதத்திற்கு நம்மை வழி நடத்துகிறது. இதற்கு மாறாக மாமிச இச்சைகளுக்கு நம்மை ஒப்புக் கொடுப்போமேயானால், சாத்தான் நம்மை மேற்கொள்ளுவது நிச்சயம். புதிய சிருஷ்டிகளாக எண்ணப்பட்ட யாவரும், தேர்ச்சி பெற சில பரீட்சைகளுக்குட்பட வேண்டியது அவசியமானது. இவர்கள் தங்களை முற்றிலும் அடக்கி, சுய சித்தத்தை அல்ல, தேவ சித்தத்தை சகலத்திலும் நிறைவேற்றவே பிரயாசப்பட வேண்டும். இதன் மூலமே ஆவியில் பலப்பட்டு, வெற்றி அடைந்தவர்களாகக் காணப்பட முடியும். (1 பேது. 4:12-14; 2 கொரி. 4:17-18)* R 2496:6

## ஜூலை 31

***அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும். (1 கொரி. 3:13)***

*இங்கு அப்போஸ்தலன், ஒரு கிறிஸ்தவனின் விசுவாசத்தையும், அவன் கிரியைகளையும், பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல் முதலியவைகளால் கட்டப்பட்ட வீட்டிற்கு ஒப்பாகவும், இவைகளைச் சோதித்தறியும் அக்கினி தற்கால சோதனைகள் என்றும் ஒப்பிட்டுப் பேசுகிறார். இக்காலத்து சோதனைகளில் நிலைத்திருப்பவர்களே, அந்த அக்கினிக்கு இரையாகாமல் இருப்பார்கள். இத்தகைய மேன்மையான விசுவாசம், காளானைப் போல ஒரே நாளில் உண்டாகாமல் ஒலிவ மரம் உறுதியாக்கப்படுவது போல படிப்படியாக, நீண்டகாலம் வளர்ச்சியடைவதாகும். (மல்கி.3:1-3)* R 2496:5

## ஆகஸ்ட் 1

***மரணமும், ஜீவனும் நாவின் அதிகாரத்தி-ருக்கும். (நீதி. 18:21)***

*நாவானது சரீரத்தின் எல்லா அங்கங்களிலும் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. தேவ சேவையில் ஈடுபடும் ஒவ்வொருவரும் தங்கள் நாவை அடக்கி ஆளுவது ஒரு முக்கியமான வேலையாகும். சில சந்தர்ப்பங்களில் அன்பான வார்த்தைகளும், இரக்க குணமும், பிறருக்கு உதவி செய்வதும் எவ்வளவாக ஒருவர் ஜீவியத்தை மாற்றியுள்ளது என்பதை நாம் அறியலாம். அதே சமயத்தில் அன்பற்ற வார்த்தைகள், பொறாமையான பேச்சுக்கள், புறங்கூறுதல் போன்றவை எத்தனை தீமைகளை வருவிக்கிறதென்பதையும் அறியலாம். ஒரு ராஜ்யத்தையே அழிவுக்குட்படுத்தக் கூடியது. அப்போஸ்தலன் கூறுவது போல "நாவானது ஆயுள் சக்கரத்தைக் கொளுத்தி விடுகிறதாயும், நரக அக்கினியினால் (இரண்டாம் மரணம்) கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது." (யாக். 3:2-8)* R 2447:4

## ஆகஸ்ட் 2

***நம்மை உண்டாக்கின யேகோவாவுக்கு முன்பாக நாம் பணிந்து, குனிந்து முழங்காற்படியிடக் கடவோம் வாருங்கள். (சங். 95:6)***

*கிறிஸ்தவ வாழ்க்கையில் தேவனுக்குப் பிரியமாகவும், நேர்மையாகவும் நாம் நடக்க முடியாதென்று நாம் நமக்குள் நினைக்கக்கூடும். பொன்னைப் போலவும், வெள்ளியைப் போலவும் விசுவாசம் காணப்பட நாம் முழங்காற்படியிட்டு ஜெபத்திலே நிலைத்திருப்பது அவசியமானது. அவரே, நம்மை உண்டாக்கினார் என்பதை உணர்ந்து, நம்மை உண்டாக்கினவர் நம்மை நடத்துவார் என்ற விசுவாசத்துடன் அவரிடம் சேரவேண்டும். ஜெபத்திலே நாம் அவருடன் நெருங்கி வாழும் போது, நல் நடக்கை உள்ளவர்களாக ஜீவிக்க முடியும். (ஏசா. 45:22-24)* R 2501:6

## ஆகஸ்ட் 3

***தேசத்தின் ஜனங்களையும், மறு ஜாதியான ஸ்திரிகளையும் விட்டு விலகுங்கள். (எஸ்றா 10:11)***

*உண்மை கிறிஸ்தவர்கள் இவ்வுலகில் சமுத்திரத்தில் இருக்கும் ஒரு கப்பலுக்கு ஒப்பாவார்கள் என்றும், அந்த சமுத்திரம் கப்பலுக்குள் போகாதிருக்கும் வரை அது ஆபத்துக்குள்ளாகாதென்றும், ஒருவர் சரியாகக் கூறியிருக்கிறார். தற்கால கிறிஸ்தவ சமுதாயம் உலகில் அன்னியரை அனுமதித்து, பேர் கிறிஸ்தவர்களாக மாற்றி கிறிஸ்தவ சமுதாயத்திற்கே கேடு விளைவித்துள்ளது. உண்மை வணக்கத்தை இவர்கள் விலக்கி பல தவறுகளை நுழைத்து ஆதி கிறிஸ்தவர்களின் போதகங்கள், உண்மை வணக்கங்கள் யாவையும் மாற்றிவிட்டார்கள். புறஜாதி மக்களோடு சம்பந்தம் கலப்பதும், அவர்கள் மத்தியில் இருப்பதும், தேவனால் விலக்கப்பட்டது. (2 கொரி. 6:14-18)* R 2512:4

## ஆகஸ்ட் 4

***கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டை பண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதக சமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும். எதிர்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி..... (2 தீமோ. 2:24,25)***

*தேவ ஜனங்களில் சிலர் சத்தியத்தைப் பிறருக்கு எடுத்துரைத்து வரும் போது சில காரியங்களில் அதிக அளவுக்கு சுய நம்பிக்கையுள்ளவர்களாகப் பேசி தேவ பெலனை நம்பாமல் தங்களையே நம்பி இதனால் பல தீமைகளைத் தங்களுக்கு வருவித்துக் கொள்வதுண்டு. சாந்தகுணம் தேவனுடைய பார்வையில் ஓர் ஆபரணம். சத்தியத்துடன் இது இணைக்கப்பட்டது. சத்தியத்தை நாம் பேசும் போது எவ்வளவு பலத்துடன் பேசினாலும், கோபங் கொள்ளாமல் சாந்தத்தோடும், பணிவோடும் தேவன் பேரில் நம்பிக்கை உள்ளவர்களாகப் போதிக்க வேண்டும். கேள்வி முறையிலான போதனை மிகவும் பலமுள்ளதாக காணப்படுகிறது. (1 தீமோ. 3:2-7)* R 2559:3

## ஆகஸ்ட் 5

***அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நம்மைக்கேதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். (ரோம. 8:28)***

*இந்தக் காரியத்தை நினைவில் கொண்டு தேவனுடைய பிள்ளைகள் தங்களுக்கு உண்டாகும் கஷ்ட நஷ்டங்களை தேவசித்தம் என்று எண்ண வேண்டும். சகலத்திலும் திருப்தி உள்ளவர்களாக இவை யாவும் நன்மைக்கென்றே இருக்கும் என்று உணர்ந்து தேவனுக்கு விரோதமாக ஒரு போதும் முறுமுறுத்தல் கூடாது. ஒரு வேளை தேவன் இப்படிப்பட்ட காரியங்களின் மூலமாக நம்மைச் சீர்திருத்தி அவர் சேவைக்குரியவனாக மாற்றச் சித்தம் கொண்டிருக்கலாம். நாம் நம்முடைய குறைகளை நிதானித்து அறியத் தகுதியற்றவர்கள் என்பதை நாம் முதலாவது உணர வேண்டும். அது போலவே தேவசித்தத்தை அறியவும் நாம் தகுதியற்றவர்கள் என்பதை நினைவில் கொண்டு இப்படிப்பட்ட காரியங்கள் நமக்குச் சம்பவிப்பது நாம் அவருடையவர்களாயிருக்க இது யாவும் தேவசித்தம் என்று அறிய வேண்டும். (எபே. 1:4-12)* R 2562:6

## ஆகஸ்ட் 6

***தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான். (யாக். 4:7)***

*சோதனைக்கு நாம் நம்மை விலக்கி அதற்கு எதிர்த்து நிற்போமாகில் நாம் நற்குணத்தில் அதிகமாகப் பலப்பட முடியும். இது அந்த நேரத்தில் மாத்திரமல்ல, தொடர்ந்து நமக்கு ஏற்படும் சோதனைகளிலும் நம்மை பலப்படுத்தும். இதனால் நம் எதிராளியான சாத்தானை நாம் மேற்கொள்ளவும் முடியும். நாம் அவனுடைய சோதனைகளுக்கு இடம் கொடுப்போமாகில் அவன் நம்மை ஜெயித்தவனாக இருப்பான். அப்போஸ்தலர் கூறுவது போல, "அவனுடைய தந்திரங்கள் நமக்கு தெரியாததல்லவே." அவன் வஞ்சகமுள்ள எதிராளி. தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய வார்த்தைகளுக்குச் செவி கொடுத்து, அதற்கே அடிமைகளாக இருக்க முற்றிலும் பிரயாசப்பட வேண்டும். (1 பேது. 5:7-10)* R 2567:3

## ஆகஸ்ட் 7

***ஒருவன் மல்யுத்தம் பண்ணினாலும், சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடி சூட்டப்படான். (2 தீமோ. 2:5)***

*நம்முடைய இரட்சகர் பிதாவின் காலங்களையும், நேரங்களையும் அறிந்தவராக இருந்தார். எந்த நேரத்திலும் பகைவர் கைகளில் தன் ஜீவனை ஒப்புக் கொடாமல் தீர்க்கதரிசிகள் மூலமாக தான் அறிந்து கொண்டபடி பிதாவினால் குறிக்கப்பட்ட நேரம் வரை விலகி இருந்தார். ஏசாயாவினால் உரைக்கப்பட்டபடி வீதிகளில் கேட்கும்படி உரத்த சத்தமிட்டு ஜெபிக்கவுமில்லை. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ராஜ்யத்திற்குரியவர்களைப் பிதாவின் திட்டப்படி நியாயமாக ஞானத்தோடு உலக மக்களிடமிருந்து தெரிந்தெடுத்தார். பரிசை பெற ஓடுகிறவர்கள் இவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி அவருடைய ஆவியினால் அதிகமாக நிரப்பப்பட வேண்டும். (1 கொரி. 9:24-27)* R 3070:5

## ஆகஸ்ட் 8

**ஒரு வீட்டில் பிரவேசிக்கிற போது: இந்த வீட்டிற்குச் சமாதானம் உண்டாவதாகவென்று முதலாவது சொல்லுங்கள். சமாதான பாத்திரன் அங்கே இருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவனிடத்தில் தங்கும், இல்லாதிருந்தால் அது உங்களிடத்திற்குத் திரும்பி வரும். *(லூக். 10:5-6)***

*தற்போது அறுப்பின் ஊழியத்தில் ஈடுபடும் ஒவ்வொரு ஊழியனும் இயேசுவின் இவ்வார்த்தைகளை நினைவில் கொள்ள வேண்டும். இயேசுவின் பிரதிநிதிகள் செல்லும் இடத்தில் முதலாவதாக சமாதானம் தங்க வேண்டும். குழப்பங்களும், வம்பும், வீண் பேச்சுக்களும் இருக்கலாகாது. சத்தியத்தின் பட்டயம் சில எதிர்ப்புக்களை உண்டாக்கும். ஆனால், சத்தியத்தினால் மட்டுமே எதிர்ப்புக்களைத் தெரிவிக்க வேண்டுமேயல்லாமல், கசப்பான வார்த்தைகளினாலல்ல. ஊழியர்களின் பணியில், அநேக காரியங்கள் இவ்வுலகில், கோபமூட்டக் கூடிய அளவில் உருவாகும். சத்திய ஆவியைப் பெற்ற ஒவ்வொருவரும் சத்தியத்தினாலே பலப்பட்டிருந்து, அன்போடு கூடிய பொறுமையுடன் கிறிஸ்துவின் மூலம் சமாதானத்தையே பேச வேண்டும். (ரோம. 10:13-17)* R 3347:6

## ஆகஸ்ட் 9

**உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்! *(மத். 6:23)***

*அறுப்பின் காலம் என்பது கோதுமை மணிகளை பிரித்தெடுத்து, தூற்றுதல் நிறைந்த காலம். இதனால் நாம் ஒவ்வொருவரும், நம் உண்மையான குண இலட்சணங்களை வெளிப்படுத்துகிறோம். சகலத்தையும் செய்தவர்களாக நிற்கும் போது, யூத யுகத்தின் கடைசியில் நடந்தது போலவே, இந்த அறுப்பும் இருக்கும். இந்த பரீட்சையில் சம்பவிக்க வேண்டியவைகளில் ஒன்று சிலுவை, மற்றொன்று கிறிஸ்துவின் பிரசன்னம், மற்றொன்று தாழ்ச்சி, கடைசியாக அன்பு. மேசியாவின் வருகையின் காலத்தை யூதர்கள் அறியாம-ருந்ததால், கடிந்து கொள்ளப்பட்டார்கள். தற்கால சத்திய ஒளியைக் கண்டு, பின்னர் அதற்கு விலகிப் போகிறவர்கள், இருளுக்குள் மீண்டும் பிரவேசிக்கிறபடியால், யூதரிலும் இரட்டிப்பான கடிந்து கொள்ளுதலைப் பெறுவார்கள். மீண்டும் இருளுக்குள் பிரவேசிப்பது அவிசுவாசத்தை வெளிப்படுத்துகிறது. (எபி. 6:1-8)* R 3437:4

## ஆகஸ்ட் 10

***கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், அன்பினாலே யாதொரு தேறுதலும், ஆவியின் யாதொரு ஐக்கியமும், யாதொரு உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டானால், நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புள்ளவர்களாயிருந்து இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். (பி- . 2:1-2)***

*ஒருமைப்பாட்டிற்கும், சமாதானத்திற்கும், சகோதர அன்பிற்கும், இந்த வார்த்தைகள் எவ்வளவு உற்சாகத்தைத் தரக்கூடியதாக உள்ளது. இது எவ்வளவாக பொறுமையையும் மனத்தாழ்மையையும், உதவுதலையும், சகோதரரை ஆதரிப்பதிலும் நம்மை உற்சாகப்படுத்துகிறது. இவை யாவற்றிலும் தேவ ஆவி பெருகிக் காணப்படுகிறது. மேலும் சரியான பாதையில் அழைத்து செல்கிறது. ஒவ்வொரு சகோதர, சகோதரியும் "ஆறுதலின் மகன் என்று பேர் பெற்றுக் கொண்ட பர்னபாவைப் போலொத்த குணமுடையவர்களாக விளங்க வேண்டும். தேவனுக்கும், அவர் குமாரனுக்கும் பிரதிநிதியாக இருக்க நாம் சத்திய ஆவியிலே நாளுக்கு நாள் பெருகி, ஒவ்வொருவரும் சீயோனுக்கு (திருச்சபைக்கு) ஆறுதலளிக்கப் பிரயத்தனப்பட வேண்டும். (கொலோ. 3:12-17)* R 3436:6

## ஆகஸ்ட் 11

***நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன். (வெளி. 2:10)***

*பாபிலோனிலிருந்து மீட்கப்பட்ட திருச்சபையின் மக்கள் மீண்டும் பலமுறை சாத்தானின் சோதனைகளுக்கு உட்பட்டு தான் இதன் மூலமாக இவர்கள் உண்மை விசுவாசத்தை வெளிப்படுத்தி, உலகத்தை ஜெயித்தவர்களாக, கிறிஸ்துவின சரீரத்தை அங்கங்களாக இருக்கத் தகுதி பெறமுடியும். இதைக் குறித்து நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. தேவனையும், குமாரனையும் நேசிக்கிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கேதுவாக இருப்பதற்கு இவை அவசியமானது. திரைக்குப் பின்னால் பரம பந்தயப் பொருளைப் பெற நாம் மரிக்க வேண்டும். எலியா வகுப்பினருக்கு இத்தகைய வாழ்க்கையில் ஏற்படும் பல தோல்விகள் கிறிஸ்துவின் ராஜ்யத்தில் மகிமையை கொடுக்கிறதாயிருக்கிறது. (அப். 20:19-24)*
R 3326:6

## <u>*ஆகஸ்ட் 12*</u>

***மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும். துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக் காரும், அவைகள் என்னை ஆண்டு கொள்ள ஒட்டாதிரும்....... என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமூகத்தில் பிரீதியாயிருப்பதாக. (சங். 19:12-14)***

*ஒவ்வொரு புத்தியுள்ள கிறிஸ்தவனும், இந்த உருக்கமான வார்த்தைகளைத் தொடர்ந்து ஜெபிக்கக் கடமைப்பட்டுள்ளான். மறைவான குற்றங்களிலிருந்து நாம் சுத்திகரிக்கப்பட வேண்டும். இதன் மூலம் தகாத காரியங்களுக்கு நம்மை விலக்கிக் காத்துக் கொண்டு நம் இருதயங்களைச் சுத்திகரித்து, விழிப்புடன் அவருடைய கிருபாசனத்தண்டை சேரச் செய்யும். பரிசுத்த ஜீவியம் செய்து, தேவனை நெருங்கி வாழ எண்ணும் ஒவ்வொருவரும், துணிகரமான பாவங்களுக்குத் தங்களை விலக்கிக் காத்துக் கொள்ளாவிட்டால், அவர்கள் நேர்மையாக நடவாமல், தங்கள் வழிகளில் தவறினவர்களாயிருப்பார்கள். (சங். 51:1-11)* R 2249:1

## <u>*ஆகஸ்ட் 13*</u>

***நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாதிபதிகளாயிருக்கிறோம். (2 கொரி. 5:20)***

*ஒவ்வொரு கிறிஸ்தவனும், இந்த வார்த்தைகளைத் தங்கள் சிந்தனைகளில் எப்பொழுதும் வைத்திருப்பார்களானால், அவர்கள் குண லட்சணங்களில், இது எவ்வளவாக அவர்களைக் கனப்படுத்துகிறதாக இருக்கும்! எவ்வளவு பெரிய வல்லமையை அளிக்கக் கூடியதாக உள்ளது! நம்முடைய குடியிருப்புப் பரலோகத்தில் இருக்கிறது என்று அப்போஸ்தலன் சொல்லி இருக்கிறார். நாம் இப்பூமியில் வாழ்ந்தாலும் இவ்வுலகத்திற்குரியவர்கள் அல்ல. பரலோக இராஜ்யத்திற்குரியவர்களாக மாற்றப்பட்டு அதன் ஸ்தானாபதிகளாகவும், பிரதிநிதிகளாகவும் இவ்வுலகில் நியமிக்கப்பட்டிருக்கிறோம். இவ்விதம் நியமிக்கப்பட்டவர்கள் தங்களுக்கு அருளப்பட்டுள்ள பதவியைக் காத்து, வார்த்தையிலும், கிரியையிலும் சகலத்தையும் கிறிஸ்துவின் நாமத்திலே செய்யக் கடமைப்பட்டுள்ளனர். (எபே. 6:5-10, 18-20)* R 3330:2

## ஆகஸ்ட் 14

***சீஷன் தன் போதகனைப் போலவும், வேலைக்காரன் தன் எஜமானைப் போலவும் இருப்பது போதும். வீட்டெஜமானையே பெயல்செபூல் என்று சொன்னார்களானால், அவன் வீட்டாரை அப்படிச் சொல்வது அதிக நிச்சயமல்லவா? (மத். 10:25)***

*சத்தியமானது, பட்டயத்துக்கு ஒப்பாக பேசப்பட்டுள்ளது, எவ்வளவு பொருத்தமானது. இது எப்பக்கத்திலும் ஊடுருவிச் செல்லக் கூடியது. நம் இரட்சகர் இதை வெகு நேர்த்தியாக, பெற்றோருக்கு விரோதமாக பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுக்கு விரோதமாகப் பிதாக்களிடத்திலும் கிரியை செய்யக் கூடியது என்றார். ஏனென்றால், இருளுக்கும், ஒளிக்கும் ஐக்கியம் இராது. நம் இரட்சகரின் போதகங்களை ஏற்று நடப்போர் அநேக நிந்தைகளைச் சகிப்பது அவசியமானது. நாம் குழப்பமானதைப் போதியாமல், சத்தியத்தையே பேசுகிறோம். தேவனுடைய வீட்டார், சத்தியத்தை அவருடைய சித்தத்தின்படி போதித்து, நீதியை நடப்பிக்கவே தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறார்கள். (மாற்கு 3:21-25)* R 3131:3,5

## ஆகஸ்ட் 15

***மேலும் சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்னவென்றால் ....... எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள். (1 தெச. 5:14)***

*தேவனுடைய ஜனங்கள் எப்பொழுதும் இணக்கம் உள்ளவர்களாயும் பலவீனமுள்ளவர்களிடத்தில் மட்டுமல்ல, சகலரிடமும் சாந்த குணமுள்ளவர்களாயும், மன்னிக்கிறவர்களாயும் இருக்க வேண்டும். அறிவிலே வளர்வது கிருபையினால் உண்டாகும், சாந்தத்தையும் உண்டாக்கும். பரம தகப்பனின் சாந்த குணத்தை நாம் அதிகதிகமாக அறியும் போது, நாமும் சகல காரியங்களிலும் சாந்தம் உள்ளவர்களாயிருக்கச் செய்யும். நம்மை அழைத்த தேவன் தம்முடைய குமாரனுடன் நாம் ஒருமித்து நடக்கவும், அநேகர் இந்தக் இடுக்கமான பாதையில் நம்மோடு ஒன்றுபட்டு நடக்கச் செய்யும். சாந்த குணம் மிக அவசியமானது என்பதை அநேக பாடங்களின் மூலமாக உணர்த்துகிறார். (1 தீமோ. 6:6-14)* R 3136:3

## ஆகஸ்ட் 16

**எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள். (1 தெச. 5:18)**

*கிறிஸ்துவுடன் ஒருமித்து நடந்து அவருடைய சித்தத்தை நிறைவேற்ற ஒப்புக் கொடுத்த இருதயமுள்ள யாவரும் அதிகாலையில் தங்களுக்கு ஆசீர்வாதமளிக்க வேண்டி மன்றாடுவது மட்டுமல்ல அந்நாளின் இரவிலே தாங்கள் பெற்ற ஆசீர்வாதங்களுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறவர்களாகவும் இருக்க வேண்டும். அவர்கள் சகலத்திலும் ஸ்தோத்திரம் செலுத்தி அந்நாள் முழுவதும் அவரை நினைத்துத் தங்கள் வழிகளைக் காத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் அவருடன் செய்த உடன்படிக்கையை நினைவு கூர்ந்து, அதோடு அவர்கள் செய்யும் சகல காரியங்களும், தேவ சித்தத்திற்குட்பட்டதாக இருந்து இவைகளில் தேவ நடத்துதல் அவர்களோடிருந்ததை உணர்ந்து அதற்காகவும், அவருக்கு நன்றி செலுத்துகிறவர்களாக இருக்க வேண்டும். நாம் இப்படிச் செய்வது, தேவ சித்தமாக இருக்கிறது. இடுக்கமான பாதையில் பிரயாணம் பண்ணும் ஒவ்வொருவரும் தங்களது அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதி செய்வது பிதாவின் சித்தமாயிருக்கிறது. (எபே. 4:16-21)* R 3136:6

## ஆகஸ்ட் 17

**ஆவியை அவித்துப்போடாதிருங்கள். (1 தெச. 5:19)**

*தேவ ஆவி, அவருடைய ஜனங்களிடையே "ஒரு பரிசுத்த அன்பின் அக்கினிக்கு" ஒப்பிடத்தக்கது. தெய்வீக வசனத்தின் மூலம் இந்த அக்கினி ஒவ்வொருவரின் உள்ளத்திலும் கொழுந்து விட்டு எரியச் செய்கிறது. இது ஆவியில் நடத்தப்படுவதற்கு ஒரு வழி காட்டியாகவும் இருந்து, திருச்சபையாரைத் தேவனிடம் வழி நடத்தக் கூடியதுமாயிருக்கிறது. இந்தத் திருச்சபை ஞானத்திலும், அன்பிலும், தேவனோடு ஐக்கியத்திலும் இருந்து, இவ்வுலகிலே ஒரு விளக்கைப் போலவும் இருக்கிறது. மலையின் மேல் இருக்கிற பட்டணத்தைப் போல் உலகத்திற்கு ஒளியாகவுமிருக்கிறபடியால், அப்போஸ்தலன் இந்த பரிசுத்த ஆவியை அவித்துப் போடாதிருக்க எச்சரிக்கிறார். (எபே. 4:29-32; 1 தீமோ. 1:6-8)* R 3137:2

## <u>*ஆகஸ்ட் 18*</u>

***எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். (1 தெச. 5:21)***

*தேவனுடைய ஜனம், தாங்கள் கேட்கும் ஒவ்வொரு காரியத்தையும் நிதானித்து, அவைகளைச் சோதித்து உண்மையாக இவைகள் தேவனையும், அவர் வார்த்தைகளையும் குறித்தவைகளா என்று முதலாவது அறிய வேண்டும். தங்கள் சிந்தனையை அதிகமாக உபயோகித்து நன்மையானவைகளையும், உண்மையானவைகளையும் மட்டுமே தெரிந்து கொள்ள வேண்டும். இவைகளைச் சோதித்தறியும் போது, சுய சிந்தனை உள்ளவர்களாக இராமல், பரிசுத்த ஆவியின் நடத்துதலால் நன்மையானவை இன்னதென்று, தீமையானவை இன்னதென்றும் பகுத்தறிந்து, ஆவியின் வளர்ச்சிக்கு நன்மையானவைகளைப் பற்றிக் கொள்ள வேண்டும். மற்றெல்லாவற்றையும் விட்டு விலக வேண்டும். (1 யோவா. 4:1-3)* R 3137:4

## <u>*ஆகஸ்ட் 19*</u>

***பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள். (1 தெச. 5:22)***

*இதன் பொருள் யாதெனில், தீமையான எந்த ஒரு காரியமும் எவ்வளவாக நமக்குக் கீர்த்தியையோ, ஆஸ்தியையோ கொடுக்கக்கூடியதாக இருந்தாலும், அவைகளை நாம் விட்டு விலக வேண்டும். இவைகள் உலகத்திற்குரியவைகள். சில சந்தர்ப்பங்களில் நம் பார்வைக்கு நலமாகத் தோன்றி மற்றவர்களுக்கு (அடுத்தவர்களுக்கு- அது பாதகமாகக் காணப்படுமேயாகில், அவற்றையும் நாம் விட்டு விலகுவது நலமானதே. தீமையானவைகளை மட்டுமல்ல, தீமையாகத் தேன்றும் சகலக் காரியங்களையும் நாம் விட்டு விலக, பரிசுத்த ஆவி நம்மை வழிநடத்தும். இது தேவனிடத்தில் சத்தியத்தின் மூலம் நாம் நெருங்கி நடக்க பிரயோஜனமாக இருக்கும். (1 பேது. 3:9-17)* R 3137:5

## <u>*ஆகஸ்ட் 20*</u>

***நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன். (அப். 17:23)***

*அப்போஸ்தலன் இங்கே உபயோகித்த முறையை நாமும் கடைபிடிப்பது நலமானது. முன் இருந்து செய்யப்பட்டு வரும் காரியங்கள் உண்மையானது என்று அநேகர் கூறுவதுண்டு. ஆகவே, நாம் அப்போஸ்தலனைப் போல உண்மை சத்தியம் என்பது கூட ஒரு புதிய கொள்கை அல்ல. பழையவைகளே, புதிய நற்செய்தியுமல்ல, பழைய நற்செய்தியே (சுவிசேஷம்) என்றும் இவை ஆபிரகாமுக்கு முன் அறிவிக்கப்பட்டு பின்பு இயேசு கிறிஸ்துவின் மூலமாகவும், அப்போஸ்தலர் மூலமாகவும், வெளிப்படுத்தப்பட்டவைகள் என்று காண்பிக்க வேண்டும். தற்போதைய தவறானப் போதகங்கள், இருளான காலத்தில் தோன்றினவை என்றும், இப்பொழுது போதிக்கப்படுவது புதிதான சத்தியம் அல்லவென்றும், இவை ஆதிகாலத்தில் தேவனால் அருளப்பட்டதென்றும், எடுத்துக்கூறி உண்மையை வெளிப்படுத்த வேண்டும். (2 தீமோ. 4:2-4)* R 3139:4

## <u>*ஆகஸ்ட் 21*</u>

***முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள். (மத். 6:33)***

*தேவ பிள்ளைகளான ஆவிக்குரிய இஸ்ரயேலர் இந்த வார்த்தைகளைத் தொடர்ந்து தங்கள் சிந்தனையில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆவிக்குரிய காரியங்களுக்கே முதல் இடத்தை அளிக்க வேண்டும். தற்கா-கமான உலகக் காரியங்களை விட நிரந்தரமாக, பெறப்போகும் பரிசைத் தங்கள் எண்ணத்தில் வைத்து, ஆவியிலே அதிகமதிகமாக வளரத் தங்களை ஒப்புக் கொடுக்க வேண்டும். உலக வழிகளில் நம்மை இழுத்துச் செல்லச் சிலர் தரும் ஆலோசனைகளை சற்றேனும் சிந்தியாமல் அவைகளை விட்டு விலக வேண்டும். இவைகளின் மூலம் நமக்கு என்ன லாபம் கிடைத்தாலும், அவற்றை வெறுத்து, நம்மை முற்றிலும் உலக ஆசாபாசங்களுக்கு விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டும். கஷ்ட, நஷ்டம் ஏற்பட்டாலும், பொறுமையுடன் சகிக்கவும் வேண்டும். (1 ராஜா. 3:8-14)* R 3110:6

## ஆகஸ்ட் 22

***என் பிதாவுக்கடுத்தவைளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா? (லூக். 2:49)***

*நம் இரட்சகர் சொன்ன இந்த வார்த்தைகள் போலவே நாமும் சொல்ல வேண்டியவர்களாயிருக்கிறோம் அல்லவா? உண்மையான கிறிஸ்துவின் ஊழியர்களுக்குச் சொந்த காரியங்களை குறித்த வேறு வேலை இல்லை. ஏனென்றால், தங்கள் பிரதிஷ்டையில் முற்றிலுமாக தேவனுக்கென்று தங்களை ஒப்புக் கொடுத்திருக்கிறார்கள். கிறிஸ்துவின் மூலம் ஒரு பொறுப்பானவர்களாக இவர்கள் நியமிக்கப்பட்டிருப்பதால், என்ன நேர்ந்தாலும், எந்த சூழ்நிலையிலும் தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட இந்த உக்கிரமான ஊழியத்தைப் பொறுப்புடன் செய்யவே தேவன் அழைத்துள்ளார். இந்த ஊழியத்தைச் சில காலமட்டுமல்ல, மரண பரியந்தமும் உண்மையாகச் செய்து, தங்கள் கணக்கை ஒப்புவிக்க கடமைப்பட்டுள்ளனர். (மத். 25:24-30)* R 3148:5

## ஆகஸ்ட் 23

***இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு, இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரியது. (1 கொரி. 13:13)***

*அன்பு பிரதானமானதும், மிக நேர்த்தியுமானது. ஆதலால் இது சதாகாலத்திலும் நிலைத்து நிற்கக்கூடியது. விசுவாசமானது நம்மை அன்பிலே பூரணப்படுத்துகிறது. இது பூரணப்படும் போது, பரம பிதா நமக்கு வாக்குத்தத்தம் பண்ணின யாவற்றையும் பெற்றுக் கொள்ளத் தகுதியுள்ளவர்களாகி, நற்கனிகளைத் தரக்கூடியவர்களாக மாற்றுகிறது. அன்பு ஒரு காலத்திலும் அழிந்து போகாது. தேவன் அன்பாகவே இருக்கிறார். அவருக்குத் துவக்கம் இல்லாததால், அன்பிற்கும் துவக்கம் கிடையாது. ஏனென்றால், அன்பு அவரின் குணலட்சணம். இது அவரின் மனச்சார்பு. அவர் சதா காலங்களிலும் இருக்கிறது போல, அன்பும் சதா காலங்களிலும் இருக்கிறது. அன்பில்லாதவன் தேவனை உடையவனல்ல. (1 யோவா. 4:7-13)*
R 3151:5

## ஆகஸ்ட் 24

***நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப் போல் ஒன்றாயிருக்கும்படிக்கு நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக் கொள்ளும். (யோவா. 17:11)***

*திருச்சபையைக் குறித்து நம் இரட்சகர் கூறும் அழகான வார்த்தைகள் மூலம், தெய்வீகக் குடும்பத்தாருக்கு அளிக்கப்படப் போகிற மகிமைக்குரிய ஆசீர்வாதத்தை குறித்து ஓரளவு இங்கே காணக்கூடியவர்களாக இருக்கிறோம். இது ஒருமைப்பாட்டின் நோக்கமாயிருக்கிறது. நம்பிக்கையில் ஒருமைப்பாடு, இரக்கத்திலே ஒருமைப்பாடு, அன்பிலே ஒருமைப்பாடு, மகிமையிலும், கனத்திலும் ஒருமைப்பாடு. இந்த ஒருமைப்பாடு, கிறிஸ்துவிற்கும் பிதாவிற்கும் இடையே முன்பே இருந்ததாக நம் இரட்சகர் கூறுவதோடு திருச்சபையும் இந்த ஒருமைப்பாட்டிற்குள் நடத்தப்பட விரும்பி ஜெபித்தார். திருச்சபையார் இதைப் பெறுவது இனி வரும் காரியமாக உள்ளது. (யோவா. 17:21-26)* R 3160:3

## ஆகஸ்ட் 25

***அவர் வெளிப்படும் போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். (1 யோவா. 3:2)***

*திருச்பையார் வெகு சீக்கிரத்தில் உயிர்த்தெழுதல் மூலம் நம் இரட்சகருக்கு ஒப்பாக மாற்றப்பட்டு, அவர் இராஜ்யத்திலே மகிமையை, அவரைப் போலவே பெற்றுக் கொள்வார்கள் என்பது நிச்சயமானது. இந்த வார்த்தைகள் நம்மை உற்சாகப்படுத்தி, பலப்படுத்தக்கூடியதாக உள்ளது. இதன் மூலம் நாம் கிறிஸ்துவுக்கும், விசுவாச வீட்டாருக்கும் ஊழியம் செய்ய நம் இருதயங்களை ஏவுகிறது. இந்த வார்த்தைகள் முற்காலங்களில் அவருடையவர்களுக்கு நங்கூரமாக இருந்திருக்குமேயாகில், முடிவின் காலத்தில் அதாவது அவர் வெளிப்படும் காலத்தில் ஜீவிக்கிற நமக்கு இது எவ்வளவு அதிகமான உற்சாகத்தைத் தரக்கூடியதாக உள்ளது. (ரோம. 8:16-18, 28-30)* R 3193:6

## <u>ஆகஸ்ட் 26</u>

***அன்பு, நீடிய சாந்தமும், தயவுமுள்ளது. (1 கொரி. 13:4)***

*தப்பிதம் செய்தவர்களைக் கடிந்து கொள்வது, தேவனுடைய ஜனங்களுக்கு அடுத்ததாயிராமல், அன்புடன் தயவாக அவர்கள் குற்றங்களை விளக்கிக்காட்டி, சத்தியத்தில் எந்த அளவுக்கு அவர்கள் குறைவுபட்டுள்ளனர் என்பதை உணர்த்த வேண்டும். நற்பண்பு கிறிஸ்தவ குணத்தின் ஒரு பாகமாகும். உலகத்தில் இது வேஷம் தரித்த தோற்றமுடையதாக இருந்தாலும், கிறிஸ்தவர்களுக்கு இது பொய்த் தோற்றம் உடையதாயிராமல் முழு இருதயத்தோடு உண்மையாக வளர்ந்த அன்பைக் காட்டுகிறதாக உள்ளது. அன்பு, சாந்த குணத்திற்கு நம்மை வழிநடத்திப் பொறுமையையும், தயவையும் பெருகச் செய்கிறது. கீழ்ப்படியாதவரிடம் கூட கடுமையாகப் பேசவொட்டாமல், தயவுடன் புத்தி சொல்ல நம்மை ஏவுகிறது. (2 கொரி. 6:3-10)* R 3194:2

## <u>ஆகஸ்ட் 27</u>

***இது முதற்கொண்டு நாங்கள் ஒருவனையும் மாமிசத்தின்படி அறியோம். (2 கொரி. 5:16)***

*அப்போஸ்தலன் இங்கே நம்முடைய மாமிச பெலவீனங்களை குறித்துப் பேசவில்லை. நாம், நம்முடைய எல்லா மாமிச பெலவீனங்களையும் எதிர்த்து, அதை விட்டு விலக முயற்சிக்க வேண்டும். புதிய சிருஷ்டிகள், தங்களை இப்படிப்பட்ட பெலவீனங்களி-ருந்து கடுமையாய் சீர்த்திருத்திக் கொள்ள வேண்டும். பெலவீனமான மரணத்திற்கேதுவான சரீரத்தில், பாவம் ஆளாதிருக்க முயற்சிக்க வேண்டும். அதோடு கிறிஸ்துவின் சரீரத்தில் இணைக்கப்பட்ட ஒவ்வொருவரின் மாமிச பெலவீனங்களையும் கண்டுபிடித்துத் தவறுகளை உணர்த்த வேண்டும். இவர்கள் ஆவிக்குரியவைகளை சிந்திக்கும்படி செய்ய எச்சரிக்கப்பட வேண்டும். புதிய சிருஷ்டியாக மாற்றப்படாதவர்கள், மாமிச சிந்தனையுள்ளவர்கள்; புதிய சிருஷ்டியாக மாற்றப்பட்டவர்கள் ஆவியின் சிந்தையுடையவர்களாயிருப்பார்கள். (1 தீமோ. 5:20-21; 2 கொரி. 1:17)* R 3202:3

## <u>*ஆகஸ்ட் 28*</u>

***சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும், ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு. (2 தீமோ. 4:2)***

*அப்போஸ்தலனுடைய இந்த வார்த்தைகள், நியாயமான கட்டளைகளை மீறி, எந்த சந்தர்ப்பத்திலும், மற்றவர்களுக்கு இடையூறு உண்டாக்கும் நிலையில், சத்திய வசனத்தைப் போதிக்கும்படி கூறவில்லை. இதற்கு மாறாக சத்தியத்தை அன்போடு பேசி, இந்த ஊழியத்தை முழு பிரியத்துடன் செய்ய வாஞ்சையுள்ளவர்களாக இருந்து, சந்தர்ப்பம் கிடைக்கும் போது சந்தோஷமாக அதைச் செய்ய வேண்டும் என்று கூறுகிறார். இச்சந்தர்ப்பத்தில் நம் சுக வாழ்வை எண்ணாமல், எவ்வளவு அசௌகரியம் நமக்கு ஏற்பட்டாலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் நம் ஜீவியத்தில் இது மிக முக்கியமான ஊழியம் என்பதை மனதில் கொண்டு, இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களை ஆதாயப்படுத்தி, அவற்றை ஒதுக்கி வைக்காமல் உடனடியாகச் செய்ய வேண்டும். (கலா. 2:2)* R 3211:2

## <u>*ஆகஸ்ட் 29*</u>

***தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால் நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், பெற்றுக் கொள்ளாம-ருக்கிறீர்கள். (யாக். 4:3)***

*முதலாவதாக நாம் ஜெபம் பண்ண கற்றுக் கொள்ள வேண்டும். தேவனிடம் கேட்க வேண்டிய காரியங்களையே அல்லாமல் வீண் வார்த்தைகளை அலப்பக் கூடாது. நமக்குத் தேவையானது இன்னதென்பதை அவர் அறிந்து இருக்கிறார். அப்படி செய்வதற்கு நாம் கேட்கிறதற்கு தீவிரமாயும் பேசுவதற்கு தாமதமாயும், அவரது வார்த்தையையும், பாடங்களையும் கேட்கிறதற்கு தீவிரமாயிருக்க வேண்டும். நாம் நமது சொந்த சித்தத்தின்படி விண்ணப்பம் பண்ணாமல் பிதாவின் சித்தத்தின்படி செய்வதே கிறிஸ்தவனின் குணலட்சணம் ஆகும். இதுவே நாம் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீதிமான் ஜெபம் கேட்கப்பட்டு, பதிலளிக்கப்படுகிறது. (1 ராஜா.3:8-14)* R 3217:6

## <u>ஆகஸ்ட் 30</u>

***இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம், அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. (மத். 5:16)***

*இயேசு உலகிற்கு ஒளியாயிருக்கிறார். அவர் மூலம் ஒளியைப் பெற்ற நாம் ஒவ்வொருவரும் இந்த பூமியிலே ஒளியாயிருக்கிறோம். நமது நற்கிரியைகளின் மூலம் நமது பிதாவை மகிமைப்படுத்த வேண்டும். விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடி வைக்காமல், விளக்குத் தண்டிலே வைக்க வேண்டும். அப்பொழுதுதான் அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான். தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு ஒளியினிடத்திற்கு வராதிருக்கிறான். சத்தியத்தின்படி செய்கிறவனோ தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும் படிக்கு ஒளியினிடத்திற்கு வருகிறான். (யோவா. 3:20; 1 பேது. 2:10-12)* R 3686:4

## <u>ஆகஸ்ட் 31</u>

***நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்..... விடுவிக்காமற் போனாலும் நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதில்லை. (தானி. 3:17-18)***

*"நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன்" என்று அந்த எபிரேயர்கள் நேபுகாத்நேச்சாரிடம் சொன்னது குறிப்பிடத்தக்கது. இவர்கள் உண்மை தேவனை அறிக்கை பண்ணி சேவித்தவர்களாக மட்டுமல்ல, சமயம் வாய்த்தபோது, உண்மை தேவனை வெளிப்படுத்தியும் காட்டினார்கள். அந்த எபிரேய சகோதரர்களைப் போல நாமும் உண்மை தேவனைச் சேவிக்கிறவர்களாக மட்டுமல்ல, அவரை அநேகருக்கு வெளிப்படுத்திக் காட்டக் கூடியவர்களாகவுமிருக்க வேண்டும். சாத்தானின் சூழ்ச்சிகளினால், உலக ஆஸ்திக்கும், புகழ்ச்சிக்கும் நம்மை எவ்விதத்திலும் ஒப்புக் கொடாமல் அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ளவே, தேவன் விரும்புகிறார். (மத். 4:5-11; யோவா. 4:24)* R 2496:6

## <u>*செப்டம்பர் 1*</u>

***நீ போ, அவன் புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும், இஸ்ரயேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான். (அப். 9:15)***

*இக்காரியம் சம்பவித்ததின் நோக்கம் யாதெனில், நாம் கிறிஸ்துவின் மூலம், தேவனைக் கிட்டிச் சேர அவர் தம் பிதாவினால் தெரிந்து கொள்ளப்பட்டார். பிதாவின் குண லட்சணங்கள் இவரிலே பூரணமாக இருந்தது. இதனால் நாம் அவரைப் பின்பற்ற அழைக்கப்பட்டோம். நாமும் இவரைப் போல அநேகருக்கு தெய்வீகத் திட்டங்களை எடுத்துரைக்கும் சேவையில் ஈடுபடும் போது, இதே ரீதியில் செய்ய தேவன் விரும்புகிறார். அநேகரைத் தேவன் தெரிந்தெடுக்கிறார். தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் உண்மை தேவனையும், அவர் வார்த்தைகளையும் அறியும்படி, தேவ பிள்ளைகள் ஆவியினாலே எழுப்பப்படுகிறார்கள். (கலா. 2:6-10)*
R 3218:6

## <u>*செப்டம்பர் 2*</u>

***நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும் படி....... சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூறுங்கள். (1 பேது.1:22)***

*திருச்சபையாருக்கு அறிவு அல்லது ஞானம் மிக உயர்ந்ததாகக் கருதப்படும். இது இவர்கள் ஆவியிலே முன்னேறி வளர்வதற்கு ஓர் அறிகுறி. ஒருவர் ஞானத்திலே வளராதிருந்தால் தன்னடக்கத்திலும், கிருபையிலும், விசுவாசத்திலும் கிறிஸ்துவுக்குள் பலமுள்ளவராக வளர முடியாது. தேவனையும், குமாரனையும் அவர் வார்த்தைகளையும் வாசித்து, அனுதினமும் தியானிக்கிறவன் அவரிலே அன்பு உள்ளவனாக இருக்கிறான் என்பது வெளியாகிறது. அதிகதிகமாக தேவ திட்டத்தின் ஆழ்ந்த கருத்துக்களை அவன் அறிந்து கொள்ளும் போது, தேவ நடத்துதல் அவனுடன் இருக்கிறதென்பது புலனாகிறது. நம் குடும்பங்களில் நம் பிள்ளைகளின் பேரில் நாம் அன்பு காட்டுவது போல, சபையில் பிள்ளைகளைப் போல் சேர்க்கப்படுபவரிடத்திலும் அன்பைக் காட்டி ஆவியிலே வளரச் செய்யவேண்டும். (லூக்.4:18; எபி. 13:1-3)* R 3219:6

## செப்டம்பர் 3

***பலியை அல்ல, இரக்கத்தையும், தகன பலிகளைப் பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும் விரும்புகிறேன். (ஓசி. 6:6)***

*தன் இருதயத்தையும், சுய சித்தத்தையும் தேவனுக்கு ஒப்புக் கொடுத்தவனே சகலத்தையும் அவருக்கு ஒப்புக் கொடுத்தவனாவான். ஒருவன் தன் சுய சித்தத்தை விடாமலும், கீழ்ப்படிதலான இருதயம் இல்லாதவனுமாய் இருந்தால், அவன் தேவனுக்கேற்ற பலியைச் செலுத்த முடியாது. "பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலே நல்லது" என்ற மொழி கிறிஸ்துவுக்குள் பரிசுத்தம் செய்யப்பட்டவர்கள் இருதயத்தில் எழுதப்பட வேண்டும். கீழ்ப்படித-ன் ஆவி ஒருவர் தேவசித்தத்தை நடப்பிக்க நாளுக்கு நாள் உற்சாகப்படுத்தி கீழ்ப்படியச் செய்யும். சங்கீதக்காரன் சொன்னபடி, "உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன். உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது" என்று சொல்லச் செய்யும். (சங். 40:6-8)* R 3225:5

## செப்டம்பர் 4

***அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல. (1 யோவா. 4:18)***

*பயத்தின் மூலம் அநேகக் காரியங்கள் சம்பவிக்கக்கூடும். தேவனையும், குமாரனையும் அறிந்து கொண்ட உறுதியான விசுவாசமுள்ளவர்களுக்கு பயமிராது. இவர்களே தேவன் பேரிலே மாயமற்ற அன்பைக் காட்டுவார்கள். உறுதியான விசுவாசத்தின் மூலமாகவே பயத்தை நீக்கி, அதை உண்டாக்குகிற சாத்தானை நாம் மேற்கொள்ள முடியும். இவனை மேற்கொள்ள தேவனுடைய வார்த்தைகளையே ஆயுதமாகக் கொண்டு அவரது கோ-ன் மேல் நம்பிக்கை வைத்து எந்தத் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமைகளையும், நிர்மூலமாக்கச் செய்யும் தைரியம் அவசியமானது. பெ-ஸ்தியன் ஈட்டியோடும், பட்டயத்தோடும் வந்த போது தாவீது தேவனின் நாமத்தினாலே தைரியமாகக் கவண் கல்-னால் அவனை மேற்கொண்டான். (1 சாமு. 17:45-47)* R 3231:1

## செப்டம்பர் 5

***நேச வைராக்கியம் பாதாளத்தைப் போல் கொடியதாயிருக்கிறது; அதின் தழல் அக்கினித் தழலும், அதின் ஜூவாலை கடும் ஜூவாலையுமாயிருக்கிறது. (உன்னத. 8:6)***

*நேச வைராக்கியம் அல்லது பொறாமை, கிறிஸ்தவ ஜீவியத்திற்கு ஒரு பெரும் எதிராளி. இது முற்றிலுமாக அகற்றப்பட வேண்டும். ஏனென்றால் இது மனிதனுக்கும், தேவனுக்கும் எதிராளியாக இருந்து பகைமையை உருவாக்கும். நம் இருதயங்களையும், சிந்தனைகளையும் ஓர் அக்கினித் தழல் போல் எரித்து விடும். இதன் கொடூர விஷம், இதனைக் கொண்டுள்ளவர்களை மட்டுமல்ல, பிறரையும் பாதிக்கக்கூடியது. இது பாவ சிந்தனையை உண்டாக்கி கெட்ட காரியங்களை நடப்பிக்கவும் செய்யும். ஒருவருடைய சிந்தனை இந்த விஷயத்தினால் ஒரு முறை பீடிக்கப்பட்டு விட்டால், இதினின்று விடுதலை அடைவது மிகக் கடினமானது. ஆகவே, இந்த பொறாமை நம்மிடம் இருந்து உடனடியாக அகற்றப்பட வேண்டும். அறிவுக்கேற்ற வைராக்கியம் நம்மில் காணப்பட வேண்டும். (2 கொரி. 11:1-2)* R 3231:5

## செப்டம்பர் 6

***பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது. (சங். 91:10)***

*தேவபிள்ளைகளை எந்தத் தீங்கும் அணுகாது. மாமிசப் பிரகாரமான சில காரியங்கள் இவர்கள் வாழ்க்கையில் குறுக்கிட்டாலும், தாங்கள் மாமிசத்திற்குரியவர்கள் அல்லவென்று உணர்ந்து, புதிய சிருஷ்டிகளாக மாற்றப்பட்டதை எண்ணும் போது மாமிச சிந்தை இவர்களை விட்டு விலகிச் செல்லும். இதன் மூலம் இவர்கள் தங்களை எந்தத் தீங்குக்கும் வி லக்கிக் காத்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிக்கும் விசுவாசத்தைப் பலப்படுத்த வேண்டும். அதோடு எந்த உலக இச்சைகளுக்கும் தங்களை உட்படுத்த ஒப்புக் கொடுக்கமாட்டார்கள். நாம் தேவன் பேரில் நம்பிக்கையிழந்து விசுவாசத்தில் பெலவீனப்படும் போது மட்டுமே சோதனை நம்மை மேற்கொள்ளும், தீங்கும் நம்மை அணுகும். தேவ அன்பையும், வாக்குத்தத்தங்களையும் இழந்துபோவோம். (சங். 34:14-22)* R 3232:1

## <u>செப்டம்பர் 7</u>

**ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின. *(2 கொரி. 5:17)***

*புதிய சிருஷ்டியான ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் மாமிசத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடப்பான். புதிய சிந்தை ஒருவரை ஒருவர் ஆவியின்படி அறியச் செய்து நல்ல மனோபாவத்துடனும், பரிசுத்தத்துடனும், உண்மையுடனும், உதார குணத்துடனும் ஜீவித்து எல்லா மாமிச பெலவீனங்களையும் மேற்கொள்ளச் செய்யும். கிறிஸ்து அவனிலும், அவன் கிறிஸ்துவிலும் நிலைத்திருக்கிறபடியால், பிதாவின் அன்பிலே அதிகமாக வளர்ந்து உலகத்திற்கும், மாமிச இச்சைகளுக்கும் விலகி இருக்கச் செய்யும். இந்த சிநேகத்தையும், அன்பையும் வார்த்தைகளால் விவரிக்க முடியாது. இவர்களிடமிருந்து பழைய மனிதனின் மாமிச இச்சை அழிந்து புதிய சிந்தை உருவாகும். (ரோம. 6:4-6; 11-13)* R 3233:4

## <u>செப்டம்பர் 8</u>

**உலக சிநேகம், தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன், தேவனுக்குப் பகைஞனாகிறான். *(யாக். 4:4)***

*ஒவ்வொருவருக்கும் முன்பாகவும் தேவன் இரு காரியங்களை வைத்துள்ளார். அது என்னவெனில், தேவ சிநேகமும் அவரை வழிபட்டு ஐக்கியமாக இருப்பதும், உலக சிநேகமும் அதன் ஐக்கியமும் ஆகும். உலக சிநேகம் தேவனுக்குப் பகை. தேவனையும் குமாரனையும், இவ்வுலகத்தையும் ஒரே சமயத்தில் சேவிக்க முடியாது. தேவனுக்குப் பிரியமானவை, இவ்வுலகத்திற்கேற்ற காரியங்கள் அல்ல. சகல விதமான கெட்ட நடத்தைகள், பேச்சுக்கள் யாவும் உலகத்திற்கேற்றவைகள் ஆகும். கிறிஸ்துவின் ஆவியையுடையவன் புதிய சிருஷ்டியாக இருக்கிறான். இவன் உலகத்திற்கு விலகி இருப்பான். (1 யோவா. 2:-15-17; யோவா. 15:18-19)*
R 2444:2

## செப்டம்பர் 9

***கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள். (பி-. 2:15-16)***

*சத்தியத்தைத் துரிதமாகப் பரவச் செய்வது, ஒவ்வொரு தேவ பிள்ளைகளுக்குமுள்ள மிக முக்கியமான வேலையாகும். இவர்கள் தங்கள் ஒளியை மங்கவிடாமல், அந்த ஒளி அநேகருக்குப் பிரகாசமாக இருக்கச் செய்ய வேண்டும். ஒளியை மங்காமல் எரியச் செய்வதென்பது, வசனத்திற் கு நெருங்கி கவனத்துடன் அவைகளை வாசித்து, அறிந்து, விசுவாசத்துடன் நம் நடத்தையிலும், வாயின் வார்த்தையிலும், தீதான காரியங்களுக்கு நீங்கலாக நம்மைச் சுத்திகரித்துக் கொண்டு, சத்திய ஒளி அநேகருக்குப் பிரயோஜனமாக இருக்கச் செய்வதேயாகும். மேலும், மாறுபாடான இவ்வுலகில் முன் மாதிரியான ஜீவியம் செய்து, நம் நல்நடத்தையின் மூலம் தேவன் மகிமைப்படும்படி செய்வது அவசியமானது. (1 பேது. 2:11-12; மத்.5:16)* R 3243:3

## செப்டம்பர் 10

***கெட்ட வார்த்தைகள் ஒன்றும் உங்கள் வாயி-ருந்து புறப்பட வேண்டாம்; பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால், அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள். (எபே. 4:29)***

*அப்போஸ்தலன் இந்த வார்த்தைகளை எழுதும் போது சத்தியமில்லாத, தப்பறையான போதகங்களை மட்டுமே குறிப்பிட்டிருக்கக் கூடும். கெட்ட வார்த்தைகளும், மற்ற காரியங்களும் மாமிசத்துக்கிணையானதால்,இவை பிசாசினால் உண்டானவை. அவதூறான காரியங்களைப் பேசுவது தவறானது. தேவ கட்டளைக்கும், மனித சட்டத்திற்கும் விரோதமானது. உண்மையாக இருந்தாலும் அல்லது பொய்யாக இருந்தாலும் அவதூறு பேசுவது, மற்றவர்களுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியதாக இருக்கும். தேவ கட்டளையும், மனித சட்டமும், இதைச் செய்வது தவறானது என்பதில் ஒத்திருக்கிறது. இதற்கு மாறாக, பக்திக்குரிய வார்த்தை ஒருவனை ஜீவன் பெறும்படிச் செய்யும். (மத். 12:34-37)* R 2444:3

## *செப்டம்பர் 11*

***தன் சிலுவையைச் சுமந்து கொண்டு எனக்குப்பின் செல்லாதவன், எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். (லூக். 14:27)***

*பிதாவின் சித்தத்தைப் பல கஷ்டங்களுக்கிடையே செய்து முடிப்பது கிறிஸ்துவின் சிலுவையை சுமப்பதற்கொப்பாகும். இந்த ஜீவியம் அவருக்குப் பல பகை, வெறுப்பு, பொறாமை, துன்புறுத்தல் போன்ற அநேக காரியங்களை உண்டாக்கிற்று. தேவனுடைய பிள்ளைகள் என்று தங்களைச் சொல்லிக் கொண்டு, சுகபோக வாழ்க்கையில் இருந்தவர்களை பிசாசினால் உண்டானவர்கள் என்றார். இடுக்கமான பாதையில் நடக்கிறவர்களாகிய ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்து ஜீவித்தது போலவே, அந்தச் சிலுவைக்கு ஒப்பான ஜீவியம் ஜீவித்து அந்த எல்லாப் பாடுகளையும், நிந்தைகளையும், உபத்திரவங்களையும் அனுபவித்துப் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதில் தங்களை முற்றிலுமாக ஒப்புக் கொடுத்து சத்திய ஒளி பிரகாசிக்கச் செய்ய வேண்டும். (மத். 16:24-27)*
R 3237:3

## *செப்டம்பர் 12*

***உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக் கொள்ளுங்கள். (லூக். 21:19)***

*“நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது” என்று அப்போஸ்தலன் விவரித்துள்ளதைக் காண்கிறோம். பொறுமை, கிருபையின் குணலட்சணங்களில் ஒன்று. தேவ பிள்ளைகளிடையே பொறுமை விசுவாசத்திற்கு முன்னதாக இடம் பெற வேண்டும். பொறுமை ஒருவரின் விசுவாச வளர்ச்சியைக் காட்டக்கூடியதாக இருக்கும். பொறுமையை இழக்கும் எந்தக் கிறிஸ்தவனும், விசுவாசத்தில் பூரணப்பட்டவன் அல்ல. பொறுமையுள்ளவன் கிறிஸ்துவின் பேரில் சார்ந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்று கொள்ளும் வரை விசுவாசத்துடன் காத்திருப்பான். சிலகாலம் காத்திருந்து பொறுமையுடன் சகலத்தையும் அவர் கைக்கு ஒப்புக் கொடுத்து, அவர் நடத்துதலை எதிர்பார்த்திருப்பான். (யாக். 1:3-7)* R 3245:3

## செப்டம்பர் 13

***இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது, எத்தனை நன்மையும், எத்தனை இன்பமுமானது? (சங். 133:1)***

*நம்முடைய இரட்சகரைப் போல நாமும் சமாதானம் பண்ணுகிறவர்களாக இருப்போமாக. சகோதரருடன் ஆவியிலும், சமாதானத்திலும் ஒன்றுபட்டு வாழ்வதே அவருக்கு விருப்பமானது. நம்முடைய ஜீவியத்தில், நாம் சண்டை செய்யும் குணம், நம் பகைவனான சாத்தானோடும் சகல மாமிச பாவங்களோடும் மட்டுமே எதிர்த்து நிற்கக்கூடியதாக இருக்க வேண்டும். நாமும், மற்ற எல்லா சகோதரர்களும் இந்த மாமிச இச்சைகளையே எதிர்த்துப் போராடக் கடமைப்பட்டுள்ளோம். இதுவும் நம்முடைய இரசட்கரின் பாதையிலே, சகல நற்குணங்களுடன் செய்யப்பட்டு, நமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை நழுவ விடாமல் சகலருக்கும் நன்மை செய்து, விசேஷமாக விசுவாச வீட்டாருடன் சமாதானக் கட்டிலே வளர முயல வேண்டும். (எபே. 5:1-2; 6:10-11)* R 3246:5

## செப்டம்பர் 14

***புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல் நடக்கையுள்ளவர்களாய் நடந்து கொள்ளுங்கள். தேவன் பேரில் பற்றுதலாயிருக்கிற மனசாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களை பொறுமையாய் சகித்தால் அதுவே பிரீதியாயிருக்கும். (1 பேது. 2:12, 19)***

*நாம் ஒருசிலரால் தீமை செய்கிறவர்களெனத் தீர்க்கப்படலாம். ஆனால் நம்மை அறிந்தவர்களும், நம்மைச் சுற்றிலும் இருக்கிறவர்களும் நம் நல் நடத்தைகளையும், வார்த்தைகளையும், நியாயமான நல்லொழுக்கங்ளையும், பார்த்து நம்மை நல்லவர்கள் என்று சொல்லத்தக்கதான முன்மாதிரியான ஜீவியம் ஜீவிக்க வேண்டும். இதன் மூலமாகவே தேவன் அவருடைய குமாரன் மூலம் மகிமைப்படுத்தப்படுவார். (நம் நடத்தைகளை காண்கிறவர்களும், தீதான குற்றங்களை நம் பேரில் பொய்யாய்ப் பேசினதை உணர்ந்து தேவனை வழிபடும் வாய்ப்பையும் ஏற்படுத்தும்.) (மத். 5:16)* R 3248:1

## செப்டம்பர் 15

***நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்து போய் அசுத்தமானதைத் தொடாதிருங்கள். அப்பொழுது நான் உங்களை ஏற்றுக் கொள்வேன். (2 கொரி. 6:17)***

*உண்மையான மனசாட்சியுடன் ஜீவிக்க விரும்பும் யாவரும், ஆவிக்குரிய ஜீவியம் செய்து தங்களை உலகத்தினின்று பிரித்துக் கொள்வார்கள். இவர்கள் தங்கள் இருதயங்களில் விருத்தசேதனம் பண்ணப்பட்டவர்களாக, சகோதரர்களை அறிந்து தேவனுடைய குடும்பத்தாராக, இருளைப் பகைத்து ஒளியை நாடுவார்கள். இதுவே ஞானமான வழி. ஒளியைக் கண்டு பயப்படுபவர்கள் தங்கள் கிரியைகளில் பொல்லாதவர்களாகக் காணப்படுகிறவர்களே. இவர்கள் அசுத்தமானதை நடப்பித்துத் தங்களைக் கேடான காரியங்களுக்கு ஒப்புக் கொடுப்பார்கள். இவைகளுக்குத் தங்களை விலக்கி, தேவனுக்குப் பிரியமான வழிகளில் ஜீவிக்க ஒப்புக் கொடுக்கும் யாவரையும் நன்மையான சகோதரர்களாகவும், களைகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட கோதுமை மணிகளாகவும் தேவன் ஏற்றுக் கொள்ள பிரியமாயிருக்கிறார். (ஏசா. 52:11-12)* R 2512:4

## செப்டம்பர் 16

***யேகோவா தமது ஜனத்திற்குப் பெலன் கொடுப்பார்; யேகோவா தமது ஜனங்களுக்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார். (சங். 29:11)***

*கிறிஸ்தவ ஜீவியத்தில் நமக்குண்டாகும் பல பாடுகளையும், சோதனைகளையும் நாம் மேற்கொள்ளும் போது இவை நமக்குப் பொறுமையையும், அனுபவத்தையும், சகோதர அன்பையும், இரக்கத்தையும் வளர்க்கச் செய்கிறது. (இது, தேவனுடைய ஜனங்களுக்கு அருளப்படும் தேவபலன்.) நாம் தாங்கக்கூடாத சோதனைகள் நம்மை நெருங்கும் போது, தேவனிடம் நமது பாரத்தை வைத்து ஜெபிக்கக் கடமைப் பட்டுள்ளோம். தேவன் தாமே, நம்மை தீமையின்று விடுவித்து, நன்மையானதை தரும்படி அவருடைய உதவியை ஜெபத்திலே நாடவேண்டும். (சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான். இவர்கள் சமாதானத்தை அடைந்து, தேவனாலே வழி நடத்தப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள். தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறாதாயிருக்கிறது.) (சங். 12:1-2; ரோமா. 5:1-4)* R 2006:2

## செப்டம்பர் 17

***கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே, அந்த இரகசியம். (கொலோ. 1:27)***

*தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் உண்மையான கிறிஸ்தவ குணலட்சணங்கள் தங்களில் காணப்படும்படி விளங்க வேண்டும். இவர்கள் பூரணமாக சத்திய வசனத்தினால், தங்களைச் சுத்திகரித்து, பரிசுத்தமுள்ளவர்களாக காத்துக் கொள்ள வேண்டும். வேறு எந்த போதகங்களினாலும் தங்களைக் கறைப்படுத்தாமல், காத்து ஜீவிக்க வேண்டும். உறுதியான விசுவாசமும், நம்பிக்கையும் நம்மை மீட்டு இரட்சித்தவர் பேரில் ஸ்திரமாக வைக்கப்பட வேண்டும். எவ்விதத்திலும் நாம் பெற்ற ஆவியைத் துக்கப்படுத்தாமலும், அணைத்துப் போடாமலும் அதை காத்துக் கொள்ள வேண்டும். (அழைக்கப்பட்டதினாலே உண்டான நம்பிக்கையின் மூலமாக, அந்த மகிமையைப் பெறப் பொறுமையோடே ஓடக்கடவோம்.) (எபி. 6:4-6; கலா. 1:8)* R 3250:6

## செப்டம்பர் 18

***என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும். நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன். (யாத். 33:14)***

*தேவன் தமது பிள்ளைகளுடன் சதா காலத்திலும் இருக்கிறார். அவர் நம்மைக் குறித்து எப்பொழுதும் நினைவு கூறுகிறார். நமக்குத் தேவையானவைகளைக் கவனித்து வருகிறார். நம்மைச் சகல ஆபத்துக்களினின்றும் காப்பாற்றி வருகிறார். உலகப் பிரகாரமாகவும், ஆவிக்குரிய வழிகளிலும் போஷித்து வருகிறார். நம்முடைய இருதயத்தைச் சோதித்தறிந்து, நாம் எவ்வளவாக அவரில் அன்பு கூறுகிறோம் என்று அறிந்தும் வருகிறார். நம்மை அநேகச் சந்தர்ப்பங்களில் சிட்சித் து வழி நடத்தி, அவருடன் எப்பொழுதும் தரித்திருக்க விரும்புகிறார். நாம் எத்தருணத்திலும் அவரைக் கூப்பிட்டாலும், நமக்குச் செவி சாய்க்கச் சித்தமுள்ளவராகவும் இருக்கிறார். நாம் அவரில் விசுவாசத்தில் நிலை கொண்டிருப்போமேயானால் எவ்வளவான ஆசீர்வாதங்களைப் பெறுகிறோம். (யாத். 40:34-38)* R 3251:4

## *செப்டம்பர் 19*

***உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம். (யோவா.17:17)***

*ஆவியின் ஜீவியத்தில் ஒருவர் முன்னேறி அதிகமாக வளர்வது, சத்திய வசனத்தைப் பெற்று அதற்குக் கீழ்ப்படிந்து நடப்பதன் மூலமாகவே முடியும் என்று நம் இரட்சகர் வற்புறுத்துகிறார். கிறிஸ்துவின் மூலமாகவோ அல்லது பரிசுத்த ஆவியின் மூலமாகவோ, தங்களுக்கு முன்னதாகவே அறிவிக்கப்பட்டதென்று சொல்பவர்களுக்கு தேவ பிள்ளைகள் எச்சரிப்பாய் இருக்க வேண்டும். சத்தியத்தை முற்றிலும் அறியாது இவ்விதம் பேசுவது, மனமேட்டிமையையும், தற்பெருமையையுமே காட்டுகிறதாக இருக்கும். இப்படிப்பட்டவர்கள் சத்தியத்தைவிடத் தங்களிடம் மேலான போதகர் உண்டென்று நினைப்பதுண்டு. இப்படிப்பட்டவர்களை சாத்தான் சுலபமாக தன் வசம் எடுத்துக் கொள்வான். (சத்தியத்தை அறிவதன் மூலமே நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம்.) (1 பேது. 1:22-25)* R 3251:5

## *செப்டம்பர் 20*

***உன்னதத்திலும், பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம் பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம் பண்ணுகிறேன். (ஏசா. 57:15)***

*நொறுங்குண்டதும், நருங்குண்டதுமான இருதயம் உள்ளவர்களைத் தேவன் புறக்கணியார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இதனால் புதிய சிருஷ்டிகள் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கும் போது இவர்களுக்கு உண்டாகும் பல கஷ்ட, நஷ்டங்களிலும், உபத்திரவங்களிலும் பணிவுடன் தங்கள் காரியங்களைத் தேவனுக்கு முன் சமர்ப்பிக்கும் பொழுது, கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்ட இவர்களுக்கு ஆறுதல் அளிப்பார். மரணத்திற்கேதுவான பாவத்தைச் செய்தவர்களுக்கோ, அப்போஸ்தலன் கூறுவது போல மனந்திரும்புவதற்கேதுவாய், அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம். தேவ ஆவி இவர்களில் வாசமாயிராது. (சங். 34:15-22)* R 3255:4

## செப்டம்பர் 21

***நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும், பொல்லாப்புக்குப் பயப்படேன். (சங்.23:4)***

*சிறு மந்தையின் ஆடுகள் எவ்விதத்தீங்குக்கும் அஞ்சாம-ருக்கும். ஏனென்றால், இவர்கள் கிறிஸ்துவினால் மீட்கப்பட்டு, அவர் பேரில் சார்ந்து நடக்கிறவர்களாய் இருக்கிறார்கள். அவர் வாக்குத்தத்தத்தின்படி இவர் அவர்களுடன் எப்பொழுதும் இருக்கிறார். மரணம் மனித வாழ்க்கையில் ஒரு முடிவல்ல என்றும், உயிர்த்தெழுதலும், நித்திய ஜீவனும் தங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ளதென்றும் இவர்கள் அறிந்தபடியால் அவரிலே நிலைத்திருப்பார்கள். இதனால் மரண இருளின் பள்ளத்தாக்கிலே இவர்கள் நடந்தாலும் மகிழ்ச்சியுடன் பாடி தங்கள் இருதயங்களிலே அவரைத் துதிப்பார்கள். பொல்லாப்பு இவர்களை அணுகாது. ஏனெனில், அவருடைய இரத்தத்தினால் மீட்கப்பட்டவர்கள் அவருடைய ராஜ்யத்தில் அவரோடு ஆளுகையும் செய்வார்கள். தேவன் இவர்களோடிருக்கிறார். (ஏசா. 54:3-8)* R 3269:6

## செப்டம்பர் 22

***என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும், கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன். (சங். 23:6)***

*நன்மையும், கிருபையும் இனி வரும் காரியமாக இருந்தாலும், தேவனுடைய பிள்ளைகளுக்கு இது இப்பொழுதே அருளப்பட்டதை எண்ணி நாம் புகழ வேண்டும். கிறிஸ்துவின் மூலம் அருளப்படும் சந்தோஷத்தை இக்காலத்திலே அறிந்து கொள்ளாதவர்கள், இனிவரும் இராஜ்யத்தின் சந்தோஷமான ஆசீர்வாதங்களையும் அறியாதவர்களாகவே இருப்பார்கள். தங்களை பிரதிஷ்டை செய்து தேவன் பேரிலும், குமாரன் பேரிலும் தங்களை பூரண விசுவாசமுள்ளவர்களாக இக்காலத்தில் காணப்படக் கூடியவர்களுக்கு தேவனுடைய ராஜ்யத்தில் நீடித்த நாட்களாக (அதாவது சதாகாலத்திற்கு) நன்மையும், கிருபையும், சந்தோஷமும் உண்டாயிருக்கும். இவையாவும், இனி வரும் ஆசீர்வாதங்கள் என்று தேவபிள்ளைகள் எண்ணாமல், நாளுக்கு நாள் நன்மையும், கிருபையும் நம்மை உற்சாகப்படுத்தி, பலப்படுத்தி வருகிறதை உணர வேண்டும். (சங். 16:5-11)* R 3270:5

## செப்டம்பர் 23

**பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராட வேண்டும். *(யூதா 3)***

*நம்முடைய விசுவாசத்தின் நல்ல போராட்டம், திருவசனத்திற்காகவே இருக்க வேண்டும். இந்தப் போராட்டம் மூலம் தேவனுடைய குணலட்சணங்களை நாம் காத்துக் கொள்ளவும் வேண்டும். இதன் பொருள் என்னவெனில் நம் சத்தியத்திற்கு முற்றிலும் நம்மை ஒப்புக் கொடுத்து, மனித கட்டளைகளுக்கும் அவர்களுடைய விசுவாசத்திற்கும், கொள்கைகளுக்கும் எதிர்த்து நிற்க வேண்டும். அப்போஸ்தலன் சொன்னபடி "சுவிசேஷத்திற்காக நான் உத்தரவு சொல்ல ஏற்படுத்தப்பட்டேன்" என்று சொல்லவும் வேண்டும். சத்தியமானது தேவனுடைய பிரதிநிதியாகவும் கிறிஸ்துவின் பிரதிநிதியாகவும் இருப்பதால், இதுவே நம் கொடி. இந்த சத்தியத்திற்காக உண்மைப் போர் வீரர்களாக மரண பரியந்தம் போர் புரியக் கடமைப்பட்டுள்ளோம். (பி-. 1:27-30)* R 3274:3

## செப்டம்பர் 24

**மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன். *(1 கொரி. 9:27)***

*மாமிச சரீரம் பல சோதனைகளுக்குட்படக் கூடும். ஆதலால், புதிய சிருஷ்டிகள் தொடர்ந்து விழிப்புள்ளவர்களாக விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடித் தங்கள் சரீரத்தை மாமிச இச்சைகளுக்கு ஒப்புக் கொடாமல் இதை மேற்கொள்ள வேண்டும். புதிய சிந்தையுடன் மாமிசத்தை எதிர்த்துப் போராடி மேற்கொள்பவர்களே பரிசைப் பெற முடியும். அப்போஸ்தலன் சொன்னது போல "நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்." இது விசுவாசத்தின் போராட்டம். ஏனென்றால் மாமிச இச்சைகளுக்கு எதிர்த்து நின்று, நம் விசுவாசத்தைக் காத்துக் கொள்ளவும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையவும் இது அவசியமானது. (ரோமா. 6:17-22)* R 3275:3

## <u>*செப்டம்பர் 25*</u>

***அவரே தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமானார். (1 கொரி. 1:31)***

*நம்மை மீட்டு இரட்சித்து, தம்முடைய ப-யினாலே நம்மைக் கிரயத்திற்குக் கொண்டவர், நம்முடைய வழிகாட்டியாக இருந்து, தம்முடைய சுவிசேஷத்தின் மூலமாக ஞானத்தைத் தந்தருளுகிறார். விழுந்து போன நிலையை நாம் உணர்ந்து, நமக்கு ஒத்தாசையாக வந்தவரை நாம் நினைவு கூறக் கடமைப்பட்டுள்ளோம். நமக்கு ஆசாரியராக இருந்து, முதலாவது நம்மை நீதிமான்களாக்கி, பின்னர் பரிசுத்தப்படுத்தி அல்லது பிரதிஷ்டைப்படுத்தித் தமக்குக் கீழ் ஆசாரியர்களாக நியமித்து முடிவிலே இராஜாக்களாகவும் மாற்றுகிறார். இவ்விதம் விசுவாசமுள்ளவர்களைப் பூரணமாகப் பாவ நிலையி-ருந்தும், மரணத்தினின்றும் மீட்டு மகிமைக்கும், கனத்திற்கும், சாகாமைக்கும் உயர்த்துவார். தேவன், கிறிஸ்து மூலமாகவே எழுப்பச் சித்தமுள்ளவராயிருக்கிறபடியால், இவரே நம் மீட்புமானார். (பி-. 3:7-11; 1 கொரி. 1:24-25)* R 3281:6

## <u>*செப்டம்பர் 26*</u>

***அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர்மேல்..... நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள். (எபே. 2:20-22)***

*ஒவ்வொரு நாள் கடந்து போகப்போக, இந்த ஆலயத்தில் நம் சம்பத்தை மூன்று காரியங்களின் மூலமாக நினைவு கூறுதல் அவசியமானது. (1) நாம் ஆலயத்தில் ஜீவனுள்ள கற்களாக இருக்க இன்னும் ஆயத்தம் பண்ணப்பட்டு வருகிறோம். (2) இராஜரீக ஆசாரிய அங்கத்தினர்களாக கிருபாசனப் பெட்டியைச் சுமந்து, ஆலயத்திற்குள் பிரவேசிக்கும் நிலையி-ருக்கிறோம். சிலர் உட்பிரவேசித்துள்ளனர். சிலர் இன்னும் வழியிலே போய் கொண்டும் இருக்கிறோம். (3) தேவனுடைய ஜனமாக இருந்து புதிய பாட்டாகிய தெய்வீக கிருபையையும், நீதியையும், அன்பையும், சத்தியத்தையும் குறித்து பாட இதுவே ஏற்ற சமயம் என்பதை உணர்ந்து பாட வேண்டும். இவைகளிலே நாம் விசுவாசமுள்ளவர்களாக நமக்கு ஒப்புவிக்கப்பட்டவைகளைத் திறமையுடன் செய்து, அந்த ஆலயத்தில் பிரவேசிப்போமாக. (1 பேது. 2:4-9)* R 3284:1

## *செப்டம்பர் 27*

***உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக. (மத். 4:7)***

*சோதனை, தேவ பிள்ளைகளைத் தொடர்ந்து தீவிரமாகத் தாக்கி வரும். தேவனுடைய நாமத்திலே இவர்கள் சோதனைகளை மேற்கொண்டு, தாங்கள் பரத்திற்குரியவர்கள் என்று அநேகருக்கு நிரூபிக்க வேண்டும். இப்பாடத்தில் நாம் அறிய வேண்டியது யாதெனில் நாம் தேவனுடைய பட்சமாக இருக்கிறோம் என்று மற்றவர்களுக்குக் காட்டாமல், நம்முடைய நற்கிரியைகளை மற்றவர்கள் காணும்படி செய்து இதன் மூலம் அவர்கள் தேவனை மகிமைப்படுத்தும்படிச் செய்ய வேண்டும். இருளி-ருந்து ஒளியிடம் நம்மை வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கிறவர்களாக இருந்து, சோதனைகளைப் பொறுமையுடன் சகித்து சத்தியத்தின் ஊழியக்காரராக நம்மை ஒப்புக் கொடுத்து ஜீவிக்க வேண்டும். (தேவனைப் பரீட்சைப் பார்ப்பது, தேவ பிள்ளைகளுக்கடுத்தவை அல்ல.) (உபா. 6:14-19)* R 3298:5

## *செப்டம்பர் 28*

***உங்கள் எதிராளியாகிய பிசாசானவன், கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள். (1 பேது. 5:8-9)***

*சாத்தான் நமக்கு எதிராளி என்னும் போது, நாம் எதிர்த்துப் போராடுவது மாமிசத்தோடும், இரத்தத்தோடும் மட்டுமல்ல. துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், அந்தகார லோகாதிபதியான சாத்தானோடும், பொல்லாத ஆவிகளின் சேனைகளோடுமே. நாம் இவைகளை எதிர்த்துப் போராட கண்ணுக்குத் தெரியாத உதவி நமக்குத் தரப்படுவதை நாம் அறியலாம். சோதனை வேளையிலே நாம் விசுவாசத்துடனும் தேவனுடைய பக்கமாக இருந்து, அவற்றை எதிர்த்து நிற்கும் போது நாம் பலப்படுத்தப்பட்டு, தேவன் என் பட்சமாய் இருக்கும் போது எனக்கு எதிராளியாய் இருப்பவன் யார்? என்று சொல்லத் துணிவோம். தேவனோடிராதவன், அவருக்கு எதிராளியாயிருப்பான். (எபே. 6:10-13)* R 3300:4; R 2568:5

## <u>செப்டம்பர் 29</u>

***மனமேட்டிமை உள்ளவனெவனும் யேகோவாவிற்கு அருவருப்பானவன். (நீதி. 16:5)***

*இவ்வுலகில் புதிய சிருஷ்டிகள் மேற்கொள்ள வேண்டிய பல தீமைகளில் ஒன்று, மனமேட்டிமை. உலகப்பிரகாரமான மனமேட்டிமை, தேவன் பேரிலே நாம் கொண்டுள்ள விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் எதிர்த்து போரிடக் கூடியதாக இருக்கும். தேவன் பேரில் முழு நம்பிக்கையுள்ளவர்களும், தைரியம் உள்ளவர்களும் மட்டுமே இந்த அரக்கனை மேற்கொள்ள முடியும். இது ஒருவரின் தனிப்பட்ட போர், மனமேட்டிமை எல்லாத் தீங்குக்கும் வழி நடத்துமாதலால், இதனை முற்றிலும் ஒழிப்பதே தேவபிள்ளைகளின் நோக்கமாயிருக்க வேண்டும். மனத்தாழ்மை நம்மைச் சகல நல்லொழுக்கங்களுக்குள் வழிநடத்தி அன்பின் பிரமாணத்தைப் பூரணமாகக் கைக் கொள்ளச் செய்யும். கவிஞன் எழுதியது போல, "பெருமை முடியும் இடத்தில் பெருந்தன்மை துவங்கும்." (லூக். 14:8-11; 18:10-14)* R 3231:1

## <u>செப்டம்பர் 30</u>

***கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது. (2 கொரி. 5:14)***

*அன்பைக் குறித்து மட்டும் விவரிப்பது கூடாததாகக் காணப்படுகிறது. ஆதலால், நாம் அதன் நடத்தையைக் குறித்தும் விவரிக்கலாம். அன்பை பெற்றிருப்பவர்கள், அதை வெளிப்படையாகத் தங்கள் நல்நடத்தையின் மூலம் அது தேவனுடையதென்றும் காட்டமுடியும். இருதயத்திலும், நாவிலும் தங்கள் கையின் கிரியைகளிலும், சிந்தனையிலும் தங்களை முற்றிலும் தேவசாயலுக்கு ஒத்ததாகக்காட்டக் கூடியவர்களாயிருப்பார்கள். கிறிஸ்துவின் சீஷர்களாகவும், மாணவர்களாகவும் அவருடைய பள்ளியிலே நாளுக்கு நாள் அன்பில் அதிகமாக வளர்ந்து பூரணப்பட்டு மேலான அழைப்பைப் பெற முயல வேண்டும். இதை நமது அனுதின ஜீவியத்தில் வார்த்தையிலும், சிந்தையிலும், செய்கையிலும் பயன்படுத்திப் பூரணப்பட வேண்டும். இதைக் குறித்து கவிஞன் எழுதியது: "ஒவ்வொரு அன்பான நிழலும் வெளிச்சமாயிருப்பது போல ஒவ்வொரு கிருபையும் அன்பாயிருக்கிறது." (எபே. 3:17-19; 1 யோவா. 4:16-21)* R 3150:2; 3151:5

## அக்டோபர் 1

***என் நாவினால் பாவஞ்செய்யாதபடிக்கு நான் என் வழிகளைக் காத்து, துன்மார்க்கன் எனக்கு முன்பாக இருக்கும் மட்டும், என் வாயைக் கடிவாளத்தால் அடக்கி வைப்பேன். (சங். 39:1)***

*மனித சரீரத்தில் அநேக அவையவங்களில் நாவானது மிகப்பிரதான ஸ்தானம் பெற்றுள்ளதை எவரும் ஒத்துக் கொள்வார்கள். இது நன்மையானவைகளுக்கும், தீமையானவைகளுக்கும் ஏதுவானது. நம்முடைய அனுபவத்தின் மூலம் மற்றெல்லா அங்கங்களைக் காட்டிலும் நாவை அடக்குவது கடினமான காரியமென்பதை நாம் அறிவோம். அநேகர் இதைத் தீமைக்கென்றே உபயோகிக்கிறார்கள். கிறிஸ்தவ ஜீவியத்தில் இதை அடக்கி ஆள விழிப்பும், ஞானமும் மிகுந்த ஜாக்கிரதையும் அவசியமானது. புதிய சிருஷ்டிகளிடையே கிறிஸ்துவின் சிந்தையுடன் தனக்கோ அல்லது பிறனுக்கோ தீமை விளைவிக்காதபடி நாவானது கடிவாளத்துடன் காக்கப்பட வேண்டும். (யாக். 3:3-10)* R 2156:3

## அக்டோபர் 2

***பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி...... இலக்கை நோக்கித் தொடருகிறேன். (பி-. 3:13-14)***

*நாம் விட்டுவந்த பின்னான காரியங்களை நாம் மறக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். இது தேவ சித்தமாயிருக்கிறது. தேவன் நம்முடைய எல்லாப் பாவங்களையும், அக்கிரமங்களையும் மன்னித்து, அவைகளைத் தமக்குப் பின்னாக எறிந்து விட்டார். நம்முடைய இரட்சகரின் மரணத்தின் மூலம் நம் பாவங்கள் மூடப்பட்டு விட்டது. இது முதற்கொண்டு அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடப்பவர்கள் தாங்கள் விட்டு வெளியேறிய மாமிசக் காரியங்களை மீண்டும் பின்பற்றக் கூடாது. மாமிசம் பெலவீனமானது. ஆகையால் நம்முடைய அனுதின வாழ்க்கையில் ஏற்படும் தவறுதல்களுக்காக, கிறிஸ்துவின் மூலம் தேவனிடம் மன்றாடி மன்னிப்பைக் கேட்க கடமைப் பட்டுள்ளோம். நமக்குமுன் வைக்கப்பட்டுள்ள பரிசை நோக்கி தொடர்ந்து முன் நோக்கி ஓடக் கடவோம். (லோத்தின் மனைவியை நினைவில் கொள்வோமாக.) (லூக். 9:59-62)* R 3306:2

## அக்டோபர் 3

***உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை.(சங். 119:165)***

நம்முடைய விண்ணப்பம் அதிகமாகக் கிருபைக்காகவும், ஞானத்திற்காகவும், ஆவியின் கனிகளுக்காகவும், தேவனுடைய சேவையிலே அதிகமாக நம்மை உட்படுத்தி சகோதரர்களுக்கு ஊழியம் செய்வதற்காகவுமே இருக்க வேண்டும். இதன் மூலம் தேவனுடைய குமாரனின் சாயலிலே இணைக்கப்பட்டு, தேவன் வாக்குத்தத்தம் பண்ணின சமாதானத்தைப் பெற்றவர்களாக இருக்க முடியும். இந்த சமாதானம் உலகம் தரக்கூடாத சமாதானமாக இருந்து, அநேகரின் இருதயங்களைக் காத்துக்கொள்ளும். தேவனுடைய வார்த்தைகள் இவர்கள் இருதயங்களில் பதிந்து இருப்பதால், தீமையான எந்த சிந்தையும் இவர்களில் காணப்படாது. பல இன்னல்களிடையே இவர்கள் இருந்தாலும், இடறாமல் சமாதானமாகவே இருப்பார்கள். *(ரோம. 5:1-5; யோவா. 14:27)* R 3306:3

## அக்டோபர் 4

***என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன். (மத். 4:19)***

நம்முடைய வாழ்நாட்கள் முழுவதும் நமக்கு ஏற்படும் சகல காரியங்களும் பிற்கால நன்மைக்கேதுவான அனுபவப் பாடங்களை கொடுக்கிறது. மீன்பிடிக்கிற பணியிலே இருந்து அப்போஸ்தலர்களாகத் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தங்கள் பிற்கால வாழ்க்கையில் சிலவற்றைப் பயன்படுத்த வேண்டியதாக இருந்தது. நம்முடைய இரட்சகர் இதைத் தம்முடைய அழைப்பிலே குறித்துக் காண்பிக்கிற தைக் காண்கிறோம். மீன் பிடிப்பவர்களுக்கு அதிக சக்தி, புத்திக் கூர்மை, பொறுமை, நீடிய உழைப்பும் தேவை. இந்த எல்லாக் குணங்களும் ஆவியின்படி மனிதரைப் பிடிக்க ஒருவருக்கு அவசியமானது. மீன்கள் தவறிப் போகாமல், அதற்காகச் சரியான ஆகாரத்தை வைத்துக் கண்ணோட்டம் உள்ளவர்களாய் அதைப் பிடிப்பது போலவே, விருப்பமுள்ளவர்களைப் பிடிக்க வேண்டும். *(மத். 13:47-50)* R 3308:3

## <u>அக்டோபர் 5</u>

***ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள். (எபி. 12:3)***

*தேவனுடைய உண்மையான பிள்ளைகளில் எவ்வளவு பேர் சோதனைகளில் களைப்படைந்து, சோர்ந்து, விசுவாசத்தில் பின்தங்கி தங்களுடைய பரிசை இழந்துபோகக் கூடியவர்களாயிருக்கின்றனர். இவர்கள் தங்கள் இரட்சகரையும், அவர் அனுபவித்தப் பாடுகளையும் நினைக்க வேண்டும். இருளிலே பிரகாசித்த அந்த ஒளியை அக்காலத்தில் அநேகர் அறியாததுபோல, இக்காலத்திலும் அறியார்கள். நீதியினிமித்தம் அவர் எவ்வளவாகப் பாடுகளை அனுபவித்து தம்மை மரணத்திற்கும் ஒப்புக் கொடுத்தார் என்பதை நம்முடைய சோதனையிலும், கஷ்டத்திலும் நாம் நினைக்கும் போது உண்மையாகவே பலப்படுத்தப்பட்டு உண்மையுள்ள போர் வீரர்களாக இருக்கச் செய்யும். (மத். 10:21-28)* R 3313:5

## <u>அக்டோபர் 6</u>

***நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் என்று அதட்டி, மனுஷ குமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார் என்றார். (லூக். 9:55-56)***

*இரக்கத்தை விரும்பும் கிறிஸ்துவின் சீஷர்கள் மற்ற மனிதரைக் குறித்துத் தீர்ப்புக் கூறுவதை விட்டு விலகி இருக்க வேண்டும். நாம் எவ்வளவாக தேவனிடம் இரக்கத்தையும், கிருபையையும் பெற விரும்புகிறோமோ, அந்த அளவுக்கு மற்றவர்களிடமும் நாமும் இரக்கத்தை காண்பிக்கவே, தேவன் விருப்பமுள்ளவராயிருக்கிறார். மற்றவர்களிடம் குற்றம் கண்டுபிடித்து தீர்ப்புக் கூறுகிறவர்கள் இருதயத்தில் பூரணமற்றவர்களாவார்கள். தேவ பிள்ளைகள் தங்களை இதற்குக் காத்துக் கொள்வது அவசியமானது. அவருடைய பிள்ளைகளாயிருக்க இரக்கம், அன்பு, நன்மை செய்தல் போன்ற குணங்களுடைய ஆவியே இன்றியமையாதது. இவை இல்லாதவர்கள், தேவனுடைய பிள்ளைகளாக தொடர்ந்து வாழ முடியாது. (ரோம. 2:1-6)* R 3316:4,6

## *அக்டோபர் 7*

***நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மண-ன் மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான். (மத். 7:26)***

*கிறிஸ்துவின் வாக்குத்தத்தங்களின் பேரில் நம்பிக்கையாக இருந்து, தன் கிரியைகளில் ஒன்றுமில்லாதவன், மணலின் மேல் தன் நம்பிக்கையைக் கட்டினவனாகக் காணப்படுவான். சோதனையின் நாளிலே வெகுசீக்கிரத்தில் அவன் விழுந்து போவான். அவன் நம்பிக்கை யாவும் ஒன்றுமில்லாமல் போகும். அவருடைய இராஜ்யத்தில் பங்கு பெற விரும்பும் ஒவ்வொருவரும், கீழ்ப்படிதலுடன் தங்கள் இருதயங்களையும், நாவையும் காத்து கிரியையுடன் தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்டதை விசுவாசத்துடன் செய்து முடிக்க வேண்டும். நற்கனிகளைத் தரக்கூடியவர்களாகக் காணப்படும் போது, எவ்வளவு பலமுள்ள காற்றுகளான சோதனைகள் இவர்களை நெருக்கினாலும், அசைக்கப்படாத மரங்களைப் போ-ருப்பார்கள். ஏனெனில், இவர்கள் உறுதியான அஸ்திபாரத்தின் மேல் இருக்கிறவர்கள். (யாக். 2:17-22)* R 3318:5

## *அக்டோபர் 8*

***மோசம் போகாதிருங்கள் .... மாமிசத்திற்கென்று விதைக்கிறவன், மாமிசத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன், ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான். (கலா. 6:7-8)***

*தன்னலம், அநீதி முதலான மாமிச இச்சைகளை நாம் நம்முடைய இருதயங்களில் விதைத்தோமானால், இது நாளுக்கு நாள் அதிகமாகி கேட்டுக்கு வழி நடத்தி அழிவுக்குள்ளாக்கும். இதுவே இரண்டாம் மரணம். இதற்கு மாறாக, ஆவியிலே மாமிச இச்சைகளை எதிர்த்து ஆவியின் நற் குண இலட்சணங்களை விதைத்தால், இவைகள் நற்கனிகளைத் தந்து, புதிய சிந்தையுடன் ஜீவனுக்குட்படுத்தும். ஆவியின் நடத்துதலால் நற்குணங்கள் பெருகி தேவனுடைய வாக்குத்தத்தங்களின் பேரில் விசுவாசத்தை பலப்படுத்தி தேவ இராஜ்யத்தில் பங்குபெறத் தகுதியுள்ளவர்களாக்கும். (கலா. 5:16-23)* R 3323:5

## அக்டோபர் 9

***அற்ப விசுவாசிகளே, ஏன் பயப்படுகிறீர்கள். (மத். 8:26)***

*நம்முடைய வாழ்க்கையில் ஒவ்வொரு அனுபவமும் நமக்குப் பயனுள்ளதாகக் காணப்பட வேண்டும். துவக்கத்தில் நாம் விசுவாசத்தில் குறைவுபட்டவர்களாகப் பயப்படும் போது ஒத்தாசை பெற்றாலும், "அற்ப விசுவாசி" என்றே அழைக்கப்படுவோம். போகப் போக நாம் விசுவாசத்திலே பலப்படும்போது, நம்மிலே அதிக நம்பிக்கை, அதிக சமாதானம், அதிக சந்தோஷம் நிறைந்து, தேவன் நம்மோடிருக்கிறார் என்றும், நம்முடைய இரட்சகர் நமக்காக கவலையுற்றவராக சாத்தானின் கைகளுக்கு விலக்கிக் காப்பார் என்னும் நம்பிக்கை நம்மிலே தோன்றும். அவர் நம்மோடிருந்து தீங்கு நம்மை அணுகாமல் பரம இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க வழி நடத்துவார். (மத். 6:25-30; 21:20-22)* R 3325:1

## அக்டோபர் 10

***பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய், பூரண அறிவடையும்படி, புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே. (கொலோ. 3:9-10)***

*நம்முடைய சிந்தனையிலும் சித்தத்தி-ருந்து மட்டுமே பழையவைகள் நீக்கப்பட்டுப் புதிதாக்கப்படுகிறோம். இந்த ஒரு மாற்றமானது, மரணத்திற்கேதுவான இந்த சரீரம் சாகாமையைத் தரித்துக் கொள்ளும் போது பூரணப்படுகிறது. இது வல்லமையிலும், மகிமையிலும், ஆவியிலும் அழிவில்லாததாக எழுப்பப்படும். இதற்கு தகுதியுள்ளவர்களாக முதலாம் உயிர்த்தெழுதலில் எழுப்பப்பட நாம் நம்மை முற்றிலும் அடக்கி தேவ சித்தத்தை அனுதினமும் நிறைவேற்றி, நம்முடைய இருதயங்களையும், சிந்தனைகளையும் முற்றிலும் புதிதாக அவருக்கே ஒப்புக் கொடுத்தல் வேண்டும். (எபே. 4:17-24)* R 3307:4

## <u>அக்டோபர் 11</u>

**யேகோவாவின் பாத்திரங்களைச் சுமக்கிறவர்களே, அதின் நடுவி-ருந்து புறப்பட்டு உங்களைச் சுத்திகரியுங்கள். *(ஏசா. 52:11)***

தேவனுடைய ஊழியக்காரருக்கும், அசுத்தமான காரியங்களை நடப்பிக்கிறவர்களுக்குமிடையே ஒரு பிரிவினையை தேவன் விரும்புகிறார். தேவனுடைய சொந்த ஜனம் அவருடைய பிரதிநிதிகளாக, சத்தியத்திற்குச் சாட்சிகளாக இருக்க வேண்டும். அசுத்தமுள்ளவர்களும், சாத்தானின் கிரியைகளை நடப்பிக்கிறவர்களும், நற்செய்தியை அறிவிக்க தேவன் விருப்பமுள்ளவர் அல்ல. தேவனோடு இசைந்து பரிசுத்தமாக ஊழியம் செய்யாதவர்களைக் குறித்து தேவ மக்கள் எச்சரிப்பாயிருக்க வேண்டும். "தேவன் துன்மார்க்கனை நோக்கி: நீ என் பிரமாணங்களை எடுத்துரைக்கவும், என் உடன்படிக்கையை உன் வாயில் சொல்லவும், உனக்கு என்ன நியாயமுண்டு என்றார்." *(சங். 50:16-22)* R 3309:4

## <u>அக்டோபர் 12</u>

**காட்டுப்புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள். *(மத். 6:28)***

நம்முடைய இரட்சகர் இயற்கையாக உருவாகும் சிறிய காரியத்தையும் நாம் சிந்திக்கும்படி அழைக்கிறார். சிருஷ்டிகரின் பேரில் விசுவாசமுள்ளவர்களாக இருக்க, இந்த பாடத்தை நமக்குப் போதிக்கிறார். மனித சிந்தனையானது, சகலத்தையும் உண்டாக்கின தேவன் தம்முடைய சிருஷ்டிகளில் ஒன்றையும் மகிமையற்றதாக சிருஷ்டிக்கவில்லை என்றும், அவர் பூரண நீதி, ஞானம், வல்லமை, அன்பு உள்ளவர் என்றும் உணர வேண்டும். இவ்விதம் சிந்திக்கும் ஒவ்வொரு ஆத்துமாவும், தங்கள் ஜீவியத்தில் முன்னேறிக் கிருபையில் வளர்ந்து ஞானத்திலும், அன்பிலும் பலப்பட்டிருப்பார்கள். சிறிய காரியங்களை புரிந்துகொள்ளச் சக்தியில்லாதவர்கள் தங்கள் வழிகளிலே தவறினவர்களாகக் காணப்பட்டு, தேவ திட்டத்தையும், அவர் வழிகளையும் அறியாம-ருப்பார்கள். *(மத். 6:30-34)* R 3313:2

## அக்டோபர் 13

***நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன். (யாக். 2:18)***

*இக்காலத்தில் தேவனுடைய ஜனத்தாரிடத்திலே விசுவாசத்தைக் காண வேண்டியதாக இருந்தாலும், கிரியையும் மிக அவசியமானது. நம்முடைய கிரியையே நம் விசுவாசத்தை மற்றவர்களுக்கு காட்டக்கூடியதாக இருக்கும். கிரியை இல்லாத விசுவாசம் செத்ததாயிருக்கும். நம் கிரியைகளே நாம் தேவன் பேரிலும், அவர் குமாரன் பேரிலும் கொண்டுள்ள விசுவாசத்தைப் பூரணப்படுத்தி, அவருடைய இராஜ்யத்தில் பங்கு பெறத் தகுதியுள்ளவர்களாக்கும். அவர் பேரில் அன்புள்ள யாவருக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசு இதுவே. கிறிஸ்து இயேசுவை பற்றும் விசுவாசத்தினாலே நாம் தேவனுடைய பிள்ளைகளானோம். (2 தெச. 1:4-5, 11-12)* R 3318:1

## அக்டோபர் 14

***பலியிடுவதைப் பார்க்கிலும் நீதியும், நியாயமும் செய்வதே யேகோவாவிற்குப் பிரியமானது. (நீதி. 21:3)***

*அன்பு எல்லாவற்றிலும் மிகப் பிரதானமானதால், இந்த அன்பிலே நாம் வளருவது அவசியமானது. இந்த அன்பிலே நாம் அதிகதிகமாக வளர்வதற்கு முதலாவது நீதி, நியாயங்களையும், பரிசுத்தமாக இருப்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். சாலொமோன் நீதிமொழிகளில் இதைத்தான் வற்புறுத்துகிறார். எந்த மனிதனும், முன்னதாக நீதியுள்ளவனாக இருந்து, நியாயத்தை நடப்பிக்க வேண்டும். புதிய சிருஷ்டிகள் நீதியைக் குறித்து நன்கு அறிந்து, தங்கள் அனுதின வாழ்க்கையில் அதை தேவவார்த்தையின்படி அப்பியாசப்படுத்த வேண்டும். இதன் மூலமாகவே அன்பை வளர்க்க முடியும். அநீதியிலே உண்டாகும் அன்பு, மாயமாயிருக்குமாதலால் தேவனுடைய ஊழியக்காரர்களுக்கு அவர் விரும்பும் உண்மையான அன்பு, நீதியுடன் காணப்பட்டு நியாயத்துடன் விளங்க வேண்டும். (மீகா. 6:6-8; செப். 2:1-2)* R 3323:1

## அக்டோபர் 15

**தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள். *(மாற். 11:22)***

நம் இரட்சகரைப் பின்பற்ற ஆரம்பித்த நாள் முதல் நம் அனுதின அனுபவம் யாதெனில், நாம் காணாத ஒரு வல்லமை, நம்மைக் காத்து வழிநடத்தி வருகிறது என்பதே. இதன் மூலம் கிறிஸ்துவின் பள்ளியில் மாணவர்களாக நாம் போதிக்கப்பட்டு அதிகமதிகமாகக் கிருபையிலும், ஆவியிலும் விசேஷமாக விசுவாசத்திலும் பலப்படுத்தப்படுகிறோம். தம்மைப் பின்பற்றுகிறவர்கள் முக்கியமாக அடைய வேண்டிய காரியம் விசுவாசமென்பதை தேவன் அதிகமாக எதிர்பார்க்கிறார். இந்த விசுவாசத்தின் மூலமாக மட்டுமே நாம் உபத்திரவங்களில் சந்தோஷப்பட்டிருப்போம். ஆம், உபத்திரவத்தில் நாம் சந்தோஷப்பட முடியாதுதான். ஆகிலும் இதன் மூலம் நமக்கு வைக்கப்பட்டுள்ள மகிமை, சதா காலங்களுக்கும் உள்ளதென்பதே நம்முடைய சந்தோஷமாக இருக்கிறது. *(2 தீமோ. 2:9-12; ரோம. 5:1-5)* R 3324:5

## அக்டோபர் 16

***அவர் கொந்தளிப்பை அமர்த்துகிறார், அதின் அலைகள் அடங்குகிறது. (சங். 107:29)***

மனிதருடைய அநேக கடும் உணர்ச்சி, எதிர்ப்பு முத-ய கொந்தளிப்புக்கிடையே தேவ சித்தத்தை நாம் எடுத்துக்காட்ட இக்காலத்தில் அழைக்கப்பட்டிருக்கிறோம். நம் இருதயங்கள் சில சந்தர்ப்பங்களில் திகைப்படையக் கூடும். ஆகிலும் தேவன் நம்மோடிருக்கிறார் என்று நம் விசுவாசத்தின் மூலம் நாம் காணக்கூடியவர்களாயிருந்து, வல்லமையுடன் சமாதானத்தை உலகத்திற்குச் சொல்லக்கூடியவர்களாக இருப்போம். புயலுக்கொப்பான பல துன்பங்கள் மக்களை நெருக்கும். அவர்கள் அலறி நடுங்குவார்கள். ஆகிலும் நமக்கு திகைப்பைக் கொடுக்கிறதாக இராமல் இவைகள் இ க்காலத்தில் சம்பவிக்க வேண்டியதை அறிந்திருக்கிறபடியால், நாம் சந்தோஷத்துடன் மோசேயின் பாட்டையும், ஆட்டுக்குட்டியின் பாட்டையும் பாடி நம் மீட்பு சமீபமாயிருப்பதால் களிகூறக் கடவோம். *(சங். 46:1-7)* R 3325:4

## <u>*அக்டோபர் 17*</u>

***அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய். (சங். 91:4)***

*யேகோவாவின் பேரில் பக்தியும், விசுவாசமும் உள்ள தம் பிள்ளைகளை அவர் அரவணைத்து, தம் அன்பின் அனலை பெறும்படி செய்கிறார். அவர் அன்பை உணர்ந்த ஒவ்வொருவரும் "நாங்கள் உம்முடைய கூடாரத்திலே சதா காலங்களிலும் தங்கி இருந்து" காக்கப்படுவோம் என்பார்கள். "உமது செட்டைகளின் மறைவில் அடைவோம். நீர் எங்களுக்கு அடைக்கலமும், சத்துருவுக்கு எதிரே பலத்த துருகமுமாயிருந்தீர். நீர் என் பொருத்தனைகளைக் கேட்டீர். உமது நாமத்துக்குப் பயப்படுகிறவர்களின் சுதந்திரத்தை எங்களுக்குத் தந்தீர் என்பார்கள்." (சங். 61:3-5) இதனால், உம்முடைய வல்லமையைப்பாடி, காலையிலே உம்முடைய கிருபையை மகிழ்ச்சியோடு புகழுவேன். எனக்கு நெருக்கமுண்டான நாளிலே, நீர் எனக்கு தஞ்சமும் உயர்ந்த அடைக்கலமுமாவீர் என்று சங்கீதக்காரன் சொன்னது போலச் சொல்வார்கள். (சங். 59:16)* R 3331:6

## <u>*அக்டோபர் 18*</u>

***தன் வேலையில் அசதியாயிருப்பவன், அழிம்பனுக்குச் சகோதரன். (நீதி. 18:9)***

*தேவனை அறிந்து தங்களை அவருக்கென்று பிரதிஷ்டை செய்தவர்கள் நேரத்தையும், சமயத்தையும் வீண் கழித்தல் கூடாது. எவ்வளவாய் அவர்கள் சத்தியத்தை அறிந்து, முன்னேறினவர்களாய் இருந்தாலும், நேரத்தை ஆதாயப்படுத்தாதவர்கள், தங்கள் காரியங்களில் குறைவுபட்டவர்களாவார்கள். அவர் தந்தருளின நல் ஈவுகளை நாம் அங்கீகரித்து அவருக்கு நாம் செய்யும் சேவையில் ஜாக்கிரதையுடன், சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும், தைரியமாக அவர் திட்டங்களைக் குறித்து அவரவருக்குக் கொடுக்கப்பட்ட வரத்தின்படி பிரஸ்தாபிக்க வேண்டும். தாலந்தின் உவமையில், நம் கர்த்தர் இந்த உலகில் அவரை பின்பற்றினவர்கள் செய்யும் ஊழியம் எவ்வாறு அளக்கப்படுகிறதென்பதைக் காட்டியதால், கொடுக்கப்பட்ட வரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். (மத். 25:14-18, 27-30)* R 3333:3

## அக்டோபர் 19

***இலவசமாய்ப் பெற்றீர்கள். இலவசமாய்க் கொடுங்கள். (மத். 10:8)***

பசியாலும், தாகத்தாலும் வருந்துகிற மக்களுக்குப் பரம ஆகாரத்தை நாம் வழங்க எப்பொழுதும் உற்சாகமுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். இவ்விதமே நாமும் அதிகமாக முற்காலங்களிலும், இப்பொழுதும் களைப்பாற்றப்பட்டு, பலப்படுத்தப்பட்டு வருகிறோம். ஏற்ற காலத்தில் இவர்கள் போஷிக்கப்படாவிட்டால், வழியிலே சோர்வடைவார்கள். விசுவாச வீட்டாருக்குத் தேயைான சகலமும் நம்மிடத்தில் உள்ளது. இது அவ்வப்போது தரப்படாவிடில் அவர்கள் நிலைத்து நிற்கக்கூடாமல், சோர்வடைந்து போவார்கள். நம் சக்திக்கு ஏற்றாற்போல் நமக்கு அருளப்பட்ட சத்திய அறிவைத் தன்னயமாக வைத்துக் கொள்ளாமல், சகலரும் அதில் பங்கு பெறச் செய்ய வேண்டும். இது தேவனுடையதென்று மற்றவர்களுக்கு கொடுக்கப்படும் பொழுது, தேவ ஆசீர்வாதத்தை அதிகமாக நாம் பெறுகிறோம். *(1 தெச. 1:3-10)* R 3333:6

## அக்டோபர் 20

***சர்ப்பங்களைப் போல வினாவுள்ளவர்களும், புறாக்களைப் போல கபடற்றவர்களுமாய் இருங்கள். (மத். 10:16)***

சத்தியத்திற்கென்று தங்களை ஒப்புக் கொடுத்து, ஊழியம் செய்ய விரும்பும் தேவனுடைய ஜனம், ஞானத்தின் விலை மதிப்பைக் குறித்து அறிவது மிக முக்கியமானது. சர்ப்பத்தைப் போல் வினாவுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று இரட்சகர் ஓர் உதாரணங்காட்டி, மற்றொரு சந்தர்ப்பத்தில் அப்போஸ்தலரிடம், "அநேக காரியங்களை உங்களுக்குச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்க மாட்டீர்கள்" என்றார். நாமும் சந்தர்ப்பங்களை அறிந்து, சில சத்தியங்களை விவேகத்துடன் போதிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் அசத்தியமானவைகளை பேசாமலும், சத்தியத்தைப் பேசுகிறவர்களாகவும் மட்டுமல்ல பேச வேண்டியதை ஞானத்தோடும், அன்போடும் பேச வேண்டும். *(நீதி. 1:2-6)* R 3339:5

## அக்டோபர் 21

***பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. (லூக். 11:2)***

*இந்த வார்த்தைகள் மரியாதையையும், தகுந்த பாராட்டையும் வெளிப்படுத்திக் காட்டி, தேவனின் நன்மைகள் எவ்வளவு பெரிதானவை என்பதை எடுத்துக் காட்டக் கூடியதாகவும் உள்ளது. தேவனிடத்தில் நாம் விண்ணப்பிக்கும் போது, முதலாவது நாம் தன்னயமற்றவர்களாயிருக்க வேண்டும். சகலத்திலும் தேவனையே நாம் முன்னதாக நாம் சிந்தனையில் கொள்ள வேண்டும். மேலும் தேவ சித்தத்திற்குட்படாத எதையும், பரம பிதாவிடம் கேட்கக்கூடாது. தேவனுடைய சமூகத்தினின்று இப்படிப்பட்ட சிந்தையுடையோர் விலக்கப்பட்டு போகாதபடிக்கு இவர்கள் தேவனுக்கு செலுத்தும் மரியாதையே முதலாவதாக இருக்க வேண்டும். இனிவரும் தேவ ராஜ்யத்திற்காகவும், அவருடைய சித்தம் நிறைவேறுவதற்காகவுமே ஜெபிக்க கிறிஸ்துவின் மூலமாகப் போதிக்கப்படுகிறோம். (மத். 6:5-8)* R 3352:2

## அக்டோபர் 22

***நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா? (மத். 20:22)***

*இடுக்கமான பாதையில் சென்ற நம் இரட்சகரின் மன தைரியமான செயல்கள் நம்மை வியப்புறச் செய்கிறது. அவரின் மனப்பக்குவம் எவ்வளவு பலம் வாய்ந்தது. அவர் தம் வழிகளில் அஞ்சாமலும், பின்னிட்டுத் திரும்பாதவருமாய் நடந்தார். தம் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றித் தம்மை மற்றவர்களுக்குப் பலியாக ஒப்புக் கொடுப்பதே, அவர் வாஞ்சையாக இருந்தது. அவரிலே பணிவையும், ஊழியத்தின் மூலம் வெற்றி அடைந்ததையும் ஒரு முன் மாதிரியாக அப்போஸ்தலர்கள் கண்டார்கள். நாமும் அவருடைய இராஜ்யத்தில் பங்குபெற, அவர் மரணத்திற்குள்ளாக இணைக்கப்பட்டு அவருடைய பாடுகளான பாத்திரத்தில் பங்குபெறவும் வேண்டும். இப்படிப்பட்ட பாடுகள் நமக்கு ஒரு பாடமாக இருப்பதால் நாம் பின்னானவைகளை மறந்து, முன்னான பரிசை நோக்கி பயத்துடன் அல்ல, தைரியத்துடன் ஓடக்கடவோம். (மத். 26:38-42; பிலி . 3:10-14)* R 3362:2,5

## அக்டோபர் 23

***உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன். (மத். 20:27)***

*புறஜாதியாருள் ராஜாக்கள் ஆளுகை செய்யும் பிரபுக்களாக இருப்பதால் அநேகர் அவர்களுக்கு ஊழியம் செய்ய வேண்டும். ஆனால் கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களுக்கு இந்த கொள்கை எதிர் மாறானது. அதாவது எவன் அதிகமாக மற்றவர்களுக்கு ஊழியம் செய்கிறானோ அவனே கனத்திற்குரியவனாயிருப்பான். தேவனுடைய திட்டம் எவ்வளவு அழகாக அருளப்பட்டிருக்கிறது! நேர்மையான சிந்தையுடையவர்கள் உலகத்தின் ஆவியை பெறாமல், அதற்கு மாறாக தேவனுக்கு உண்மையாக ஜீவிக்கவே விரும்புவார்கள். ஊழியம் செய்வதில் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள், ஒரு வித்தியாசமான ஜனமாக, ஒருவருக்கொருவர் ஊழியம் செய்வதை அதிகமாக விரும்பி அதற்குரிய சமயத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பார்கள். நம்முடைய இரட்சகர் ஊழியம் கொள்ள வராமல் ஊழியம் செய்யவே வந்தார். (யோவா. 13:3-7; 13:16)* R 3363:1

## அக்டோபர் 24

***அவர்கள் இயேசுவைக் கொண்டு போகிற போது...... சிரேனே ஊரானாகிய சீமோன் என்கிற ஒருவனைப் பிடித்து, சிலுவையை அவர் பின்னே சுமந்து கொண்டுவரும்படி அதை அவன்மேல் வைத்தார்கள். (லூக். 23:26)***

*இயேசுவின் அன்பான சீஷர்களான பேதுரு, யாக்கோபு யோவான் இயேசுவுக்கு இத்தருணத்திலே உதவியாயிராமல், எங்கு சென்றிருப்பார்கள் என்று எண்ணலாம். சீமோன் இந்த தருணத்தை ஆதாயப்படுத்தியது போல, கிறிஸ்துவை பின்பற்றும் அவர் சகோதரர்கள் அனுதினமும் சிலுவையைச் சுமக்கக் கடமைப்பட்டுள்ளனர். மற்ற சகோதரனுக்காகப் பாடுகளை ஏற்றுச் சகிப்பது தேவனுடைய பார்வையில் விலையேறப்பட்டது. "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்ற" வாஞ்சயையுள்ளவர்களாக இருந்து, இது தேவனால் தங்களுக்கு அருளப்பட்ட சலுகை என்று உணர வேண்டும். (ரோம. 15:1-4)* R 3369:6

## அக்டோபர் 25

***நீங்கள் திடமனதாயிருந்து காரியங்களை நடத்துங்கள், உத்தமனுக்கு யேகோவா துணை. (2 நாளா. 19:11)***

*ஒருவருக்கு அருளப்பட்ட வேலையில் சற்றும் பயப்படாமல் அதைச் செய்யக்கடவன். நீதியோடும், அன்போடும் செய்யப்படும் காரியங்களில் மனிதருக்குப் பயப்படாமல், தேவனுக்குப் பயந்து, அவரையே பிரியப்படுத்த முயல வேண்டும். தேவன் நம் ஊழியத்தை மேற்பார்வையிட்டு முடிவிலே நாம் மகிமையடையச் செய்கிறார். இந்த உலகத்திற்குரியவர்கள் அல்லாத நாம், புதிய இராஜ்யத்திற்குரியவர்களாதலால், நம் போர் ஆயுதங்கள் ஆவியின் பட்டயமே. இதன் மூலம் ஒவ்வொருவரும் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடி நமக்கு முன் வைக்கப்பட்ட பந்தயப் பொருளின் மேல் நோக்கமுள்ளவர்களாயிருந்து திட மனதுடன் காரியங்களை நடப்பிக்க அழைக்கப்பட்டுள்ளோம். நாம் மட்டும் அல்ல, நம்மை போன்று அழைக்கப்பட்ட சகோதரர்களும், கிறிஸ்துவுக்குள் மகிமை அடைய உதவி செய்ய வேண்டும். (நெகே. 4:7-10; 13-14)* R 3395:4; 3393:5

## அக்டோபர் 26

***அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள். (1 பேது.5:7)***

*இந்த வார்த்தைகள் நமக்கு உற்சாகத்தையும், ஆறுதலையும் தரக்கூடியதாக உள்ளது. ஆகிலும், தேவனுடைய ஜனம் நாளுக்கு நாள் கிறிஸ்துவின் பாதுகாப்பில் வளரும் போது, தங்களை தேவ சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்க வேண்டுமேயன்றி தங்கள் சுய ஞானத்தின்படித் தங்களை நடத்த எதிர்பார்க்கக் கூடாது. ஆதலால், தங்களுடைய சித்தம் பூமியிலோ, பரலோகத்திலோ செய்யப்படக் கேட்காமல், தங்கள் பாரங்களை அவர்பேரில் வைத்து அவருடைய அன்புக்கும், இரக்கத்திற்கும் பாத்திரராக நம்மை நடத்த மன்றாட வேண்டும். இதன் மூலம் அவருடைய உறுதியான வார்த்தைகள் நம்மைத் தேற்றும். நாமும் அவர் பேரில் பூரண நம்பிக்கை உள்ளவர்களாயிருக்கும் போது, நமது கஷ்டங்களை நிவர்த்தியாக்குவார். (சங். 37:3-6; 22:24)* R 3409:1

## <u>*அக்டோபர் 27*</u>

***என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது. (சங். 31:15)***

*தேவனுக்கென்று தங்களைத் தத்தம் செய்த ஊழியக்காரர், ஆட்டுக் குட்டியானவரைப் பின்பற்ற தங்களை ஒப்புக் கொடுத்தது முதல் தங்கள் ஜீவனை தேவனுக்கென்று பலியாகச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர். எத்தருணத்திலும் தேவன் இவர்களை எந்த நிலைமைக்கு ஒப்புக் கொடுத்தாலும், தேவ சித்தம் ஆகக்கடவது என்பதே இவர்கள் சிந்தையாக இருக்க வேண்டும். எலியா வகுப்பராக அழைக்கப்பட்டோர், தேவ சித்தமின்றித் தங்கள் தலையின் ஒரு முடியாகிலும் கீழே விழுவதில்லை என்று விசுவாசித்து எ-யா வகுப்பாரின் தலையான கிறிஸ்து சொன்னபடி, "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ"* **என்று** *இவர்களும் சொல்லக் கூடியவர்களாயிருக்க வேண்டும். இதனைக் கவிஞர் குறிப்பிடும் போது, "நான் காண்கிறதில் திருப்தியடைவேன். ஏனெனில், என்னை நடத்துகிறவர் என் தேவன்." (மத். 16:24-27; 26:38-39)* R 3408:5

## <u>*அக்டோபர் 28*</u>

***கர்த்தராகிய தேவனுடைய ஆவி என் மேல் இருக்கிறது. கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்..... துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்கு சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும் துயரத்திற்குப் பதிலாக ஆனந்தத் தைலத்தையும் கொடுக்கவும் அவர் என்னை அனுப்பினார். (ஏசா. 61:1-3)***

*தங்களின் பெலவீனங்களையும், குறைகளையும் உணர்ந்து, இவைகளி-ருந்து மீட்பை விரும்பி துயரப்படும் பயந்த ஆத்துமாக்களை கண்டுபிடித்து ஆறுதலளிப்பதற்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார். பாவங்களை உலகிலிருந்து நீக்கி இரட்சிக்க வல்லவரான கிறிஸ்துவிடம் அவர்களை வழி நடத்த வேண்டும். அவர் மூலம் தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்களைக் குறித்தும், மரண சாம்பலிருந்து உயிர்த்தெழுப்பப்படுவதைக் குறித்தும் அறிவிக்க வேண்டும். அநேக இருளான உபத்திரவங்களுக்குப் பிறகு பூரிப்பான காலையைக் காண்போம் என்பதான புதிய பாட்டையும் தேவனுடைய அன்பையும் அவர்களுக்கு வெளிப்படுத்தவும் வேண்டும். (ஏசா. 35:1-10; லூக். 4:18)* R 3436:1

## அக்டோபர் 29

***நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை .... இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம். (2 கொரி. 4:8-10)***

*இயேசுவின் நிமித்தமாகவும், சத்தியத்தினிமித்தமாகவும், தற்காலத்தில் அநேகர் அவமானங்களையும், நிந்தைகளையும், பாடுகளையும், சிரச்சேதங்களையும் அனுபவிக்க வேண்டியவர்களாயிருக்கிறன்றனர். இவற்றை சந்தோஷமாக இக்காலங்களில் அனுபவிப்போர் பெரும் பரிசை தங்களுக்கு முன் வைத்து, அதன் பொருட்டே சகிக்கிறார்கள். நம் இரட்சகரும் இப்படிப்பட்ட பாடுகளை அனுபவித்தார். அவரைப் பின்பற்றும் ஒவ்வொருவரும், அவரைப்போல் பொறுமையுடன் சகலத்தையும் அனுபவிக்கவே அழைக்கப்பட்டுள்ளோம். நட்சத்திரத்திற்கு நட்சத்திரம் மகிமையில் வித்தியாசப்படுவதைப் போல நாமும் மகிமைப்படுத்தப் படுவோம் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். (1 கொரி. 4:9-14)* R 2762:4

## அக்டோபர் 30

***இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது. (மத். 6:24)***

*"தேவனுக்கும் உலக பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது." நம் அனுபவத்திலே இதை நாம் கண்டறியலாம். இதனால் ஜனங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் அனலுமின்றி குளிருமின்றி இருப்பதைக் காண்கிறோம். முதலாவதாக நாம் தேவனுடைய இராஜ்யத்தையே தேட வேண்டியவர்களாயிருக்கிறோம். இது நம்முடைய முக்கிய நோக்கமாக இருந்து, நம் முழுநேரத்தையும், சிந்தனையையும், பெலனையும், கவனத்தையும் தேவனுக்கென்றே உபயோகப்படுத்த கவனமாயிருக்க வேண்டும். தேவ ஊழியத்தில் நாம் காண்பிக்கும் ஊக்கமும், அன்பும் எந்த அளவுக்கு உள்ளதென்பதை நாம் காண, நம் ஆசை இச்சைகள் உலகத்திலும், அதில் உள்ளவைகளிலும் இல்லாதிருப்பதின் மூலமாக அறியலாம். உலகத்தை நேசிப்பவர்களிடம் தேவ அன்பு இல்லை. (1 யோவா. 2:15-17)* R 2765:5

## அக்டோபர் 31

***ஜீவனைப் பார்க்கிலும் உமது கிருபை நல்லது; என் உதடுகள் உம்மைத் துதிக்கும். (சங். 63:3)***

*தேவ கிருபையை ருசி பார்த்த ஒவ்வொருவரும், ஜீவனைப் பார்க்கிலும் அவர் தயவு மேன்மையானதென்று உணருகிறவர்களும், தேவனுடைய நற்செய்தியை எடுத்துச் சொல்வதில் களி கூர்ந்து உலக ஆசை, இச்சைகளை முற்றிலும் வெறுக்க வேண்டும். இருளி-ருந்து தங்களை ஒளியினிடத்திற்கு வரவழைத்தவரின் புண்ணியங்களைத் தெரிவிப்பது இவர்கள் முக்கிய காரியமாக இருக்க வேண்டும். இவ்விதம் இந்த நற்செய்தியை ஏற்று அறிவிக்கும் போது பல தொல்லைகள் நேரிடக்கூடும். பணச்செலவு ஏற்படக் கூடும். உலக சினேகிதர்களை இழக்க நேரிடலாம். குடும்பங்களிலும் பல தொல்லைகள் ஏற்படலாம். உலகத்தி-ருந்தும், கிறிஸ்துவ மண்டலங்களிலிருந்தும் தொல்லைகள் ஏற்படலாம். ஆகிலும் இவையாவும் நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள நித்திய ஜீவனுக்கு எவ்விதத்திலும் மேலானதல்ல. (பிலி 3:7-14)* R 2852:4

## நவம்பர் 1

***யேகோவாவே, என் வாய்க்குக் காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக் கொள்ளும். (சங். 141:3)***

*நம்முடைய வார்த்தைகளும், சிந்தனைகளும், எண்ணங்களும் அதிக பலமாகக் காக்கப்பட வேண்டும். இக்காரியங்களில் நாம் அதிக விழிப்புள்ளவர்களாக இருக்கவும் வேண்டும். " இருதயத்தின் நிறைவால் வாய் பேசும்." இந்த சத்திய வார்த்தை, குறிப்பாக புதிய சிருஷ்டிகளிடையே எடுத்துக்காட்டப்பட வேண்டும். மற்ற மக்களை விட இவர்கள் தங்களைக் காத்து, உதடுகளினால் பாவம் செய்யாதபடி எச்சரிப்போடு எதையும் பேச வேண்டும். "ஒருவன் சொல் தவறாதவனானால் அவன் பூரண புருஷனும், தன் சரீர முழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கி கொள்ளக் கூடியவனுமாயிருக்கிறான்" என்று அப்போஸ்தலன் சொன்ன வார்த்தைகளை இவர்கள் எப்பொழுதும் தங்கள் நினைவில் கொண்டு ஜீவிக்க வேண்டும். (சங். 39:1-3; யாக். 3:2,5-10)* R 3305:5

## ***நவம்பர் 2***

***அவர் யேகோவா; அவர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக. (1 சாமு. 3:18)***

*நம்முடைய உன்னத வாழ்வுக்கு இன்னது தேவை என்பதை நாம் அறியோம். சில சந்தர்ப்பங்களில் நாம் நலமானதாக எண்ணி விரும்பும் காரியம் நமக்கு நஷ்டத்தை வருவிக்கக் கூடியதாக இருக்கலாம். இவைகளைக் கூர்ந்து கவனித்து, "தேவன் தம்முடையவர்களை அறிந்திருக்கிறார்" என்றும், அவர் தீர்மானத்தின்படி அவரிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்றும் அறிய வேண்டும். எக்காலத்திலும் நாம் பொறுமையுடன் காத்திருந்து சகலமும் அவராலே நமக்கு அருளப்பட்டு வருகிறதென்று விசுவாசித்து, அவருடைய ஞானத்தையும், அன்பையும், வல்லமையையும் குறித்துக் கேள்வி கேட்காமல் அவருக்குள் அடங்கி இருக்க வேண்டும். அவர் பார்வைக்கு நலமானதையே செய்வாராக. (யோபு 1:18-22; 2:5-10)* R 2806:4; 2888:2

## ***நவம்பர் 3***

***நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளது தான், மாமிசமோ பலவீனமுள்ளது. (மத். 26:41)***

*சிலர் விழிப்புள்ளவர்களாயிராமல் ஜெபிப்பதுண்டு. சிலர் விழித்திருந்தும் ஜெபியாமலிருந்து தவறு செய்துண்டு. நம் இரட்சகர் இவை இரண்டையும் ஒன்றுபடுத்தி ஜெபம் செய்யும் முறையை இங்கே உணர்த்துகிறார். நாம் விழிப்புள்ளவர்களாயிருந்து உலகத்திற்கும், மாமிச இச்சைகளுக்கும் நம்மை காத்துக் கொள்ள வேண்டும். விழிப்புள்ளவர்களாக தீர்க்க தரிசன நிறைவேறுதல்களையும், நம் இரட்சகரின் பிரசன்னத்தையும், புதிய பூமியின் மாற்றங்களைக் குறித்தும் அறிய வேண்டும். இவ்விதம் விழிப்புள்ளவர்களாக இருந்து, இடைவிடாமல் ஜெபிக்கவும் வேண்டும். இதன் மூலம் நம்முடைய விசுவாசமும், நம்பிக்கையும், அன்பும், நற்குணங்களும் வலுபெறும். நாம் தேவனுடைய பிள்ளைகளாக சேர்ந்தும், குடும்பங்களிலும், தனிப்பட்ட ஜெபத்திலும் விழிப்புள்ளவர்களாக ஜெபிக்க வேண்டும். (எபே. 6:18-20; மத். 25:1-13)* R 2775:5

## <u>நவம்பர் 4</u>

***தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். (பிலி .2:7)***

*ஒருவனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்து இருவரையும் பிரியப்படுத்த முடியாது. ஒருவரின் விருப்பம் மற்றவரின் விருப்பத்திற்கு மாறாக இருக்கும். அதுபோல, தேவனுக்குப் பிரியமான நீதிக்குரிய காரியங்கள் இப்பிரபஞ்சத்தின் தேவனான சாத்தானுக்குப் பிரியமாயிராது. அவன் அநீதியின் தேவன். தேவனுக்கென்று தங்களை பிரதிஷ்டை செய்த ஜனம், பரலோகத்தில் தங்கள் பொக்கிஷங்களை சேர்த்து, தேவனிடத்தில் ஐசுவரியவான்களாக இருக்கிறபடியால், உலக மக்களிடையே புகழ்ச்சியை நாடக்கூடாது. உலகமும், அதன் காரியங்களும் பலியின் ஜீவியத்திற்குரியவை அல்ல. அதன் கிரியைகளின் மூலம் பரலோக இராஜ்யத்தை அடையமுடியாது. (தேவ ஜனம் கிறிஸ்துவைப் போல தேவனையே சேவிக்க முற்றிலும் தங்களை ஒப்புக் கொடுக்க வேண்டும்.) (2 கொரி. 8:9; மத். 4:8-10)* R 2717:5

## <u>நவம்பர் 5</u>

***தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும்...... உண்மையுள்ள இருதயத்தோடும், விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். (எபி. 10:21-22)***

*ஒரு நல்ல காரியத்தைச் செய்ய நினைத்த தேவன் ஒரு போதும் மனம் மாறமாட்டார். ஆகிலும், நம் இருதயம் எப்பொழுதும் அவருடன் ஐக்கியப்பட்டிருக்க வேண்டும். நம் விசுவாசம் உறுதியுள்ளதாகக் காணப்பட வேண்டும். நம் சுய சித்தத்தை நிறைவேற்றாமல் அவர் சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுத்திருக்க வேண்டும். இவ்விதம் நாம் ஜீவிக்கும் போது, விசுவாசத்தின் முழு நம்பிக்கை நமக்கு உண்டாகி, தேவன் தமது வாக்குத்தத்தத்தில் மனம் மாறாதவர் என்று நம்பச் செய்யும். அவர் வாக்குத்தத்தங்கள் மேலானவைகள். நமக்காக பரிந்து பேசி நம்முடைய பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக் கூடிய பிரதான ஆசாரியர் நமக்கிருக்கிறார். (எபி. 9:11-15)* R 2643:1

## நவம்பர் 6

***நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்கு பிரியமுமான ஜீவப-யாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டி கொள்கிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. (ரோம. 12:1)***

*நமக்குண்டான யாவற்றையும் தேவனுடைய ஊழியத்திற்கென்று கொடுப்பது மிகப் பெரிய காரியம் அல்ல. அது மிக மிகக்குறைவான காணிக்கை. அவர் நமக்குச் செய்த உபகாரங்களையும், கிருபைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது நாம் அவருக்கென்று செய்வது மிகக் குறைவானதே. இவ்விதமே நாம் நினைக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். தேவன் நமக்கருளின ஆசீர்வாதங்களையும், மேலான பரிசையும் நாம் அலட்சியமாக எண்ணுவோமேயானால், இது நம் பெலவீனத்தையே காட்டுகிறதாக உள்ளது. நாம் நம்மை முற்றிலுமாக அடக்கிச் சகல உலக சிந்தையையும் விட்டு ஒரு சில காலங்கள் ப-யின் ஜீவியத்தில் ஈடுபடுவோமேயானால், நிரந்தரமான சந்தோஷத்தையும், ஆசீர்வாதத்தையும், மகிமையையும் கிறிஸ்துவுடன் சதா காலத்திலும் அனுபவிப்போம். (லேவி. 22:21-22; ரோம. 6:8-13)* R 2642:5

## நவம்பர் 7

***இயேசுவைப் பற்றிய சாட்சியினிமித்தமும், தேவனுடைய வசனத்தினிமித்தமும், சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமக்களைக் கண்டேன். (வெளி. 20:4)***

*இந்த சிரச்சேதம் உண்மையாயிராமல், பொருள் அர்த்தமுடையதாக இருந்தாலும், வெகு முக்கியத்துவம் வாய்ந்தது. நம் சுயசித்தத்திற்கு, சகல உலக ஆசாபாசங்களுக்கும் நாம் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களாக இது எடுத்துக் காட்டுகிறதாக மட்டுமில்லாமல், தலையாகிய கிறிஸ்துவைத் தவிர வேறெந்த உலகத் தலைகளுக்கும் நாம் கீழ்ப்பட்டவர்கள் அல்ல என்பதையே குறிக்கிறது. தேவன் இவரையே சரீரமான சபைக்கு தலையாக நியமித்துள்ளார். அப்போஸ்தலனான பவுலும் இதே சிந்தையுள்ளவராக நாம் எல்லாரும் கிறிஸ்து என்னும் ஒரே தலையின் கீழ் சரீரமாக ஞானஸ்நானத்தின் மூலமாக இணைக்கப் பட்டுள்ளோம் என்றும், இதுவே அவர் மரணத்துக்குள்ளாகும் ஞானஸ்நானம் என்றும் கூறுகிறார். நம்முடைய சித்தம், நம்முடைய ஜீவியம் முழுவதையும் மரணம் மட்டும் ஒப்புக் கொடுத்து வாழ்வதாகும். (1யோவா. 2:15-17)*
R 2700:6

## <u>நவம்பர் 8</u>

**உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக. *(யாத். 20:7)***

*இந்த நியாயப்பிரமாணம் ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு கொடுக்கப்படாதிருந்தும், இதன் ஆவிக்குரிய விளக்கம் எவ்வளவாய் நமக்கு அருளப்பட்டிருக்கிறது என்று உணர வேண்டும். ஏனென்றால், கிறிஸ்துவின் நாமத்தை நம்முடைய நாமமாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம். நாம் கிறிஸ்துவின் அங்கத்தில் ஒருவராக எண்ணப்படுகிறோம். தலையாகிய கிறிஸ்துவின் பரிசுத்த நாமம், சரீரம் முழுவதற்கும் வழங்கப்படுகிறது. கிறிஸ்துவின் ஸ்தானாபதியாகவும், பிரதிநிதியாகவும் இந்த உலகிலே ஜீவிக்கிறவர்களாகிய நாம் இதன் மூலம் நாம் பெற்றுள்ள கௌரவம், மதிப்பு, பொறுப்பு இவை யாவையும் காத்து நடக்கக் கடமைப்பட்டுள்ளோம். இதனால் கிறிஸ்துவின் நாமம் விருதாவாக மற்றவர்கள் முன் பேசப்படாதபடி நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும். அவருடைய நாமத்திற்கு யாதொரு அவகீர்த்தியும் வர இடங்கொடாமல் ஜீவிக்க முயல வேண்டும். எல்லா செயல்களிலும், வார்த்தைகளிலும் அவரை மகிமைப்படுத்த வேண்டும். (எசே. 43:7-9; நீதி. 30:8-9)* R 3275:2

## <u>நவம்பர் 9</u>

**மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்ய வேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது. *(கலா. 5:17)***

*புதிய சிருஷ்டிகளுக்குள் தொடர்ந்து போர் இருந்து கொண்டே வரும். ஆவிக்குரியவர்களின் புதிய சிந்தைகள் இவர்களை முற்றிலும் மாமிச இச்சைகளை மேற்கொள்ளச் செய்ய வேண்டும். நாம் மாமிசமாதலால், நம்முடைய ஜீவ கால முழுவதும், இவ்வுலகத்தில் சாத்தானின் பல சூழ்ச்சிகளுக்கு நாம் எதிர்த்துப் போராட வேண்டியவர்களாயிருக்கிறோம். பல உலக இச்சைகளால் நாம் சோதிக்கப்படும் போது, புதிய சிந்தையுடன் அவற்றை எதிர்க்க வேண்டும். சகல பரிசுத்தவான்களுக்கும் இப்படிப்பட்ட போராட்டம் மரண பரியந்தமும் உண்டு. புதிய சிருஷ்டி இதை மரணபரியந்தம் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். (எபே. 6:10-18; 2 தீமோ. 4:7-8)* R 3275:2

## *நவம்பர் 10*

***அன்பு... அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். (1 கொரி. 13:6)***

*தேவ அன்பு சகலத்திற்கும் மேலானது. இது தன்னயமற்ற சிந்தையுடன் சகலர் பேரிலும் இருக்க வேண்டியது. நான் என்ற எண்ணம் இவர்களுக்குள் தோன்றாமல், அன்பே சகலத்திற்கும் மேலாக காணப்பட வேண்டும். அப்போஸ்தலன் இங்கே எடுத்துக்காட்டும் தேவ அன்பு தேவ ஜனங்களிடையே இருக்க வேண்டிய விசேஷித்த ஆவி. இது சில அடிப்படையான கொள்கைகளின் பேரில் வைக்கப்பட்டுள்ளதால், இதில் நாளுக்கு நாள் பலப்பட்டு பூரண அன்பை சத்தியத்தில் காட்ட பிரயாசப்பட வேண்டும். அன்பு பிறனுக்குப் பொல்லாங்கு செய்யாது. அன்பு நியாயப் பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது. உண்மை எது, பொய் எது என்று அறிந்து பிறகு, பொய்யை வெறுத்து, உண்மையைப் பற்றிக் கொண்டு, சத்தியத்தில் வாஞ்சையாயிருக்க வேண்டும். (மத். 22:37-40; 1 கொரி 13:1-8)* R 3151:3

## *நவம்பர் 11*

***நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய், உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும் .... கூட்டி வழங்குங்கள். (2 பேது. 1:5)***

*தேவ ஜனங்களிடையே காணப்படக்கூடிய கடினமான காரியம் யாதெனில், சோதனையின் நேரத்தில் அதை முற்றிலும் எதிர்க்க நினைத்தாலும், சரியானபடி ஒர் நல்ல தீர்மானத்தை அவர்களால் எடுக்க முடிவதில்லை. அநேக சந்தர்ப்பங்களில் இதை நான் இப்பொழுது செய்வதில்லை என்று சோதனைக்காரனிடம் சொல்வதால், சிலகாலம் கழித்து மீண்டும் அவர்களைச் சோதிக்க வருவான். நம்முடைய இரட்சகர் செய்தபடி தைரியத்துடன் சோதனைக்காரனை நம் சமூகத்தினின்று முற்றிலும் நீக்கிவிட வேண்டும். இதன் மூலம் அவன் மீண்டும் நம்மிடம் வர இடங்கொடாமல், “என் தேவன் ஒருவரையே தொழுது கொண்டு அவரையே சேவிப்பேன்” என்று தைரியத்துடன் ஞானமாய்ச் சொல்லக் கூடியவர்களாயிருக்க வேண்டும். (1 பேது. 5:6-10)* R 3299:6

## <u>நவம்பர் 12</u>

***அவிசுவாசியாயிராமல், விசுவாசியாயிரு. (யோவா. 20:27)***

விசுவாசமும், நம்பிக்கையும் நம்மிடத்திலே காணப்படாவிட்டால், நம் இரட்சகருடன் நாம் நெருங்கி இருக்க முடியாது. விசுவாசமில்லாமல் அவருடைய நற்குணத்தையும், வல்லமையையும், ஞானத்தையும், அன்பையும் அறியவும் முடியாது. க-லேயாக் கட-ல் புயல் எழுப்பிய போது, விசுவாசமின்றி கதறிய இதே அப்போஸ்தலர்கள், பின்னர் பலப்பட்டு அவர் மறைவிற்குப் பின் பலத்த தைரியத்துடன் செயல்பட்டார்கள் என்பதை அறிகிறோம். அது போலவே நாமும் நம் ஜீவியத்தில் விசுவாசத்தில் பலப்பட வேண்டும். இதை நாம் அனுதின ஜீவியத்தில் நாளுக்கு நாள் அபிவிருத்தி செய்து அதில் வேர் ஊன்றப்பட்டவர்களாய் காணப்பட வேண்டும். *(எபே. 3:16-19; கொலோ. 2:6-9)* R 3338:5

## <u>நவம்பர் 13</u>

***உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். (மத். 6:8)***

நம்முடைய விண்ணப்பங்கள் நம் இருதயத்தின் சுத்திகரிப்பிற்காகவும், ஆவியிலே நிரப்பப்படவும், ஆவிக்குரிய ஆகாரத்தின் மூலம் நம்மைப் பலப்படுத்தவுமே இருக்க வேண்டும். நமக்குத் தேவையான மற்றெல்லா காரியங்களையும் அவர் அறிந்திருக்கிறார். நாம் போகிற பாதையை அவர் அறிந்திருக்கிறார். புதிய சிருஷ்டிகளான தம்முடைய பிள்ளைகளுக்கு இன்னது தேவை என்பதையும் அவர் அறிந்திருக்கிறார். ஆதலால் சகலத்தையும் நாம் அவர் கரத்திற்கு ஒப்புவித்து அவர் நடத்துதலுக்கு காத்திருக்க வேண்டும். அவர் நமக்குச் செய்யாத காரியத்திற்கு தொடர்ந்து தொந்தரவு செய்து கேட்பது அவருடைய வாக்குத்தத்தங்களில் நம்மை நம்பிக்கையற்றவர்களாக காணச் செய்யும். *(மத். 6:26-34)* R 3338:6

## நவம்பர் 14

***எச்சரிக்கையாயிருங்கள். நான் போனபின்பு மந்தையைத் தப்ப விடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களில் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும் படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள். (அப். 20:28-30)***

*தேவனுடைய ஆலயத்தின் கற்கள் என்பதை நிரூபிக்க சீஷர்களுக்குப் பல பரீட்சைகள், பாடுகளின் மூலம் அவசியமானது. ஏனென்றால், இவைகளை மேற்கொள்பவர்களே, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை பெறமுடியும். கிறிஸ்துவுடன் ஆட்சி செய்ய விரும்புவோர், தாங்கள் அதற்குத் தகுதியுள்ளவர் என்பது முதலாவது நிரூபிக்கப்பட வேண்டும். தேவன் பேரில் விசுவாசம், அவருடைய வார்த்தைகளின் பேரில் நம்பிக்கை, சத்தியத்தில் வைராக்கியம், சகல அவமானத்தையும், பாடுகளையும் சகிக்கும் பொறுமை, மரணபரியந்தம் உண்மையாய் ஜீவித்தல் இவை யாவும் இன்றியமையாதவை. இப்படிப்பட்டவர்களுக்கே 91ம் சங்கீதத்தில் ஆறுதலான ஆசீர்வாதங்கள் கூறப்பட்டிருக்கின்றன. (மத். 7:13-20)* R 3331:3

## நவம்பர் 15

***அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும். (1 யோவா. 2:6)***

*கிறிஸ்துவுக்குள் ஒருவன் நிலைத்திருக்க விரும்பினால், அவர் வழியிலே அவரைப் போல நடக்க வேண்டும். தீமையை விலக்கி, நன்மையானதைச் செய்ய வேண்டும். முடிந்தவரை கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின்பற்றி நடக்க வேண்டும். பூரணமற்றவனாக ஒரு மனிதன் அவருடன் நடக்க முடியாது. இயேசு மாமிசத்திலிருந்து, பூரண மனிதனாக ஜீவித்தார். பரிசுத்தமுள்ளவராகத் தம் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றத் தம்மை முற்றிலும் மரண பரியந்தம் ஒப்புக் கொடுத்தார். அவரைப் பின்பற்றும் ஒவ்வொருவரும், அவர் நடந்த வழியிலே நடந்து, அவர் சென்ற திசையை நோக்கி அவர் நமக்கு ஆயத்தம் பண்ணின இடத்திற்கு மரண பரியந்தம் நடக்கத் தன்னை ஒப்புப் கொடுக்க வேண்டும். (யோவா. 15:4-11)* R 3237:5

## <u>நவம்பர் 16</u>

***இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள். (மாற். 14:8)***

*நம்முடைய இரட்சகரிடம் நாம் சரீர பிரகாரமாக நெருங்கி இருக்க முடியாது. ஆகிலும் அவர் சரீரமான சகோதரரிடம் நாம் நெருங்கி இருக்கும் போது அன்பு, இணக்கம், சந்தோஷம், சமாதானம் என்னும் வாசனைத் திரவியங்களால் அவர்களை அபிஷேகம் பண்ணக் கடமைப்பட்டுள்ளோம். இன்னும் அதிகமாக நம்மை முற்றிலும் ஒப்புக் கொடுத்துச் சகோதரர்களுக்கு நாம் எதைச் செய்தாலும் அவருக்கே அது செய்யப்பட்டதாக அவரால் எண்ணப்படுவோம். நம் இருதயமே வாசனைத் திரவியம் நிறைந்த பெட்டியாக இருந்து, இதினின்று சுகந்த வாசனையான அன்பு, நல்வார்த்தைகள், இரக்க மனப்பான்மை இவை சகலரிடத்திலும் விசேஷமாக சரீரமான சபையிலே காட்டப்பட வேண்டும். நம் இரட்சகர் இச்சிறியரில் ஒருவனுக்கு எதைச் செய்கிறீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்றார். (மாற். 12:38-44; மத். 10:40-42)* R 2448:5; 2744:3

## <u>நவம்பர் 17</u>

***உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி உனக்காகத் தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுவார். (சங். 91:11)***

*தேவன் அவ்வப்போது தம்முடைய பிள்ளைகளின் "ஆத்துமாக்களுக்காக உத்திரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிற" அநேக உண்மையுள்ள போதகர்களை எழுப்புகிறார். அநேக ஆத்துமாக்களை கெடுக்கும் கள்ள போதகர்களும் எழும்புவார்கள். ஆகிலும் விசுவாசத்துடன் இவைகள் பகுத்தறியப்படும் போது உண்மை இன்னதென்பதை அறிந்து தங்கள் வழிகளிலே நடப்பார்கள். பவுல் இவ்விதம் செய்ததால் நமக்கு புத்திமதியாக நம்பிக்கையுடன் இருக்க போதித்தார். கர்த்தர், நம் மேய்ப்பர், தம் ஆடுகளுக்காக அக்கரை எடுத்துக் கொள்வார். (எபி. 13:7-17)* R 3332:2

## <u>*நவம்பர் 18*</u>

***கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளையமிறங்கி, அவர்களை விடுவிக்கிறார். (சங். 34:7)***

*இவ்வுலகிலே பல இக்கட்டுகளால் நெருக்கப்படும் ஓர் உண்மை கிறிஸ்தவனுக்கு இந்த வார்த்தைகள் எவ்வளவு பெரிய தைரியத்தைத் தரக்கூடியதாக உள்ளது. நாம் பெலனற்றுப் போனாலும், பிசாசின் பல கொடிய செயல்களிலிருந்து தேவன் ஆச்சரியமாக விடுவிப்பார் என்று விசுவாசம் நம்மை பலப்படுத்துகிறது. தேவன் நமது பட்சமாய் இருந்தால், நம்மை ஜெயிப்பவன் யார்? ஏனெனில், "உலகத்திலிருக்கிறவனிலும், உங்களி-ருக்கிறவர் பெரியவர்" என்று அப்போஸ்தலன் கூறியுள்ளார். பரலோக ஆவிகள் தேவ சித்தத்தை நிறைவேற்றுகிறவைகளாதலால், தெய்வீக காரியங்களுக்கு அவைகள் கீழ்ப்படிந்து நமது பாதுகாப்புக்கும் அவைகள் நிறுத்தப்படும். அவைகள் தேவனின் பணிவிடை ஆவிகள். (மத். 18:10; 4:3-11)* R 2140:6

## <u>*நவம்பர் 19*</u>

***நாம் தூங்காமல் விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக் கடவோம். (1 தெச. 5:6)***

*எப்பொழுதும் நாம் விழிப்புள்ளவர்களாக இருந்து, தேவன் நமக்கு காட்டும் எல்லா வழிகளிலும் நடக்க ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நம்முடைய பிரதான ஆசாரியரின் அடிச்சுவடுகளை பின்பற்றி நடக்க விழிப்புள்ளவர்களாய் இருக்க வேண்டும். ஆதலால், நாம் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, அந்தகார கிரியைகளுக்கு நம்மை விலக்கி ஒளியின் பிள்ளைகளாக நடக்க வேண்டும். பகலுக்குரியவர்களான நாமோ, தெளிந்தவர்களாயிருந்து விசுவாசம், அன்பு என்னும் மார்க்கவசத்தை தரித்துக் கொண்டிருக்க அப்போஸ்தலன் நம்மை எச்சரிக்கிறார். விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள். புருஷராயிருங்கள், திடன் கொள்ளுங்கள். (1 பேது. 5:8-10)* R 3056:5

## <u>நவம்பர் 20</u>

***இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை. (2 பேது. 1:10)***

*நாம் பூரணமாகச் சகல காரியங்களையும் செய்து முடிக்கக் கூடாமல், தற்செயலாகப் பல காரியங்களில் குறைவு பட்டவர்களாகவே காணப்படுகிறோம். ஆகிலும் கிறிஸ்துவின் நீதியினால், நம் குறைகள் நிவர்த்தியாக்கப்படுகிறது. விசுவாசத்தோடு கிறிஸ்துவின் நீதி இணைக்கப்படும் போது, சகல கிருபையிலும் நாம் வளர்கிறவர்களாயிருந்து இடறி விழ மட்டோம், இவை யாவையும் நாம் செய்து முடித்தாலும் உபயோகமற்ற ஊழியக்காரராகவே காணப்படுவோம். ஏனெனில், பரிசுத்தம் நமக்கு இன்றியமையாதது. "பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனை தரிசிக்கக்கூடாது." நாம் பாவத்தை வெறுத்து, கிறிஸ்துவின் நீதியிலே வளர்ந்து விசுவாசத்துடன் சகல கிரியைகளையும், பரிசுத்தத்தோடு செய்து முடித்தால், நம் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்துகிறோம். (எபி. 3:1-6)* R 2155:6

## <u>நவம்பர் 21</u>

***என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும் போது..... அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். (யாக். 1:2-3)***

*அநேகர் தங்கள் பரீட்சையின் காலம் முடிந்து, தெரிந்து கொள்ளப்பட்டவருடன் சேர்க்கப்பட்டு விட்டோம் என்று எண்ணக்கூடும். ஆனால் பொறுமை, விசுவாசம், நம்பிக்கை இவை யாவும் நம் இருதயங்களைச் சுத்திகரித்து, மிருதுவாக்கி தேவனுக்கு கீழ்ப்படிதலுள்ளவர்களாக்க வேண்டும். பல பரீட்சைகள் அல்லது சோதனைகள் நம க்குப் பல பாடங்களை கற்பிப்பதால், இவைகளில் சந்தோஷப்பட வேண்டும். இவை நம்மை விசுவாசத்தில் பலப்படுத்தி நம் பெலவீனங்களை அறியச் செய்து, சத்தியத்திலே உறுதிப்படுத்தி நம்மைக் காத்து நடக்க உதவும். மேலும் இவை அவர் வழிகளில் ஜீவிக்க அதிக ஆர்வத்தை உண்டாக்கும். (1 பேது. 1:5-7; ரோம.5:1-5)* R 3001:5

## நவம்பர் 22

***உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்தி வைராக்கியம் என்னைப் பட்சித்தது. (சங். 69:9)***

*குளிரான உணர்ச்சியுள்ள ஜனங்கள் சில நல்ல குணங்களை உடையவர்களாயிருப்பார்கள். ஆனால், தேவன் கிருபையுள்ளவர் என்பதை ருசி பார்த்த அவர் பிள்ளைகள் குளிராகவோ அல்லது வெதுவெதுப்பாகவோ இராமல், ஆவியில் அனலுள்ளவர்களாகவே காணப்பட வேண்டும். இது அன்பை அதிகரித்து ஆர்வத்தை ஊக்குவிக்கும். இவ்விதம் நம் இரட்சகர் செய்ததால், பிதாவின் நேச குமாரனாக இருந்தார். தேவனுடைய பார்வையில் பிரியமாய் நடக்க விரும்பும் ஒவ்வொருவரும், நீதியின் பேரிலும், சத்தியத்தின் பேரிலும் ஆர்வமுள்ளவர்களாக ஆவியிலே நிரப்பப்பட வேண்டும். இதுவே நாம் நம்மை பட்சிக்கும் பலிகளாகத் தேவனுடைய பலி பீடத்தின் மேல் படைப்பதாகும். இவர்களே கிறிஸ்துவின் மூலம் தேவனுக்குப் பிரியமும், அவரால் அங்கீகரிக்கப் பட்டவர்களுமாயிருப்பார்கள். (சங். 119:137-144; எபி. 3:2-6)* R 2289:3

## நவம்பர் 23

***நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது. (எபி. 10:36)***

*இங்கே தேவசித்தத்தை நிறைவேற்றுவது மட்டும் நமக்குரிய பரீட்சையாக எண்ணாமல், அவர் சித்தத்தை நிறைவேற்றி வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றுக் கொள்ள நம் இருதயங்களில் பொறுமையுடையவர்களாக தேவ நீதியை நடப்பிக்க வேண்டும். இதற்குப் பிறகே, தேவ இராஜ்யத்திற்கு தகுதியுள்ளவர் என்று தீர்க்கப்படுவோம். யாக்கோபு அப்போஸ்தலன் "உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்கும்" என்றார். அதாவது, நம் விசுவாசம் பூரணப்பட்டதாக காணப்பட பொறுமை அவசியமான குண லட்சணமாகும். நாம் பொறுமையை கைக்கொள்ளாவிடில், விசுவாசத்தில் தேர்ச்சி பெறாமல், தேவ இராஜ்யத்திற்குத் தகுதியற்றிருப்போம். (யாக். 1:2-4; எபி. 12:1-3)*
R 2792:1

## நவம்பர் 24

**இதனால் நான் தேவனுக்கும், மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன். *(அப். 24:16)***

நம் மனசாட்சியானது, கடிகாரத்தில் நேரங்கள் குறிக்கப்பட்டுள்ள முகப்புத்தட்டு (Dial)க்கு ஒப்பானது. இந்த முகப்புத்தட்டிலே நேரங்கள் அளவுடன் குறிக்கப் பட்டிருந்தாலும், நேரங்களைச் சரிவர காண்பிக்கும் பொறுப்பு, கடிகாரத்தில் பொருத்தப்பட்டுள்ள முக்கிய கம்பிச் சுருளுக்கே (மெயின் ஸ்பிரிங்) உரியதாகும். இவ்விதமே மன சாட்சியும் நம் இருதயமான மெயின் ஸ்பிரிங்குடன் இசைந்து செயல்படும் போது நீதி எது, அநீதி எது என்று நமக்கு எடுத்து காண்பிக்கக் கூடியதாக இருக்கும். புதிய சிருஷ்டிகள் தேவனுடைய வார்த்தைகளினாலே எச்சரிக்கப்பட்டு, அன்பின் பிரமாணத்துடன் இதைக் கையாளும் போது, நீதி தவறாதவனாய் நடக்கச் செய்யும். *(ரோம. 2:12-15; 1 யோவா. 3:18-22)* R 2735:1

## நவம்பர் 25

**சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. *(யாக். 1:13)***

பரீட்சை அல்லது சோதனைகளில் வித்தியாசங்கள் உண்டு. பிதாவாகிய தேவன் தம் பார்வைக்கு நியாயமாக எண்ணி விசுவாசத்தைப் பரீட்சிப்பது ஒன்று. சாத்தானின் சோதனை மற்றொன்று. முந்தினது நம் விசுவாசம் தேவன் பேரில் எவ்வளவாக உள்ளதென்பதை பரீட்சிக்கவும் நித்திய ஜீவனைப் பெறவும் கிறிஸ்தவ ஜீவியத்திற்கு மிக அவசியமானதும், ஆசீர்வதமுமானதாகும். இதனால் நீதிமான் என்று ஒருவன் தீர்க்கப்படுகிறான். சாத்தானின் சோதனைகளோ, இதற்கு மாறாக சத்தியத்தைப் பொய் என்றும், பொய்யை சத்தியமென்றும் காட்டி ஒளியை இருளாக்கி அநேகரை மரண வழியிலே விழும்படிச் செய்கிறதாக இருக்கும். அநேகர் இவன் வலையிலே சிக்கி இருளிலே நடத்தப்பட்டு வருகின்றனர். இவ்விதமாக தேவன் ஒரு மனிதனையும் சோதிப்பது இல்லை. *(மத். 4:1-11; 26:71; 1 கொரி. 10:13)* R 3297-5.

## நவம்பர் 26

***யேகோவா அவனை நோக்கி : உன் கையி-ருக்கிறது என்ன என்றார். (யாத். 4:2)***

*யாதொருவர் தேவனுடைய ஊழியத்தில் அதிகமாக உபயோகப்படுத்தப்படுகிறார்களோ, அவர்கள் அதற்குத் தங்களைத் தகுதியுள்ளவராக முதலாவது உருவாக வேண்டும். இவர்கள் மோசேயைப் போ ல பணிவு, அடக்கம், விடாமுயற்சி, தன்னயமற்ற தியாகம், ஊக்கம் முத-ய குணங்களை மாதிரியாகக் கொண்டு நடக்க வேண்டும். ஒரு நல்ல உக்கிராணக்காரன் தன் சுய திறமையினால் இவைகளை அடையக்கூடியவனாக இருப்பான். தேவன் இதற்காகத் தன்னிடம் ஒரு அற்புதத்தை நடப்பிக்க நினைத்து காத்து தன் நேரங்களை விருதாவாகக் கழிக்க மாட்டான். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் பணிவுடனும், ஆர்வத்துடனும், அன்புடனும் அவர் வல்லமையில் விசுவாசமுள்ளவர்களாக அவருடைய ஊழியத்தில் எவ்விதத்திலும் நம்மை அவர் உபயோகிக்க ஒப்புக் கொடுத்தல் அவசியமானது. (மத். 25:14,15; ரோம. 12:6-8)* R 1651:5; 2904:4

## நவம்பர் 27

***எந்த சமயத்திலும் சகல விதமான வேண்டுதலோடும், விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி...... விழித்துக் கொண்டிருங்கள். (எபே. 6:18)***

*நாம் செய்யும் சகல காரியங்களிலும் ஆவியிலே விண்ணப்பம் பண்ண வேண்டும். அதாவது நம் இருதயம் தொடர்ந்து தேவனுடைய வழி நடத்துதலுக்காக காத்து அவருடைய சித்தத்தின்படிச் செய்ய வாஞ்சையுள்ளதாக இருக்க வேண்டும். இதன் மூலம் நாம் அநேக சோதனைகளுக்கும், தவறுகளுக்கும் விலகி நம்மைக் காத்துக் கொண்டு தேவ இராஜ்யத்திற்குத் தகுதியுள்ளவர்களாகுவோம். சகோதரரே, சகோதரிகளே, "நீங்கள் சோதனைக்குட்படாதபடி விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்று நம் இரட்சகர் சொன்ன வார்த்தைகளை அதிகமாகச் சிந்தித்து பயன்படுத்தி நடப்போமாக. (கொலோ. 4:2-6)* R 2775:5

## நவம்பர் 28

***அவர் சமாதானத்தை அருளினால் யார் கலங்கப்பண்ணுவான்? (யோபு 34:30)***

*கடலின் சடுதியான புயலினால் கொந்தளிப்புண்டாவது போல, நமக்கு ஏற்படக்கூடிய அமளிகளில் சமாதானத்தையும், அமைதியையும் கொடுக்கக் கூடியவர் யார்? "சகலவிதமான ஆறுதலின் தேவனாயிருக்கிறவரே" சமுத்திரத்தில் கப்பலோட்டிகள் ஆபத்திலே உதவிக்காக கதறுவது போல நாம் தேவனிடத்தில் மன்றாடும் போது, தம்மிடம் நமக்கு புகலிடம் தந்து அமைதியிலே வழி நடத்துகிறவராக இருக்கிறார். இந்த சமாதானத்தையும், அமைதியையும் பெற நாம் எப்படிப்பட்ட கூக்குரல் இடுகிறோம். சகல நேரங்களிலும் நாம் ஏறெடுக்கும் ஜெபமல்லவா? நம்மைக் கலங்கப்பண்ணும் சமயங்களில் மட்டுமே இந்த அமைதி நமக்கு அவசியமானது. இது தேவ சித்தத்திற்குட்பட்டதான ஜெபமும் அங்கீகரிப்புமானது. (சங். 46)* R 2058:3

## நவம்பர் 29

***நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல், உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. (எபி. 10:23)***

*தேவனுடைய வாக்குத்தத்தங்களே நம்முடைய அஸ்திபாரமாக இருந்து, அதின் மேல் இனி வரும் மகிமைக்குரிய நம்பிக்கையைக் கட்ட வேண்டியவர்களாயிருக்கிறோம். இதனால் சத்தியத்தை எழுத்தின்படி அல்ல, ஆவியின்படி உறுதியாய்ப் பற்றிக் கொண்டு அன்புடன் கைக்கொள்ளக்கடவோம். நாம் எப்பொழுதும் பொறுமையின் முக்கியத்தை உணர்ந்து நமக்குண்டாகும் பல சோதனைகளிலும், கஷ்டங்களிலும், உபத்திரவங்களிலும், சந்தோஷப்பட வேண்டியவர்களாயிருக்கிறோம். இவை யாவும் நாம் சீர் பொருந்தவும், நற்குணங்களில் முன்னேறவும் தேவனால் அருளப்பட்டதென்றும் உணர வேண்டும். இவைகளாளின்றி அன்பில் நாம் முன்னேற முடியாது. (1 பேது. 4:12-16; 1:5-9)* R 2793:3

## <u>*நவம்பர் 30*</u>

***இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன். (மத். 28:20)***

*விதை விதைத்ததை மேற்பார்வையிட்டவர், அதன் அறுப்பிலும் கவனமுள்ளவராயிருக்கிறார். சத்தியம் என்ற அரிவாளின் பேரில், நம்பிக்கை வைத்து நாம் காணும் கோதுமை மணிகளை முழுப்பிரயாசையுடன் சேர்க்கவே தேவன் நம்மிடம் விரும்புகிறார். சில கோதுமை மணிகளை கண்டுபிடிப்பது மிகக் கடினமாகக் காணப்பட்டாலும், இவைகளிலே நாம் சந்தோஷப்பட வேண்டியவர்களாயிருக்கிறோம். தேவன் நம்மோடிருக்கிறார் என்றும், அவரது இராஜ்ய சேவையில் கிறிஸ்துவுடன் நாம் ஈடுபடுகிறோம் என்று உணர்ந்து இந்தப் பாடுகள் ஆசீர்வாதத்தை தந்தருளும் என்று விசுவாசித்து முடிவு பரியந்தம் உறுதியாய் ஊழியஞ்செய்ய வேண்டும். (அப். 14:1-7)* R 2811:4

## <u>*டிசம்பர் 1*</u>

***உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக. (மத். 22:39)***

*பிறர் நம்மைத் தீய வார்த்தைகளால் பேசவோ அல்லது தீமைகள் நமக்குச் செய்யவோ, நாம் விரும்பாதது போல, நாமும் பிறரிடம் அவ்விதம் செய்ய விரும்பக்கூடாது. தேவ உடன்படிக்கைக்குட்பட்ட சகலரும் தேவ கட்டளைப்படிப் பிறனை ஒரு வார்த்தையாலும் அவநம்பிக்கைக்கு உட்படுத்தவும் கூடாது. அவ்விதம் சில சந்தர்ப்பங்களில் சிந்திக்க ஏவப்படும் போது, நம்முடைய புதிய சிந்தை அதை மேற்கொண்டு அப்பாவத்தை நடப்பியாதபடி நம்மைக் காத்துக் கொள்ளுதல் அவசியமானது. சந்தேகத்திற்கு இடம் கொடாமல், அன்பினிமித்தமாகச் சகல தீய எண்ணங்களையும் விட்டு விலக வேண்டும். (அன்பு சகல பாவங்களையும் மூடும். அன்பு மாயமற்றது. அன்பு சமாதானத்தைக் கட்டளையிடும்.) (1 கொரி. 13:1-7)* R 2445:3

## *டிசம்பர் 2*

***இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு. (அப். 22:16)***

*மற்றவர்களை ஆதாயப்படுத்திச் சத்திய பாதையில் கொண்டுவரப் பிரயாசைப்படும் ஒவ்வொருவருக்கும் இந்த வார்த்தைகள் ஒரு வழிகாட்டியாகவும், பின்பற்றும் மாதிரியாகவும் உள்ளது. தேவனுக்கும், சத்தியத்திற்கும் கீழ்ப்படிந்து தங்களை முற்றிலுமாகத் தேவசித்தத்திற்கு ஒப்புக் கொடுக்க ஏவக்கூடியது. ஒருவரின் விசுவாசக் கண்கள் திறக்கப்பட்டு காதுகள் சத்தியத்தை கேட்கும் வாய்ப்படைந்தும், உடனடியாகத் தங்களைச் சத்தியத்திற்குட்படுத்தி தேவ ஞானத்தைப் பெற மனமற்றவர்களாய் இருப்பார்களானால், உலக வழிகளில் தாங்கள் மீண்டும் சிக்கி, வழி விலகிப் போக நேரிடும். மாமிசம், உலகம் மற்றும் சாத்தானும், அவர்கள் மனதைக் கெடுத்து தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாத சிந்தனைகளை உருவாக்க ஏதுவாகும். போகப் போக இவை அவர்கள் வாழ்க்கையை மாற்றி அமைத்து விடும். (1 பேது. 5:8-10)* R 2825:4

## *டிசம்பர் 3*

***என் பொறுமையைக் குறித்துச் சொல்-ய வசனத்தை நீ காத்துக் கொண்டபடியினால் ....... வரப்போகிற சோதனை காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன். (வெளி. 3:10)***

*இது இக்காலத்தில் பொறுமையுடன் தங்கள் ஓட்டத்தை ஓடும் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படும் விசேஷித்த பரிசு. இந்த சோதனைகளி-ருந்து நாம் தப்ப எண்ணாமல், பொறுமையுடன் அவற்றை கிறிஸ்துவின் பிரசன்ன காலத்தில் சகிப்பதே விசேஷித்த ஆசீர்வாதம். நாம் அவருடன் ஐக்கியப்பட்டிருக்கலாம், அவருடைய போதனைகளைப் பெற்றிருக்கலாம், அவர் மூலம் ஆவிக்குரிய ஆகாரத்தை ஏற்ற காலத்திலே பெற்றிருக்கலாம். ஆகிலும், நாம் அறிந்திருக்கிறபடி இந்தச் சோதனையின் நாட்களில் உலக முழுவதும் சோதனைக்குட்படும் போது, நம் பொறுமை இந்தச் சோதனைகளை மேற்கொள்ளச் செய்வதே, நாம் பெறும் பரிசுக்கு காரணமாக இருக்கும். (யாக். 1:12-15)* R 2792:3

## டிசம்பர் 4

***பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்கிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா. (லூக். 11:13)***

*நித்திய ஜீவன் பேரில் நோக்கமுள்ளவர்களாகத் தேவனிடம் பிரதிஷ்டை செய்து கொண்ட ஜனங்கள், தங்கள் ஜெபத்திலே அவரிடம் மன்றாடும் போது அதிகமாக தேவ ஆவியையும், பரிசுத்தத்தையும், சத்திய அறிவையும், ஞானத்தையும் பெற்றுக் கொள்வது எவ்வளவு ஆசீர்வாதமான காரியம்? விடியற்காலம் வரை போராடி, தேவனைப் பற்றிக் கொண்டிருப்பவர்கள் ஆசீர்வாதம் பெறுவது எவ்வளவு நிச்சயமானது? இந்த ஆசீர்வாதங்களைத் தேவன் தம்முடைய ஜனங்களுக்குத் தந்து, தம்முடைய நோக்கத்தை வெளிப்படுத்துகிறார். ஆகிலும் அதை ஆர்வத்துடன் விரும்பி அதன் மதிப்பை அறியும் வரை நிறுத்தி வைக்கிறார். (லூக். 8:1-8)* R 2866:1

## டிசம்பர் 5

***யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள்... நானும் என் வீட்டாருமோவென்றால், யேகோவாவையே சேவிப்போம். (யோசு. 24:15)***

*மற்றவர்கள் யாரை அல்லது எதைச் சேவித்தாலும் சரி, தேவ கிருபையை ருசி பார்த்து, அவர் வசனங்களின் மூலம் அவரைக் கண்டடைந்து, புதிய சிருஷ்டிகளாக மீண்டும் பிறந்தவர்களாக நாம் உண்மைத் தேவனாகிய அவரையே பயபக்தியுடன் வணங்க வேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் சற்றும் குறையாமல் அவர் பேரில் நம்பிக்கை வைக்க வேண்டும். பூரண நம்பிக்கையுடன் அவர் நமக்கு வகுக்கும் வழிகளில் நடக்க வேண்டும். அவர் கரம் நம்மை நடத்துகிறதென்று விசுவாசிக்க வேண்டும். நாம் உண்மையான மேய்ப்பனால் நடத்தப்படுகிறோம் என்று விசுவாசிப்பதே நம்மை இறுதியாகப் பரலோக வாசலுக்குள் பிரவேசிக்கச் செய்யும். இதிலே நமக்கு சந்தோஷமும், சமாதானமும் உண்டு. (சங். 25:1-6)* R 2873:1

## டிசம்பர் 6

***தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த, பாழான பட்டணம் போலிருக்கிறான். (நீதி. 25:28)***

*கிறிஸ்தவ ஜீவியத்தில் "சுயநலம்" என்ற சிந்தையை எதிர்த்துப் போராடுவது ஒரு பெரும் போராகும். தேவனுடைய வார்த்தையின்படி "பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்." ஏனெனில் தன் மனதை அடக்கி நான் என்ற சிந்தையை எதிர்த்து அனுதினமும் போர் புரிய வேண்டியவர்களாயிருக்கிறோம். இதன் மூலம் பாவத்தை எதிர்த்து நம் கண்களிலிருந்து மன மேட்டிமை, கோபம், பகை, விரோதங்கள் முத-யவைகள் நம் இருதயத்தில் தோன்றாமல் இருக்கச் செய்யலாம். சகல பாவ சிந்தைகளையும் நாம் எதிர்த்துப் போராடும் போது சகோதர சிநேகத்திலும், பிறனுக்கு உதவி செய்வதிலும், மற்றவர் பெலவீனங்களில் உதவவும் தயாராவோம். (நீதி. 14:29; 1 கொரி. 6:12)*
R 2878:1

## டிசம்பர் 7

***அவர் வையப்படும் போது பதில் வையாம-ருந்தார். (1பேது. 2:23)***

*அவருடைய பகைவர்கள் அவரிடம் குற்றம் கண்டு பிடித்ததால், அவரை நியாயமாக வையவில்லை, அல்லது அவரை வையாதவர்கள் எவ்வித குற்றமற்றவர்களாகவும் இருந்ததில்லை. இயேசு அவர்கள் பேரில் எவ்வளவோ குற்றங்களைச் சுமத்தி இருக்கக்கூடும். ஆனால் தம் பிதாவின் சித்தத்தை அறிந்தவராகத் தம்மை முற்றிலும் ஒப்புக் கொடுத்து அந்த ஜனங்களிடம் எதிர் பேசக் கூடாதவராகத் தம்மை அடக்கிக் கொண்டார். தாம் அழைக்கப்பட்ட அழைப்பை அறிந்து, பொறுமையுடன் சகல நிந்தைகளையும் சகித்தார். அவர் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார். அந்த ஜனங்களின் அறியாமையையும், குருடர்களாய் இருப்பதையும் அறிந்த அவர், அவர்கள் பேரில் தான் கொண்டிருந்த அன்பினிமித்தமாகச் சகலத்தையும் சகித்தார். (யோவா. 15:18-23)*
R 2879:4

## <u>*டிசம்பர் 8*</u>

***உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். (யோவா. 15:18)***

*எவ்வித காரணமுமின்றி நம் இரட்சகர் உலகத்தாரால் பகைக்கப்பட்டது போல, முடிந்த வரை இது நமக்கும் இருக்கும் என்று நினைப்போமாக. பகைமை, வெறுப்பு. தூஷணம் இவை யாவும் நம் மேல் பொழிந்தாலும், நம் ஜீவியம் பரிசுத்தமும், நீதியை நடப்பிக்கிறதுமாயிருக்கப் பிரயாசைப் படவேண்டும். கூடுமானவரை நம்முடைய எண்ணங்களும் வார்த்தைகளும், செய்கைகளும் தேவ நாமத்திற்கு மகிமையாகவும் எல்லா மனிதரிடமும், விசேஷமாகச் சகோதரரிடமும் அன்பை காட்டக் கூடியதாகவும் இருக்க வேண்டும். திருச்சபை பூரணப்பட்டு ஆளும் போது நம்மை வெறுத்தவர்கள், நமக்குமுன் தலை வணங்கி நிற்பார்கள். நாமும் அவர்கள் பூரண நிலையைப் பெற உதவ வேண்டியவர்களாயிருப்போம். (மத். 5:11-12)* R 2881:1

## <u>*டிசம்பர் 9*</u>

***சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு, கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தைப் பெறுவான். (யாக். 1:12)***

*நமக்கு ஏற்படும் ஒவ்வொரு சோதனையும், துன்பமும் நம்முடைய விசுவாசத்தின் பரீட்சை என்பதை நாம் முதலாவதாக உணர வேண்டியவர்களாயிருக்கிறோம். பலியின் ஜீவியம் செய்யத் தங்களைத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்த யாவருக்கும், அவர்கள் விசுவாசம் எந்த அளவுக்குத் தேவன் பேரில் வேர் கொண்டுள்ளதென்று பரிசோதிக்க இது அவசியமானது. இதன் மூலமே நாம் தேவனிடம் கொண்டுள்ள அன்பைக் காட்டி நல்ல போராட்டத்தைப் போராட ஏவப்படுகிறோம். எவ்விதத் தீங்கு நேரிட்டாலும், தேவன் என்னை நடத்துவார் என்று பூரண நம்பிக்கையோடு சொல்ல வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். (எபி. 12:1-7)* R 2258:3

## <u>*டிசம்பர் 10*</u>

***என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன். (1 சாமு. 2:30)***

*தேவன் எந்தெந்த வழிகளில் நாம் ஊழியம் செய்ய வாய்ப்பை உண்டாக்குகிறாரோ, அவைகளைச் செய்ய, முழுவாஞ்சையோடும், ஆர்வத்தோடும் உட்பட வேண்டும். இதற்காகவே நம்மை அழைக்கிறார். அவர் நம்மை அங்கீகரிக்க இது அவரால் அருளப்பட்ட ஒரு நிபந்தனை. ஒருவன் இவைகளில் கவலையற்று, அசதியுள்ளவனாக காணப்படும் போது, இந்தச் சிலாக்கியம் இவனிடமிருந்து நீக்கப்பட்டு, இதற்குத் தகுதியுள்ளவன் எவனோ, அவனுக்கு அருளப்படும். இதனால், தேவன் நமக்கு அருளின சேவையை அதிக கனமுள்ளதாக எண்ணி அவருக்கு உடன் வேலையாட்களாக கிறிஸ்துவோடும் இராஜ்யத்தின் ஊழியத்தைச் செய்ய உற்சாகமுள்ளவர்களாக காணப்பட வேண்டும். இதற்காகவே அவருக்கு மணவாட்டியாகவும் உடன் சுதந்தரருமாகவும் அழைக்கப்பட்டு இருக்கிறோம். (எபி. 5:4-10)* R 2888:6

## <u>*டிசம்பர் 11*</u>

***என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா; உன் கண்கள் என் வழிகளை நோக்குவதாக. (நீதி. 23:26)***

*நம் இருதயத்தையும், சித்தத்தையும் தேவனுக்கு ஒப்புக் கொடுத்து, தெய்வீக சித்தத்தையும், ஆலோசனைகளையும் அவருடைய வார்த்தைகளையும் அறிந்து அதன்படி செய்ய நினைக்க வேண்டும். இது நமக்குள் புதிய புத்தியை உண்டாக்கி, நம் இருதயத்திலே ஒரு புதிய வாழ்க்கையை வகுக்கக் கூடியதாக இருக்கும். இதற்காகவே தேவ சித்தமும், அவர் திட்டங்களும் விசுவாசிகளுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் தேவனை அறிகிற அறி விலே நம்மை நாளுக்கு நாள் வளரச் செய்கிறது. நாம் வசனத்தை தியானித்து தெய்வ திட்டங்களையும், சித்தத்தையும் தேடச் செய்யும் போது நம்முடைய வாழ்க்கையில் ஒவ்வொரு காரியத்திலும் நாம் மாற்றப்பட்டவர்களாக அவர் வழிகளில் நடக்கச் செய்யும். நம் இருதயம், நம்மைக் குற்றப்படுத்தாது. (1 யோவா. 3:18-22)* R 2891:1

## *டிசம்பர் 12*

***அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான். (நீதி. 23:7)***

*அசுத்தமான யாவும் தேவனுடையதல்ல. தேவனுடைய ஜனம் வெகு ஜாக்கிரதையாக அவைகளை நீக்கிவிட வேண்டும். இவைகள் அவர்கள் இருதயங்களிலோ, சிந்தனையிலோ சற்றும் உட்பிரவேசிக்கக் கூடாது. உட்பிரவேசித்தால் சகலத்திலும் தீட்டுப்பட்டவர்களாக காணப்படுவார்கள். தங்கள் யோசனைகளில் சுத்தமுள்ளவர்கள், வார்த்தைகளிலும், செய்கைகளிலும் பரிசுத்தமுள்ளவர்களாகத் தங்களை காத்துக் கொள்ள முடியும். எந்த ஒரு அசுத்தமும், உலகப்பிரகாரமாகவோ, அல்லது மாமிச இச்சையினாலோ சாத்தானால் விடப்படும் போது, முதலாவது நம்முடைய சிந்தையை தாக்கும். இங்கே, அது முறியடிக்கப்பட்டு விட்டால் ஜெயம் கிடைக்கும். இல்லையேல் அப்போஸ்தலனான யாக்கோபு சொன்னபடி "இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தை பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும் போது மரணத்தைப் பிறப்பிக்கும்." (யோபு 11:11-20)* R 2891:5

## *டிசம்பர் 13*

***இவர்கள் மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும். (அப். 7:60)***

*இந்த பாடத்தை கற்றுக் கொள்வது ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு எவ்வளவு ஆசீர்வாதமானது. எந்த ஒரு காரியத்தையும் தேவ சித்தமாகக் கருதி, ஒருவரையும் தூஷியாமல் நம்மை காத்துக் கொள்ள வேண்டும். நம்மைத் துன்புறுத்துகிறவர்களையும் நாம் ஆசீர்வதிக்கக் கடமைப்பட்டுள்ளோம். இயேசு தம்மை நிந்தித்து, துன்பப்படுத்தி, மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தவர்களை மன்னிக்கும்படி பிதாவிடம் மன்றாடினது போல, அவர் அடிச்சுவடுகளைப் பின்பற்றினவர்களும் செய்ய விரும்புகிறார். பவுல் அப்போஸ்தலன் இந்த வார்த்தைகளை மனதில் கொண்டு, "கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிச் சிறக்கப்பண்ணி ..... தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்றார். ஆகவே உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள், சபியாதிருங்கள் என்று நமது ஆண்டவரும் கூறுகிறார். (மத். 5:43-48)*
R 2896:1

## *டிசம்பர் 14*

***இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள். (மத். 5:7)***

*தேவ சாயலுக்குரிய குணலட்சணங்களான இரக்கம், தயவு, தர்ம சிந்தை ஆகியவை மனிதன் பயிற்சிக்க வேண்டிய நற்குணங்களாகும். நம் இரட்சகர் இரக்கக்குணத்தை அதிகம் வற்புறுத்துகிறார். நாம் எவ்வளவாக அறிவைப் பெற்றிருந்தாலும் அல்லது கிருபை நிறைந்தவர்களாக இருந்தாலும், இரக்கமுடைய மனதையுடையவர்களாக இராவிட்டால், தேவனுடைய பார்வையில் அங்கீகரிக்கப்பட்டவர்கள் அல்ல. நாம் மற்றவர்களுக்கு இரங்காவிட்டால் பரமபிதா நம்மேல் இரக்கம் கொள்ளார். வெளித் தோற்றமான இரக்கம் இரக்கமல்லவென்றும், உள்ளான இருதயத்தோடு ஒருவர் குற்றத்தை ஒருவர் மன்னியாவிட்டால், பரம பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னிக்க மாட்டார் என்று இரட்சகர் கூறினார். இரக்கம் காண்பிப்பவர்களே இரக்கம் பெறுவர். (லூக். 6:35-38)* R 2896:3; 2587:1

## *டிசம்பர் 15*

***யேகோவா என் மேய்ப்பராயிருக்கிறார். (சங். 23:1)***

*யேகோவா தேவன் தம்முடைய ஜனத்தை, செம்மறி ஆடுகளென்றே அழைக்கிறார். தேவன் பொருத்தமான ஒரு குணலட்சணத்தை இங்கே தெரிந்து கொண்டதைப் பார்க்கிறோம். செம்மறி ஆடுகளுக்குரிய முக்கிய குணலட்சணம் யாதெனில் பணிவு கீழ்ப்படிதல். மேலும் இது சுலபமாய் பழகக் கூடியது. தன்னைக் காக்கும் மேய்ப்பனின் சத்தத்திற்குச் செவி கொடுத்து கீழ்ப்படியக் கூடியது. நல்ல ஆடு, தன் மேய்ப்பனின் சிறிய சத்தத்தையும் நன்றாக அறிந்து, கவனித்திருக்கும். அதுபோல, தேவனுடைய ஜனம், அவர் வார்த்தைகளுக்குச் செவி கொடுத்து, அவருடைய வார்த்தைகளை கீழ்ப்படிதலுடன் தங்கள் இருதயங்களில் பொக்கிஷத்தைப் போல் காத்துக் கொள்ளும். அவரிலே நிலைத்திருக்கும் ஆடுகள் வழி தப்பித் திக்கற்றுப் போகாது. (யோவா. 10:1-5; 14-15)* R 3116:2

## டிசம்பர் 16

***நீங்கள் எந்த மட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப்பீர்கள். யேகோவா தெய்வமானால், அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனை பின்பற்றுங்கள். (1 ராஜா. 18:21)***

*தூய்மையைச் சோதிக்கும் உரைகல் நமக்கு அவசியமானது. இது நம் சிந்தையை உணர்த்தி, எது உண்மை என்று உடனடியாக சரியான முடிவை நமக்குக் காட்டக்கூடியதாக இருக்கும். இங்கே சோதிக்கும் கல் தேவ சித்தம். தேவசித்தம் இன்னதென்று உடனடியாகத் தீர்மானிப்பதற்கு ஒழுக்கமும், அனுபவமும் அவசியமானது. இவைகளை எவ்வளவு சீக்கிரம் பெறுகிறோமோ, அவ்வளவு சீக்கிரம் தேர்ச்சி பெறுவோம். எவ்வளவு துரிதமாக நாம் தேவசித்தத்தை உணர்ந்து, அதைச் செயல்படுத்த ஆரம்பிக்கிறோமோ, அவ்வளவு துரிதமாக நாம் நீதியின் பாதையில் நடக்க ஏதுவாகும். (யோசு. 24:12-18)* R 2950:5

## டிசம்பர் 17

***எனக்கு பிரியமானவர்களே.... அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசைப்படுங்கள். ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார். (பிலி -. 2:12-13)***

*இயேசு கிறிஸ்துவின் மூலமாக யேகோவா தேவனே நமக்கு மீட்பை உண்டாக்கினார். நாம் அவரிடம் நெருங்கியிருந்து நீதியின் பாதையிலே நடக்க அவரே நமக்கு வாக்குத்தத்தங்களை கிருபையாக கட்டளையிட்டும் இருக்கிறார். இன்னும் அதிகமாக இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிப் பலியின் ஜீவியம் செய்ய வழி வகுத்துள்ளார். ஆதலால் பயத்தோடும், நடுக்கத்தோடும் (வெகு ஜாக்கிரதையோடும்) நம் இரட்சிப்பை வழி வகுத்துக் கிருபையாக அருளப்பட்ட வாக்குத்தத்தின் பேரில் விசுவாசமுள்ளவர்களாக நீதியின் பாதையில் தேவனுக்கு அங்கீகரிப்பாக நடந்து இயேசு கிறிஸ்துவின் மூலம் விசுவாசத்தில் நீதிமான்களாயிருக்க பிரயாசைப்பட வேண்டும். (எபி. 13:20-21)* R 2154:6

## *டிசம்பர் 18*

***கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன். மனுஷன் எனக்கு என்ன செய்வான். (எபி.13:6)***

*நம்முடைய வாழ்க்கையில் ஒழுங்காக நடக்கவும், பல கஷ்டங்களையும், சோதனைகளையும் வாழ்க்கையில் சகிக்கவும் நமக்கு தைரியம் தேவை. உபத்திரவங்களில் சந்தோஷமும், பொறுமையும் இன்றியமையாதது. இவையாவற்றிலும் தேவன் நம்மைத் தாங்கி வழி நடத்துவார் என்ற விசுவாசமும், தைரியமும் அவசியமானது. மனிதருக்கு பயப்படுவது ஒரு கண்ணியைப் போல் நமக்கு முன்பாக இருக்கும். இவை முற்றிலும் நம்மை விட்டு நீக்கப்பட வேண்டும். நம் இரட்சகரும் அழிந்து போகிற மனிதனுக்கல்ல, யேகோவா தேவனுக்கே பயந்து ஆராதனை செய்ய நமக்குப் போதித்துள்ளார். நீதிமான் சிங்கத்தைப் போல தைரியமுள்ளவனாகவும், புறாவைப் போல் பெருந்தன்மையும், செம்மறி ஆட்டுக் குட்டியைப் போல் பணிவான குணமுடையவனாகவும் இருப்பான். இவை ஒவ்வொரு கிறிஸ்தவனிடமும் காணப்பட வேண்டும். (சங். 118:4-9)* R 2953:1

## *டிசம்பர் 19*

***ஆயுதம் தரித்திருக்கிறவன், ஆயுதம் உரிந்து போடுகிறவனைப் போலப் பெருமை பாராட்டலாகாது. (1 ராஜா. 20:11)***

*சகிப்புத்தன்மை அதாவது பொறுமை, திருச்சபையாருக்கு விசுவாசத்தின் பல பரீட்சைகளில் மிக கடுமையான பரீட்சையாகும். மற்றெல்லா நற்குணங்களை விட, இது ஒருவரின் பலத்தை எடையிட்டு காட்டக் கூடியதாக உள்ளது. இந்தப் பரீட்சையில் வெற்றி பெறாத எந்தப் போர் வீரனும் முடி சூட்டப்படான். தற்காலப் போரில் தேவனுடையப் பிள்ளை களைச் சடுதியாக பகைவனான சாத்தான் பொறுமையை இழக்கச் செய்வான். இவனை, இக்காரியத்தில் மேற்கொள்ள விழிப்புள்ளவர்களாயிருந்து ஜெயிப்பதே சிறந்த வழியாகும். இவர்கள் எப்பொழும் தேவனுடைய சர்வாயுதம் தரித்துச் சத்தியம் என்னும் ஆவியின் பட்டயத்தைப் பிடித்தவர்களாயிருக்க வேண்டும். (யாக். 1:2-4; 5:7-8)* R 1656:1

## டிசம்பர் 20

***நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு. (2 தீமோ.2:15)***

*"ஜாக்கிரதை" என்ற வார்த்தை, சிந்தனைக்குரியது. ஜாக்கிரதையுள்ளவர்களே தேவனுக்கு அங்கீகாரமாக நடந்து இடுக்கமான பாதையை கண்டடைவார்கள். ஜாக்கிரதையாய் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிற்க, வசனத்தை நிதானமாகத் தியானிக்க வேண்டும். நம்முடைய வழிகள் தேவனுடைய போதகத்திற்குட்பட்டிருக்கிறதா என்று அறிய கவனமாய் அவற்றைப் பகுத்தறிய வேண்டும். கவனமாய் சீயோனில் சமாதானத்தை நிலைப்படுத்தப் பிரயாசப்பட வேண்டும். ஜாக்கிரதையாகப் பாவமான செய்கைகளுக்கு விலகி இருக்க வேண்டும். ஜாக்கிரதையுடன் உண்மைப் போர் வீரனாகத் தைரியத்துடன் பெருந்தன்மையான காரியங்களைச் செய்ய நினைக்க வேண்டும். (யோசு. 1:8; 2 தீமோ. 4:2,5)* R 3097:1

## டிசம்பர் 21

***பாத்திரவான் யார்? (வெளி. 5:2)***

*யூத ராஜ சிங்கமான இயேசு கிறிஸ்துவின் மூலம், முத்தரிக்கப்பட்டவைகள் வெளிப்படுத்தப்பட்டு அதை வாசித்தறிய பாத்திரவான்களாய்த் தேவனால் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை உணர வேண்டும். தேவ திட்டங்களையும், கட்டளைகளையும் காணவும், விசுவாசத்துடனும், கீழ்ப்படிதலுடனும் அவற்றை அறிந்து நடக்கவும் பாத்திரவான்களாக அழைக்கப்பட்டுள்ளோம். சில காரியங்களை மட்டுமே நாம் சத்திய ஒளியின் மூலம் காணக் கூடியவர்கள் என்று நம்மைக் குறித்து பெலவீனமுள்ளவர்களாக எண்ணாமல், சகலத்தையும் நாம் அறியப் பாத்திரவான்களாக அழைக்கப்பட்டதை உணர வேண்டும். இவ்விதம் தேவனுடைய விலையேறப்பெற்ற கற்கள் என்று ஒவ்வொருவரும் உணர்ந்து வைரக் கற்களைப் போல அழகாகச் சத்திய ஒளியை அநேகருக்கு பிரதிப-க்ககூடியவர்களே வல்லமையுடனும் மகிமையுடனும் கிறிஸ்துவின் கூட ஆளுகை செய்ய பாத்திரவான்களாய் இருப்பார்கள். (அப். 5:40-42)* R 3104:4

## டிசம்பர் 22

**ஒருவன் இவைகளை விட்டு, தன்னைச் சுத்திகரித்துக் கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான். *(2 தீமோ.2:21)***

*ஒருவன் தேவனிடம் கனத்தை அடைய விரும்பினால், தேவன் தன்னை நடத்தச் சித்தமான வழியைப் பணிவுடன் தேடக் கடவன். தாழ்ந்த சிந்தையுடையவனுக்கு தேவன் தம் தயவை காண்பிக்கிறார். நீ தேவனுக்கு உகந்த பாத்திரமாக இருப்பாயானால், கனத்திற்குரியவனாகவும் இருப்பாய். ஏற்ற காலத்தில் அவர் உன்னை உயர்த்தும்படி அவருடைய பலத்த கைகளுக்குள்ளாக அடங்கி இரு. இதிலே பொறுமையுடன் இருந்து, உன் கைக்கு நேர்மையாக காணப்படுவதெதுவோ, அதை உன் முழு மனதுடன் செய். மண்பாண்டமான உன் சரீரம் சுத்தமுள்ளதாகவும், தேவன் உபயோகிக்க பாத்திரமுள்ளதாகவும் இருப்பதாக. இது தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றதாகும். (மத். 20: 25-28; 1 கொரி. 6:9-20)* R 3097:5

## டிசம்பர் 23

**ஏற்றக் காலத்தில் சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது! ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித் தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம். *(நீதி. 15:23; 25:11)***

*தேவனுடைய வார்த்தைகள் கேட்க வாஞ்சையுள்ளவர்களுக்கும், தேவனிடம் சேரும் வழியை அறிய விருப்பமுள்ளவர்களுக்கும், ஏற்ற காலத்தில் அவருடைய வார்த்தைகளை எடுத்துச் சொல்வது மிக பிரயோஜனமானது. வேறு சமயங்களில் அநேக வார்த்தைகளைப் பேசுவதை காட்டிலும் சரியான சமயத்தில் மிக ஆறுதலும், பிரயோஜனமுமான சில வார்த்தைகளே மேன்மையானது. சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும், ஏற்ற வேளையிலே தங்களுடைய நேரத்தை மற்றவர்களுக்காக அர்ப்பணிக்க வேண்டும். இந்த ஊழியம் நம்முடைய வசதிக்குரியதாயிராமல், மற்றவர்களின் சமயத்திற்குரியதாயிருக்க வேண்டும். எதை, எந்த நேரத்தில் பேச வேண்டும் என்பதையும் அறிந்து அவை உப்பினால் சாரமேற்றப்பட்டவையாயும் இருக்க வேண்டும். ஏற்ற காலத்திலும், ஏற்ற சமயத்திலும் சொல்லப்படும் தேவ வசனம், அநேகருக்கு ஜீவனைத் தரக்கூடியதாயிருக்கும். (கொலோ. 4:2-6; 2 தீமோ. 4:1-5)* R 3124:1

## டிசம்பர் 24

***அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக; ஏனெனில், அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார். (மத். 1:21)***

*தேவ சித்தத்தின்படி நம்முடைய இரட்சகரின் பிறப்பும், அவர் மூலமாக அருளப்பட்ட சுவிசேஷமும், தேவ பிள்ளைகளின் விசுவாசத்தைப் பலப்படுத்தக் கூடியதாக உள்ளது. சிறிய காரியங்களிலும், தேவன் மனிதர் பேரில் முற்காலங்களில் எவ்வளவு அக்கரை கொண்டவராக இருந்தார் என்பதைக் காணும் போது, அவர் ஞானத்தின் பேரிலும், இனி நிறைவேற வேண்டிய காரியங்களின் பேரிலும் நமக்கு நம்பிக்கையை உண்டாக்கக் கூடியதாக உள்ளது. அவருடைய விலையேறப் பெற்ற வாக்குத்தத்தங்கள் பெத்லகேமில் பிறந்த அவர் குமாரனான கிறிஸ்துவின் மூலமாக நிறைவேற்றப்படும் என்பதும் தெளிவாகிறது. இவையாவும் தேவன் தம்முடைய ஜனத்தின் தனிப்பட்ட ஜீவியத்தில் எவ்வளவாக அக்கரை கொண்டுள்ளார் என்பதை வெளிப்படுத்துகிறதாயிருக்கிறது. (2 பேது. 1:1-10)* R 2556:2

## டிசம்பர் 25

***பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய இயேசு என்னும் இரட்சகர் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். (லூக். 2:10-11)***

*நமது இரட்சகரின் பிறந்த நாளை கொண்டாடுவதற்கு இது சரியான தேதியில்லை என்றும் அது அக்டோபர் முதல் தேதியாக இருக்க வேண்டும் என்றும் 2ம் தொகுதியில் (காலம் சமீபமாயிருக்கிறது) நாம் பார்த்திருக்கிறோம். மேலும் அவர் பிறந்த நாளை கொண்டாடும் படி நமக்கு கூறாததால் உலகத்தார் இந்த நாளிலே கொண்டாடுவது நமக்கு முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல. எனவே உலகத்தார் இரட்சகரின் பிறந்தநாளை இந்த நாளிலே கொண்டாடுவதை குறை கூறாமல், அவர் மேல் வைத்த அன்பினாலே அவர்கள் கொண்டாடுகிறார்கள் என்று விட்டுவிடுவோம். மேலும் இந்த நாளிலே வெகுமதிகளை ஒருவருக்கொருவர் கொடுத்துக் கொள்கிறார்கள். தேவன் நமக்கு அநேக வெகுமதிகளை கொடுத்து வருகிறார். நாமும் பெற்றுக் கொண்டு வருகிறோம். ஆனால், நமக்கு அவர் கொடுத்த பெரிய வெகுமதி இரட்சகராகிய இயேசு கிறிஸ்துதான். (யோவா. 1:9; 12:32)* R 3290:4

## டிசம்பர் 26

***நீ மிகவும் பலங்கொண்டு திடமனதாயிரு. (யோசு. 1:7)***

*பலங்கொண்டு திடமனதாயிருக்க அடிக்கடி நினைப்பூட்டப்படுகிறோம். திட மனதாயிருப்பதில் பலவிதம் உண்டு. சிலர் அகம்பாவத்தினால், தான் என்னும் எண்ணத்தால் தைரியம் பெற்றிருப்பார்கள். சிலர் தங்கள் அசட்டு தனத்தில் துணிகரமுள்ளவர்களாயும் இருப்பார்கள். ஆனால், யேகோவா தேவன் தற்கால ஆவிக்குரிய இஸ்ரயேலரிடத்தில் இருக்க விரும்புவது வேறு. இவர்கள் தங்கள் சோதனைகளிலும், சத்தியத்தினிமித்தம் வரும் பாடுகளிலும் பொறுமையுள்ளவர்களாக இருந்து சோர்வடையாமல் சாத்தானை எதிர்த்து நிற்கவும் ஊழியம் தடைபடாமல் பலங்கொண்டு திடமனதுடன் முன்னோக்கிச் செல்லவும் வேண்டும். தேவன் பேரில் ஒருவர் கொண்டுள்ள விசுவாசத்தின் மூலம், தெய்வீக வாக்குத்தத்தங்களின் பேரில் நம்பிக்கையையும் உண்டாக்கி அவருடைய வல்லமையினால் பலப்பட்டுத் திடன் கொள்ளச் செய்யும். (உபா. 31:6-8; சங். 31:21-24)* R 3079:6

## டிசம்பர் 27

***பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக் கொள்ளுவீர்களாக. (1 யோவா. 5:21)***

*நாம் நம்முடைய நம்பிக்கையை நம் தலைவர்கள் பேரில் வைக்காமல், தேவன் பேரில் வைக்க வேண்டும். நாம் முற்றிலும் நம்மை நடத்துபவர்களின் பேரில் நம்பிக்கையற்றவர்களாக இருக்கும்படி அல்ல. முற்காலங்களிலும், தற்காலத்திலும் நம்மை தம் பிரதிநிதிகளைக் கொண்டு போதித்து, கிருபையிலும், ஞானத்திலும் வழி நடத்தி வருகிறார். இங்கே நமக்கு கொடுக்கப்படும் பாடம் யாதெனில், எல்லாவற்றிற்கும் மேலாகச் சகலத்தையும் செய்து முடிக்கும் சர்வ வல்லமையுள்ள அவர் பேரில் நமது பூரண நம்பிக்கை இருக்க வேண்டும். மேலும் மற்றவர்கள் மூலமாக நாம் அவர் வழி நடத்துதலை எதிர்பார்க்க வேண்டியதாயிருந்தாலும், நம்முடைய நம்பிக்கை மனித ஞானத்திலும், பெலத்திலும் இல்லாமல் தேவ ஞானத்திலும், பெலத்திலும் இருந்து அவர் மூலமாகச் சகலரும் நடத்தப்பட ஒப்புக் கொடுக்க வேண்டும். (சங். 118:4-9; 146:3-7)* R 3078:5

## *டிசம்பர் 28*

***வழியிலே அவர் நதியில் குடிப்பார். ஆகையால் அவர் தனது தலையை எடுப்பார். (சங். 110:7)***

*நம்முடைய இரட்சகரும், தலையுமானவர் நம்மை மென்மேலும் ஆசீர்வதிக்கவும், புதிய சிந்தையும், ஆர்வமும் அளித்து விசுவாசத்துடன் நடத்தப்படவும் வேண்டுகிறோம். நம் ஜீவியத்தில் உண்டாகும் அனுபவமான ஓடையிலே அனுதினமும் குடித்து, அவருடைய சேவையிலே ஈடுபட ஞானத்தையும், தகுதியையும் வளரச் செய்யவும் மன்றாடுகிறோம். இதன் மூலம் அவருடைய துதிகளை நாம் அறிவித்துச் சகலப் பாடுகளையும் வாழ்க்கையில் ஏற்படும் மாறுதல்களையும் பொறுமையாய் சகித்து, அவர் நாமத்தை நம் சரீரத்தில் மகிமைப்படச் செய்கிறோம். இவ்விதம் அனுபவ ஓடையில் நாம் குடிக்கும் போது ஒரு சிறு குருவியை நினைப்போமாக. அது குடிக்கும் போது தன் தலையை உயர்த்தி தேவனை துதிப்பது போல காண்பது, நம் வாழ்க்கையின் ஓடையில் அனுதினமும் நாம் பல பாடுகளை அனுபவிக்கும் போது அவரைத் துதிக்கக் கடமைப்பட்டுள்ளோம் என்பதை குறித்து காண்பிக்கிறது. (1 பேது. 4:12-16)* R 2936:5

## *டிசம்பர் 29*

***காலையிலே உன் விதையை விதை; மாலையிலே உன் கையை நெகிழ விடாதே; அதுவோ, இதுவோ எது வாய்க்குமோ என்றும் இரண்டும் சரியாய் பயன்படுமோ என்றும் நீ அறியாயே. (பிர. 11:6)***

*சத்திய ஊழியம் செய்ய தேவனால் அழைக்கப்பட்ட தேவ ஜனம் ஊழியம் செய்ய விரும்பும் போது எப்பொழுதும் விழிப்புள்ளவர்களாக இருந்து, ஊழியம் செய்யக் கூடிய சந்தர்ப்பத்தைக் கவனித்திருக்க வேண்டும். இவர்கள் தேவனால் வழி நடத்தப்பட்டு, உபயோகப்படுத்தப்படத் தங்களை ஒப்புக் கொடுக்க வேண்டும். தேவ பக்திக்குரிய அறிகுறிகள் காணப்படும் இடங்களில் கவனமாயிருந்து சற்றும் தயங்காமல் நாம் பெற்ற சத்திய தூதை அவர்களுக்கும் கொடுத்து உதவி, அவர்களும் ஆசீர்வாதம் பெறும்படிச் செய்ய வேண்டும். அனைத்தையும் வாய்க்கச் செய்பவர் தேவன் என்பதை உணர்ந்து, தயங்காமல் ஊழியத்தில் ஈடுபட வேண்டும். (சங். 126:5-6; 1 கொரி. 3:5-8)* R 2965:3

## டிசம்பர் 30

***வருஷத்தை உம்முடைய நன்மையால் முடி சூட்டுகிறீர். (சங். 65:11)***

*கடந்த வருஷத்திலே தேவன் நமக்குச் செய்த எல்லாக் காரியங்களையும், தெய்வீக நடத்துதலையும் நாம் நினைவு கூறும் போது, நாம் தைரியங்கொண்டு, விசுவாசத்திலே உற்சாகப்படுத்தப் படுகிறோம். இது தொடர்ந்து வருகிற வருஷத்திலும் நமக்கு அருளப்பட ஜெபிப்போம். தேவனுடைய பிள்ளைகள் கடந்த கால நல் ஈவுகளுக்கு மாத்திரம் துதி செலுத்துகிறவர்களாயிராமல், தங்கள் தலைகளை உயர்த்தி தங்கள் மீட்பு சமீபமாயிருப்பதை உணர்ந்து வரும் வருஷத்திலும் தொடர்ந்து ஆசீர்வாதத்தைப் பெற விரும்ப வேண்டும். நம்மில் நல்ல காரியத்தைத் துவக்கியவர் அதை நலமாக முடிக்க நம்முடைய சித்தத்தை அவருடைய சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்கவும் வேண்டும். (சங்.103)* R 2738:1

## டிசம்பர் 31

***யேகோவா எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு என்னைத்தைச் செலுத்துவேன், இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு யேகோவாவின் நாமத்தைத் தொழுது கொள்ளுவேன். நான் யேகோவாவிற்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன். (சங். 116:12-14)***

*ஒரு வருஷத்தின் முடிவு புதிய வருஷத்தில் சில புதிய திட்டங்களை வகுக்க ஏற்ற காலமாகும். வரும் வருஷத்தில் நாம் தேவனுடைய ஊழியத்தில் எவ்விதம் அவர் சித்தத்தை நிறைவேற்றலாம், எவ்விதம் அவர் கிருபைக்கு பாத்திரராகப் பாடுகளை அனுபவிக்கலாம் என்றும் அதிகமாக நாம் ஊழியம் செய்ய எவ்வித முறைகளை கையாள வேண்டும் என்றும் திட்டமிடுவதே தேவனுடைய பிள்ளைகளின் நோக்கமாக இருக்க வேண்டும். மேலும் நாம் தேவனோடு செய்த பொருத்தனைகளை நிறைவேற்றினோமா என்று சிந்தித்து, அவைகளை நிறைவேற்ற நம்மை உட்படுத்த வேண்டும். (சங்.150)* R 2551:5

# அநுதின மன்னாவின் வசன அட்டவணை


## யாத்திராகமம்

4:2 ................ நவ. 26
20:7 ................ நவ. 8
33:14 ................ செப். 18

## உபாகமம்

13:3 ................ பிப். 18

## யோசுவா

1:7 ................ டிச. 26
24:15 ................ டிச. 5

## 1 சாமுயேல்

2:30 ................ டிச. 10
3:18 ................ நவ. 2
15:22 ................ மே. 13
16:7 ................ மே. 4

## 1 ராஜாக்கள்

18:21 ................ டிச. 16
20:11 ................ டிச. 19

## 2 நாளாகமம்

19:11 ................ அக். 25

## எஸ்றா

10:11 ................ ஆக. 3

## யோபு

34:30 ................ நவ. 28

## சங்கீதம்

16:8 ................ஜூலை.3
16:11 ................ ஜூன் 18
17:15 ................ ஜூன் 13
19:1-4................ ஜூன் 3
19:12-14..............ஆக. 12
23:1 ................ டிச. 15
23:4 ................செப். 21
23:5 ................ மே. 10
23:6 ................செப். 22
25:9 ................ ஜன. 31
25:12 ................ஜூலை 6
27:14 ................ ஜன. 4
29:11 ................செப். 16
31:1 ................ ஜூன் 5
31:3 ................ பிப். 21
31:15 ................ அக். 27
31:24 ................ ஜன. 22
32:8 ................ பிப். 23
34:7 ................ நவ. 18
34:18,19........... ஜூலை 22
39:1 ................ அக். 1
44:22 ................ மே 11
59:16 ................ அக். 17
61:4,3,5................ அக். 17
63:3 ................ அக். 31
63:5,6................ ஏப். 5
65:11 ................ டிச. 30
66:8,9 ................ ஜன.1
69:9 ................ நவ. 22
75:6,7................ பிப். 6
90:12 ................ ஜன. 6
91:1-16.............. நவ. 14
91:4 ................ அக். 17
91:10 ................ செப். 6
91:11 ................ நவ. 17
91:15 ................ ஏப். 29
95:6 ................ ஆக. 2
97:11 ................ ஜூன் 19

107:29................ அக். 16
110:7 ................ டிச. 28
111:10................ ஜன. 29
116:7 ................ பிப். 9
116:12-14.............டிச. 31
119:97................ ஜன. 19
119:165................ அக். 3
133:1 ................செப். 13
141:3 ................ நவ. 1

## நீதிமொழிகள்

3:3 ................ ஜன. 24
3:7 ................ ஜூன் 28
4:20,22................ பிப். 3
4:23 ................ ஜன. 27
15:23 ................ டிச. 23
16:5 ................செப். 29
16:32 ................ மார். 14
18:9 ................ அக். 18
18:21 ................ ஆக. 1
21:3 ................ அக். 14
23:7 ................ டிச. 12
23:26 ................ டிச. 11
24:16 .............. ஜூலை 22
25:11 ................ டிச. 23
25:28 ................ டிச. 6

## பிரசங்கி

11:6 ................ டிச. 29

## உன்னதப்பாட்டு

2:15 .............. ஜூலை 30
8:6 ................ செப். 5

## ஏசாயா

26:3 .............. ஜூலை 17
30:21 ................ பிப். 1
52:11 ................ அக். 11
53:1 ................ஜூலை 4
53:12 ................ ஏப். 14
55:3 ................ ஜூன் 15
57:15 ................செப். 20
61:1-3................ அக். 28
62:2,3................ மே. 16

## எரேமியா

20:9 ................ ஜன. 11

## தானியேல்

3:17 ...............ஜூலை 29
3:17,18............... ஆக. 31
6:5 ...............ஜூலை 27

## ஓசியா

6:6 ................ செப். 3

## மீகா

6:8 ................ ஜன. 15

## ஆபகூக்

3:17,18................ மே 15

## மல்கியா

3:2,3 ...............ஜூன் 17
3:17 ................ ஏப். 16

## மத்தேயு

1:21 ................ டிச. 24
4:4 ................ பிப். 25
4:7 ................செப். 27
4:19 ................ அக். 4
5:7 ................ டிச. 14
5:8 ................ ஜூன் 29
5:11,12................பிப். 11
5:16 ................ ஆக. 30
5:44 ................ மார். 21

5:8 ................ ஜூன் 29
6:8 ................ நவ. 13
6:16 ................ ஜன. 26
6:23 ................ ஆக. 9
6:24 ................ அக். 30
6:28 ................ அக். 12
6:33 ................ ஆக. 21
6:34 ................ ஜன. 25
7:26 ................ அக். 7
8:26 ................ அக். 9
10:8 ................ அக். 19
10:16 ................ அக். 20
10:25 ................ ஆக. 14
11:29 ................ ஜூன் 21
11:29................ பிப். 17
12:34,35..............ஏப். 19
12:36 ................ ஏப். 22
12:37 ................ பிப். 14
13:23 ................ ஜூன் 23
13:30 ................ ஜூன் 30
14:31 ................ பிப். 8
16:24 ................ ஜன. 21
18:6 ................ மே 31
20:22 ................ அக். 22
20:27 ................ அக். 23
20:28 ................ மே 1
22:39 ................ டிச. 1
25:15 ................ ஜூன் 22
25:28,29.............மார். 17
26:41 ................ நவ.3
28:20 ................ நவ. 30

## மாற்கு

11:22 ................ அக். 15
14:8 ................ நவ. 16
14:38 ................ ஏப். 1

## லூக்கா

2:10,11................ டிச. 25
2:49 ................ ஆக. 22
4:22 ..............ஜூலை 10
8:15 ................ ஏப். 23
9:55,56................ அக். 6
10:5,6................ ஆக. 8
11:1 ................ ஜூன் 10
11:2 ................ அக். 21
11:13 ................ டிச. 4
14:27 ................செப். 11
16:10 ................ ஏப். 20
18:1 ................ ஜன. 30
21:19 ................செப். 12
21:34 ................ ஜூன் 6
23:26 ................ அக். 24
23:46 ................ ஏப். 15

## யோவான்

1:36 ................ஜூலை 7
6:53 ................ ஏப். 13
8:31,32................மார். 20
8:36 ...............ஜூலை 12
10:4 ................ஜூலை 9
13:14 ................ மே 23
14:21 ................ ஜூன் 1
14:27 ................ மே 29
15:1,2.............. ஜூலை 20
15:18 ................ டிச. 8
16:2 ................ மே 17

16:22 ................ மே 29
16:24 ................ ஜன. 3
16:33 ................ ஜூன் 9
17:11 ................ ஆக. 24
17:17 ................ செப். 19
17:20-23............. மார். 27
18:11 .............. ஜூலை 19
18:37 .............. ஜூலை 21
20:27 ................ நவ. 12

## அப்போஸ்தலர்

7:60 ................ டிச. 13
9:15 ................ செப். 1
17:23 ................ ஆக. 20
20:28-30............. நவ. 14
22:16 ................ டிச. 2
24:16 ................ நவ. 24

## ரோமர்

5:3-5................ ஏப். 28
8:3,4 ................ பிப். 24
8:13 ................ பிப். 2
8:13 ................ மே 5
8:14 ................ மே 6
8:17 ................ ஜூன் 24
8:28 ................ ஆக. 5
12:1 ................ நவ. 6
12:11 ................ ஜன. 18
12:12 ................ ஜன. 16
12:12 ................ மே 30
12:21 ................ மே 25
13:10 ................ பிப். 7
13:12 ................ ஏப். 3
13:13 ................ ஏப். 4
13:13 ................ ஏப். 11
14:21 ................ மே 31
15:1 ................ மே 19
15:2 ................ ஏப். 24
15:3 ................ ஜன. 5

## 1 கொரிந்தியர்

1:31 ................செப். 25
2:2 ................ ஜூன் 2
3:13 ...............ஜூலை 31
4:2 ................ ஜூன் 22
4:3 ...............ஜூலை 25
4:7 ................ ஜன. 9
4:12 ...............ஜூலை 2
6:19,20............ ஜன. 2
7:24 ................ ஜன. 23
8:1 ................ மே 26
9:16 ................ மே 7
9:24 ................ ஏப். 9
9:26 ................ ஜன. 14
9:27 ................செப். 24
10:16,17...............ஏப். 12
11:1 ................ பிப். 10
11:31,32..............மார்ச் 22
12:18 ................ மார்ச் 8
13:3 ...............ஜூலை 15
13:4 ................ ஆக. 26
13:4,5................ மே 24
13:4,6................ நவ. 10
13:5 ................ பிப். 13
13:13................ ஆக. 23

## 2 கொரிந்தியர்

1:21,22...............ஜூன் 27
4:8-10................ அக். 29
5:6,7 ................ மே 28

5:14 ................செப். 30
5:16 ................ ஆக. 27
5:17 ................ செப். 7
5:20 ................ ஆக. 13
6:8,3 ................ பிப். 16
6:17 ................செப். 15
7:1 ................ மே 12
10:4,5............. ஜூலை 5
11:14,15............ஜூலை 13

## கலாத்தியர்

1:8 ................செப். 17
2:5,11................ மே 19
5:17 ................ நவ. 9
6:1 ................ ஜன. 12
6:7,8 ................ அக். 8
6:10 ................ ஏப். 2

## எபேசியர்

2:8 ................மார்ச் 29
2:20-22..............செப். 26
4:15 ................ மே 14
4:29 ................செப். 10
4:31 ..............ஜூலை 14
5:8-10............. ஜூலை 1
5:18 ..............ஜூலை 16
6:18 ................ நவ. 27

## பிலிப்பியர்

2:1,2 ................ ஆக. 10
2:3 ................ மே 27
2:5 ................ ஏப். 27
2:7 ................ நவ. 4
2:12,13................டிச. 17
2:15,16................செப். 9
3:13 ................ஜூன் 11
3:13,14...............ஜூன் 12
3:13, 14...............அக். 2
3:15,16...............மார்ச் 13
4:4 ................ பிப். 26
4:5 ................ பிப். 27
4:6 ................ பிப். 28
4:7 ................ மார்ச் 1
4:8 ................ மார்ச் 2
4:8 ................ மார்ச் 3
4:8 ................ மார்ச் 4
4:8 ................ மார்ச் 5
4:11,12...............மார்ச் 6
4:19 ................ ஏப். 7

## கொலோசெயர்

1:27 ................செப். 17
2:6,7 ................ மே 9
3:9,10............... அக். 10
4:2 ................ ஜூன் 25

## 1 தெசலோனிக்கேயர்

4:3 ................ பிப். 5
5:5,6 ................மார்ச் 26
5:6 ................ நவ. 19
5:14 ................ ஆக. 15
5:15 ................ ஜன. 8
5:17 ................ ஜன. 3
5:18 ................ ஆக. 16
5:19 ................ ஆக. 17
5:21 ................ ஆக. 18
5:22 ................ ஆக.19

## 2 தெசலோனிக்கேயர்

2:10-12...............ஜன. 1

### 1 தீமோத்தேயு

*1:5 ................ மார்ச் 12*
*3:15 ................ ஜூலை 8*
*4:12 ................ பிப். 10*
*5:8 ............... ஜூலை 23*
*6:12 ................ மார்ச் 31*

### 2 தீமோத்தேயு

*1:7 ................ மே 22*
*2:3 ................ மார்ச் 28*
*2:5 ................ ஆக. 7*
*2:15 ................ டிச. 20*
*2:21 ................ டிச. 22*
*2:24,25................ ஆக. 4*
*3:1-4.............. ஜூலை 18*
*3:12 ................ மே 2*
*3:16,17................ மே 21*
*4:2 ................ ஆக. 28*

### தீத்து

*1:15,16................பிப். 19*
*2:14 ................ மே 20*
*3:2 ................ ஜன.7*

### எபிரேயர்

*3:1 ................ ஜூன் 26*
*3:13,14...............மார்ச் 10*
*4:3,9-11................மே 18*
*4:10 ................ ஏப். 26*
*4:15,16................ ஏப். 21*
*4:16 ................ ஜன 13*
*5:14 ................ மே 3*
*6:4-6................செப். 17*
*6:10 ................ மார்ச் 9*
*10:21,22................நவ. 5*
*10:23................ நவ. 29*
*10:32,33............. மார்ச் 23*
*10:36................ நவ. 23*
*10:38................மார்ச் 15*
*10:38................ ஏப். 8*
*11:6 ................ ஏப். 25*
*12:1 ................ மார். 11*
*12:3 ................ அக். 5*
*12:7 ................ ஜன. 20*
*12:11................ ஜூன் 16*
*13:5 ................ பிப். 22*
*13:5 ................ மார். 24*
*13:6 ................ டிச. 18*
*13:17................ நவ. 17*

### யாக்கோபு

*1:2,3................ நவ. 21*
*1:4 ................ பிப். 12*
*1:12 ................ டிச. 9*
*1:13 ................ நவ. 25*
*1:26 ................ பிப். 20*
*2:18 ................ அக். 13*
*3:2 ................ நவ. 1*
*4:3 ................ ஆக. 29*
*4:4 ................ செப். 8*
*4:7 ................ ஆக. 6*
*4:8 ................ ஜூன் 18*
*4:12 ...............ஜூலை 25*
*5:10 ................ ஜன. 10*
*5:16 ...............ஜூலை 24*
*5:20 ................ ஜூன் 8*

### 1 பேதுரு

*1:7 ................ ஜூன் 4*
*1:13 ................ மார். 18*
*1:14,15.............. மார். 19*
*1:22 ................ செப். 2*

2:9 ................ ஏப். 30
2:12,19............. செப். 14
2:23 ................ டிச. 7
3:14 .............. ஜூலை 28
4:12,13............. ஏப். 18
4:16 ................ ஏப். 6
5:5 ................ ஜூன் 14
5:6 ................ ஏப். 10
5:7 ................ அக். 26
5:8,9 ................செப். 28
5:10 ................ ஜூன் 7

## 2 பேதுரு

1:5 ................ நவ. 11
1:10 ................ நவ. 20
3:11 ................ மார். 30
3:17,18...............மார். 25

## 1 யோவான்

2:1 ................ ஜன. 13
2:5 ................ பிப். 15
2:6 ................ நவ. 15
2:15 ................ ஜூன் 20
2:25 ................ மே. 8
2:27 ................ ஏப். 17
3:2 ................ ஆக. 25
3:14-16...............மார். 16
4:12 ................ மார். 7
4:16 ................ பிப். 29
4:18 ................ செப். 4
5:18 .............. ஜூலை 11
5:21 ................ டிச 27

## யூதா

3 ................செப். 23
21 ................ ஜன. 17
21 ................ ஏப். 9

## வெளிப்படுத்துதல்

2:10 ................ ஆக. 11
2:17 ...............ஜூலை 26
3:5 ................ ஜன. 28
3:10 ................ டிச. 3
5:2 ................ டிச. 21
18:4 ................ பிப். 4
20:4 ................ நவ. 7



ஞாயிற்றுக்கிழமை

## 1 கொரிந்தியர் 13

நான் மனுஷர் பாஷைகளையும், தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்.

நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை.

எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை.

அன்பு நீடிய சாந்தமும், தயவுமுள்ளது, அன்புக்குப் பொறாமையில்லை, அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது.

அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது. சினமடையாது, தீங்கு நினையாது.அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும்

சகலத்தையும் தாங்கும்: சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்.

அன்பு ஒருக்காலும் ஒழியாது, தீர்க்கதரிசனங்களாலும் ஒழிந்துப்போம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துப் போம், அறிவானாலும் ஒழிந்துப் போம்.

நம்முடைய அறிவு குறைவுள்ளது. நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறையானது ஒழிந்துப் போம்.

நான் குழந்தையாய் இருந்த போது குழந்தையைப் போலப் பேசினேன், குழந்தையைப் போலச் சிந்தித்தேன். நான் புருஷனானபோதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்து விட்டேன்.

இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம். அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம். இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துக்கொள்வேன்.

R 2205: 6, 2234: 5, 2240:1

திங்கட்கிழமை

## கர்த்தரிடத்தில் ஓர் வாக்குறுதி

பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய பிரமாணம் என் இருதயத்தை மேன்மேலும் ஆட்கொண்டு, உம்முடைய சித்தம் அழிவுக்குரிய என் மாம்சத்தில் நிறைவேற்றப்படுவதாக. தேவையானபோது உதவியாக, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ள உம்முடைய கிருபையைச் சார்ந்து, இந்த வாக்குறுதியை எங்கள் கர்த்தரும், கிறிஸ்துமாகிய இயேசுவின் மூலமாக ஏற்றெடுக்கிறேன்.

அறுவடை வேலையின் பொதுவான காரியங்களையும், அதில் குறிப்பாக நான் உரிமையாக, உற்சாகத்துடன் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிற என்னுடைய பங்கையும், மற்றெல்லா இடங்களிலும் உள்ள உடன் வேலையாட்களுடைய பங்கையும், அனுதினமும் பரலோகக் கிருபையின் சிங்காசனத்தண்டையில் நினைவு கூறுவேன்.

இவற்றுடன், உமக்கும் உம்முடைய பிரியமான மந்தைக்கும் ஊழியம் செய்ய திராணியுள்ளவனாகும் நோக்குடன், கூடுமானவரையில், என்னுடைய சிந்தனைகளையும், வார்த்தைகளையும், கிரியைகளையும் ஆழ்நத பரிசோதனை செய்வேன் என்று உறுதிகூறுகிறேன்.

இரண்டு எஜமானர்கள் இருப்பதை நினைவில் கொண்டு, அசுத்த ஆவிகளோடு தொடர்புடைய எல்லா துர்கிரியைகளையும் எதிர்ப்பதற்கு விழித்திருந்து, இவைகளெல்லாம், எதிராளியானவனுடைய கன்னிகள் என்று உணர்ந்து, எல்லா நியாயமான வழிகளிலும் எதிர்ப்பேன் என்று உம்மிடம் உறுதி கூறுகிறேன்.

மேலும், கீழுள்ள விதிவிலக்குத் தவிர, எல்லா நேரத்திலும், எல்லா இடத்திலும், எதிர்பாலினரிடத்தில் தேவனுடைய ஜனங்களாகிய சபையார் முன்னிலையில் நான் எப்படி நடந்து கொள்கிறேனோ அப்படியே, தனிமையிலும் நடந்து கொள்வேன் என்று உறுதி கூறுகிறேன்.

விதிவிலக்கு: சகோதரராக இருக்கும்பட்சத்தில், மனைவி, குழந்தைகள், தாய் மற்றும் உடன்பிறந்த சகோதரிகள். சகோதரிகளாக இருக்கும்பட்சத்தில் -கணவன், குழந்தைகள், தந்தை மற்றும் உடன் பிறந்த சகோதரர்கள்.

மேலும், கூடுமானவரையில், அறை கதவுகள் அகலமாக திறந்திருக்காத பட்சத்தில் எதிர்பாலினரோடு ஒரே அறையில் தனிமையில் இருப்பதை தவிர்ப்பேன்.

R 4191:5.6 423:6 4383:1

## உன்னுடைய கண்களை மூடி

ஒரு நிமிடம் உன்னுடைய கண்களை மூடி, பாவத்தினால் நடைப்பெற்று கொண்டிருக்கும் கிலேசம், சீரழிதல், விசனம், மற்றும் கவலைகள் அனைத்தையும் உன்னுடைய கண்முன் நிறுத்தி, உன்னுடைய மனக்கண்களின் முன் புதிய பரிபூரணமான உலகத்தையும் நிறுத்துவாய். ஒரு துளி பாவத்தின் களங்கம் கூட புதிய சமுதாயத்தின் அமைதியையும், சமாதானத்தையும் உருக்குலைக்காது. ஒரு கள்ளச் சிந்தனையும், அன்பற்ற பார்வையோ, வார்த்தையோ இருக்காது. ஊற்றைப் போல் சுரக்கும் அன்பும், சிநேகமான மற்றவர்களுக்கு மறுமொழிதலும், உதாரகுணமும் அங்கேயிருக்கும். சுகமின்மை அங்கே இருப்பதில்லை. வலியோ, மக்குவதோ, பயமோ, அங்கே இருப்பதில்லை. நல்ல உடல்நலம், மனிதனுடைய பூரண அழகும் காணக் கூடாதவைகளும், பரிபூரண மனுக்குலமும், அங்கே நீடிய அன்பும் நிலைத்திருக்கும். சுத்தமும், மனதின் பூரணமும், செயலின் பூரணமும் அங்கே காணப்பட்டு ஒவ்வொன்றும் தெளிவான நிதானத்துடனும் மகிமைப்படுத்தும். இப்படி தான் பூமியின் சமுதாயம் இருக்கும். உயிர்த்தெழுதலின் வேலைகளை அறிந்தபிற்பாடு இறந்தவருடைய உறவினரும், நண்பர்களும் அவர்கள் கண்ணீர்களையெல்லாம் துடைத்துவிட்டு மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

A.191:R612:6

## சங்கீதம் 23

கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்.

அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டு போய் விடுகிறார்.

அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.

நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும், பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர் உமது கோலும், தடியும் என்னைத் தேற்றும்.

என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.

என் ஜீவனுள்ள நாளெல்லாம், நன்மையும், கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.

[R 5653]

## என்னுடைய காலை தீர்மானம்

என்னுடைய அதிகாலை சிந்தையின் விருப்பம் என்னவெனில்,

"கர்த்தர் எனக்கு செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவேன். நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்கள் எல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன்." (சங்கீதம் 116:12-14 ).

பலியினால் என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் (சங்கீதம் 50:5), என்ற தெய்வீக அழைப்பை நினைவுகூர்ந்து நான் தீர்மானிப்பது என்னவெனில், என்னை வழிநடத்தும் தேவனுடைய கிருபையினால் இன்று பரிசுத்தவானாகிய நான் என் பொருத்தனைகளை நிறைவேற்றி, தொடர்ந்து என் மாமிசத்தையும், அதன் விருப்பங்களையும் தியாகம் செய்வதினால் பரலோக இரட்சிப்பை என் இரட்சகரோடு சுதந்தரிப்பேன். நான் எல்லோரிடத்திலும் எளிமையாகவும் நேர்மையுள்ளவனாகவும் இருக்க முயற்சி செய்வேன்.

நான் என் சுயகீர்த்தயையும், கனத்தையும் தேடாமல் தேவனுடைய மகிமையையும், கனத்தையும் அவர் ஒருவருக்கே செலுத்துவேன்.

என் உதடுகளினால் நான் தேவனை ஜாக்கிரதையாய் கனம் பண்ணுவேன்.

என் வார்த்தைகள் எல்லோருக்கும் தைலமாகவும், ஆசீர்வாதமாகவும் இருக்கும்படி முயற்சி செய்வேன். நான் தேவனுக்கும், சத்தியத்திற்கும், சகோதரர்களுக்கும் மற்ற எல்லோரிடத்திலும் பெரிய காரியங்களில் மாத்திரமல்ல, வாழ்க்கையின் சிறிய காரியங்களில் கூட உண்மையாக இருக்க நாடுவேன்.

தெய்வீக பாதுகாப்பில் என்னுடைய உயர்ந்த நன்மைக்காக, எல்லா விருப்பங்களையும் நீக்கும் தெய்வீக கிருபையில் நம்பிக்கை வைத்து, சுத்தமான இருதயம் உள்ளவனாக இருப்பதற்கு மாத்திரம் நாடாமல், எல்லா மன விசாரத்தையும், எல்லா அதிருப்தியையும், எல்லா சோர்ந்து போகுதலையும், முற்றிலும் வெறுப்பேன்.

என் வாழ்வில் தேவனுடைய தெய்வீக கிருபையினால் அனுமதிக்கப்படுவதை முறுமுறுக்கவும், சலிப்படையவும் மாட்டேன். ஏனென்றால்,

"எது நடந்தாலும் தேவனிடத்தில் உறுதியான விசுவாசமும், நம்பிக்கையும், எனக்கு உண்டு."

R 5165: 3, 6
R 5727: 6

வெள்ளிக்கிழமை

## மத்தேயு 5

அவர் திரளான ஜனங்களைக் கண்டு மலையின் மேல் ஏறினார்; அவர் உட்கார்ந்த பொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள்.

அப்பொழுது அவர் தமது வாயைத் திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது என்னவென்றால்:

ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகம் அவர்களுடையது.

துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் ; அவர்கள் ஆறுதலடைவார்கள்.

சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்.

நீதியின் மேல் பசிதாகம் உள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தி அடைவார்கள்.

இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம்பெறுவார்கள்.

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்.

சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.

நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.

என்னிமித்தம் உங்களை நிந்தித்து, துன்பப்படுத்தி, பலவிதமான தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.

சந்தோஷப்பட்டு களிகூறுங்கள், பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பபப்டுத்தினார்களே.

நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப்போனால் எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது.

நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின் மேல் இருக்கீற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது.

விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடி வைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்.

இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் அவர்கள் முன்பாகப் பிரகாசமாயிருக்கக்கடவது.

(R 2205:6 ,2234:5,2240:1)

## யேகோவா நம் தேவன்

சங்கீதக்காரனுடைய வார்த்தையில் "கர்த்தர் எல்லோர் மேலும் தயவுள்ளவர். அவர் இரக்கங்கள் எல்லா கிரியைகளின் மேலும் உள்ளது. (சங்கீதம் 145-9)

இந்த வாக்கியம் சகலத்தையும் உள்ளடக்கிய அண்டத்தின் உச்ச எல்லைகளையும் சிறிய , அதே சமயம் மிகப் பெரிய ஜீவராசிகளையும் தன்னுள் அடக்கியுள்ளது. அனைத்து சிருஷ்டிகளும் அவருடைய மேற்பார்வையில் உள்ளது. நம் தேவனாகிய யேகோவா முழு உலகத்திற்கும் மாபொரும் அரசராக இருக்கிறார்.அந்த உயர்ந்த ஸ்தானத்திற்கே உரிய பொறுப்புகளுக்கு அவருடைய ஞானம், வல்லமை , நற்குணம் ,மற்றும் பறந்த உள்ளமானது போதுமானதாக நிறைந்துக் காணப்படுகிறது. அப்படிப்பட்ட பொறுப்பிற்கு ஏற்றவராக இருப்பவரின் மன ஆற்றலை புரிந்து கொள்ள எடுக்கப்பட்ட முயற்சியில் மனித மூளை நிலை தடுமாறுகிறது. ஒருபோதும் தவறாத நியாயத்தீர்ப்பு, ஒருபோதும் தோல்வியடையாத நியாபகத்திறன், ஒருபோதும் தோல்விக்கு இடமில்லாமல் நித்தியத்துக்கும் திட்டமிடுகிற அதே சமயம் யுகாயுகத்திற்கும் அத்திட்டத்தை பிழையின்றி துல்லியமாக நிர்ணயிக்கும் ஞானம், உயிரற்ற மற்றும் உயிருள்ளவைகளாகிய எதிர்க்கிற யாவற்றின் மீதும் ஆதிக்கம் செலுத்தி அவைகளை தம்முடைய பிரம்மாண்ட திட்டம் நிறைவேற இசைவாய் நடத்தும் வல்லமை மற்றும் திறன் .ஒருபோதும் உறங்காத தம்முடைய கண்கள்,எப்போதும் திறந்திருக்கிற காதுகள், எல்லா தேவைகளையும் அறிந்திருக்கிறவரும் ,தம்முடைய பறந்து விரிந்த ஆளுகையில் உள்ள அனைத்து காரியங்களிலும் நிறைந்திருப்பவரை ஒரு கணம் எண்ணிப்பாருங்கள;.

R1560:2